# முத்துக்குவியல்



சகரியா பூனன்

# முத்துக் குவியல்

**சகரியா பூணன்**

*“பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது ” (மத்தேயு.13:45)*

* எட்டாம் பதிப்பு 2017

## நல் முத்துகள் தேடி . . .

1. பரிசுத்தாவி அபிஷேகத்தின் நோக்கம் – 5
2. விசுவாசிப்பவர்களுக்கே வெற்றி வாழ்க்கை! – 10
3. சூரிய பிரகாசமாய் வளரும் நீதிமானின் பாதை! – 18
4. மனுஷர் பார்வைக்கு விலகி, தேவனுடைய பார்வையில் ஜீவியுங்கள்! – 25
5. 'சிந்தை வாழ்வில்' பலவந்தம் வேண்டும்! – 32
6. பாவத்தின் மேல் வெற்றி, நமது சுதந்திரம்! – 39
7. 'துதி' வழி திறக்கும் ஜெய வாழ்க்கை! – 48
8. குழந்தை மூலமாய் 'தாழ்மை' ஏற்றிடுவீர்! – 57
9. பிதாவின் சித்தம் செய்வதே, கிறிஸ்துவின் சரீரத்தில் பிரதானம்! – 64
10. 'முத்துக்குவியல்' உங்கள் வாழ்வில் நூறுபங்கு பலன் தரும்! – 77
11. வெற்றி வாழ்க்கை! கேள்வி - பதில்கள் – 88

**முத்துக்குவியல்** (Nuggets of Pearls) - 1996

Copyright - ZAC POONEN

*இந்த புத்தகம் பதிப்புரிமை பெற்றுள்ளது. இந்த பணியின் எந்த பகுதியும் மறுபதிப்போ அல்லது எந்த ரூபத்திலும் கடத்தல் கூடாது. அதாவது, பதிப்பாளர் எழுதித்தந்த அனுமதி இல்லாமல் மின்னனு சாசனமோ அல்லது எந்திர சாசனமோ (ஜெராக்ஸ் உட்பட) பதிவு செய்தல் கூடாது.*

**மேலும் விபரங்களுக்கு**
Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149, Karnataka, India
email: cfc@cfcindia.com

ஆ, என் இயேசுவே!
நின் சுவிசேஷத்தின்
மகத்துவம் எத்தனை பெரிது!

பாவத்திலிருந்து விடுதலை ...
சுயத்திலிருந்து விடுதலை ...
பணப்பிடியிலிருந்து விடுதலை ...
மனுஷீக கனத்திலிருந்தும் விடுதலை ...
முறுமுறுப்பிலிருந்து விடுதலை ...
புறங்கூறுவதிலிருந்து விடுதலை ...

என் போன்ற மாம்சத்தில் வந்த உம்மை
எந்நாளும் பின்பற்றும்
சிலாக்கியம் பெற்றேன்!
'முத்துக்குவியலோ'
என வியந்து
திகைக்கிறேன்!!

என் கண்கண்ட
பாக்கியம்
வையகத்து மானிடர்
பலரும் கண்டிட
தேவா ... அருள்புரிவீர்!!




## பரிசுத்தாவி அபிஷேகத்தின் நோக்கம்

*(மறைக்கப்பட்ட உண்மைகள்)*

*பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்றவுடன் இன்று அநேகர், அவர் நமக்கு ஒரு "அனுபவத்தை" (Experience) தருவார் என்றே எண்ணுகிறார்கள். இன்றைய பெந்தெகொஸ்தே சபைகளைப் பாருங்கள்! 90% சாட்சிகள் முழுவதும், தங்களின் சரீரம் உலுக்கப்பட்டது; உரத்த சத்தம்; தரிசனம் கண்டது போன்ற அனுபவங்கள்தான் இருக்கும். பரிசுத்த ஆவியானவர் இவ்வித அனுபவங்களைத் தருவது உண்மைதான். ஆனால் இது அவரது முக்கிய ஊழியம் அல்ல. இயேசுவானவர் தம் சீஷர்களிடம் யோவான்16:12-14-ல் சொன்னபொழுது பரிசுத்தஆவியானவர் அனுபவத்தைத் தருவார் என்றல்ல, அவர் உங்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் என்றார். நம் வீட்டில் ஒரு விசேஷத்திற்கு பரிசு பொருட்கள் (Gifts) வருகிறது என எண்ணிக் கொள்ளுங்கள். பரிசுப் பொருளை மூடி, அழகான வர்ணப்பேப்பர்கள் சுற்றியிருப்பார்கள். இவ்வர்ணப் பேப்பர்களில் அதிக அக்கறை காட்டுபவர்கள் யார்? குழந்தைகள்! இது போலவே வருஷங்கள் பல ஆகியும் தாங்கள் பெற்ற வர்ணப்பேப்பர்களைக் (அனுபவங்களைக்) குறித்தே பேசிக் கொண்டிருக்கிறார்கள். யார் இவர்கள்? ஆவிக்குரிய குழந்தைகள்! அருமையான குழந்தாய், வர்ணத்தாள் மாத்திரம் அல்ல, அது கட்டிவந்த விலை உயர்ந்த பரிசுப்பொருட்களை உற்று நோக்குவாயாக!!*

### 1.பரிசுத்த ஆவியானவரே போதிப்பார்:

*இயேசுவானவர் சொன்னார், "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்(விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்)" யோவான் 16:12. மனந்திரும்பாத பாவிகளைப் பார்த்து இயேசுவானவர் இதைச் சொல்லவில்லை. சகலத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றிய சீஷர்களைப் பார்த்தே இவைகளைச் சொன்னார். 'அபிஷேகம்' நிறைந்த, சிறந்த பிரசங்கியாரான இயேசுவானவர் சொல்வதைக்கூட சீஷர்கள் விளங்கிக்கொள்ளமுடியாது என இயேசு இவ்வசனத்தில் குறிப்பிட்டதை கவனித்தீர்களா? மிகச் சிறந்த பிரசங்கிகள் நம் மத்தியில்*

வந்து அருமையாய் பிரசங்கிக்கலாம். இருப்பினும், கேட்பவர்களுக்கோ அது விளங்காமல் இருப்பது சாத்தியமே. எனவே பிரசங்கி பெற்ற அபிஷேகம் மாத்திரம் அல்ல, கேட்பவர்களும் அபிஷேகம் பெற்றிருப்பதை பொறுத்துதான் சத்தியத்தை விளங்கிக் கொள்ள முடியும். ஏனெனில் சில காரியங்கள் "ஒரு மனிதனும்" நமக்குப் போதிக்க முடியாததாய் இருக்கிறது. ஏன்? மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு வானவராலும் முடியாது! ஒன்றினால் மாத்திரம்தான் முடியும்!! "**சத்திய ஆவியாகிய** அவர் வரும்போது ... சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான் 16:13). எனவே சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின்புதான் அநேக சத்தியங்களை அறிந்து கொண்டார்கள். மனந்திரும்பியவுடன் வாசிக்கும் வேதம்; பரிசுத்தஆவியானவர் வந்தவுடன் வாசிக்கும் வேதம்; இவ் விரண்டிற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளது. இதில் இரண்டாவது அனுபவத்தில் பிரகாசமான ஒளியாக சத்தியங்கள் தெளிவுபடும்! முதல் அனுபவத்தோடு வாசிக்கும் போது மூளை அறிவுடன் நின்றுவிடும், ஜீவியத்திலோ ஒரு மாற்றமும் இருக்காது!! பரம சத்தியங்களை அறிவது பௌதீகம், இரசாயனம் படிப்பதுபோல் அல்ல. இதற்குப் பரிசுத்த ஆவியானவர் அவசியம் இல்லை. சிறந்த மூளை அறிவு போதும்! பரமசத்தியங்களை அறிவதற்கு இயேசுவானவர் சொன்னது போல **பரிசுத்த ஆவியானவர்** மாத்திரமே நமக்குப் போதிக்க முடியும்.

**உ. பரிசுத்த ஆவியானவரே நடத்துபவர்:**

அவர் நம்மை எங்கு நடத்துவார்? "சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான்.16:13). பின்னால் நின்று பலவந்தமாய் தள்ளி அல்ல; முன்சென்று நம்மை நடத்துவார். எந்த சத்தியத்திற்குள்? "**சகல**" சத்தியத்திற்குள்ளும் நடத்துவார். நீங்கள் பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறீர்களா? மிகவும் அருமைதான்! ஆனால் அது "சகல" சத்தியமும் இல்லையே! அது வெறும் பாலர் பள்ளியின் (Kindergarten) ஆரம்பம்தான். பாலர் பள்ளி அவசியம்தான் என்றாலும் பாலகன் ஒவ்வொரு வகுப்பிலும் கற்றுத் தேறி மேல்வகுப்பு வருவதுதான் அந்தக் கல்வியின் நோக்கம். அடுத்தது, தண்ணீர் ஞானஸ்நானம். இயேசு வானவர் இதைப் போதித்தார். இதை எடுக்காவிட்டால், அவர்கள் 100% சத்தியத்திற்கு கீழ்படியவில்லை (ஐயர்மார்கள் அல்லது சமுதாயத்தோடு ஒத்து வாழ விரும்புவர்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப் பதில்லை!?). அடுத்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகம். இதுவும் சகல சத்தியத்தில் ஒரு பகுதிதான்! பின் அவ்வளவுதானா? அநேகருக்கு அவ்வளவுதான். அப்படியென்றால் அது 1 -ம் வகுப்புவரை கற்று பின் நிறுத்திக்கொள்வது போலாகும். அநேகர் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தை அப்.2:4-ன்படி அன்னியபாஷை பேசும் அனுபவமாக்கிக் கொண்டுள்ளனர். ஆனால் அது சத்தியத்தில் ஒரு பகுதிதான். இயேசு இதிலும் மேலானதைச் சொன்னார், "அவர் சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்". அதாவது, நாம் இவ்வுலகில் ஜீவிக்கும் கடைசி

நாள்வரை முற்றுப்புள்ளி இல்லாத ஓர் உன்னத கல்வியை பரிசுத்த ஆவியானவர் தந்து நடத்துகிறார். ரோமர்.8:14-ன்படி, "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (Sons of God). பிள்ளையாய் இருப்பது (Child of God)- யோவான்1:12 -ன்படி இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் தேவனுடைய பிள்ளைகள். ஆவியினால் பிறப்பது (Born of the Spirit) பிள்ளையின் அனுபவம். தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுவது (Led by the spirit) முதிர்ச்சி அடையும் புத்திரரின் அனுபவம். இதை இயேசுவானவர் போதிக்கும் பொழுது, ஒன்றைக் "குறுகலான வாசல்" (Narrow gate) என்றும்; மற்றொன்றைக் "குறுகலான பாதை" (Narrow way) என்றும் குறிப்பிட்டார்.

**3.பிறருடன் ஒத்துப்பார்த்து அவரின் போதனையை இழக்கும் கிறிஸ்தவர்கள்:**

வழக்கமாய் நாம் நம்மை மற்ற கிறிஸ்தவர்களோடு ஒப்பிடுகிறோம். பவுல் 2 கொரி. 10:12-ல் சொல்லும்போது, "........ தங்களைக் கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்கிற அவர்கள் புத்திமான்களல்ல" என்றார். இன்று கிறிஸ்தவர்களில் 90% மனந்திரும்பாத கிறிஸ்தவர்களே! அவர்கள் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததினால் கிறிஸ்தவர்கள், அவ்வளவுதான்! தங்கள் உள்ளான வாழ்க்கையில் ஓர் மனம்மாறாத இந்து அல்லது முஸ்லீம் போலவே இருக்கின்றனர். சிலர், மறுபடியும் பிறக்கும் அனுபவம் அடைகின்றனர். உடனே அவர்கள் "நான் சாதாரண சடங்காச்சார கிறிஸ்தவனைக் (Nominal Christian) காட்டிலும் விசேஷித்தவன்" என்ற அபாயமான ஒப்பிடும் "**சுய-திருப்திக்கு**" வந்துவிடுகிறார்கள். மறுபடியும் பிறந்த சிலர், தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுகின்றனர். இவர்களோ தங்களை மேன்மையாய், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களோடு ஒப்பிட்டுக் கொள்கின்றனர். பின் அதிலும் சிலர் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்று, தங்களை தண்ணீர் ஞானஸ்நானம் மட்டும் எடுத்தவர்களோடு ஒப்பிட்டுக்கொள்கின்றனர். இனி என்ன, "நான் சாதாரண கிறிஸ்தவனைவிட; மறுபடியும் பிறந்த அனுபவம் கொண்டவனை விட; தண்ணீர் ஞானஸ் நானம் எடுத்தவர்களை விட; இப்போதோ, நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுவிட்டேன்!" இனி கற்பதற்கு ஒன்றுமில்லை என்று முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் என் வாழ்வில் 'இப்போது' வந்திருப்பதே, என்னை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவதற்குத்தான்!! இதை சாத்தான் தடை செய்யவே மற்ற கிறிஸ்தவர்களைப் பார்த்து நம்மை ஒப்பிடச் செய்கிறான். நாமும் கர்த்தர் சமூகம்நின்று, நான் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களைப் போல் அல்ல, முழுகி ஞானஸ்நானம் பெற்றவனைப் போல் அல்ல, பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும் முடிவாய் பெற்றுவிட்டேன் என ஜெபித்து நிற்கிறோம்! இப்படிப் பாவியோடு ஒப்பிட்டு ஜெபித்த பரிசேயனின்

ஜெபத்தை இயேசுவானவர் ஏற்கனவே நமக்கு சுட்டிக்காட்டியுள்ளார். இப்படித்தான் அநேக கிறிஸ்தவர்களைச் சாத்தான் வஞ்சித்துள்ளான்!!

**4. பழைய ஏற்பாட்டில் பரிசுத்தாவியானவரின் ஞான திருஷ்டாந்தம்:**

1 கொரி 10:1,2-ல்"எல்லோரும் மோசேக்குள்ளாக 1) மேகத்தினாலும் 2) சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" என பவுல் திருஷ்டாந்தப்படுத்திக் கூறினார். இங்கு இஸ்ரவேலர்கள் இரண்டு ஞானஸ்நானம் பெற்றதாகப் பார்க்கிறோம். இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து மீட்கப்பட்டது "ஆட்டுக்குட்டியின்" இரத்தத்தின் மூலமாக மீட்கப்பட்டனர். நாமும் "ஆட்டுக்குட்டியின்" (இயேசுவின்) இரத்தம் மூலமாகவே மீட்கப்பட்டோம். இவ்வாறு மீட்கப்பட்ட இவர்கள்தான் இரண்டு ஞானஸ்நானம் பெற்றனர். ஒன்று, சிவந்த சமுத்திரம் உள்ளாகச் சென்று வெளிவந்தது, இது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. எப்படி எடுத்தனர்? சமுத்திரத்தின் உள்ளாகக் கடந்து..... அதாவது, "**சிவந்த மகாசமுத்திரம் தலையில் தெளிக்கப்படவில்லை**"

இன்னொன்று, மேகத்தினால் ஞானஸ்நானம்! எங்கிருந்து வருகிறது இம்மேகம்? பரத்திலிருந்து அவர்கள் மேல் கீழே வந்தது. இது பரிசுத்தாவியானவரை சித்தரிக்கிறது. அல்லது, இது பரிசுத்த ஆவியின் அபிஷேகம்!! இரவில் இதே மேகஸ்தம்பம் அக்கினி ஸ்தம்பமாக மாறியது. எனவேதான், யோவான்ஸ்நானகன் இயேசுவைப் பற்றிக் கூறும்போது"அவர் உங்களைப் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் அபிஷேகிப்பார்" என்றார். எனவே பழைய ஏற்பாட்டிலேயே இவைத் தெளிவாய் உள்ளன. இதைப் பவுல் ஏன் நமக்குத் திருஷ்டாந்தமாய்ச் சொல்லுகிறார்? ".... நாம் அறியவேண்டும்" (1கொரி.10:1) என்பதற்காகவே. ஏன் மேகஸ்தம்பத்தைத் தேவன் தந்தார்? மேகத்தைக் கண்டு பரவசமடையும் அனுபவத்திற்காக அல்ல! அவர்களை முன் சென்று நடத்துவதற்காக!! (யாத் 13:1). "அவர்கள் இரவும் பகலும் வழிநடப்பதற்கு கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில்..... அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்." எண்.9:17-23 வசனங்கள், எப்படி இஸ்ரவேலர்கள் மேகஸ்தம்பத்தைப் பின்பற்றினர் என்றும், மேகஸ்தம்பம் நின்றபோதோ அவர்களும் கூடாரமிட்டனர் என்றும் வாசிக்கிறோம்.

**5. பரிசுத்தாவியானவர் நடத்தும் கடைசி எல்லை:**

இந்த மேகஸ்தம்பம் இஸ்ரவேலரை எங்கு கடைசியாக நடத்திச் சென்றது? ஆம்! கானான் தேசத்திற்குத்தான். ஆனால் அவர்கள் அங்கு சென்றடைந்தார்களா? இல்லை!! ஆறுலட்சம் ஜனங்கள்! யார் இவர்கள்? 1) எகிப்திலிருந்து விடுதலை பெற்றவர்கள்(இரட்சிப்பு) 2)சமுத்திரத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் (முழுக்கு ஞானஸ்நானம்) 3)மேகத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் (பரிசுத்தாவியின்அபிஷேகம்) 4) ஞான போஜனம் புசித்தவர்கள் (தேவ வசனம் பெற்றவர்கள்). ஆனால், பரிதாபம்!

யோசுவா, காலேப் - இரண்டு பேர் தவிர மற்றவர்கள் வனாந்தரத்திலே அழிக்கப்பட்டார்கள்!! இன்றும் அநேகர், ஏன்? 6- லட்சம் பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலரைக் காட்டிலும் அதிகம்பேர் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிறார்கள். எதற்கு? கானானுக்குள் நடத்தப்படுவதற்கு! **கானான், வெற்றியைக் குறிக்கிறது.** நம் மூதாதையர் எழுதிய பழைய பாடல்களில், யோர்தான் நதியை மரணமாகவும், கானானை பரலோகமாகவும் வைத்துப்பாடியுள்ளார். அது முற்றிலும் தவறு! நாம் யோசுவா புத்தகத்தில் படிக்கும்பொழுது, கானானில் யுத்தங்களையும், ராட்சதர்கள் கொல்லப் படுவதையும் பார்க்கிறோம். ஆனால் பரலோகத்தில் யுத்தங்களோ, ராட்சதர்களைக் கொல்லுவதோ இருப்பதில்லையே!! எனவே சரியான அர்த்தப்படி யோர்தான், நம் மரணத்தை அல்ல.... அது "**சுயத்திற்கு மரிக்கும்**" (Dying to Self) அனுபவத்தைக் குறிக்கிறது. எனவேதான் இயேசுவானவர் இந்த யோர்தான் நதியில் ஞானஸ்நானம் எடுத்துக் கரைஏறியபோது பரிசுத்த ஆவியானவர் அவர் மீது இறங்கினார். இப்போது நாம் சொல்லமுடியும், "கடைசியாக" இந்த மேகஸ்தம்பம் (பரிசுத்தாவியானவர்) யோர்தானுக்கு நேராய் (சுயத்திற்கு மரிக்கும்படி) அவர்களை நடத்தியது. எனவே, சுயத்திற்கு மரிக்கும் இந்தக்கடைசி எல்லைக்குள் பரிசுத்தாவியானவர் நம்மை நடத்த இப்போது ஒப்புக்கொடுப்போமாக! அப்போது தான் அவர் "தொடர்ந்து" நம்மைக் கானானுக்குள் நடத்துவார். மற்றபடி நம்மை நடத்த முடியவே முடியாது!

பவுல் 1 கொரி 10:1-4 வசனம்வரை திருஷ்டாந்தமாக இஸ்ரவேலரைக் குறிப்பிட்டு, அதில் குறிப்பிடப்பட்ட நான்கு அனுபவங்களை அவர்கள் பெற்றிருந்தும், வசனம் 5-ல் "அப்படியிருந்தும்" என்று பரிதபித்து, நம்மை எச்சரிக்கும்படியாக "அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை, வனாந்தரந்திலே அழிக்கப்பட்டார்கள்" என்று முடிக்கிறார்.

ஆழ்ந்த ஜீவியம் அல்லது வெற்றியின் ஜீவியம் வேண்டும் என்று வாஞ்சிக்கும் சிநேகிதர்களே, "சுயத்திற்கு மரிக்கும்" அனுபவத்தில் நடந்த பரிசுத்த ஆவியானவரிடம் உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா? மறக்க வேண்டாம்! ஆறுலட்சம்ஜனங்கள்!! அதில் இரண்டு பேர் மாத்திரமே வெற்றியின் ஜீவியம் பெற்றனர்!!! தேவன் தன்னைப் பரியாசம் பண்ணவொட்டார்.... பெருத்த எண்ணிக்கை அல்ல, சுயத்திற்கு மரிக்க ஒப்புக்கொடுக்கும் இரண்டுபேர் நம் ஆண்டவருக்குப் போதும்!




# விசுவாசிப்பவர்களுக்கே வெற்றி வாழ்க்கை!

இயேசுவானவர் லூக்கா 8:18 -ல் "நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள்" என்று சொன்னார். ஏனெனில் நீங்கள் கேட்கும் அந்தத் தரத்தின்படியே "அவனுக்குக் கொடுக்கப்படும்" என்று கீழே குறிப்பிட்டார். "சரியானபடி கேட்பவனுக்கு (Hearing) கொடுக்கப்படும்". வேதவசனத்தை மிக எளிதாய் எடுப்பவர்களுக்கு, உள்ளதும் (இருப்பது போலக் கருதுவதும்) "எடுத்துக்கொள்ளப்படும்" என்றார். "கொடுப்பது" எதைச் சார்ந்துள்ளது,வேத அறிவுப் பெருக்கத்தையா? அல்லது வசனத்திற்கு கீழ்ப்படிவதையா? ஆம், ஒருவன் வசனத்திற்கு கீழ்ப்படிவதைப் பொறுத்து தான் அவனுக்கு மேலும் "கொடுப்பதை" தேவன் நிர்ணயிக்கின்றார்.

**1. தேவவசனம் கேட்பதின் ஒரே நோக்கம் கீழ்படிவதற்கே:**

இன்று அநேகர் தேவ செய்திகளைக் கேட்பதின் நோக்கம், மனிதரின் புகழ்ச்சியைப் பெறும் பிரசங்கம் செய்வதற்காகவே! அதற்கு தடையில்லைதான்!! ஆனால் முதலில், அவர்கள் வாழ்வில் அதற்கு கீழ்ப்படிவதன்றோ பிரதானம். இயேசுவானவரும் இதைத்தானே செய்தார். அப்.1:2-ன்படி அவர் "(முதலில்) செய்யவும் (பின்பு) உபதேசிக்கவும்" தொடங்கினார். அப்போஸ்தலர் காலங்களைப்போல நாம் ஜீவிக்க வேண்டும் எனக் கூறுபவர்கள் அநேகர்! நல்லதுதான்!! ஆனால் அப்போஸ்தலர் நடபடிகளின் இந்த முதல் வசனத்திற்குக் கீழ்ப்படிந் திருக்கிறார்களா? மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் இயேசுவானவர் செய்த மலைப்பிரசங்கங்களை எப்படிச் செய்தார்? முந்தின நாள் உட்கார்ந்து, பல புத்தகங்களை ஆராய்ந்து குறிப்புளை எழுதி வைத்தா பேசினார்? இல்லை! பின் எப்படி? வசனத்தின்படி முதலில் செய்தார். பின்பு உபதேசித்தார். தான் 30ஆண்டு செய்து முடித்த வாழ்க்கை அனுபவத்தைப் பிரசங்கித்தார்.எனவேதான் அவரது பிரசங்கம் ஆவிக்குரிய அதிகாரத்தோடு இருந்தது. இந்தியாவில் அநேகர், விசேஷமாக தமிழ்நாடு, கேரள மக்கள் அப்போஸ்தலர்.17:21-ன் அத்தேனே பட்டணத்தார் போல "புதிய காரியங்களை எப்போதும் கேட்கிறவர்களாகவே" இருக்கின்றனர். வேத வசனத்திற்குப் புதிய விளக்கங்கள், புதிய திருஷ்டாந்தங்கள் என்ற

வேட்கையோடு மாத்திரமே கன்வென்ஷன் கூட்டங்களுக்குச் செல்கின்றனர். எந்த நோக்கத்தோடு நாம் தேவ வசனத்தை வாசிக்கிறோம், கேட்கிறோம்? இயேசு சொன்னார்: "நீங்கள் கேட்கிறவிதத்தைக் குறித்து கவனியுங்கள்." அது அறிவு பெருக்கத்திற்கு மாத்திரமா? அது அபாயம். பிரசங்கிப்பதற்கு மாத்திரமா? அதுவும் அபாயம். "வெற்றி வாழ்க்கை சத்தியம் எனக்கு தெரியும்" என்பதற்காகவா? அதுமுற்றிலும் வஞ்சகத்திற்குரியது. பின் எதற்கு? "கீழ்ப்படிவதற்கே." ஆதாம்-ஏவாளுக்கு கற்பனைகள் தரப்பட்டதன் நோக்கம், அதைக் கல்வி கற்க அல்ல; எபிரேய கிரேக்க மூலபாஷைகள் கொண்டு ஆராய்வதற்கும் அல்ல; "கீழ்ப்படிவதற்கே" இதை நாம் மறக்கவே கூடாது. 2தீமோத்தேயு.3:16,17-ன்படி "வேதவாக்கியங்கள்..... தேவனுடைய மனுஷன் தேறினவனாவதற்கு.... அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." அல்லாமல், பிரசங்கிப்பதற்காக அல்ல! நாம் எதைக் கேட்டோமோ அதன்படி செய்வதற்காகவே. எனவே முதல் செய்தியை நாம் கேட்டதைக்குறித்து, அதை எப்படிக் கேட்டோம் என்கிற விதத்தைக்குறித்து நாம் கவனமாயிருப்போமாக!!

**௨. நாம் எப்படி இரட்சிப்பை அசட்டை (Neglect) செய்கிறோம்?**

எபி. 2:3-ல் "இவ்வளவு சரியான இரட்சிப்பைக் குறித்து **நாம்** கவலையற்று(Neglect- அசட்டையாக) இருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக்கொள்வோம்?" என்ற வசனத்தைப் பொதுவாக அவிசுவாசிகளுக்கே பிரசங்கிக்கிறோம். எப்படி? இதே வசனத்தை சற்றுமாற்றி "......**நீங்கள்** கவலையற்று இருப்பீர்களென்றால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்ளுவீர்கள்?" விந்தையான மாற்றம்! வேதமோ அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் கேட்கிற விதத்தைக் கவனியுங்கள்! "**நாம்**... தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?" யார் இந்த நாம்? எபிரெயர். 3:1-ன்படி பரிசுத்த அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய "பரிசுத்த சகோதரர்கள்" எனவே அவிசுவாசிகள் அல்ல, அவர்கள் இரட்சிப்பைத் தள்ளிவிடுகிறார்கள் (Rejecting). நாமோ இரட்சிப்பைக் கவலையற்று அசட்டை (Neglecting) செய்கிறோம். எனவே, 1. அவிசுவாசிகளே! நீங்கள் இரட்சிப்பைத் தள்ளி (Reject) விடுவதால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்? என்றும் 2.விசுவாசிகளே! (பரிசுத்த சகோதரரே) நீங்கள் இரட்சிப்பை அசட்டை (Neglect) செய்யவதால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்? என்று பிரிக்கலாம். எப்படி நாம் இரட்சிப்பைக் குறித்து கவலையற்று அசட்டை செய்ய முடியும்? நாம் எகிப்தைவிட்டு வெளியேறியும், கானானுக்குள் பிரவேசிப்பதில் கவலையற்ற அசட்டை செய்வதினிமித்தமே ஆகும். இதையே திருஷ்டாந்தப்படுத்தி எபிரெயர்.3:16,17-ல் அப்போஸ்தலன் எழுதுகிறார் "கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசேயினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்கள். அவர் நாற்பது வருஷம் யாரை அரோசித்தார்? (With whom was He grieved forty

years?).” எகிப்திலிருந்து புறப்பட்ட “அவர்களிடம்” அல்லவா? பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது இஸ்ரவேலர்கள் சமுத்திரத்தினாலும், மேகத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றிருந்தும், தேவனுடைய திட்டம் அவர்கள் வாழ்வில் நிறைவேறாமலேயே மரித்தனர் என்று எழுதுகிறார். ஆம்! தேவனுக்கு முன்பாக எந்த பாரபட்சமும் இல்லை. அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டோம் என்பதற்காக, தேவன் நம்முடைய எல்லா செய்கைகளிலும் பிரியம் கொள்ளுவார் என்பது சுத்த அபத்தம்!

**3. பவுலின் உடன் வேலையாள் தேமா (DEMUS) ஓர் எச்சரிக்கை சித்திரம்!**

பிலமோன் 24 -ம் வசனப்படி பவுலுக்கு மாற்கு, அரிஸ்தருக்கு, தேமா, லூக்கா என்ற குறைந்த எண்ணிக்கையுள்ள உடன் வேலையாட்கள் இருந்தனர். ஒன்று நாம் கவனிக்கவேண்டும். பவுல் ஓர் ஆவிக்குரிய மனிதன். ஒருவன் எவ்வளவு ஆவிக்குரிய வசனிப்புகள் உடையவனாயிருந்தாலும், அவனை ஆவியின்படி பகுத்து நிதானிக்க கூடியவன் பவுல். எனவே இப்படிப்பட்ட பவுலின் அப்போஸ்தல குழுவில் ஒருவன் இருக்க வேண்டுமென்றால் அவன் முதல்தர விசுவாசியாகவே இருக்க வேண்டும். பவுல் ஒருபோதும் 3-ம் தர விசுவாசியைத் தன் உடன் வேலையாளாய் கொள்ளமாட்டான். வெறும் இரட்சிப்பை உடையவன் அல்ல, தியாகமுள்ள மனப்பூர்வமான ஒரு சகோதரனே அவனின் உடன் வேலையாளாய் இருக்கமுடியும். இந்த தேமா அப்படிப்பட்டவனாகவே **முதலில்** இருந்திருப்பான். ஆனால் சிலகாலம் கழித்து பவுல் எழுதுகிறார் 2தீமோ.4:10. “தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கேபட்டணத்துக்குப் போய்விட்டான்”(!?). ஏன் போனான்? பவுல் தன் கூட்டங்களில் காணிக்கை சேகரிப்பவன் அல்ல. எனவே அதிகப்பணம் அவன் கூட்டங்களில் கிடைப்பது இல்லை. தன் உடன் வேலையாட்களுக்கும் பண உயர்வு தந்திருக்கமுடியாது. தேமா தான் ஆரம்பத்தில் வந்தது போலவே எளிய ஜீவியத்தில் இருந்திருப்பான். எனவே தன்னைச் சுற்றி ஏதாவது ஸ்தாபனம் முழுநேர ஊழியத்திற்கு ஆள் எடுக்கிறார்களா என்று பார்த்தான். ஒரு விளம்பரத்தில், தெசலோனிக்கேயாவில் ஆள் தேவைப்படுவதையும்; நல்ல சம்பளம்; வீட்டு வாடகை உதவியும் அளிக்கப்படும்; என்பதையும் கண்ட தேமா பவுலிடம், “சகோதரனே! எனக்கு தெசலோனிக்கேயாவைக் குறித்து அதிக பாரமாயுள்ளது. அநேக நாட்கள் அதற்காக ஜெபித்து வருகிறேன்” என்று சொல்லியிருப்பான். பவுலும் “சகோதரா உனக்கு பாரம் இருந்தால் போ!” என்று சொல்லியிருப்பான். இது 20- வது நூற்றாண்டு நிகழ்ச்சி அல்ல. முதலாம் நூற்றாண்டிலேயே இருந்து வருகிறது. எனவே நாம் நூற்றுக்கு நூறு தேவநாம மகிமைக்கான நோக்கமில்லாமல் சுயலாபம், மனுஷீக கனம் போன்ற காரியங்களோடு இருப்போமானால் நாம் வழிவிலகிப் போவது மிகவும் எளிது. நமது நூற்றாண்டில் இப்படிப்பட்டவர்களால் நம் நாடு நிறைந்துள்ளது. இதனிமித்தமே வேதவசனம் மிகுந்த வருத்தத்துடன்,

*“பரிசுத்த ஆவியானவரால்* **தொடர்ந்து** (Continuously) *நடத்தப்படாதவர்கள் வாக்குத்தத்தப் பூமியில் நுழையவில்லை” என கூறி நிற்கிறது.*

### 4. சத்தியம் அறிந்தும், செத்த ஸ்தாபன சபையில் உள்ளவர்களின் அபாயம்!

*புதிய ஏற்பாட்டில் “எகிப்தைவிட்டு வெளியே வந்தவர்கள் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை” என்று மூன்று தடவை பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். இது, ஒரு தகப்பன் தன் கடிதத்தில் ஒரு விஷயத்தை மூன்று தடவை கோடிட்டு காண்பிப்பது போல் உள்ளது. எனவே மிக ஜாக்கிரதையாய் இவ்விஷயத்தைக் கருத வேண்டும். ஆம்! முழு கடிதமும் முக்கியம்தான். ஆனால், இதுவோ மிகமிக முக்கியமானது!! ஒரு காலத்தில் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பிரபல்யமாகாததோர் சத்தியம். அதற்கு கீழ்ப்படிந்து எடுப்பவர்கள் துன்புறுத்தப்பட்டு சபையைவிட்டு வெளியே தள்ளப்படுவார். இப்போதோ இதெல்லாம் சகஜமாகிவிட்டது. நாம் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டும் தொடர்ந்து ‘செத்த புராட்டஸ்டண்டு’ சபையில் இருக்கலாம். இது எப்படி காரியம் மாறிவிட்டது!! மனுஷர்கள் மதிப்பையும், கனத்தையும் பெற்றுக் கொள்ளலாம், அதே சமயம் தேவ வசனத்திற்கும் கீழ்படியலாம்!!! சரியான ஏமாற்றுவேலை. அதே போலவே பரிசுத்தஆவி அபிஷேகமும் தள்ளப்பட்ட போதகமாகவே இருந்துவந்தது.... அபிஷேகமும் பெற்று அந்நியபாஷை பேசுபவர்கள் துன்புறுத்தப்பட்டனர். இப்போதோ! ஆவியின் இயக்கமும்* (Charismatic Movement) *கத்தோலிக்கத்தில் வந்துவிட்டது. இந்த அனுபவம் அங்கு பிரபல்யமாகிவிட்டது. கத்தோலிக்கர்களும் இப்போது அந்நிய பாஷை பேசமுடியும்! அதே சமயத்தில் மரியாளுக்கும் ஜெபம் ஏறெடுக்க முடியும்! முழுக்க முழுக்க வஞ்சிக்கும் ஏமாற்று வேலை!! ஆனால் என்றைக்கும் பிரபல்யமாகாத ஒரு சத்தியம் உண்டு. அது, “உங்கள் சுயத்திற்கு நீங்கள் சாகவேண்டும்” என்பதே!! இயேசு ஒருபோதும் “தினசரி” அந்நிய பாஷை பேசவேண்டுமென்று கூறவில்லை. “***தினமும்*** *உங்கள் சிலுவையை எடுங்கள்” என்றே கூறினார். அதுவே கானானுக்குள் செல்லும் வழியாக இருக்கிறது.*

### 5. ஆவிக்குரிய “குழந்தைகளின்” கீழ்த்தர அடையாளங்கள் :

*மூன்றுதடவை இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை என்று ஏன் ஆவியானவர் எழுதினார்? 1) 1கொரி. 10:6-ன்படி “இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாய்”* (Example) *இருக்கும்படியே, 2) வசனம் 12-ன்படி “தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவும்” எழுதப்பட்டிருக்கிறது. ஏன் இதைப் பவுல் எபேசியருக்கோ பிலிப்பியருக்கோ எழுதாமல் கொரிந்தியருக்கு எழுதினார்? காரணம் இதுதான். 1கொரி. 3:1-ன்படி “..... அவர்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்.” யார் இந்தக் குழந்தைகள்? பரிசுப் பார்சலை சுற்றிவந்த வர்ணத்தாளுக்கு சண்டைபோடும் குழந்தைகள்! வசனம் 3-ன்படி “பொறாமையும் வாக்குவாதமும் பேதங்களும் உங்களுக்குள் (இன்னமும்) இருக்கிறபடியால்”*

*பவுல் அவர்களைக் குழந்தைகள் என்றார். பொதுவாக சண்டைகள், பணமோ அல்லது பூமிக்கடுத்த காரியத்திலேயோதான் இருக்கும். இப்படிப்பட்ட ஜனங்கள் சாத்தானோடோ பிசாசோடோ ஒருபோதும் சண்டைபோட அறியாதவர்கள்! இவர்கள் வெற்றி வாழ்க்கையைப் பற்றிக்கூட பேசலாம். ஆனாலும் குழந்தைகள்!! சண்டை, பொறாமை, வாக்குவாதம் யாவும் குழந்தைகளின் அடையாளங்கள். இந்த ஆவிக்குரிய குழந்தைகள் பரிசுத்தஆவி அபிஷேகம் பெற்றிருக்க முடியுமா? முடியும்! 1 கொரி. 1:7-ன்படி அவர்கள் "யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்கள்." ஆனாலோ, தொடர்ந்து சண்டை போடுபவர்கள்! சற்று உங்களைச் சுற்றி ஆவிக்குரிய வரங்களைப் பெற்றவர்களைப் பாருங்கள். இன்னமும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள் கிறார்கள். யார் இவர்கள்? குழந்தைகள்! ஆம், எகிப்தைவிட்டு இஸ்ரவேலர்கள் வெளியேறியிருந்தாலும் அவர்களோ கானானுக்குள் பிரவேசிக்கவில்லை. இவையெல்லாம் ஆவிக்குரிய கிறிஸ்தவ குழந்தை களாகிய நமக்கே எழுதப்பட்டது. நீங்கள் அந்நியபாஷை பேசுகிறீர்கள்! அற்புதங்களைக் காணுகிறீர்கள். ஆனாலும் நீங்கள் குழந்தைகளே! நீங்கள் அற்புதத்தை என்றோ ஒருமுறை கண்டிருப்பீர்கள் இஸ்ர வேலர்களோ* **தினமும்** *வானத்திலிருந்து மன்னா பெற்றார்கள்! 40 வருடம் அவர்கள் தங்கள் ஆடைகளை மாற்றவில்லை, ஆனால் கிழியவுமில்லை! இது அற்புதம் இல்லையா? கன்மலையில் இருந்து தண்ணீர் பெற்றார்கள். நீங்கள் இப்படி அற்புதம் கண்டதுண்டா? இல்லை!* **ஆனாலும்** *தேவன் அவர்கள் மீது கோபம் கொண்டு வனாந்திரத்தில் அவர்களை அழித்தார்! இப்போது, கொரிந்திய ஆவிக்குரிய குழந்தைகளே, நீங்களும் அற்புதங்கள் கண்டீர்கள், வரங்கள் பெற்றீர்கள் "ஆனாலும்" நீங்கள் வனாந்திரத்திலே சாவீர்கள்! என்ன பரிதாபம்!!*

### 6.எந்த அடிப்படையில், யார்மீது தேவகோபம் வரும்?

*எபி. 3:16,17 வசனங்களில் "தேவன் அவர்கள் மீது 40 வருடம் கோபமாய் இருந்தார்" என வாசிக்கிறோம். உங்கள் மீதுகூட தேவன் கோபமாய் இருக்கமுடியும் என்று நம்புகிறீர்களா? 40 வருடம் யாரிடம் கோபமாயிருந்தார்? இரத்தத்தினால் மீட்கப்பட்டு, முழுக்கு ஞானஸ் நானம் பெற்று, பரிசுத்தாவி அபிஷேகம் பெற்று "பரிசுத்த ஆவியின் நடத்துதலுக்குத் தங்களை ஒப்புக் கொடாதவர்களிடம்" தேவன் கோபம் கொண்டார். ஆம்! அதுதான் அவர்களின் தவறு. மேகஸ்தம்பம் கானானுக்குள் அவர்களை நடத்தியபோது, அவர்கள் பின்னிட்டுத் திரும்பினார்கள். ராட்சதர்கள் மிகப்பெரியவர்கள்* **.... அவர்களை வெல்ல முடியாது** *என்று "தேவ வார்த்தையை விட" ராட்சதர்களுக்கு கனம் அளித்தபடியால் தேவன் கோபங்கொண்டார்.*

*கானானைச் சுதந்தரிக்கும் முன், ஏன் தேவன் இஸ்ரவேலரை 400 வருடம் எகிப்தில் தாமதிக்க அனுமதித்தார்? இது மிக முக்கியமானது. ஆதியாகமம். 15:7-ல் தேவன் ஆபிரகாமிடம் "இந்த தேசத்தை (கானனை)*

*உனக்குச் சுதந்திரமாகக் கொடுக்கும் பொருட்டு.... அழைத்துவந்த கர்த்தர் நானே என்றார்." ஆனாலும்,வசனம்13 "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்தில் பரதேசிகளாயிருந்து....... அவர்களால் 400 வருடம் உபத்திரவப்படுவார்கள்" என்றும், "பின்பு அவர்கள் புறப்பட்டு வருவார்கள்" என்றும் சொன்னார். சரி ஏன் இந்த 400 வருட தாமதம்? இதோ அதன் காரணம் "...... ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை" (வசனம்16) என்றார். அதன் பொருள் என்ன? கானானில் வசிக்கும் எமோரியர்களின் பாவம் நியாயம் தீர்க்கப்படும் அளவு பூரணமாகவில்லை. தேவன் ஒருபோதும் பூரணமாய் விளையாத ஒன்றைப் பிடுங்குபவர் அல்ல. 400 வருடத்தில் அவர்கள் துன்மார்க்கம் பூரணமாகும். அப்போது நான் இஸ்ரவேலரை அந்த தேசத்திற்குள் அனுப்புவேன் என்றார். 400 வருடம் இஸ்ரவேலர்கள் எந்தவித கீழ்ப்படியாமையும் காட்டவில்லை. ஆனால் "***இப்போது*** **நீங்கள் போய் சுதந்தரியுங்கள் என்று சொன்னபோது அவர்கள் கீழ்ப்படியவில்லை.** *எனவே தேவன் அவர்கள் மீது கோபம் கொண்டார்.*

*இது எப்படி* **நமக்கு** *பொருந்தும்? கவனியுங்கள், அப்.17:30-ன்படி "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போல் இருந்தார்." இந்த 400 வருடம் போலவே நாம் அறியாமையில் ஜீவித்தோம். அநேக வருடங்கள் மனந்திரும்புதல் பற்றி அறியோம், முழுக்கு ஞானஸ்நானம் அறியோம், பரிசுத்தாவிஅபிஷேகம் அறியோம்.... பாவம் மேற்கொள்ளாத வெற்றி வாழ்க்கை! கடந்த 20 நூற்றாண்டுகள் நம் வேத புத்தகத்தில் அது இல்லாமலா போய்விட்டது? ஆனால் நாமோ அதை ஒருபோதும் கேள்விப்பட்டு அறியவில்லை, எனவே தேவன் அவைகளைக் காணாதவர் போலிருந்தார். ஆனால் இப்போதோ அவருடைய இரத்தத்தினால் மனந்திரும்புதலும், முழுக்கு ஞானஸ்நானமும், பரிசுத்தாவி அபிஷேகமும் பெற்று, இப்போது ஆவியானவர் உங்களை வாக்குத்தத்தப் பூமியின் ஓரம் நடத்தி வந்துவிட்டார். "இப்போதோ" நான் தோற்கடிக்கப்பட்ட ஜீவியம் செய்யக்கூடாது, ராட்சதர்களைப் பார்த்து "ஜெயிக்க முடியாது" என்று சொல்ல வேண்டாம். எகிப்தின் அறியாமைக் காலங்களில் சரிதான். இப்போதோ உங்கள் ஜீவியத்தை ஆளுகிற ராட்சதர்களைக் காணுகிறீர்கள். யார் இந்த ராட்சதர்கள்? கோபம், சண்டை, இச்சை, மன்னிக்காத சுபாவம் இப்படிப் பல ராட்சதர்கள் ஆளுகை செய்கிறார்கள். எல்லா நேரங்களிலும் இந்த ராட்சதர்கள் உங்களைக் கீழே அடித்து வீழ்த்துகிறார்கள். அவர்களை ஜெயிக்க முடியும் என்று ஒரு போதும் நீங்கள் அறியாதிருந்தீர்கள்! வேதத்தின் வெற்றியான வாழ்க்கைப் போதகத்தைக் கேளாதிருந்தீர்கள்!! எனவே தேவன் இவைகளைக் காணாதவர்போல இருந்தார். இவர்கள், எகிப்திலிருந்து வெளிவந்தும், கானானுக்குச் செல்லுவோம் என்பதை அறியாத ஜனங்களைப் போல!!! ஆனால் "இப்போதோ" சிலர் எஸ்கோல் பள்ளத்தாக்கு சென்று அங்குள்ள சிறந்த கனிகளைப் புசித்து,*

*அங்கு ஒரு மிகச் சிறந்த நல்ல தேசம் இருக்கிறது என்று சொல்லு கின்றனர். ஆம்! இப்போது உங்கள் மீது தேவன் காணாதவர் போல இருக்கமாட்டார். இங்குதான் தேவன் கோபம் கொள்ளும்நேரம். குறிப்பிட்ட இடங்களில் தான் தேவன் கோபம் கொண்டார் என்று பார்க்கிறோம். பொதுவாக நாம் அறிவதெல்லாம் பாவிகள் மீது தேவன் கோபம் கொள்ளுவார் என்பதே. சங்கீத புத்தகத்தில் தேவன் துன்மார்க் கனிடத்தில் தினமும் கோபம் கொள்ளுகிறார் என்று வாசிக்கிறோம். ஆனால் தேவன் இஸ்ரவேலரிடமும் 40 வருடம் கோபம் கொண்டார் என்றும், அவர்களில் பிரியமாய் இல்லை என்றும், எபிரெயர் நிருபத்தில் வாசிப்பது நம்மை விழிப்புணர்வு கொள்ளும்படி தட்டி எழுப்பு கிறதல்லவா!!*

**7.வெற்றி வாழ்க்கை சுதந்தரிக்க ஆயத்தமா? உங்களை சந்திக்கும் தேவசவால்:**

*எண். 13:2-ன்படி மோசே, கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி இஸ்ரவேல் கோத்திரத்தில் ஒவ்வொருவராக 12 பேரை அனுப்பினான். வசனம் 25-ல் அவர்கள் 40 நாள் சென்ற பின்பு திரும்பினார்கள். அதில் 10 பேர், "எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசம்தான். இது அதினுடைய கனி.* **ஆனாலும்** *அந்த தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்...." என்றனர் (வசனம் 27). வெற்றி வாழ்க்கையைப் (கானானை சுதந்தரிப்பதைப்) பற்றி அழகாய் பிரசங்கித்தார்கள். ஆனால் பிரசங்கித்த அவர்களால் அதைச் சுதந்தரிக்க முடியவில்லை. அவர்கள் கடைசியில் சொன்னார்கள் "ஆனாலும்" அவர்கள் பலவான்கள்! அந்த தேசத்தை ஜெயிப்பது முடியாது என்றனர். இதையே இன்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். தாங்கள் தோற்கடிக்கப்பட்ட பகுதிகளை இவர்கள் காண்கிறார்கள். அவிசுவாசம் அவர்களைக் கவ்விக்கொள்ள, "எங்களால் வெற்றி காணுவது இயலாத ஒன்று.... எங்களுக்குத் தேவையெல்லாம் இயேசு வினிடம் அவ்வப்போது சென்று எங்கள் பாவத்திற்கு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுவதுதான்" என ஆறுதல் கொள்ளுகின்றனர். தேவன் இப்படிப்பட்டவர்கள் மீதே கோபமாய் இருக்கிறார். ஆனால், மற்ற இரண்டு பேரான யோசுவா, காலேப் "..... நாங்கள் போய் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் ..... பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார்" என்றனர் (எண்ணாகமம்.14:7,8). இவர்களும் தான் ராட்சதர்களைக் கண்டார்கள். ஆனால் இவர்கள் தேவனுக்கு கனத்தைச் செலுத்தினார்கள்.* **தேசத்தை சுதந்தரிக்க கர்த்தர் உதவுவார்** *என்றனர். தேவனுடைய வாக்குத்தத்தம் என்ன? "நான் அந்த தேசத்திற்கு (கானான்) உங்களை அழைத்துச் செல்லுவேன்." இதுவே தேவனுடைய வார்த்தை! இந்த தேவவார்த்தைக்கு எதிராக இஸ்ரவேலர்கள் தங்களின் சுபாவ உணர்வின்படி* (Natural sense) "**ஆனால்** *அங்குள்ளவர்கள் ராட்சதர்கள்!" என துர்சாட்சி கூறினார்கள். இதில் எதை விசுவாசிக்கப் போகிறோம் என்பதுதான் இப்போது கேள்வி! தேவ சவாலை ஏற்க*

*நீங்கள் ஆயத்தம்தானா?*

**8.வெற்றிவாழ்விற்கு அடியெடுத்துவைப்போருக்கு துணைபுரியும் தேவகரம்:**

*கானான் தேசத்தைச் சுதந்தரிக்க முடியும் என்ற விசுவாசம் கொண்ட யோசுவாவிற்கு, தேவன் ".... **ஒருவனும்** உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை" (யோசு.1:5) என வாக்குரைத்தார். இதற்கு ஒப்பாக புதியஏற்பாட்டில் ரோமர் 6:14-ல் "**பாவம்** உங்களை மேற்கொள்ள மாட்டாது" என காண்கிறோம். இந்த இரண்டு வசனங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! என்ன அருமையான வாக்குத்தத்தம். ஏன் யோசுவாவை ஒருவனும் எதிர்த்து நிற்பதில்லை? ஏனெனில் "நான் (கர்த்தர்) உன்னோடு இருப்பேன்" (யோசுவா 1:5) அவ்வளவுதான்! இதற்கு ஒப்பாகவே ரோமர்6:14-ல் வாசிக்கிறோம், "பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது." ஏனெனில் நீங்கள் "(மோசேயின்) நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் **கிருபைக்குக்** கீழ்ப்பட்டிருக்கிறீர்கள்." மோசே மரித்துப் போனான். அவன் உங்களைக் கானானுக்குள் நடத்த முடியாது. ஆனால் இன்னொருவர் உங்களைப் நடத்தப்போகிறார். அது யோசுவா! யோசுவாவுக்கு உள்ள மற்றொரு பெயர் என்ன தெரியுமா? "இயேசு"! இந்த மோசே மரிப்பான், இயேசு உங்களை நடத்துவார்!! இப்போது இயேசு "என் கிருபை உனக்குப் போதும்" என்கிறார். அந்த கிருபை உங்கள் வாழ்வில் ஆளும் எல்லா பாவங்களை மேற்கொள்ளு வதற்கும் போதுமானதே!! நாம் இங்கு தத்துவ ஞானம் பேசவில்லை. யாக்கோபு எழுதுவதுபோல் "நாம் வசனத்தின்படி **செய்கிறவர்களாக**" இருக்கிறோம். நாம் நடை முறையாய் சிந்திக்கவே விரும்புகிறோம். நீங்கள் தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்தாவிஅபிஷேகம் பெற்றிருக் கலாம். ஆனால் உங்கள் வாழ்க்கையில் ஒன்றோ, ஒன்றிற்கும் மேற் பட்டோ ராட்சதர்கள் ஆளுகிறார்கள்! ஏதோ ஒரு பாவம், தீய பழக்கம் உங்களைப் பிடித்திருக்கிறதா? உங்கள் சிந்தை வாழ்வு அசுத்தமாய் இருக்கலாம். மன்னிக்க முயற்சித்தும் மன்னிக்க முடியாத சுபாவமாயு மிருக்கலாம். நீங்கள் ஏதோ ஒருவழியாய் ஜெயித்ததுபோல எண்ணிய ராட்சதர்கள்கூட உண்மையிலேயே மயங்கித்தான் உள்ளனர். அவர்கள் சிலநாள் கழித்து மீண்டும் எழுந்து உங்களை அடித்து வீழ்த்துகிறார்கள். உங்களுக்கு இப்படி அனுபவம் உண்டல்லவா? கோபம், பொறாமை, வைராக்கியம், இச்சை... உங்களைப் பிடித்து ஆண்டுவருகிறது. இனியும் நீங்கள் ராட்சதர்களோடு வாழ வேண்டாம். இயேசு அளிக்கும் கிருபை, ராட்சதர்களை விரட்டும்! விசுவாசத்தில் கானானுக்குள் பிரவேசியுங்கள்!! சுயத்திற்கு மரிக்க உங்களை ஒப்புக்கொடுங்கள்!! உங்களைத் தேவ சமூகத்திற்கு முன்பாகத் தாழ்த்துங்கள். "தாழ்மையுள்ளவனுக்கு வரும் கிருபை" உங்களைப் பாவம் மேற்கொள்ளாத வாழ்க்கை வாழ உதவி செய்யும்!!!*



# 3

# சூரியபிரகாசமாய் வளரும் நீதிமானின் பாதை!

இஸ்ரவேலர்கள் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை என்ற எச்சரிக்கையின் செய்தியை 1 கொரி.10, எபி. 3-ம் அதிகாரங்களில் வாசிக்கிறோம். இது, அவர்கள் **ஆவிக்குரிய வளர்ச்சி** அடையவில்லை என்பதையே குறிக்கிறது. நீதி. 4:18-ல் "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போல் இருக்கும்" என்றுள்ளது. இன்று உலகத்தின் பல பகுதிகளிலும் பார்க்கும்போது பெரும்பாலோர் ஆவிக்குரிய வளர்ச்சி (Spiritual Progress) அடையாமலே இருக்கிறார்கள். நீதி. 4:18-ன் விளக்கம் என்ன? நான் மறுபடியும் பிறப்பதற்கு முன்பு அந்தகாரத்தில் இருந்தேன். பின்பு யோவான் 1:4-ன் படி "மனுஷருக்கு ஒளியாகிய கிறிஸ்துவின் ஜீவன்" - நீதியின் சூரியனாக என்னுள் உதித்தார். நாம் ஜீவியத்தில் கடந்து வரும்போது இந்த ஜீவனின் (Christ's Life) ஒளி அதிகமதிகமாய் நம்மில் பிரகாசிக்க வேண்டும்! இறுதியாக ஓர் நாளில் நாம் மகிமைக்குள் பிரவேசிக்கும்போது இயேசுவைப் போல் மாறுவோம். இதுதான் நீதிமான்களின் பாதை!

**1.நம்மை தேவன் விரும்பும் வாழ்க்கையோடு மாத்திரமே ஒப்பிட வேண்டும் :**

நீதிமொழிகள். 4:18-ன் வசனத்திற்கு இணையாக புதிய ஏற்பாட்டில் 2கொரிந்தியர். 3:18-ம் வசனம் "நாமெல்லாரும்... கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிறோம்" என்று வாசிக்கிறோம். நம் வாழ்க்கை இவ்வாறாகத்தான் இருக்க வேண்டும் என்பதே தேவசித்தம் என வாசிக்கும்போது, நாம் நம் வாழ்க்கையை "அப்படியே" கர்த்தருடைய மகிமையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நாம் மறுபடியும் பிறந்து, தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு என் ஜீவியப்பாதையில், நீதிமொழி.4:18-ன்படி ஒப்பிடும்போது என் வாழ்க்கை அப்படி இல்லையே! சிலசமயங்களில் அதிக பிரகாசம், பின் வீழ்ச்சி... ஒரு கன்வென்ஷன் கூட்டம் நடந்தால் மீண்டும் பிரகாசம் பின்பு மறுபடியும் வீழ்ச்சியே! இது ஒரு அவிசுவாசியின் அனுபவமா? இல்லை! இதுதான் அநேக விசுவாசிகளின் இன்றைய

அனுபவமாயிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வான ஜீவியம் தேவனுடைய சித்தம் இல்லை என்பதை நாம் அறிய வேண்டும். இல்லாவிட்டால் நாம் ஒருபோதும் வெற்றியின் ஜீவியம் செய்ய முடியாது. இன்று விசுவாசிகள், கேவலம்..... அநேக பிரசங்கிகளைக் கேட்கும்போதுகூட அவர்கள் சொல்வதெல்லாம், "முழு வெற்றியின் ஜீவியம் செய்ய முடியாது!" "அநேகர்" இப்படிச் சொல்லுகிறபடியால் அது உண்மையாகிவிட முடியுமா? இல்லை... ஒருக்காலும் இல்லை!!

**2. தோல்வியின் வனாந்திரத்திலேயே ஜீவிக்கும் இன்றைய கிறிஸ்தவர்கள் :**

பூரண வெற்றியை வாஞ்சிக்காத கிறிஸ்தவர்கள், இஸ்ரவேலர் 40 வருடம் வனாந்திரத்தில் இருக்க விரும்பியது போலவே இருக்கிறார்கள். 1 வருடம் கழிந்தும் வனாந்திரம்! 5 வருடம் கழிந்தும் வனாந்திரம்!! 30,35,40 வருடங்கள் கழிந்தும் வனாந்திரம்! வனாந்திரமே!! இதுதான் தேவ சித்தமா? இல்லவே இல்லை. செங்கடலைக் கடந்து, எகிப்திலிருந்து விடுதலையான பின்பு 2 வருடத்தில் தேவன் இஸ்ரவேலரை வாக்குத்தத்தப் பூமி முன் அழைத்துவந்து "போய் சுதந்தரியுங்கள்" என்றார். அவர்கள், "முடியாது" என்று சொன்ன பின்புதான் வனாந்திர ஜீவியம் ஆரம்பித்தது. ஒரு குழந்தை பிறந்தவுடன் நடக்கமுடியாதுதான். ஆனால் 2 வருடம் ஆகியும் நடக்கவில்லை என்றால், அது கவலைதரும் விஷயம், உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். 10 வருடம் முன் தோற்கடிக்கப் பட்ட அதே பாவத்தால் இப்போதும் தோற்கடிக்கப்பட்டீர்களா? அப்படியென்றால் நீங்கள் வனாந்திரத்திலேயே ஜீவிக்கிறீர்கள். ராட்சதர் களோ இன்னமும் கானானிலேயே இருந்து ஆளுகிறார்கள்! ஆனால் தேவனோ, கானானைச் சுதந்தரிக்கச் சொன்னார். நாமோ, ராட்சதர்கள் கொல்லப்படாமல் அவர்கள் இன்னமும் ஜீவித்து ஆளுவதற்கு அனுமதிக் கிறோம். இது தேவனுடைய சித்தம் அல்லவே அல்ல. இதை நாம் உணர வில்லை என்றால், நாம் வாக்குத்தத்த தேசத்தில் நுழையவே முடியாது. உங்களைப் பரவசப்படுத்தும் ஓர் நற்செய்தி என்னவென்றால், "**தேவன் தம்முடைய கிருபையை**" அளித்து அதன் மூலம் வெற்றியின் ஜீவியத்தை உங்களுக்குத் தரமுடியும் என்பதுதான்!!

**3. நாம் போரட அனுமதிக்கப்படும் ஒரே ஒரு களம்:**

யூதா 3-ம் வசனத்தில் ".... பரிசுத்தாவன்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராட வேண்டுமென்று...."வாசிக்கிறோம். கொரிந்தியர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டனர். நாம் சண்டை போட வேண்டுமென்றால், அது கணவனோடு அல்ல; மனைவியோடும் அல்ல; அல்லது வேறு எவரிடமும் அல்ல. "பரிசுத்தாவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காகவே" போரடவேண்டும். கடந்த ஆயிரம் ஆண்டுகளாக மனுஷீகப் பாரம்பரியத்தால் புதைக்கப்பட்ட, ஆதி அப்போஸ்தலர்கள் கண்ட "அந்த மெய் விசுவாசத்திற்காகவே" போரடவேண்டும். கடந்த 400 வருடங்களில் இருந்தே தேவன் இப்படிப் புதைக்கப்பட்ட

சத்தியங்களை மீட்டெடுக்க (Restorational Truths) ஆரம்பித்துவிட்டார். இப்போது சாதாரணமாகக் கருதப்படும் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற இரட்சிப்பின் சத்தியத்தை மார்ட்டின் லூத்தர் மூலமாக தேவன் மீட்டெடுத்தார். ஆனால் மார்ட்டின் லூத்தரோ, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பற்றி ஒன்றும் அறியாதவராய் இருந்தார். அதற்கு தேவன் இன்னொருவரை தன்னுடைய கால அட்டவணையின்படி எழுப்ப வேண்டியிருந்தது. பின்பு தேவன் பரிசுத்தாவி அபிஷேகத்தின் சத்தியங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தார். அதன் பின் பரிசுத்தாவியானவரின் வரங்கள்... பின்பு மணவாட்டியான சபையின் சத்தியங்கள்... இந்தக்கடைசி நாட்களில் பூரண வெற்றியான ஜீவியத்தின் சத்தியங்கள்.... பின்பு **திவ்விய சுபாவத்தில்** (Divine Nature) பங்குபெறும் அனுபவ சத்தியங்கள்...பின்பு எப்படி நாம் கிறிஸ்துவின் சரீரமாய் இணைந்து கட்டப்படவேண்டும் என்ற சத்தியங்கள்.... இவ்வாறு தேவனுடைய இந்த மீட்பின் பணியில் நாம் இணைந்து போராட வேண்டும்.

### 4. "கிருபை" இந்தப்பதத்திற்கு தேவன் மீட்டுத் தந்த சத்தியம் யாது?

அநேக விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையில் "கிருபைக்கு" கண்ட விளக்கமெல்லாம், "நான் பெறத் தகுதியற்று இருந்தும், பெற்றுக் கொள்ளும் தேவமன்னிப்பு, ஆசீர்வாதங்கள்தான் கிருபை." ஆனால் இது ஒரு பகுதிக்குத்தான் உண்மை. யூதா 4-ம் வசனத்தில் ".... நம்முடைய தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி....." என வாசிக்கிறோம். இதன்படி தேவனுடைய கிருபையை வேறுவிதமாய்ப் புரட்டிவிட்டார்கள். இதன் பொருள் என்ன? தேவனுடைய கிருபை உண்மையாய் என்ன கிரியை செய்யுமோ அதற்கு நேர்மாறாய் மாற்றிப் புரட்டி விட்டார்கள். இப்படிச் செய்ய இவர்கள் குர்ரானையோ பகவத் கீதையையோ வைத்துக்கொண்டு அல்ல, வேதாகமத்தை வைத்தே செய்துவிடுகிறார்கள். சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்திலேயே வந்து வஞ்சிக்கிறான். இப்போது கவனித்துப் பாருங்கள், ரோ. 5:20-ல், "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று." இந்த வசனத்தை வைத்து கிருபையைப் புரட்டுகிறவர்கள் இப்படிப் பிரசங்கிப்பார்கள், "நீங்கள் பாவம் செய்கிறீர்களா? கவலை வேண்டாம்! தேவ கிருபை உங்களோடு இருக்கிறது. உங்கள் மேலேயே இருக்கிறது. தொடர்ந்து நீங்கள் பாவம் செய்தாலும் அவர் கிருபை அதற்கு மேலானது" என்று பிரசங்கிப்பார்கள். ஜனங்களுக்கோ இப்படிப்பட்ட பிரசங்கங்கள் கேட்க மிகவும் சந்தோஷம்! யார் சந்தோஷப்படுவார்கள்? தொடர்ந்து பாவம் செய்ய "விரும்புகிறவர்கள்." யார் சந்தோஷப்பட மாட்டார்கள்? **தங்கள் பாவங்களில் சலிப்படைந்தவர்கள்!!** இவர்களே, "தேவன் இந்தப் பிரசங்கியின் மூலம் எனக்கு உதவிசெய்வார் என்றும் எண்ணினேன். ஆனால் இவரோ நான் எப்படி வெற்றியுள்ள ஜீவியம் செய்ய முடியும் என்று கூறவில்லையே?" என அங்கலாய்ப்பார்கள். பல வருடங்களாகக் கிருபை என்றால், "தேவன் தொடர்ந்து பாவங்களை

*மன்னிப்பது" என்று எண்ணிய எனக்கும் தோல்வியின் ஜீவியமே எஞ்சி நின்றது. பின்பு வேதத்தை சரியாகக் கவனமாய் படிக்க ஆரம்பித்தவுடன் தான் நான் ஆவிக்குரிய விழிப்பை பெற்றேன். இன்று ஜனங்கள் தாங்கள் விரும்பும் வேதபகுதிகளை மனப்பாடம் செய்கிறார்கள். ஆனால் அதன் பொருளோ அந்த வசனத்தின் முன் அல்லது பின் வசனத்தின் குறிப்புப் படி முற்றிலும் வேறுபட்டதாய் இருக்கும்.*

*எனவே இப்போது நன்கு கவனித்துப் பாருங்கள். இந்த ரோமர் 5:20 -ம் வசனம் முற்றுப்புள்ளியில் முடியாமல் காற்புள்ளி குறிக்கப்பட்டு தொடர்ச்சியில் நிற்கிறது. இப்போது வசனம் 21 படிக்கும்போது 20-ம் வசனத்தின் காரணம் தெளிவாய் புரிகிறது. வசனம் 21, "ஆதலால், பாவம் மரணத்திற்கு ஏதுவாக ஆண்டு கொண்டதுபோல கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது." எனவே கிருபையானது என் வாழ்வில் பிரவேசித்ததின் நோக்கமே, நீதி என் வாழ்வில் ஆளுகை செய்வதற்காகத்தான்!! 20-ம் வசனத்தின் அர்த்தம் நீங்கள் எவ்வளவுதான் பாவத்தினால் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய கிருபையோ உங்கள் எல்லா பாவங்களுக்கும் மேலாய் வெற்றியைத் தரும்! இதுதான் சத்தியம்!! இப்போது ரோமர் 6:14 - ஐ ஒப்பிடுங்கள்,* "**நீங்கள் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது**" *ஆ, இது ஆச்சரியம்! எனவே நாம் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறோம் என்பதற்கு நிரூபணம்* (Proof) *என்ன? அதற்குப் பதில் இதுதான். "பாவம் நம்மை மேற்கொள்ளமாட்டாது!" கிருபையினால் இரட்சிக்கப்பட்டும் தொடர்ந்து நம்மைப் பாவம் ஆளுகை செய்யுமென்றால், அது எதை நிரூபிக்கிறது? அதற்குப் பதிலையும் கேளுங்கள், அது "பொய்யான புரட்டப்பட்ட கிருபை" சிறிய பிள்ளையும் பதில் சொல்லும் அளவுக்குச் சத்தியம் மிகமிகத் தெளிவாக இருக்கிறது.*

**5. புதிய ஏற்பாடு அழைத்திடும் வெற்றி வாழ்க்கையின் சவால் கேளீர்!**

*நியாயப்பிரமாணம் மோசே மூலமாய் வந்தது. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் கிருபை வந்தது என்று வாசிக்கிறோம். நம்மை மேன்மையான வெற்றியின் ஜீவியத்திற்கு* **மோசே** *நடத்த முடியுமா? அல்லது* **இயேசுவா?** *இதற்குப் பதில் "இயேசு" தான்! இப்போது, மிக முக்கியமான கேள்வியின் கட்டத்திற்கு வருகிறோம். பழைய ஏற்பாட்டின் எலியா எந்தப் பெண்களையும் இச்சித்துச் சுற்றினாரா? இல்லை! "யோவான் ஸ்நானகன் பொய்சொல்லத் துணிந்தாரா?" - இல்லை! அவர் சத்தியத் திற்காகத் தன் தலையையும் கொடுக்கத் துணிந்தவர்! இப்படிப் பழைய ஏற்பாட்டின் மாதிரிகள் இருக்க புதிய ஏற்பாட்டு விசுவாசிகளின் உயர்தர வெற்றியின் ஜீவியம் எங்கே? பதில் இல்லை! குறைந்த பட்சம்* **நேர்மையுடன் ஒத்துக் கொண்டால்,** *அதுவே வெற்றிக்கு முதல் படியாகும். என் வாழ்க்கையின் இப்போதைய நிலையோ பழைய ஏற்பாட்டு மக்களோடு ஒப்பிடக்கூட தகுதி அற்றதாயிருக்கிறது. மோசே மேன்மையான*

ஜீவியதரத்தில் ஜீவித்திருந்தால், இயேசுவைப் பின்பற்றும் நான் அதைவிட எவ்வளவு அதிகமான வெற்றியின் ஜீவியத்தில் இருக்க வேண்டும்! இதற்கெல்லாம் காரணம், நான் கிருபையைத் தவறாகப் புரிந்துகொண்டதுதான். என் சிந்தனை ஜீவியம் (Thought Life) எவ்வளவு கேவலமாய் இருக்கிறது! ஏன்? என் வெளிப்படையான ஜீவியத்திலும் கூட, ஒரு கஷ்டமான சூழ்நிலையில் இருந்து தப்புவதற்குப் பொய் சொல்லிவிடுகிறேனே! என் ஜீவிய தரம் பழைய ஏற்பாட்டை விடக் கீழ்த்தரமாயிருந்தும் நானோ கிருபையைப்பற்றிப் பிரசங்கிக்கிறேன்!? **"கிருபை புரட்டப்பட்டதன்" விளைவு எவ்வளவு பயங்கரம்!** தான் முதலில் இரட்சித்த ஜனங்களைத் தேவன் பின்பு அழிப்பாரா? நாம் நம் சொந்த அபிப்பிராயங்களை சொல்லலாம். ஆனால் வேதம் சொல்லு கிறது என்ன? யூதா 5-ம் வசனம் "கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்." ஏனெனில், அவர்கள் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை! காரணம் அவர்கள் தேவனுடைய கிருபையைப் புரட்டி பொய்யாக்கினார்கள். உண்மையான தேவகிருபையோ இராட்சதர்களை உங்கள் கால்களுக்குக் கீழ் கொண்டு வருமே!!

### 6.நம் மாம்சத்தில் குடியிருக்கும் இராட்சதர்களை அழிக்க வந்த இயேசு!

நமது உண்மையான கானான் எது தெரியுமா? இந்த நமது மாம்சமே! அநேக ஆண்டுகளாக, யார் இதை ஆளுகிறார்கள்? மாம்ச இச்சையின் மூலமாக சாத்தானே ஆளுகிறான். கோபப்படும்போது, பொறாமை கொள்ளும்போது, புண்படுத்தும் கடிதம் எழுதும்போது, யார் இந்த மாம்ச சரீரத்தில் மகிமைப்படுகிறார்கள்? சாத்தானே! இவன் அநேக இராட்சதர்களோடு இந்தக் கானானை ஆளுகிறான். அநேக ஆண்டுகள் தேவன் இதைக்குறித்து ஒன்றும் செய்யவில்லை. ஒருநாள் அவர் தன் கிரியையை ஆரம்பித்தார். ஆம், இயேசு ஒருநாள் நம்மைப் போன்ற மாம்சத்திலேயே வெளிப்பட்டார். நம்மைப்போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டார். ஆனால், இவரோ மாம்சத்தில் குடிகொண்டிருந்த **எல்லா ராட்சதர்களையும் அழித்தார்!** இப்போது இந்த இயேசு ஓர் நல்ல செய்தியை அறிவிக்கிறார் "நான் எல்லா ராட்சதர்களையும் இந்த மாம்சத்தில் ஆவியின் வல்லமையால் மேற்கொண்டேன்" இதே ஆவியின் வல்லமையை உங்களுக்கும் தருகிறேன். நீங்கள் இப்போது போய் ராட்சதர்களை மேற்கொண்டு வெற்றி பெறுங்கள்" எபி. 4:16-ன்படி "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாகக் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்" என அழைக்கப்படுகிறோம். முதலில் பெறுவது **இரக்கம்** (Mercy) **பின்பு** பெறுவது கிருபை (Grace). இரக்கம் முதலில் பெறுவது எதற்கு? நம் பாவங்கள் கழுவப்பட்டு மன்னிக்கப்படுவதற்கே. இயேசு பிறந்ததிலிருந்தே மறுபடியும் பிறந்த விசுவாசியைப்போல் இருந்தபடியால், அவருக்கு இரக்கம் தேவை

யில்லாதிருந்தது. "**ஏற்ற சமயத்தில்** சகாயஞ் செய்யுங்கிருபையே" உண்மையான தேவன் அருளும் கிருபை. சகாயம் அல்லது உதவி எப்போது? "ஏற்ற சமயத்தில்" (In the time of need). எது தேவையான ஏற்ற சமயம்? முன் வசனக்குறிப்புப்படி "சோதிக்கப்படும் நேரமே" உதவிபெற ஏற்ற சமயம். இயேசு எப்படி வெற்றி பெற்றார்? தேவனுடைய கிருபை அவரோடு இருந்ததினாலேயே. இயேசுவுக்கும் கிருபை தேவையா? இதைத்தவறான உபதேசம் என சில ஜனங்கள் சொல்லலாம். ஆனால் வேதம் கூறுவது என்ன? லூக்கா.2:52-ன்படி "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும்,தேவகிருபையிலும்.... அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்." தேவகிருபை இயேசுவை ஆண்டு கொண்டிருந்தது. எனவேதான் "**இயேசுவை பாவம் மேற்கொள்ளவில்லை!**" **இதேபோல் நாமும் பாவம் மேற்கொள்ளாத வாழ்க்கை வாழ,** பிதாவின் சந்நிதானம் பிரவேசித்து, கிருபையைப் பெறுவோமாக!

### 7. நாம் கிருபையைப் பெற்றுக்கொள்ள தடை என்ன?

1பேதுரு 5:5-ன்படி "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." நாம் "கிருபையைத்தாரும்..... கிருபையைத்தாரும்" என்று வெறும் ஜெபம் செய்வதால் கிருபை கிடைப்பதில்லை. **நம்மை நாமே தாழ்த்தும்போது மாத்திரமே** தேவன் கிருபையை அளிக்கிறார்.எவ்வளவு அதிகமாய்த் தாழ்த்துகிறோமோ அவ்வளவு அதிகமாய் கிருபை பெறுவோம். இன்று ஆவிக்குரிய தலைவர்கள் என்று சொல்பவர்களும் கோபம் அடைகிறார்கள். பண ஆசை கொள்கிறார்கள். உலகமதிப்பிற்காக ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். ஏன்? ஒரே காரணம்... அவர்கள் கிருபை பெறவில்லை! எவ்வளவு அதிகம் அவர்கள் உயர்த்தப்பட்டார்களோ அவ்வளவு அதிகம் பெருமையும் அவர்களிடம் தலை தூக்கியது. பின் தானாகவே தேவனுடைய கிருபை அவர்களை விட்டு விலகி எடுபட்டது!! ஆவிக்குரிய வட்டாரத்தில் பெந்தேகொஸ்தே சபையினர் உட்பட, உயர்ந்த மேடைகளில் ஏறியவுடன், மற்ற கீழ் உள்ள ஜனங்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்குள் உருவாக ஆரம்பித்து விடுகிறது. பின் என்ன.... பரிதாபம்! கிருபையை இழந்து போகிறார்கள்!! உலகமதிப்பு, அந்தஸ்து, பட்டங்கள் பண ஆசை எல்லாம் வந்தவுடன் பெருமைகொண்டு, மேன்மையான கிருபையை இழந்து விடுகிறார்கள். ஒருதடவை இயேசுவைப் பின்பற்றிய திரள் கூட்டம் அவரை ராஜாவாக ஆக்க முயற்சித்த போது, அவர் அவர்களைவிட்டு ஓடினார். நான் ஊழியம் செய்ய ஊழியக்காரனாகவே (Servant) அல்லது வேலைக் காரனாகவே வந்தேன் என்று தன்னைத்தானே தாழ்த்தினார். இன்று அப்படிச் சொல்பவர்கள் உண்டா தங்களுக்கு Rev; Doctor; போன்ற பட்டங்கள் தேவையில்லை என்று கூறும் **தாழ்மை ஊழியர்கள்** உண்டா? இன்று பிசாசு கிறிஸ்தவ ஊழியர்களுக்கு அநேக குப்பையான பட்டங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறான். இந்தப் பட்டங்கள் பரிசுத்த

ஆவியானவரால் வந்ததா? இல்லை! அவைகளை பிசாசு வழங்குகிறான்! பட்டங்களைப் பெறுகிறார்கள்..... அந்தோ, கிருபையை இழக்கிறார்கள்!!

பெந்தெகொஸ்தே எழுப்புதல் முதலில் இந்தியாவில் உருவான போது, இது தன் ராஜ்யத்தை அசைத்துவிடும் என்று பிசாசு பயந்தான். அபிஷேகம் பெறாத ஜனங்கள் அவனுடைய ராஜ்யத்தையே ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் இவர்களோ அசைத்துவிடுவார்கள் என்று பயந்து, பிசாசு அவர்களுக்குப் எதிராகப் பல உபத்திரவங்களை அனுப்பித் தோற்றுப்போனான். இப்போது வேறுவிதத்தில் தந்திரமாய் செயல்பட்டான். இவர்களை 'அமெரிக்கா' அனுப்பி பணம் பெறச் செய்வேன், பல ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கச்செய்து, பிரஸிடெண்ட், செகரட்டரி, டைரக்டர் போன்ற பட்டங்களைக் கொடுத்து உயர்த்துவேன் என்று திட்டம் வகுத்தான்! இப்போது வெற்றியும் கண்டுவிட்டான்!! **இந்தியாவில் ஆரம்பத்தில் இருந்த பெந்தேகொஸ்தே வல்லமை, இப்போது 1% கூட இல்லை.** மாறாக இவை எல்லாவற்றையும் தவிர்த்து, இயேசுவின் வழியைப் பின்பற்றி இருந்தார்களென்றால், சாத்தானின் இராஜ்ஜியம் நிச்சயமாய் அசைக்கப்பட்டிருக்கும். நீங்கள் யாராயிருந்தாலும் என்ன? நீங்கள் உங்கள் வாழ்வின் தோல்வியை ஒத்துக் கொண்டு, உங்களைத் தாழ்த்துவீர்கள் என்றால் மாத்திரமே தேவ கிருபை உங்களில் இறங்கும். 2 இராஜா.6:25 வசனங்களில் "சமாரியாவில் பஞ்சம் வந்து, மக்கள் கழுதைத் தலையையும் புறாவின் எச்சத்தையும் சாப்பிட்டார்கள்" என வாசிக்கிறோம். அன்று போலவே இன்றைய பெந்தேகொஸ்தே சபைகளும் உள்ளன. ஆவிக்குரிய பஞ்சத்தில், கழுதைத் தலை போன்று 'மனுஷ சாமர்த்தியம்' மாத்திரமே எஞ்சியுள்ளது. புறா (பரிசுத்தாவியானவர்) பறந்துவிட்டது. எச்சம் மிஞ்சியுள்ளது. என்ன பரிதாபம்!!

நாம் இப்போது நேர்மை உள்ளத்தோடு "ஓ, தேவனே! எங்கள் தோல்வியை ஒத்துக்கொள்கிறோம். உமது உண்மையான கிருபையைத் தாரும்!! எப்போதும் வெற்றியின் ஜீவியம் செய்ய உதவும் கிருபையைப் பெற, எங்களைப் பூரணமாய்த் தாழ்த்துகிறோம். நீதிமான்களின் பாதை போன்று கிறிஸ்துவின் மகிமை எங்கள் ஜீவியத்தில் மகிமை மேல் மகிமை அடைய உதவி செய்யும்" என்று கெஞ்சி நிற்போமாக! அப்போது தேவன் நிச்சயமாய் உதவிசெய்வார்!!




## மனுஷர் பார்வைக்கு விலகி, தேவனுடைய பார்வையில் ஜீவியுங்கள்!

*கர்த்தர் சாமுவேலிடம் "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்றார் (1சாமு.16:7). இந்த ஒரு வசனத்தை மாத்திரம் நாம் அதிகக் கருத்தாய் எடுப்போமென்றால் நம் முழு வாழ்க்கையும் கர்த்தருக்குள் பெரிய மாற்றம் அடையும் என்பதில் சந்தேகமேயில்லை. உண்மை என்னவென்றால், அநேகர் இவ்வசனத்திற்கு அதிக முக்கியம் கொடுத்தது இல்லை என்பதுதான்.*

### 1.பாடகர் குழுவில் (Choir) சினிமா ஆவியா? மனுஷர் பார்வைக்கு ஜெபமா?

*சினிமா உலகில் பாடல்களின் இனிமைக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். இப்போது அதே சினிமா ஆவி, கிறிஸ்தவ சபைகளையும் பிடித்துக்கொண்டது! சினிமாவில் செய்வதுபோலவே, இவர்களும் "தொனியில்" (Sound) அக்கறை கொள்கிறார்கள். பாடலை இருதயத்தின் உணர்வோடு பாடுகிறார்களா என்பதில் சிறிதும் அக்கறை கொள்வதேயில்லை. நம்மை நாம் ஆராய்ந்து பார்ப்போமாக! அநேக சபைகளில் பாடகர்குழு (Choir) இருக்கிறது. இவர்கள் மணிக்கணக்கில் உட்கார்ந்து பிராக்டிஸ் செய்வதெல்லாம் தங்களின் "***சப்தம்***" (Voice) சரியாய் வருகிறதா என்பதே. பாடகர் குழுவில் உள்ளவர்களில் ஒருவர் கூட, தாங்கள் பாடும் பாடலின் பொருளை உணர 5 நிமிடம்கூட சிந்திக்க மாட்டார்கள். பின் யாருக்காக அவர்கள் பாடுகிறார்கள்? ஜனங்களுக்காகப் பாடுகிறார்கள்! தேவனுக்காக அல்லவே அல்ல!!*

*மற்றொன்று ஜெபம். இதிலும் தேவன் மனுஷர் பார்க்கிற விதமாய்ப் பார்ப்பது இல்லை. நீங்கள் கூட்டங்களில் ஜெபிக்கும்போது "மற்றவர்கள் என் ஜெபத்தைக் கவனிக்கிறார்கள் என்ற உணர்வு உங்களுக்கு உள்ளதா?" நம்மைச் சுற்றி உள்ளவர்கள் நம் ஜெபத்திற்கு "**அல்லேலூயா**" '**ஆமென்**' சொல்லும்போது பரவசம் கொள்கிறோம். அப்படி இல்லையென்றால், ஏமாற்றம் அடைகிறோம்! உடனே நாம் ஏதாவது ஒன்றைச்சொல்லி ஜெபித்து மீண்டும் அந்த "அல்லேலூயா"வைப் பெறவிரும்புகிறோம். இவர்கள் தேவனிடத்திலா ஜெபிக்கிறார்கள்?! இல்லவே இல்லை!! அநேக ஜெபங்களை **மனுஷருக்காகவே** ஜெபிக்கிறார்கள். எனவே அவர்கள்*

ஜெபங்களுக்கு பதில் வருவதே இல்லை! இதில் வெகு சிலர்தான் இருதயத்தைப் பார்க்கும் தேவனுக்கு முன்பாகப் பாடவோ, ஜெபிக்கவோ, பிரசங்கிக்கவோ செய்கிறார்கள்.

**2. நியாயத்தீர்ப்பு நாளில் கிறிஸ்தவர்களுக்குக் காத்திருக்கும் இருபெரும் அதிர்ச்சிகள்:**

"..... இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்" என 1 கொரி.4:5 எவ்வளவு தெளிவாகக் கூறுகின்றது! தேவன் வரும்போது இரு காரியங்களை வெளிப்படுத்துவார். (1) இருளில் மறைந்திருக்கிறவைகள். அதாவது மனதில் உள்ள **நம் எண்ணங்கள்** (Thoughts) (2) இருதயத்தின் யோசனைகள் அல்லது **நம் நோக்கங்கள்** (Motives). ஒரு கிறிஸ்தவ கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது தேவன் வந்தால், நாம் ஒருவரை ஒருவர் இப்போது வெளிப்படையாகப் (Externally) பார்ப்பதுபோல பார்க்க மாட்டோம். நம் இருதயங்களும், மனமும் வெட்ட வெளிச்சமாய்த் திறக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக நிற்போம்! ஒருவருடைய மனதிலும் இருதயத்திலும் இருப்பதை மற்றொருவர் அச்சமயம் வாசிக்க முடியும். மேடையில் நிற்கும் பிரசங்கியார், மனுஷீக கனத்திற்காகப் பிரசங்கித்தாரா? அல்லது தேவநாம மகிமைக்காய் பிரசங்கித்தாரா? என்று அப்போது அறிந்து கொள்ள முடியும்! ஆனால் இப்போதோ "அதை" யாரும் பார்க்க முடிவதில்லை. அந்த நாளில் அவை தெளிவாகும். ஆம், அந்நாளில் நாம் இரண்டு அதிர்ச்சிகளுக்கு உள்ளாவோம்.

1. நாம் அறிந்த, சிறந்த ஆவிக்குரிய சகோதரன் அல்லது சகோதரியின் இருதயத்தை இயேசு வெளியரங்கமாக்கும் போது மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாவோம், "ஆ! தேவனே! **இவ்வளவு மோசமான எண்ணங்களா** இச்சகோதரனின் மனதில் இருந்தது!! தன் இருதயத்தில் எவ்வளவு சுயநலம் உள்ளவனாய் இருக்கிறான். இதை நான் அறிய வில்லையே." இன்னமும், "சே! எவ்வளவு பண ஆசை இம்மனிதனின் இருதயத்தில் குடி கொண்டிருக்கிறது." "தேவனே! என்ன ஆச்சரியம்! நான் இம்மனிதனை சிறந்த ஆவிக்குரிய சகோதரன் என்றல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன், இவனோ தன் தனிவாழ்வில் (Private life) உலகத்தோடு ஒத்துப் போய் (Compromising) அல்லவா வாழ்ந்திருக்கிறான்." இன்னும் இதைவிட, ஆவிக்குரிய தலைவர்களின் இருதயங்கள் திறக்கப்படும்போது, அன்று அது நமக்கு சொல்லிமுடியா மிகுந்த அதிர்ச்சியைத் தரும்!!

2. நாம் அறிந்த சாதாராண விசுவாசி பிரசங்கிக்கவோ, ஊழியம் செய்யவோ வரம் (Gift) இல்லாதவர்! ஆனால், அவர் தன் தனிவாழ்வில் உத்தமமாயும், தேவனுக்குப் பயந்து ஜீவித்ததையும் அறியாமல், அவரை ஒரு அற்பமான விசுவாசியாய் எண்ணினீர்கள். கடைசிநாளில், தேவன் அவர் இருதயத்தை வெளியரங்கமாக்கும் போது, அவரின் **உத்தம தனி ஜீவியமும், பரிசுத்த எண்ணங்களும்** வெளியரங்கமாகும். அன்று நீங்கள் அடையப்போகும் பெரிய ஆச்சரியம் எதுவென்றால், "தேவனே! இச்சகோதரன் **உமது பார்வையில்** அதிக விலையேறப்பெற்றவன் என்று

அறியாதிருந்தேனே" என்பதுதான். எனவேதான் இயேசு சொன்னார், அந்நாளில் முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் இருப்பர். இன்று அநேக புகழ்ச்சிகளை "ஏற்றுக்கொண்டு" முன்வரிசையில் இருப்பவர்கள் பின்னாகத் தள்ளப்படுவார்கள்! பின்னாக உள்ளவர்கள், தேவனால் முன்கொண்டுவரப்படுவார்கள்!! எனவே உங்களைச் சந்திக்கும் ஓர் பெரிய கேள்வி எதுவென்றால், "நீங்கள் மனுஷர் பார்வைக்கு முன்பாய் ஜீவிக்கப்போகிறீர்களா? அல்லது தேவனுடைய பார்வைக்கு முன்பாய் ஜீவிக்கப்போகிறீர்களா?" என்ற சவாலிடும் கேள்விதான்.

**3. நாம் பரலோக ராஜ்யம் பிரவேசிப்பதைத் தடைசெய்யும் பரிசேய நீதிகள்!**

மத்தேயு 5:20-ல் "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" என இயேசு கூறினார். பரிசேயர் நீதியில் காணப்பட்டத் தவறுதான் என்ன? ஒழுங்காய் தசமபாகம் செலுத்தி னார்கள். வாரம் இருமுறை உபவாசித்தார்கள். கொலை செய்யவில்லை, விபச்சாரம் செய்யவில்லை.... சுருக்கமாய் சொல்வோமென்றால், அவர்கள் சிறந்த சபை மெம்பர்கள்!

இன்றைய சபைகள் அதிகமாய் எதிர்பார்ப்பது அதுதானே? கூட்டத்திற்கு ஒழுங்காய் வரவேண்டும். நீதியான வாழ்க்கை வாழ வேண்டும்...... இது எல்லாவற்றையும்விட தசமபாகத்தை ஒழுங்காய்ச் சபைக்குத் தரவேண்டும்!! ஒரு நல்ல சபை மெம்பருக்கு உள்ள தகுதி இதுபோதும்..... ஏன்? அவர்களை "போர்டு மெம்பராகக் கூட" ஆக்கியிருப்பார்கள்.

ஆனால் இயேசு சொன்னார், இவை எல்லாம் "தேவனுடைய, இராஜ்யத்திற்கு" போதுமானவைகள் அல்ல! இப்பூமியில் உள்ள கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கு வேண்டுமென்றால் இவைகள் போதும்! பரலோக ராஜ்யமோ வித்தியாசமான தரத்தை எதிர்நோக்குகிறது. மத்தேயு.6:1-ன்படி "மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் (நீதியைச்) செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை."

மனுஷருடைய பார்வைக்காக, அவர்கள் புகழ்ச்சியை விரும்பி, செய்யும் எல்லா ஊழியமும், தியாகமும், பரிசேய நீதிகள்! இவர்களுக்குப் பிதாவினிடத்தில் பலன் ஒன்றும் இல்லை! இன்றோ ஸ்தாபன ஊழியர்கள் தாங்கள் கர்த்தருக்குச் செய்த ஊழியத்தைப்பற்றி "அறிக்கைகள்" (Reports) அனுப்புகிறார்கள். இது உண்மையாகவே ஓர் வியாபார விளம்பரம் போல் (Advertisement)ஆகிறது. இரு காரணங்களுக்காக இதைச் செய்வார்கள், 1)கனத்தை அல்லது புகழ்ச்சியைப் பெற விரும்பியும் 2) பணத்தைப் பெறுவதற்குமே ஆகும். ஆம், அவர்கள் புகழ்ச்சியையும் பெறுவார்கள்! பணத்தையும் பெறுவார்கள்!! ஆனால் தேவன் சொல்லுவார் "பரலோகத்தில் உங்களுக்குப் பலனில்லை."

## 4. மனுஷர் பார்க்கும்படி ஜீவிப்பது, கொடூர விக்கிரக ஆராதனை!

*இன்று மனுஷீக கனத்தைப் பெறுவதற்காக, பரலோக பிதாவின் மூலம் அடையும் பலனை இழப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறார்கள்!? அந்தோ, பரிதாபம்! இது ஒரு பயங்கர விக்கிரக ஆராதனை! நாம் ஒன்றை பேசும்போது, மிக சாமர்த்தியமாக ஆவிக்குரிய வடிவத்தில் வார்த்தைகளைப் போட்டு மனுஷர்களுடைய கனத்தையும் நல்ல மதிப்பையும் பெற விரும்பும்வோமென்றால், நாம் செய்வதெல்லாம், "மனுஷனே, உனக்கு முன்பாக என் சிரம் தாழ்த்தி உன்னை வணங்குகிறேன்! தயவுசெய்து, நீயோ உன் மதிப்பையும், கனத்தையும் எனக்குத் தா!!" என்று செய்யும் விக்கிரக ஆராதனை என்பதை இன்று அறிந்து கொள்ளுங்கள். இன்று அநேகர் கூட்டங்களில் ஜெபிக்கும் பொழுது செய்வதென்ன? இயேசுவின் நாமத்தில் ஆவிக்குரிய வார்த்தைகளோடு அழகாக ஜெபித் தாலும், இவர்களின் காதுகள் மற்றவர்கள் போடும் "அல்லேலூயா" சத்தத்தைக் கவனித்து, "ஆ! இவர்கள் நம் ஜெபத்தைக் குறித்து எத்தனை நல்ல எண்ணம் கொள்வார்கள்" என்றே இன்பமாய் எண்ணிக்கொண்டு ஜெபிக் கிறார்கள். உண்மையாகவே, இவர்கள் செய்வதெல்லாம் "சகோதரனே, நீ என் ஜெபத்தைக் கேட்கிறாய் என்று நம்புகிறேன். இப்போது என் மீது உனக்கு நல்ல அபிப்பிராயம் உண்டாயிருக்கும்" என உள்ளுக்குள் பூரிக்கிறார்கள்.*

*ஆம்! இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனை தான் கிறிஸ்தவ உலகத்தில் நடந்துகொண்டிருக்கிறது. யாரும், இவ்வித விக்கிரக ஆராதனை செய்யவில்லை என்று கூறிவிட முடியாது. ஓர் நாளில் கர்த்தர் "என் முழு ஜீவியத்திலும் என்னிடம் உள்ள விக்கிரக ஆராதனையை" சுட்டிக்காட்டின போது என் இருதயத்திலிருந்து தீராத கூக்குரல் எழும்பியது. "தேவனே, இவ்விக்கிரக ஆராதனைப் பிடியிலிருந்து என்னை விடுவியும்" என்று கதறினேன். என் கதறல் தொடர்ந்து என்னில் இருந்ததினிமித்தம், தேவன், மனுஷர் பார்வைக்கு ஜீவித்து அவர்கள் கனத்தைப்பெற விரும்பும் பரிசேய நீதியிலிருந்து என்னை விடுவித்தார்!!!*

## 5. கொடுப்பது, ஜெபிப்பது, உபவாசிப்பது.... தேவனுடைய பார்வையில் செய்யுங்கள்!

*"நீங்கள் தர்மஞ்செய்யும் போது மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வது போல" செய்யாதீர்கள். "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.6:2) என இயேசு கூறினார். சிலர் காணிக்கை போடும்போது எந்த நோட்டுப்பணம் போடுகிறார்கள் என்பதைக் காட்டிப் போடுவார்கள்! சில சபைகளில், காணிக்கை கவர் அடித்து, இன்னார் இவ்வளவு கொடுத்தார்கள் என அறிந்துகொள்ள வகை செய்கிறார்கள். பெந்தெகொஸ்தே மாதாந்திர இதழ்கள்* (Magazines) *உட்பட, தங்கள் பத்திரிக்கைகளில் இன்னார் ரூ.5 கொடுத்தார்கள்; இன்னார் ரூ.50 கொடுத்தார்கள்;* **இன்னார் விசேஷமாக ரூ.500 கொடுத்தார்களென்று விளம்பரப்படுத்துகிறார்கள்.** *இந்த விளம்பரத்தை விசுவாசிகளும் 'ஆசையாய்'*

*விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்களை இயேசு பார்த்து சொல்லுகிறார் " நீங்கள் உங்கள் பலனை இங்கேயே அடைந்து தீர்ந்தீர்கள்." இப்படிப் பட்டவர்கள் பரலோகம் சென்று, தேவனிடம், "தேவனே! நான் ரூ500 உம்முடைய ஊழியத்திற்குத் தந்தேனே, என்னுடைய பலன் எங்கே?" என்று கேட்டால், தேவன் சொல்லுவார், "நீ உன் பலனை முழுமையாய் பூமியிலேயே பெற்று விட்டாய்! பத்திரிக்கையில்கூட உன் பெயர் வந்து விட்டதே!! இனி உனக்கு வேறு என்ன வேண்டும்?" என்பார். பரலோகத்தில் ஒரு பலனும் இவர்களுக்கு இல்லவே இல்லை. எத்தனைபேர் இயேசு 3-ம் வசனத்தில் சொன்னதுபோல, "வலதுகை செய்வதை இடதுகை அறியாமல்" கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுத்திருப்போமென்றால் "நாம் மனித புகழ்ச்சியும் பெற்றிருக்க மாட்டோம்... பூமியின் பலனும் அடைந்திருக்க மாட்டோம்" பரலோக பலனோ.... நிச்சயம் உண்டு!*

*நாம் ஜெபிக்கும்போது "மனுஷர் காணும்விதமாய் மாயக்காரர் போல ஜெபிக்காமல்..... பிதாவை நோக்கி அந்தரங்கத்தில் ஜெபியுங்கள்" (மத். 6:5,6) என இயேசு கூறினார். கூட்டத்தில் 200 பேர் இருக்கும்போது எப்படி அந்தரங்கமாய் ஜெபிக்க முடியும்? இங்கு இயேசு செய்தது போல் ஜெபிக்க வேண்டும். இயேசு எப்படி ஜெபித்தார்? அவர் "***திரளான ஜனங்களை" அனுப்பிவிட்டு,*** *மலைமீது ஏறி ஜெபித்தார்? அதுபோல நாம் கண்களைமூடி, நம் மனதிலிருந்து எல்லா மக்களையும் அனுப்பிவிட்டு, "தேவனே, நான் மற்றவர்களையெல்லாம் அனுப்பி விட்டேன். இப்போது, நீரும் நானும் மாத்திரம் இருக்கிறோம். நான் உம்மிடம் மாத்திரமே ஜெபிக்கிறேன்" என்று ஜெபிக்க வேண்டும். இல்லையென்றால் "என் ஜெபத்திற்கு மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்" என்று எண்ணும் வலையில் நிச்சயமாய் வீழ்வோம். அங்குதான், நீங்கள் பரிசேயராகிறீர்கள்!*

*நீங்கள் உபவாசிக்கும்போது, "மாயக்காரரைப்போல... மனுஷர்" காணும் பொருட்டாக" உபவாசியாமல், ".....நீயோ உபவாசிக்கும் போது.... அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணும்படியாக," உபவாசம் செய்யுங்கள் என இயேசு கூறினார் (மத் 6:16,17). உபவாசம் செய்யும் பொழுது,* **வீட்டில் உள்ளவர்களுக்குத்** *தெரியாமல் இருக்காது. ஆனால் கூடுமானவரை* **மற்றவர்களுக்குத்** *தெரியாமல் இருக்க வேண்டும். உபவாசம் மாத்திரம் அல்ல, கர்த்தருக்காக அடையும் எந்தவித துன்பமோ, தியாகமோ... ஒன்றையும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டாம். எதையுமே "விளம்பரப்படுத்தும்" கொடிய காலத்தில் நாம் வாழ்கிறோம். யாராவது ஒருவர், சுவிசேஷத்தினிமித்தம் சிறை சென்று திரும்பினால் அவர் சும்மாவா இருப்பார்? இல்லை! அவர் தன் துன்பசாகரத்தை ஒரு புத்தகமாகவே எழுதி வெளியிடுவார். இதெல்லாம் என்ன? இது கிறிஸ்தவமா? இல்லை! சரியான "பரிசேயத்துவம்." இப்புத்தகங்கள் ஒருவரையும் பக்திவிருத்தி அடையப்பண்ணாமல், சுயமேன்மை நிறைந்ததாகவே இருக்கும்.*

*இயேசு தன் 30 வருட வாழ்க்கை அனுபவத்தைப் பற்றி எப்போதாவது*

குறிப்பிட்டதை வேதத்தில் காண்கிறோமோ? இல்லை. மனந்திரும்பாத தன் சகோதரர்கள் மத்தியில் ஜீவித்த அவர், பல துன்பங்கள் நிச்சயம் அடைந்திருப்பார்."அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போலவே சோதிக்கப் பட்டார்." ஆனாலும் அவர் தன்னைத் தானே தாழ்த்தி, **தான் அடைந்த கஷ்டங்களை வெளியே சொல்லவே இல்லை.** ஏனெனில் அவையாவையும் பிதா ஒருவருக்கே "காணிக்கையாகப்" படைத்திருந்தார்! எல்லாவற்றையும் பிதாவின் மேல் கொண்ட அன்பினாலே அவர் செய்தார். ஓர் அன்புள்ள மனைவி தான் நேசிக்கும் கணவனுக்குச் சிறந்த உணவு சமைத்திருந்தால், அதைப் பற்றி வெளியில் சொல்லிக் கொண்டிருக்கமாட்டாள். இது தான் மாயமற்ற பரிசுத்த அன்பு! இதேபோன்ற பரிசுத்த அன்பு தேவன்பால் இருக்கு மென்றால், நாமும் அவருக்காக அநேக காரியங்களைச் செய்வோம். ஆனால் அதை மற்றவர்கள் அறியும்படி அல்ல; **அவர் ஒருவரே** அறியும்படி செய்வோம். இதுவே தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த மெய்யான அறிவு!

**6. தேவனுடைய பார்வையில் ஜீவிப்போரின் மகிமையான சுதந்திரமே, விசுவாசம்!**

யோவான் 5:44, "தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்கிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?" என கூறுகின்றது. நாம் தேவனிடத்திலிருந்து ஒன்றையும் விசுவாசம் இல்லாமல் பெற்றுக்கொள்ளமுடியாது. நாம் எதையும் தேவனிடத்திலிருந்து விசுவாசத்தின் மூலமாகவே பெற்றுக் கொள்கிறோம். இந்த விசுவாசம் மலையையும் பெயர்க்கும்! எந்தச் சூழ்நிலையையும் மாற்றும்!! அநேகர் முழு இரவு ஜெபங்களை **விசுவாசம் இல்லாமலே** ஜெபிக்கின்றனர். ஒரே ஒருவர் "விசுவாசித்து" ஜெபிக்க 'மலை பெயருமே' ஒழிய, 1000-ம் பேர் முழு இரவு ஜெபத்தில் ஜெபிக்கிறதினால் அல்ல! இன்னும் சிலர், "500 - தடவை ஜெபித்தால் கர்த்தர் ஜெபம் கேட்பார்" என்று எண்ணுகிறார்கள்! இதுவும் முற்றிலும் தவறு. நீங்கள் அநேகம் தடவை ஜெபித்து விட்டீர்கள் என்பதற்காக தேவன் பதில் தருபவர் அல்ல....... விசுவாசமான ஜெபமே பதில் கொண்டுவரும்!

இப்பொழுது கவனியுங்கள்! நம் ஜெபம் ஏன் மலையைப் பெயர்ப்பதில்லை? ஏன் சூழ்நிலைகளை மாற்றுவதில்லை? ஏன் நோய் சுகம் ஆவதில்லை? இதோ அதன் பதில்! "நீங்கள் ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்கிறதினால்.... எப்படி விசுவாசிப்பார்கள்?" (வசனம் 44). மனுஷீக கனத்தைத் தேடிய எவருக்கும் "விசுவாசம்" நிச்சயமாய் கிட்டுவதில்லை. சுகமாக்கும் ஊழிய வரத்தைப் பெற்ற அநேகர் **முதல்** சில வருடங்கள் வல்லமையாய் பயன்படுத்தப்பட்டு அநேகர் சுகம் ஆவதைக் காணுகிறோம். ஆனால் **பின்பு** அப்படி இருப்ப தில்லை, குறைந்து விடுகிறது. நாளுக்குநாள் அதிகப்பிரகாசம் அடைய வேண்டிய ஊழியம் ஏன் மங்குகின்றது? அதற்கு, இந்த வசனம் விடையைத் தருகிறது. "முதலில்" அவர்களின் ஊழியத்தில், அவர்கள் அறியப்படாதவர்கள்; பிரபல்யமாகாதவர்கள்! ஆனால் ஏராளமான விசுவாசம் பெற்றிருந்தார்கள்!! எனவேதான் விசுவாசத்தின் மூலமாய்

அநேக சுகங்களைக் கர்த்தர் செய்தார். "**இப்போதோ" புகழ்ச்சி அவர்களின் மடியில் விழுந்தவுடன்,** அவர்களால் அதை என்ன செய்வது என்று தெரிய வில்லை. ஆனால் இயேசுவோ "நான் மனுஷரால் வரும் மகிமையை ஏற்றுக் கொள்கிறதில்லை" என உறுதியாகக் கூறினார் (யோவான். 5:41). யாரையேனும் அவர் சுகமாக்கியிருந்தால், அவர்கள் தரும் பணத்தையோ புகழையோ பெறாமல், சுகத்தைக் குறித்து வீட்டாரிடம் மாத்திரமே அல்லாமல் வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றார்.

சுகமாக்கும் ஊழியத்தின் மூலமாக இயேசு ஒருபோதும் கனத்தையும், புகழ்ச்சியையும் பெற வில்லை. எனவேதான் இயேசுவின் விசுவாசம் மிகப்பெரியதாய் இருந்தது. ஆனால் இன்றோ அநேக சுகமாக்கும் ஊழியர்கள் பணத்தையும் புகழ்ச்சியையும் பெற்றுக்கொள்கிறார்கள். "தங்கள் புகைப்படத்தையும் பத்திரிக்கைகளில் போடுகிறார்கள்." இயேசுதான் சுகமாக்குகிறவர் என்று அவர்கள் சொன்னாலும்,"கனத்தையும், பணத்தையும் தங்களுக்காகப் பெற்றுக் கொள்கிறார்கள்". எனவே, என்ன நடக்கிறது? யோவான் 5:44ன்படி "இனி **எப்படி** அவர்களிடம் விசுவாசம் நிலைநிற்கமுடியும்?" என்ற சோகமுடிவே சம்பவிக்கின்றது. 10- வருடங்கள் முன் ஜெபித்து சுகமான வியாதி 'இப்போது' ஜெபிக்கும் பொழுது சுகம் ஆவதில்லை. நீங்கள் எந்த ஊழியம் செய்தாலும் சரி, முன்னிருந்த வல்லமையை இழந்து விட்டீர்கள் என்றால்,தேவனிடம் உங்களைத் தாழ்த்தி "தேவனே எப்படியோ நான் புகழ்ச்சியை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்" என நேர்மையாய் ஒத்துக் கொள்ளுங்கள்! அப்போது, காரியம் மீண்டும் உங்களில் சீர்பெறும்!!

"தேவரீர், என் விலையேறப்பெற்ற விசுவாசத்தை இழந்து விட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன்" என்று ஜெபியுங்கள். நாம் புகைபிடித்து அல்லது வேறு பாவம் செய்து மாத்திரம் தேவனிடத் திலிருந்து பின்மாறிப் போவதில்லை. நம் விசுவாசத்தை இழப்பதாலும் நாம் பின்மாற்ற ஜீவியம் அடைகிறோம். ஆம், தேவன் நம் விசுவாசம் சோதிக்கப்பட அனுமதிக்கிறார். மனுஷர் மகிமையை நாம் நாடித் தேடாமல் இருக்கலாம். ஆனால்..... நம்மை சோதிக்கும்படி மகிமை நம்மிடம் வரும்போது அதை தேவனிடத்தில் கொடுத்துவிடவேண்டும். இல்லாவிட்டால் விசுவாசம் நம்மைவிட்டுப் போய்விடும்! இன்று **விசுவாசிகள் மத்தியில் உள்ள "அவிசுவாசத்திற்கு"** இதுவே காரணம். நாம் தேவனுக்காக கிரியை செய்யவேண்டுமென்றால் நம் சாமர்த்தியத் தினால் அல்ல, விசுவாசத்தினாலே மாத்திரம் தான் செய்ய முடியும்.எனவே நம் பேச்சு, செயல், யாவற்றிலும் அதிகக் கவனமாய் இருந்து, மனுஷீக கனத்தைத் தள்ளி, தேவனுடைய பார்வைக்கு முன்பாக மாத்திரமே ஜீவித்து, விசுவாசத்தை அதிகமதிகமாய் பெருக்கிக் கொள்வோமாக! நூற்றுக்கு நூறு மனுஷீக கனத்தைத் தள்ளி ஜீவிப்போமென்றால் மலையைப் பார்த்து பேசும் விசுவாசமும், எந்தச் சூழ்நிலையையும் மாற்றும் விசுவாசமும் நம்மில் நிலை கொள்ளும்! இது விந்தையன்றோ!!




## 'சிந்தை வாழ்வில்' பலவந்தம் வேண்டும்!

*நம்மை பரிசுத்த ஆவியானவர் "சகல" சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவது எப்போது? மனுஷர் மகிமையை உதறித்தள்ளி, ஆவியானவர் காட்டும் "ஒவ்வொரு" சத்தியங்களுக்கும் அடிபணியும்போதுதான்! யோவான் 12:42-ல் "அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப் படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்" என வாசிக்கிறோம். ஆம், சில சத்தியங்களை அறிக்கைசெய்ய தங்கள் ஸ்தாபனத்தினிமித்தம் பயந்தார்கள். இது, 20-ம் நூற்றாண்டில் மாத்திர மல்ல முதலாம் நூற்றாண்டிலேயே இருந்தது.*

*தாங்கள் பெற்றுக் கொண்ட சத்தியங்களை ஏன் அவர்கள் அறிக்கை செய்யவில்லை? பரிதாபம்! "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகம் விரும்பினார்கள்" (வச.43) அவ்வளவுதான்!! இப்போது "ஆண்டவரே! சத்தியத்தை வெளிப்படுத்தும்!!" என்று ஜெபிக்கும் நீங்கள், ஆண்டவர் வெளிப்படுத்தும் சத்தியங்களை மனுஷ கனத்தை உதறித்தள்ளி அதற்கு கீழ்ப்படிவீர்களென்றால் நீங்களும் உங்கள் ஜெப ஆலயங்களில் (ஸ்தாபனங்களில்) இருந்து தூக்கி எறியப்படும் அபாயம் உள்ளது. இதுவே பரிசுத்த ஆவியானவர் "சகல சத்தியத்திற்குள்ளும்" நம்மை நடத்துவதற்கு, நாம் செலுத்தும் கிரய மன்றோ!! புதிய உடன்படிக்கையின் ஜீவியம் (New Covenant Life) அல்லது பரலோகராஜ்யம், இவ்வாறு கிரயம் செலுத்துவோருக்கு அல்லது பலவந்தம் (Violence) செய்வோருக்கு மாத்திரமே சொந்தம்!*

### 1. சீஷத்துவம் முழங்கும் பலவந்தத்தின் அறைகூவல்

*"ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை, ஆகிலும் பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" என்று இயேசு சொன்னார் (மத்.11:11). இப்படி புதிய உடன்படிக்கையின் ஜீவியத்தரம் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தாவான்களை விட உயர்ந்ததாய்*

இருக்கும் பொழுது, இப்போதுள்ள புதிய ஏற்பாட்டின் விசுவாசிகள் தரம் குறைந்த ஜீவியம் (Low Standard Life) செய்வதன் காரணம் என்ன? அடுத்த வசனம் இதற்கு விடையளிக்கிறது. "யோவான்ஸ்நானகன் காலம் தொடங்கி இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப் படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் (மாத்திரமே) அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்."

எனவே, உண்மையாகவே விசுவாசிகள் இந்தப் "பரலோகராஜ்யம்" பிரவேசிக்கும் மேன்மையான புதிய உடன் படிக்கையின் ஜீவியத்தை அடையாததற்கு காரணம், இவர்கள் அதை "பலவந்தம் செய்யவில்லை." இன்று நாம் பதவி, ஊழியம்... போன்றவற்றிற்கு போராடுவதில்லை...... ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் வரும்போது நாம் எப்போதும் பலவந்தம் பண்ணுகிறவர்களாக (Men of Violence) இருக்க வேண்டும். ஆவிக்குரிய வளர்ச்சிகளைப் பாதிக்கும் எந்தப் "பாரம் பரியத்தையும்" அழிக்க வேண்டும். தேவனுடைய சத்தியத்திற்கு கீழ்ப்படியும் பாதையில் குறுக்கிடும் "எதையும்" அழிக்க வேண்டும். ஆனால் அநேக விசுவாசிகள் சொத்திற்கும் பதவிக்கும் சண்டையிட்டுக் கொள்கிறார்களே ஒழிய, இவ்விதமான "ஆவிக்குரிய பலவந்தம்" செய்பவர்களாக இல்லை. பின் எப்படி இவர்களை சத்திய ஆவியானவர் சத்தியத்திற்குள் வழிநடத்த முடியும்?

இயேசு லூக்கா 14:26-ல் "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்" எனக் கூறினார். ஆம்! இயேசுவைப் பின் பற்றும் சீஷனாகிவிட்டால், நான் "பலவந்தம் பண்ணும் மனுஷனாய் மனுஷியாய்" இருக்கவேண்டும். நான் இயேசுவை பின்பற்றும் விஷயத்தில் என் தகப்பனும், தாயும் மனம் புண்படலாம் (Offended), மனைவி, பிள்ளைகள் மனம் புண்படலாம், 25 வருடம் கூட இருந்து வாழ்ந்த சகோதரன், சகோதரி மனம் புண்படலாம், நான் வளர்ந்த சபையின் சகோதரர்கள் மனம் புண்படலாம்! அவர்கள் புண்பட்டால் புண்படட்டும்!! நான் அவர்களுக்கு என் புறமுதுகிட்டு..... கரம் அசைத்து விட்டு..... என் இயேசுவையே முழுமனதாய் பின்பற்றுவேன்!

இப்படிப்பட்ட சீஷனாய் நீங்கள் இருப்பீர்களென்றால் தேவன் உங்களை வேதத்தில் உள்ள சகல சத்தியத்திற்குள்ளும் நிச்சயமாய் நடத்துவார். மறவாதீர்கள், ஒரே ஒரு வாழ்க்கை! **இதில் மனுஷரைப் பிரியப்படுத்தி ஜீவிப்பீர்கள் என்றால்,** இயேசு வரும்போது பெருத்த ஏமாற்றம் அடைவீர்கள். நம் மாம்சத்தில் மனுஷரைப் பிரியப்படுத்தும் பெருத்த இச்சை உண்டு. நாம் எந்த மனிதனையும், ஏன்? எவ்வளவு பெரிய ஆவிக்குரிய தலைவனையும்கூட பிரியப்படுத்தாமல் ஜீவிக்கத் தீர்மானிக்கும்போது, என் கரத்திலும் கால்களிலும் உள்ள பெரும் சங்கலிக்கட்டுகள் அவிழ்ந்து இயேசுவை முழு இருதயத்தோடும் பின்பற்ற முடிகிறது! என்ன பெரும் விடுதலை!! இயேசுவைப் பின்பற்ற தடையாய் உள்ள எந்த

உறவையும் முறித்துவிடுங்கள். தகப்பனோ, தாயோ, சகோதரனோ, மனைவியோ, பிள்ளைகளோ யாராயிருந்தாலும் சரிதான்!! தகப்பன் தாயிடம் அக்கறை கொள்ளக் கூடாது என்பது இதன் பொருள் அல்ல. இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போதும் கூட தன் தாயைக் குறித்து அக்கறை கொண்டார். "ஆனால்" கானாவூர் கலியாணத்தில் திராட்சரசம் குறைவுபட்டபோது, தான் செய்யவிருந்த ஊழியத்தில் தன் தாய் ஆலோசனை சொல்வதை இயேசு அனுமதிக்க வில்லை."ஸ்திரீயே உனக்கும் எனக்கும் என்ன?" என்று கூறி, என் பிதாவின் ஊழியத்தில் தலையிட வேண்டாம் என்று உறுதியாய் கூறினார். இதுதான் சீஷத்துவம்!

நாம் நம் பெற்றோரை கனப்படுத்தலாம், அக்கறை கொண்டும் கொடுக்கலாம், ஆனால் நாம் "இயேசுவைப் பின்பற்றுவதில்" மாறுத்தரம் சொல்ல அவர்களை அனுமதிப்பதில்லை. நாம் நம் மனைவியை நேசிக்கவேண்டும், போஷிக்க வேண்டும். "ஆனால்" ஏவாளின் சொல் கேட்டு ஆதாம் விழுந்தது போல, ஆதாம் வழி செல்பவர்களாய் இருக்கக்கூடாது. மனைவியின் ஆலோசனைகள், இயேசுவை முழுமனதாய் பின்பற்றத் தடையாய் இருக்கவேகூடாது!

**உ. 'இருதயத்தில் பலவந்தமே' புதிய உடன்படிக்கையின் ஜீவியம்!**

யாத்திராகமம் 20-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட 10 கற்பனை களில் 9 கற்பனைகளைக் கைக்கொள்வது எளிது. ஆனால் கடைசியில் உள்ள 10- வது கற்பனையைக் கைக்கொள்வது எளிது அல்ல."...பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" என்பதே அந்த 10 -வது கற்பனை (யாத்20:17). முதல் 9- கற்பனைகள் வெளியரங்க வாழ்க்கைக்குத் (External life) தரப்பட்டது. 10-வது கற்பனையோ "**இருதயத்தின்**" உள்ளான ஜீவியத்திற்குத் (Internal Life) தரப்பட்டது ஆகும். பிறனுடைய வீட்டை இச்சியா திருப்பாயாக என்றால், வீட்டை திருடி அதற்குள் ஜீவிப்பதைக் குறிக்க வில்லை. பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக என்றால், அவளோடு வெளியே ஓடிவிடுவது என்றில்லை. ஆனால் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு "அவளை" அல்லது "வேறு யாதொன்றையோ" "**இருதயத்தில்**" இச்சிப்பதையே குறிக்கிறது. இந்த 10-வது கற்பனையைக் கைக் கொள்ளவது கடினம் என்று தேவனுக்குத் தெரியும். ஆயினும் எத்தனை இஸ்ரவேலர்கள் முழுமனதாய் கற்பனைகளைக் கைக் கொண்டு இந்த 10-வது கற்பனையையும் கைக்கொள்ள முயற்சித்து..... இது தங்களால் முடியாது என்று ஒத்துக்கொள்கிறார்கள்? என்று அறிவதற்கென்றே கடைசியாக இக்கற்பனையை வைத்தார்.

இவ்வாறு முயற்சித்துத் தங்கள் **தோல்வியை ஒப்புக்கொண்டவர்களே,** புதிய உடன்படிக்கை ஜீவியத்திற்கு தகுதி உள்ளவர்கள்! பவுலின் ஜீவியம் இதற்கு மாதிரியாய் உள்ளது. பிலி 3:6-ல் "... நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்". அதாவது, நியாயப் பிரமாணத்தின் 9 கற்பனைகளைச் சரியாய் கைக் கொண்டேன் என்று கூறும் இந்தப் பவுல்

*10-வது கற்பனையைப் பற்றி கூறுவது என்ன? ரோமர் 7:7-ல் பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை.* **இச்சியாதிருப்பாயாக** *என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால்,* **இச்சை** *பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே" என பவுல் கூறினார். பத்தாவது கற்பனையைத் தான் கைக்கொள்ள முடியவில்லை என்று பவுல் இங்கு நேர்மையாய் ஒத்துக் கொள்வதைக் கண்டீர்களா!! மேலும், "பாவமானது கற்பனையினாலே (இந்த 10 - வது கற்பனையினாலே) சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும்* **என்னில்** *(இருதயத்தில்) நடப்பித்தது" என்றும் பவுல் தன் நிர்பந்த நிலையை விளக்கினார். ஆனால், இன்றைய விசுவாசிகளுக்கு தோல்வியை ஒத்துக்கொள்ளும் தாழ்மை இல்லையே!! பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஒருவராலும் 10-வது கற்பனையைக் கைக்கொள்ள முடியவில்லை.*

*இயேசு மத்தேயு 5:2 -ல் "வேதபாரகர் பரிசேயர் நீதியிலும், உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" எனக் கூறினார். ஏனென்றால், பரிசேயர்கள் 9- கற்பனைகளையும் கைக்கொண்டவர்கள். பவுலும் ஓர் சிறந்த பரிசேயன்தான். ஆனால் இயேசு இப்போது, உங்கள் நீதி இந்தப் பரிசேய நீதியைக் காட்டிலும் (9 கற்பனை களைக் கைக்கொண்டதைவிட) அதிகமாயிராவிட்டால், இந்த 10-வது கற்பனையைக் கைக்கொள்ளாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என கூறிவிட்டார்.*

*இதை இயேசு விளக்கும் போது, 9கற்பனைகளுக்குள் அடங்கிய வெளியரங்கமான "கொலையை" செய்யாதிருந்தால் போதாது. இப்போது 10- வது கற்பனையின்படி, கொலைக்கு காரணமாயிருந்த சகோதரனை "உள்ளத்தில்" கோபிக்கவும் கூடாது என்றார் (மத். 5:21,22). அதே போல் இப்போது வெளியரங்கமான "விபச்சாரம்" செய்யாதது மாத்திரமல்ல, இதைப் பரிசேயரும் கைக் கொண்டார்கள். ஆனால் இப்போதோ, நீங்கள் 10- வது கற்பனையின் படியான இச்சையோடு பார்த்து "***இருதயத்தில் விபச்சாரம்*** *" செய்வதையும் ஒழிக்க வேண்டும். இப்படி வெளியரங்கமான விபச்சாரத்திற்குக் காரணமான "இருதயத்தில் இச்சை" எழும்பும்போதே நீங்கள் அதை மேற்கொள்ளவில்லை என்றால் உங்கள் நீதி பரிசேயர் நீதியிலும் மேலானது அல்ல! அல்லது நீங்கள் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கத் தகுதியற்றவர்கள்!! வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், அநேகர் இந்த 9கற்பனை களைக்கூட கைக்கொள்ளாதது தான்! பின் எப்படி இவர்கள் 10-வது கற்பனையைக் கைக்கொள்ளுவார்கள்? திடீரென்று 'பாஸ்டர்கள்' சிலர் விபச்சாரம் செய்தனர் என்று கேள்விப்படுகிறோம். ஏன்? இவர்கள் "இருதயத்தின்" பரிசுத்தத்தில் அக்கறை இல்லாதவர்கள். இயேசு இந்த இடத்தில்தான் 'பலவந்தம்' செய்யச் சொன்னார். " உன் வலது கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன்*

வலது கை இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு" என இயேசு பலவந்த ஜீவியத்தை வலியுறுத்தினார் (மத்.5:29,30). ஆனால் பரிதாபம்! இன்று வெகுசிலர் தான் இந்த "இருதயத்தின்" பரிசுத்தத்தை வாஞ்சித்துப் பலவந்தம் செய்ய முன் வருகிறார்கள்.

**3. பாத்திரத்தின் உட்புற சிந்தை பரிசுத்தமே, மெய்யான தெய்வபயம்!**

முதல் 9 கற்பனைகளைக் கைக்கொண்ட பரிசேயர்களைப் பார்த்து இயேசு, "மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ! போஜனபாத்திரத்தின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள். உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதியினாலும் நிறைந்திருக்கிறது!" என்றார் (மத்தேயு.23:25). இதே பரிசேயர்கள் விக்கிரகத்தை வணங்கினாலோ அல்லது பிறர் பொருளை திருடி வைத்திருந்தாலோ, பாத்திரத்தின் வெளிப்புறமும் அசுத்தமாய் இருந்திருக்கும். முதல் 9 கற்பனைகளைக் கைக்கொண்ட இவர்களின் வெளிப்புறம் சுத்தமாயிருந்தது. ஆனால், இந்த 10-வது கற்பனையான 'உட்புறமோ' அநீதியால் நிறைந்து இருந்தது. யாரும் இந்த உட்புற இருதயத்தைக் காண முடியாததால் நீங்கள் இந்த 10-வது கற்பனையைக்குறித்து அக்கறை இல்லாமல் இருக்கிறீர்கள். இந்த உட்புறமான சிந்தை வாழ்வை (Thought life) ஏன் தேவன் நம்மில் வைத்தார்? ஆம்! இதன் மூலம்தான் நாம் **தேவனுக்குப் பயப்படுகிறோமா? அல்லது மனுஷருக்குப் பயப்படுகிறோமா?** என்று கர்த்தர் நம்மை சோதிக்கமுடியும்.

உங்கள் மனதில் செல்லும் அசுத்தமான சிந்தைகளை எண்ணிப் பாருங்கள். எவ்வளவு பண ஆசையின் எண்ணங்கள்! ஏன் இந்த எண்ணங்களைக் குறித்து நீங்கள் அக்கறை கொள்ளவில்லை? ஆனால், உங்கள் உதட்டில் வரும் வார்த்தையில் மாத்திரம் தான் எவ்வளவு கவனம்! (சிலரிடம் அதுவும் இல்லை!) ஏன் தெரியுமா? "நீங்கள் தேவனுக்குப் பயப்படவில்லை!" உங்களுக்கு தேவனிடமிருந்து வரும் மகிமையைக் காட்டிலும் மனுஷரிட மிருந்து வரும் மகிமைதான் பெரியது!! ஒருவேளை கர்த்தர், நம் சிந்தை யாவையும் ஒலிபெருக்கி போல் வெளியே கேட்கச் செய்வார் என்றால், அப்போதும் நாம் மிகவும் கவனமாயிருப்போமல்லவா? இப்போது ஏன் அவ்வளவு அக்கறை கொள்ளவில்லை? சரிதான்! இப்போது தேவன் மாத்திரம்தானே கவனிக்கிறார்!? ஆனால் மனிதர்கள்! அடடா.... அவர்கள் என்னைக்குறித்து நல்எண்ணம் கொள்ள வேண்டுமே! இது, நீங்கள் தேவனுக்கு பயப்படாததையும், மனுஷர் புகழ்ச்சியை விரும்புவதையும் நிரூபிக்கவில்லையா? தேவனுக்குப் பயப்படாதவர்களை ஒருபோதும் ஆண்டவர் இந்த மேலான புதிய உடன்படிக்கையின் வாழ்விற்குள் அல்லது பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசித்திட அனுமதிப்பதேயில்லை. சத்தியத்தின் வெறும் "அறிவு" வீண், தேவனுக்குப் பயப்படுதலையே ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

சரி, முதலாவது உட்புறத்தைச் சுத்தப்படுத்து என்ற ஆண்டவர் இயேசு, இரண்டாவது என்ன செய்யவேண்டும் என்று சொல்லவில்லையே? ஆம்,

*மத். 23:26-ன்படி உட்புறம் சுத்தமானால், தானாகவே* (Automatically) *வெளிப்புறமும் சுத்தமாகும். என்ன விந்தையானப் பாத்திரம் இது! விபச்சாரம், வெளிப்புறத்தின்படி மிக அசுத்தம். இப்போது இதன் காரணமான "இச்சையை" என் இருதயத்தில் எப்போதும் கொள்ள மாட்டேன் என்று தீர்மானிக்கும் போது, வெளியரங்கமான விபச்சாரம் எப்படி வரும்?! உள்ளத்தில் கோபம் அடையாமல் என்னைக் காத்துக் கொள்ளும் போது வெளியரங்கமான கொலை எப்படி உருவாகும்? பாத்திரத்தின் உட்புறம் சுத்தமானவுடன், தானாகவே "வெளிப்புறமும்" சுத்தமாகிறதன்றோ?! இதுவே ஜீவனுக்கு ஏதுவான வழி! யாரும் பார்த்திடமுடியாத குறுகலான வழி "குருடனான பரிசேயனே!" உன் பாத்திரத்தின் உட்புறத்தின் அநீதியைக் காணாதிருப்பதென்ன? உங்கள் சிந்தை வாழ்வில் பலவந்தம்! பலவந்தம்!! ஆம், அதுவே நீங்கள் செய்ய வேண்டியது. இப்போது பாருங்கள்!* **பரலோகராஜ்யம் உங்களுக்குள்** *நிலை கொண்டு கட்டப்படும் விந்தையை நீங்கள் காண்பீர்கள்!!*

**4. பலவந்தம் பண்ணவிரும்பும் பரகதிதாசர்களுக்கு புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள்!**

*"அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே* (mind) *வைத்து அவர்களுடைய இருதயங்களில்* (heart) *அவைகளை எழுதுவேன்" என தேவன் வாக்குரைத்தார் (எபி. 8:10). மோசே சீனாய் மலையிலிருந்து பெற்ற 2 கற்பலகைப் பிரமாணங்களில், ஒரு பலகையின் முதல் 4 பிரமாணங்கள் தேவனுக்குத் தொடர்பு படுத்தியும், 2-ம் பலகையின் பிரமாணங்கள் மனுஷருக்குத் தொடர்பு படுத்தியும் இருந்தது. இதை ஆண்டவர் இயேசு பிரதான 2 கற்பனை களாகச் சொல்லும்போது முதற்பலகையை "உன் தேவனாகிய கர்த்தரிடம் உன் முழு இருதயத்தோடும் அன்புகூருவாயாக" என்றும் இரண்டாம் பலகையை "உன்னில் அன்புகூருவதுபோல உன் அயலானிடத்திலும் அன்புகூருவாயாக" என்றும் கூறினார். பழைய ஏற்பாட்டின் இக்கற்பனைகள் வெளியரங்கமாயிருந்தன.*

*ஆனால் இப்போதோ, புதிய உடன்படிக்கையின் இந்த 2பலகைகள் அடங்கிய பிரமாணங்களை இயேசு* **(1)மனதிலும் (2)இருதயத்திலும்** *எழுதுகிறார். அதை நீங்கள் பார்க்கமுடியாது..... அது பாத்திரத்தின் உட்புறம்! உங்களை உற்சாகப்படுத்தும் ஓர் நற்செய்தி என்னவென்றால், "உங்கள் பாத்திரத்தின் உட்புறத்தை சுத்திகரிக்க உங்களுக்குப் பெலன் இல்லை"... தேவன் சொல்லுகிறார், "அதை நானே செய்வேன்!" இது விந்தை யல்லவா! ஆம், மனதில் எழுதும் பிரமாணமாகஉங்களுக்குள் "பரிசுத்தமாகும் வாஞ்சையும்"இருதயத்தில் எழுதும் பிரமாணமாக "பரிசுத்த வாழ்விற்குரிய பெலனையும்" தேவன் வழங்கி எழுதுகிறார்!! பிலிப்பியர் 2: 13-ன் படி "தேவன் தம்முடைய தயவுள்ள சித்தப்படி*

**1)விருப்பத்தையும், 2)செய்கையையும் உங்களில்** (Inside You) *உண்டாக்கு கிறவராயிருக்கிறார்" என்ன விந்தை! 'உங்களில்' என்ற பதம், அதாவது* **"உங்களுக்குள்"** *என்ற பதம் புதிய ஏற்பாடே அல்லாமல் பழைய ஏற்பாட்டில் இல்லவே இல்லை!*

*நீங்கள் மாத்திரம், "தேவனே, என் முழு இருதயத்தோடும் இப்புதிய உடன்படிக்கையின் ஜீவியத்தை வாஞ்சிக்கிறேன்" என்று ஜெபிப்பீர் களென்றால், ஆண்டவர் தன் பிரமாணங்களை "உங்களுக்குள்" எழுதுவார்! "உள்ளத்தில் உண்மையிருக்கவிரும்பும்" (சங்கீதம்.51:6). தேவன், அவர் கட்டளையிட்டதின்படி முதாலவது பாத்திரத்தின் உட்புறத்தைச் சுத்தம் செய்ய நீங்கள் பலவந்தம் பண்ணுவீர்கள் என்றால், "உங்களில்" அதாவது,* **உங்களுக்குள்** *தன்னுடைய பரிசுத்தப் பிரமாணத்தை எழுதிட அவர் வல்லவராயிருக்கிறார்!!*



## பாவத்தின் மேல் வெற்றி, நமது சுதந்திரம்!

முந்தின அதிகாரத்தில் நாம் பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்தோம். பழைய உடன்படிக்கையில் ஒவ்வொன்றும் வெளியரங்கமானதாயிருந்தது (External). புதிய உடன்படிக்கையிலோ ஒவ்வொன்றும் உள்ளானதாய் இருக்கிறது (Internal). எனவே நீங்கள் வெளியரங்கமான வாழ்வே நிறைந்து காணப்படும் விசுவாசி என்றால், உண்மையாகவே நீங்கள் பழைய உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டு ஜீவிக்கிறவர்களாயிருப்பீர்கள். இன்றும் அநேகர், பாவத்தின் மேல் பூரண வெற்றியில்லாத ஜீவியம் உள்ளவர்களாய் இருப்பதன் காரணம் அவர்கள் இதுவரை புதிய உடன் படிக்கைக்குள் பிரவேசியாததே!

### 1. புதியஉடன்படிக்கையில் 'பாவத்தின் மேல் வெற்றி வாழ்க்கையை' இழந்திருக்கும் இன்றைய கிறிஸ்தவம்!

103-வது சங்கீதத்தின் முதல் 2 வசனங்களை விசேஷமாக தமிழ் நாட்டில் அநேக சபைகளில் கூட்டத்தின் முடிவில் சொல்லுவது வழக்கமாகிவிட்டது! "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே". இவ்வசனத்தின்படி எதற்காக முழு உள்ளத்தோடும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்? 3-ம் வசனம் சொல்லுவதை கவனியுங்கள், "அவர் என் அக்கிரமங்களை யெல்லாம் **மன்னித்து**, நோய்களையெல்லாம் **குணமாக்கினார்**". ஆகவே கர்த்தரை ஸ்தோத்தரித்தோம். இந்த சங்கீதம் இயேசு வருவதற்கு முன்னமே எழுதப்பட்டதா? அல்லது பின்பு எழுதப்பட்டதா? முன்பு! இயேசு வருவதற்கு 1000 வருடங்களுக்கு முன்பே எழுதப்பட்டது. இந்த வசனங்களைச் சொல்லுவது தவறு என்று கூறவில்லை. ஆனால் இந்த வசனத்தைப் பழைய உடன்படிக்கையின் மக்களும் கூறினார்கள் என்றே குறிப்பிடுகின்றோம். இவ்வசனங்கள் கூறும் செய்தியாதெனில், என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி "ஏனெனில்" அவர் என் அக்கிரமங் களை எல்லாம் மன்னித்தார்; நோய்களையெல்லாம் குணமாக்கினார்! எனவே நாம் பழைய உடன்படிக்கையில் ஜீவிப்பவர்களாய் (பாவம்

*மன்னிக்கப்பட்டதும், நோய்கள் குணமானதும்) மாத்திரம் இருப்போமென்றால், இந்த வசனங்களை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் புதிய உடன்படிக்கையிலோ மேன்மையான வெற்றியின் சுதந்திரத்தை ரோமர்.6:14-ம் வசனத்தில், "நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் நம்மை மேற்கொள்ள மாட்டாது" என வாசிக்கிறோம். இப்படி ஒரு வாசகம் பழைய ஏற்பாட்டில் இல்லவே இல்லை! பாருங்கள், இப்போது நாம் சங்கீதம் 103:1,2 வசனத்தை இவ்வாறு கூறிவிடமுடியும், "என் ஆத்துமாவே,* **பாவத்தின்மேல் எனக்கு வெற்றியைத் தரும்** (Victory over sin) *கர்த்தரை ஸ்தோத்தரி." ஆ! என்ன விந்தையான புதிய உடன்படிக்கையின் சுதந்திரம்!!*

*இன்று அநேக கிறிஸ்தவர்கள், புதிய உடன்படிக்கை சபையைக் குறித்தும் அதன் பலவித அப்போஸ்தல, தீர்க்கதரிசன ஊழியங்களைக் குறித்தும் தர்க்கம்செய்து கருத்தரங்கு நடத்துகிறார்கள்.* **ஆனால் முதலாவது பாவத்தின் மேல் வெற்றியில்லாத ஜீவியோத்தோடும் செய்யும் எல்லாவிதமான இவ்வித கரத்தரங்குகளும் 100% வீணான குப்பைகளே!** *இன்னமும் நீங்கள் பொறுமையிழந்து கோபப்படுவீர்கள் என்றால், அப்போஸ்தலர்கள்; தீர்க்கதரிசிகள்; மூப்பர்கள் என்று பேசிக் கொள்வதில் அர்த்தமே இல்லை! இன்னமும் ஸ்திரீயின் மோக இச்சை இருதயத்தில் வைத்திருப்பீர்களென்றால் 'புதிய உடன்படிக்கை சபை' என்று பேசிக் கொள்வதில் ஒரு பிரயோஜனமும் இல்லை! இன்னமும் நீங்கள் வாக்குவாதம் செய்து, உள்ளத்தில் பொறாமை கொள்வீர்களென்றால் ஸ்தல சபை சத்தியங்களை அலசிப்பார்ப்பதில் அர்த்தமேயில்லை!! வேண்டுமென்றால், நீங்கள் சபை என்ற பெயரில் பழைய உடன்படிக்கை விசுவாசிகளைக் கட்டிக்கொண்டிருக்கலாம், அவ்வளவுதான்!*

*நாம் ஒவ்வொருவரும் முதாலாவது ஓர் புதிய உடன்படிக்கையின் ஜீவியத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அதற்கு பின்புதான், நாம் புதிய உடன்படிக்கை சபையை கட்டமுடியும். லூக்கா 5-ம் அதிகாரத்தில், இயேசு பழைய ரசத்தையும், பழைய துருத்தியையும்; பின்பு புது ரசத்தையும் புது துருத்தியையும் ஒப்பிட்டுப்பேசினார். இன்று புதிய உடன்படிக்கையின்படி நமக்குப் புதிய ரசமும் புதுத் துருத்தியும் தேவை. இந்தப் புதுரசம் பழையரசத்தைவிட மேலானது. பழையரசம் வெளிப்படையான நம் ஜீவியத்தையே கழுவமுடியும். புதிய ரசமோ உங்களின்* **"இருதயத்திற்குள்ளாய்" பரிசுத்தத்தை** *கொண்டுவருகிறது. இந்தப் பரிசுத்தம் ஒருவர் பரிசுத்த ஆவிக்குள்ளாக அடையும் இயேசுவின் ஜீவியமே ஆகும். இதுவே புதிய ரசம்!*

*புதிய ரசம் "இப்போது" புதுத்துருத்தியில் வார்த்து வைக்கப்படவேண்டும். ஸ்தலசபையும், அதனுள் காணப்படும் பரிசுத்தாவியின் வரங்கள், 5-வித ஊழியங்கள் (எபே.5:11) ஆகிய இவையெல்லாம் புதுத்துருத்தியாகும். இன்று அநேகர் மணிக்கணக்கில் "துருத்தி"யைப் பற்றி ஆராய்கிறார்கள். ஆனால் அந்தோ! இவர்கள் தங்கள் துருத்தியில் "பழைய ரசத்தையே" வைத்திருக்கிறார்கள்!! இவர்களது ஜீவியத்தில் வாக்குவாதமும் சண்டையும் நிறைந்த தோல்வியின் ஜீவியமே நிறைந்திருக்கிறது. ஆம்,*

*நம்முடைய "முதல்" தேவையெல்லாம் புதிய உடன்படிக்கை அளிக்கும் பாவத்தின்மேல் பூரண வெற்றியின் வாழ்க்கையான புதுரசமே!*

**உ. வெற்றி வாழ்விற்கு தடையான 'பெலவீன மாம்சத்திற்கு' முற்றுப்புள்ளி வைக்கவே இயேசு வெளிப்பட்டார்!**

*புதியஉடன்படிக்கை அளிக்கும் இரட்சிப்பானது "இருதயத்தில் இச்சிக்கும் இச்சையிலிருந்து" விடுதலையாகும் மேன்மையான இரட்சிப்பே. இதை எப்படி தேவன் அருளுகின்றார்? ரோமர்8:2 அதற்கு விடை அளிக்கிறது. அதன்படி "ஆவியின்பிரமாணத்தினாலே" இந்த மேன்மையான விடுதலையை அடைகிறோம். தொடர்ந்து ரோமர் 8:3,4 -ம் வசனங்களும் மிக முக்கியமானது. ஏனெனில் இங்குதான் பழைய உடன்படிக்கை செய்யக் கூடாததையும், புதிய உடன்படிக்கை என்ன செய்யமுடியும் என்பதைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் பழைய உடன்படிக்கை என்னதான் செய்யமுடிந்தது? நியாயப்பிரமாணம் ஜனங்களை விபச்சாரம், கொலை, திருடு ஆகியவற்றிலிருந்து தடுத்து நிறுத்த முடிந்தது. எனவே தான் யூதர்களின் வாழ்க்கைத் தரமானது உலகத்தில் எல்லோரைக் காட்டிலும் உயர்ந்ததாய் இருந்தது.*

*ஆனால், நியாயப்பிரமாணம் ஒரு மனிதனைத் தன் "இருதயத்திலிருந்து" இச்சிக்கும் பலவிதமான இச்சையிலிருந்து விடுதலையாக்க முடியவில்லை என ரோமர் 7:8-ம் வசனம் தெளிவுப் படுத்துகிறது. திருடியோ, கொன்றோ, அல்லது விபச்சாரம் செய்தோ உங்கள் சரீரத்திலிருந்து 'வெளியாகும்' இப்படிப்பட்ட பாவங்களையே நியாயப்பிரமாணம் நியாயந்தீர்க்க முடிந்தது. ஆனால் நீங்கள் உங்களுக்குள் தோன்றும் இச்சைகளை உங்கள் இருதயத்திற்குள்ளேயே அடக்கி வைத்துக் கொண்டால்* (Self Control) *நியாயப்பிரமாணம் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. ஒரு மனிதன் தன் இருதயத்திற் குள்ளேயே இரவும் பகலும் ஸ்திரீகளை இச்சித்துக் கொண்டிருந்தாலும், நியாயப்பிரமாணம் அம்மனிதனை ஒன்றும் செய்யாது. ஒருவருக்கு விரோதமான கசப்பைப் பல வருடங்கள் ஒருவன் தன் மனதில் வைத்திருந்தாலும் நியாயப்பிரமாணம் அம்மனிதனை ஒன்றும் செய்ய முடியாது. அப்படியிருந்தால், நீங்கள் ஒரு சிறந்த நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்ட ஒரு பிரஜையாய் இருப்பீர்கள். நியாயப்பிரமாணத்தை பொறுத்தவரையில் நீங்கள் ஒரு நீதிமான்! இவ்வாறு நியாயப்பிரமாணம் வெளியரங்கமான நல்ல கிரியைகளைச் செய்தாலும், ஒரு மனிதனை அது "தேவனுடைய நீதியின் தரத்திற்குக்"* (God's Standard of Righteousness) *கொண்டுவர முடியவில்லை. ஏனெனில் ரோமர் 8:3-ம் வசனத்தின்படி நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஓர் "பெலவீனமான மாம்சமே"* (The Weakness of the flesh) *அதற்கு காரணம் ஆகும்.*

*இந்த மாம்சம் தேவனுடைய சித்தம் செய்வதற்கு மிகமிக பெலவீனமானது. ஆனால் பாவம் செய்வதற்கோ அதிக வலிமை நிறைந்தது. ஆனால் தேவன் இப்போது* **"மாம்சத்தினாலே பெலவீனமாயிருந்த**

நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்குத் தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்தார்" (ரோமர் 8:3). என்ன விந்தையான நற்செய்தி! அற்புதம்! நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததை தேவன் தன் குமாரன் இயேசுவின் மூலமாகக் செய்துமுடித்து, **நாமும் அவ்வாறே வாழும்படியான ஒரு வழியை** உண்டுபண்ணி வைத்துவிட்டார்!! இது ஒரு விந்தையான நற்செய்தியில்லையா? யாருக்கு இது நற்செய்தி? தங்கள் இருதயத்தில் பரிசுத்தமாய் இருக்க வாஞ்சையாய் காத்துத் துயருற்றுத்.... தவித்திருப்ப வர்களுக்கே இது நற்செய்தி! இதுதான் சுவிசேஷம்! தேவன் தன் ஒரேபேரான குமாரனை "நம்மைப் போல" பாவமாம்சத்தின் சாயலில் அனுப்பிப் பாவத்தை மாம்சத்திலேயே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து விட்டார்!!

இன்று அநேகர் அறிந்ததெல்லாம் தேவன் பாவத்தைக் கல்வாரி சிலுவையில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் என்ற செய்திதான். ஆனால், அதனினும் மேலான ஒன்றை நாம் இப்போதும் அறிகிறோம், "பாவத்தை மாம்சத்திலேயே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்." இதன் பொருள் என்ன? இதை நாம் நன்கு புரிந்து கொள்வது மிக அவசியம். கவனியுங்கள்! நாம் எவ்வாறு சோதிக்கப்படுகிறோம்? யாக் 1:14,15 இதற்கு விடையளிக்கிறது. "அவனவன் (எல்லோரும்) **தன் தன் சுய இச்சையினாலே** இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்" இதை நீங்கள் புரிந்து கொள்ள முடிகிறதா? சோதனையானது, "இச்சை" கர்ப்பரிந்தரிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்வரை பாவமாகாது. நம்முடைய மாம்சத்தில் பல தரப்பட்ட இச்சைகள் நம்மைப் பாவம் செய்யும்படி இழுக்க முயற்சிக்கிறது. எவ்வாறு ஒரு துன்மார்க்கமான மனிதன் ஓர் கற்புள்ள கன்னியை கெடுத்துவிட முயற்சிக்கிறானோ, அதைப்போல! "ஆனால்" அந்தப் பெண் தன்னை அந்த மனிதனுக்கு ஒப்புக்கொடுக்காத பட்சத்தில் கர்ப்பந்தரிக்கவே முடியாது! சோதனையானது இந்தத் துன்மார்க்கமான மனிதனைப்போலவே, கிறிஸ்துவின் கற்புள்ள கன்னி கையாகிய நம்மைத் தன் பக்கத்தில் அழைக்கிறான். அவனுடைய அழைப்பு எவ்வளவுதான் கொடூரமாய் இருந்தாலும் அதற்கு நம்மை ஒப்புக்கொடாத பட்சத்தில் நம் வாழ்க்கையில் பாவம் கர்ப்பம் கொள்ளவே முடியாது. ஆம், ஒரு பாவமும் நமக்குள் வர முடியவே முடியாது!

**3. ஒரே புருஷனான கிறிஸ்துவுக்குத் தங்களை நியமித்து விட்டு, வேறு மனுஷனான 'மாம்சத்தோடு' சம்பந்தம் கொள்பவர்கள் ஆவிக்குரிய விபசாரக்காரர்கள்!**

ஒரு நல்ல மனைவியைத் தன் மகனுக்காகத் தேடும் தகப்பனைப் போலவே, தேவன் தன்னுடைய குமாரனுக்கு மனைவியாக, "கிறிஸ்துவின் மணவாட்டியை" (Bride of christ) ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். தேவன் ஆதாமுக்கு அவனைப்போலவே சுபாவம் உள்ள மனைவியைத் தந்தது போலவே, இயேசுவுக்கும் ஒரு மணவாட்டியைத் தருவார் என்றால், அது

அவரைப்போலவே சுபாவம் உள்ளவளாகத்தான் இருக்க முடியும்.

வெளிப்படுத்தின விசேஷத்தில், கற்புள்ள மணவாட்டியைப் பற்றியும் வேசியைப்பற்றியும் வாசிக்கிறோம். யார் வேசி? ஒரு பெண் திருமணம் செய்வதற்காக ஒரு வாலிபனோடு நிச்சயம் செய்தபின், அவன் ராணுவ யுத்தத்திற்காக சுமார் 1000 மைல் அப்பால் சென்றுவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது இந்தப் பெண் தன் மணவாளனுக்கு உண்மையில்லாமல் வேறொரு மனிதனோடு தகாத விதமாய் சம்பந்தம் கொள்வாள் என்றால், அவள் உண்மையான மணவாட்டி அல்ல, அவள் ஒரு வேசி! இதேபோல்தான் தேவன் நம்மையும் சோதித்து அறிகிறார். நாம் இயேசுவை ஆண்டவராய் ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து, அவருக்கு மணவாட்டியாக நிச்சயிக்கப்பட்டு விட்டோம். ஆனால் இயேசுவோ இங்கு இல்லை. மணநாளும் சீக்கிரம் வரப்போகிறது.

இப்போது, வேறு மனுஷனான "மாம்சத்தின்" கூப்பிடுதலுக்கு மணவாட்டியான நம்முடைய இருதயத்தின் நோக்கம் எவ்வாறு இருக்கிறது என்று தேவன் நம்மை சோதிக்கிறார். கிறிஸ்துவுக்கு என்னை நிச்சயித்துவிட்டு, "மாம்சம்" என்ற இன்னொரு மனிதன் பின்னால் நான் சென்று கொண்டிருப்பேனென்றால், என்னுடைய பெயர் என்ன? "விபச்சாரி" இவ்வாறு தான் யாக்கோபு தன் நிருபத்தில் 4-ம் அதிகாரம் 4-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். "விபச்சாரரே, விபச்சாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா?..." இதை சடங்காச்சார கிறிஸ்தவர்களுக்கோ (Nominal Christians) எழுதுகிறார்? இல்லை, விசுவாசிகளுக்கு எழுதுகிறார். தன் நிருபத்தில் அநேகம் தடவை "என் சகோதரரே" என்றுதான் குறிப்பிடுகின்றார். "என் சகோதரரே, நீங்கள் விபச்சாரக்காரர்கள்!! யாக்கோபு சிறிதும் முகத்தாட்சணயம் பாராமல் நேருக்கு நேராய் முகத்தைப்பார்த்து பேசுபவர். ஒருவரும் மனம்புண்பட்டு விடாதபடி மிகவும் பாலிஷாகப் பேசும் இன்றைய "டிப்ளோமேடிக்" பிரசங்கி அல்ல! மிக நேரடியாகவே சொன்னார். அவர்களைஅவர் வெறுத்ததால் அல்ல, அவர்களை அவர்களின் **ஆவிக்குரிய தூக்கத்திலிருந்து விழிக்கப்பண்ணவே** அவ்வாறு இடித்துரைத்தார்.

இப்போது விபச்சாரம் என்ன என்று புரிந்துகொண்டீர்களா? ஆவிக்குரிய விபச்சாரம்! கவனியுங்கள், ஒரு அவிசுவாசி ஆவிக்குரிய விபச்சாரத்தை ஒருபோதும் செய்ய முடியாது. ஏன் தெரியுமா? ஏனெனில் அவிசுவாசி கிறிஸ்துவோடு நிச்சயிக்கப்படுவதில்லை. சட்டப்பூர்வமாக அவன் தன் மாம்சத்தோடு, அதாவது தன் சொந்த புருஷனோடேயே திருமணம் செய்து ஜீவிக்கிறான். எனவே அது விபச்சாரம் அல்ல. அவன் தன் மாம்சத்திற்கேற்றபடி நடக்கலாம். பழையஏற்பாட்டில் அநேக தீர்க்கதரிசனங்கள் இஸ்ரவேலைப்பற்றியும், மற்ற தேசங்களைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. அவைகளை கவனிப்போமென்றால், ஒன்றில்கூட மற்ற தேசங்கள் விபச்சாரத்தில் (ஆவிக்குரிய விபச்சாரத்தில்) ஜீவிப்பதாகச் சொல்லப்படவேயில்லை.

ஆனால், இஸ்ரவேலைப் பற்றிக் குறிப்பிடும் போது, "நீ விபச்சாரத்தில் ஜீவிக்கிறாய்" என்று தேவன் தீர்க்கதரிசிகள் மூலம் அவ்வப்போது சுட்டிக்காட்டினார். ஆம்! யேகோவா தேவனுக்குத் தன்னை நியமித்து விட்டுப் பின் பாவம் செய்யும்போது, அது ஆவிக்குரிய விபச்சாரம் ஆகின்றது. வெளி. 17:5-ல் வாசிக்கிறோம், "இது இரகசியம், மகா பாபிலோன், வேசிகளும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்." ஆனால், "இப்பொழுதோ" நமக்கு அது இரகசியம் அல்லவே அல்ல! ஏனெனில் யார் வேசிகள் என்று அறிந்துகொண்டோமே!! கிறிஸ்துவுக்குத் தன்னை நிச்சயித்துவிட்டு, மாம்சத்தோடு இசைந்து ஜீவிப்பவர்கள் வேசிகள்!!

மகா பாபிலோன் என்பது, கிறிஸ்துவுக்குத் தங்களை நிச்சயித்துக் கொள்ளாத முஸ்லீமோ அல்லது இந்துக்களோ இல்லை. வேசிகளுக்குத் தாய் என்ற இரகசியத்தை இப்போது அறிந்து கொள்ளுங்கள்! எப்படி அவள் வேசிகளுக்கெல்லாம் தாய்? நீங்கள் கிறிஸ்துவுக்கு நிச்சயிக்கப் பட்ட பின்பு, உங்கள் இஷ்டம்போல் ஜீவிக்கலாம் என்று பிரசங்கித்து, **மாம்சத்தோடு விபச்சாரம் செய்ய அனுமதிக்கும் எல்லா ஸ்தாபனங்களும் பாபிலோன்!** வேசிகளுக்கெல்லாம் தாய்!! இதை நீங்கள் ஒருவேளை நம்பாமல் இருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை!

பொறாமை எப்படி வருகிறது? நீங்கள் உங்களை மாம்சத்திற்கு ஒப்புக் கொடுத்து, சம்பந்தம் கலந்து பிறக்கும் பிள்ளைகளுக்குப் பெயர்தான் பொறாமை! அது தேவனுடைய பிள்ளை அல்ல, மாம்சத்தின் பிள்ளை!! ஒருவருக்கொருவர் இடும் சண்டை? இதுவும் மாம்சத்திற்குப் பிறக்கும் பிள்ளையே! கணவனும் மனைவியும் சண்டையிட்டுக் கொண்டால்..... ஒருவருக்கு விரோதமான "கசப்பை" உங்கள் இருதயத்தில் வைத்திருந்தால்... யாருடைய பிள்ளை உங்கள் இருதயத்தில் பிறக்கிறது? மாம்சத்தினுடையது! ஒருவேளை நீங்கள் உங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என்று சொல்லிக் கொள்ளலாம். ஞாயிற்றுக்கிழமைகளில், "என் நேச மணவாளன் அதோ வருகிறார்!" என்று அழகாய் பாடலாம். ஆனால் ஒவ்வொரு நாளும் உங்களை நீங்கள் மாம்சத்திற்கு ஒப்புக்கொடுத்து..... உங்கள் இருதயத்தில் பிறந்த எண்ணற்ற பிள்ளைகள் அதற்கு ஆதாரமாயிருக்கும்போதும் 'உங்களின் ஆத்தும மணாளன்' வர்ணிப்புப் பாடல்கள் அனைத்தும் குப்பைகள்!! இவ்வாறு ஆவிக்குரிய விபச்சாரம் செய்துகொண்டு வாழும் உண்மையற்ற விசுவாசிகளை இன்று நாம் கண்கூடாக காண்கிறோம் அல்லவா?

யோவான் 8:44-ல், 'பிசாசு பொய்யனும், பொய்க்கு பிதாவுமாயிருக் கிறான்' என இயேசு அறிவித்தார். பொய்யர்களுக்குப் பிதா என்று அல்ல, "எல்லா பொய்களுக்கும்" பிதா அவன்தான்! ஒரு தேவனுடைய பிள்ளை பொய் சொன்னாலும் அந்தப் பொய்க்கு பிதாவும் சாத்தான் தான்!! அனனியா, சப்பிராள் சபைக்கு வரும்போது பரிசுத்த பாவனையோடு தாங்கள்எல்லாவற்றையும் கொடுத்துவிட்டது போல பாசாங்கு செய்தார்கள். வாய்திறந்தும் ஏதும் பொய் சொன்னார்களா? ஒன்றும் சொல்லவில்லை.

*தங்களின் பொருட்களை 1 லட்சத்திற்கு விற்றிருந்த போதும், ரூபாய் 30,000 - த்தை மாத்திரம் பரிசுத்த பாவனையோடு பவ்வியமாகக் கொடுத்தார்கள். ஆம் வாயைத் திறக்காமலேயே பொய் சொன்னார்கள்!! நீங்கள் இருதயத்தில் "இச்சையோடு" இருந்துவிட்டு, சபைமக்கள் உங்களை ஆவிக்குரியவர்களாய் எண்ணும் பொருட்டு "நீங்கள் காட்டும் பாவனை"* (impression) *அப்பட்டப் பொய்! இவ்வாறு இருக்கும் போது, "ஆ! என் நேச மணாளா, உமக்காக நான் காத்துத் தவிக்கின்றேன்!!" என்று பாடுவதில் என்ன பிரயோஜனம்? சரியான ஏமாற்று வேலை. இது, ஒரு பெண் தூரத்தில் இருக்கும் தன் மணவாளனுக்கு அற்புதமான காதல் கடிதங்கள் எழுதிவிட்டு 'வேறொரு மனிதனிடம்' எப்போதும் தகாதமுறையில் நடப்பதற்கு ஒப்பாய் இருக்கிறது. ஆம்! இப்பாடல்களை நீங்கள் பாடிக்கொண்டும் அதே சமயம் உங்கள் இருதயத்தை மாம்சத்திற்கு ஒப்புக்கொடுத்துக் கொண்டும் உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொண்டு இருக்கலாம்! இப்படி வாழும் இவர்களுக்குப் பெயர் "விசுவாசிகளாம்!?" இவர்களுக்கெல்லாம் சரியான பெயர், விபச்சாரர்கள்! வேசிகள்!!*

**4. நம்போன்ற மாம்சத்தில் வெளிப்பட்டும்... ஆவியின் பெலத்தால் இச்சைகளை தன் மாம்சத்தில் சங்கரித்து, வெற்றிவாழ்வின் வழியை நமக்குத் திறந்தளித்தார்!**

*நாம் நம் இருதயங்களைத் தூய்மையாய் வைத்துக் கொள்வதற்கு தேவனே ஒரு வழியை உண்டு பண்ணினார். அதைத்தான் நாம் ரோமர் 8:3-ல் வாசிக்கிறோம். "தேவன் தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாக அனுப்பினார்!" ஆ, இது ஒரு மேன்மையான சத்தியம்!! மேலும் எபி. 4:15-ல் "...... எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும்....." என வாசிக்கிறோம். நாம் எவ்வாறு சோதிக்கப்படுகிறோம் என்பதை யாக்கோபு. 1:14,15 வசனங்களின் விளக்கம் ஏற்கனவே பார்த்தோம். இயேசு "நம்மைப்போலவே" சோதிக்கப்பட்டார். எப்படி? மாம்சத்தில் உள்ள இச்சையின் மூலமாக!* **இயேசுவுக்கும் அவருடைய மாம்சத்தில் இச்சை இருந்ததா?!** *ஆம் அப்படி இல்லையென்றால் அவர் நம்மைப்போலவே அவர் சோதிக்கப்பட்டிருக்கமாட்டார் என நீங்கள் கூறுவீர்களென்றால், அது "வேறொரு இயேசுவாகத்தான்" இருக்க முடியும். வேதாகமத்தில் சொல்லப்பட்ட இயேசுவோ நம்மைப்போலவே சோதிக்கப்பட்டு, ஒரு பாவமும் செய்யாமல் தன் இருதயத்தைப் பிதாவின் சமூகத்தில் 33 ½ ஆண்டுகள் தூய்மையாய் காத்துக் கொண்டார். "ஆவியின் பெலத்தினாலே" தன் மாம்சத்தில் உள்ள இச்சைகளோடு கடுமையாய் போராடி பாவத்தின்மேல் பரிபூரண வெற்றியடைந்தார். இப்போதும் நம்மைப் பார்த்து "என்னைப் பின்பற்றுங்கள்" என அழைக்கிறார். இவ்வாறு நம்மைப் போன்ற மாம்சத்திலேயே கிறிஸ்து வெளிப்பட்டு, நாம் யாவரும் பின்பற்றும் வழியை நமக்காக உண்டு பண்ணினார்.*

*இந்த அற்புத சுவிசேஷ சத்தியத்தை இன்னமும் உங்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லையா? சற்று கவனித்துக் கேளுங்கள், உங்களுக்கு நீச்சல் தெரியவில்லையென்றால், ஒரு தேவதூதன் நீந்தக் கற்றுத்தர முடியுமா? அப்படியே ஒரு தேவதூதன் இறங்கி வந்து ஆற்றின் இரு*

*புறமும் மேலும் கீழும் பறந்துசென்று "என்னைப் பின்பற்று" என்று சொல்கிறான் என்று வைத்துக்கொள்வோம். நாம் கண்டு அதிசயித்து, "தேவதூதன் தண்ணீரில் மூழ்கவில்லையே!" என்று எண்ணி அவனைப் பின்பற்ற தண்ணீரில் இறங்கிய மறுநிமிடம் உடனே மூழ்க ஆரம்பிக்கிறேன். ஆ! தேவதூதா! உன்னை நான் புகழ முடியுமே ஒழிய, பின்பற்ற முடியாது என்று கூறிமுடிக்கிறேன். ஏனெனில் தேவதூதர்களுக்குப் புவிஈர்ப்பின் இழுக்கும் சக்தியில்லை! அதேபோல, இயேசுவும் ஒரு தேவதூதனைப் போல வந்து என்னைப் பின்பற்று என்று சொன்னாரானால், நான் சொல்லுவேன், "நீர் மாம்சஇச்சையின் ஈர்ப்பினால் இழுக்கப்படாமல் பாவத்தை மேற்கொள்ளலாம். ஏனெனில் நீர் தேவதூதன்! அதில் ஒன்றும் அதிசயம் இல்லை. நாங்களோ மாம்சத்தின் ஈர்க்கும் இழுவைக்கு ஆளாகிறோமே, எங்களால் உம்மைப் பின்பற்ற முடியாது" என சிறிதும் தயங்காமல் பதில் சொல்லி விடுவேன்.*

*ஆனால், இப்போது இதே தேவதூதன், என்னைப் போல், புவி ஈர்ப்பின் தன்மைகொண்ட சரீரத்தில் வந்து, தண்ணீரில் நீந்திச்சென்று முன் செல்வானென்றால், நானும் இப்போது அதைப்போலக் கற்றுக் கொள்ளமுடியும். எனவேதான் வேதம், இயேசு "***நம்மைப் போன்ற***" சரீரத்தில் வந்தார் என்று அழுத்தமாய் கூறுகிறது. நம்மைப்போல எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டு, பாவத்தை மேற்கொண்டார். எனவேதான் இந்த நல்ல இயேசு "என்னைப் பின்பற்று" என நாம் யாவரையும் இப்போது அழைக்கிறார்! மேலும் "நீ, தண்ணீரில் மூழ்கிப்போகாமல் இருக்க புவிஈர்ப்பு சக்தியின் மேல் ***உனக்கு வல்லமை தருகிறேன்***" என்கிறார்.*

*மத்தேயு 14-ம் அதிகாரத்தில், இயேசு கடலில் நடந்த அற்புதம் நமக்குத் தெரியும். இதைக்காட்டிலும் மேலான அற்புதம், பேதுரு கடலில் நடந்தான்! என்பதுதான். "ஆ, பேதுருவே, இயேசுவாகிய நான் புவிஈர்ப்பின் சக்தியை மேற்கொண்டு நடந்ததுபோலவே, நீயும் என்னை நம்புவாய் என்றால் உன்னாலும் நிச்சயமாய் ***நடக்கமுடியும்***" என இயேசு நம்மைக் கூவி அழைக்கிறார். இதுதான் பாவத்தின்மேல் அடையும் பூரண வெற்றியின் செய்தி. நம்மைப் போன்ற மாம்சத்தில் இயேசு வந்தால் ஒழிய, நம்மைப்போல சோதிக்கப்பட்டு, நமக்கு வெற்றி வாழ்வின் வழியை உண்டு பண்ணியிருக்க ஒருக்காலும் முடியாது!*

*ஆம், இயேசு ஒவ்வொரு சோதனையிலும், இச்சையை இருதயத்திற்குள் பிரவேசிக்கவிடாமல், அப்பாவ இச்சைகளை மாம்சத் திலேயே சங்கரித்தார் (ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்). இதை ஒரு மாபெரும் இரகசியமாகவே வேதம் விளம்புகிறது, "***தேவபக்திக்குரிய இரகசியமானது*** யாவரும் ஒப்புக்கொள்கிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்" (1தீமோ.3:16). என்ன விந்தை! நம்மைப் போன்ற மாம்சத்தில் இயேசு வெளிப்பட்டாலும் ஆவியில் நீதியுள்ளவரென்று, பரிசுத்தம் உள்ளவரென்றும் விளங்கப்பட்டார். இதுதான் இயேசு*

*நமக்கு உருவாக்கின மேலானவழி! ரோமர் 8:3-ன் படி அவர் பாவத்தை மாம்சத்திலேயே சங்கரித்தார். ஏனெனில் "நமக்குள்ளே"* (Inside of us) *நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார் (ரோமர் 8:4). எனவே ரோமர் 8:12-ன்படி "மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக் கடனாளிகளல்ல." இனியும் என்னை மாம்சத்திற்கு ஒப்புக் கொடுத்து, வேசித்தனத்தின் மூலமாய் பாவமாகிய பிள்ளைகளைப் பெற வேண்டியது அவசியமேயில்லை! அதற்கு மாறாக, ஆவியின் பிள்ளைகளாகிய (கனியாகிய) அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சை யடக்கம் போன்றவைகள் இனிமேல் என்னில் பிறக்கமுடியும்!*

**5. மாம்சத்தின் வேசித்தன ஜீவியத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் தூய மணவாட்டியாய் வாழ்ந்திட வாரீர்!**

*இன்று நீங்களும் நானும் விபசாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயைப் போலவே இருக்கின்றோம். ஆம்! அநேகம் தடவை மாம்சத்தோடு விபச்சாரம்செய்துபிடிபட்டவர்கள். இயேசு நம்மைபார்த்து கேட்கிறார். "உன் விபச்சாரத்திற்காக உண்மையாய் மனம் வருந்துகிறாயா?" அப்படி யென்றால் "நான் உன்னைக் குற்றம் சாட்டப்போவதில்லை. உன் கடந்த கால விபச்சார ஜீவியம் முழுவதையும் மன்னித்து, மறுபடியும் என் மணவாட்டியாய் மாற அழைக்கிறேன்" என்கிறார். 'ஆனால்' இயேசு அந்த ஸ்திரீயின் பாவத்தை மன்னித்தபிறகு என்ன சொன்னார்? "நீ போ, இனி பாவம் செய்யாதே" அல்லது "நீ போ, இனி உன் மாம்சத்தோடு விபச்சாரம் செய்யாதே" என்றார். பாவமன்னிப்பை நீங்கள் மிக எளிதாய் எடுப்பீர்க ளென்றால், வேசிகளுக்குத் தாயாகிய "பாபிலோனின்" கதியைத் தான் நிச்சயம் அடைவீர்கள். மாறாக, உள்ளத்தின் ஆழத்திலிருந்து கடுமையாய்த் துயருற்று மனந்திரும்புவீர்களென்றால், அவர் உங்களை மன்னித்து கிறிஸ்துவின் தூயமணவாட்டியாய் மாறும் சந்தர்பத்தை மீண்டுமாய் அளிப்பார். மணவாளன் இன்னமும் வரவில்லை! என்ன அரிய சந்தர்ப்பம்!! இந்த எஞ்சியுள்ள சொற்ப நாட்களில், உங்களை மணவாளனுக்கு உண்மையுள்ள மணவாட்டியாய் நிரூபிக்க முடியும்! ஆம், "பாவம் என் இருதயத்திற்குள் பிரவேசிக்கும் முன்பாகவே மாம்சத்தில் ஒவ்வொரு இச்சைகளையும் சங்கரிப்பேன்" என்ற உறுதியான தீர்மானம் எடுங்கள்.*

*மாம்சம் எழுந்து வரும்போது, அதை வாசலண்டையிலேயே விரட்டியடிப்பேன்! இவ்வாறு தீர்மானம்செய்வோமென்றால்,* **பரிசுத்தா வியானவர் நமக்கு உதவி செய்வார்.** *நம் மாம்சத்தை நாமாகவே விரட்டியடிக்க நம்மில் போதுமான பெலன் இல்லை. நல்ல செய்தி என்னவென்றால், நம்மைப் பெலப்படுத்தும்படி பரிசுத்தாவியானவர் வந்திருக்கிறார்! எனவே ஆவியில் எப்போதும் நிறைந்திருங்கள். அந்நிய பாஷைகளை மாத்திரமே பேசி விட்டுப்போக அல்ல, மாம்சத்தை வாசலிலேயே விரட்டியடித்து....... கிறிஸ்துவுக்கென்று பரிசுத்தாவியின் ஒத்தாசையோடு கற்புள்ள மண வாட்டியாக உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! செய்தியின் கடைத் தொகையான மனபாரம் இதுவே:*

*"காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன்" என்பதே! ஆமென்!!*



## 'துதி' வழி திறக்கும் ஜெய வாழ்க்கை!

*விசுவாச ஜீவியம் செய்வதற்கே நாம் இயேசுவின் சீஷர்களாய் அழைக்கப்பட்டிருக்கிறோம். விசுவாசத்தின் மேன்மையான அறிகுறி: துதியும்* (PRAISE) *ஸ்தோத்திரமுமே* (THANKS GIVING).

**1.இஸ்ரவேலர் துதிக்கும், இயேசுவின் சீஷர்களின் துதிக்கும் வித்தியாசம் உண்டு!**

*எகிப்தியர்கள் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டதைப் "பார்த்த பின்பு தான்"* (After they saw) *இஸ்ரவேலர்கள் "அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவருடைய துதியைப் பாடினார்கள்" (சங்கீதம். 106:12) என வாசிக்கிறோம். ஆம், இவர்கள் தரிசித்தே நடந்தார்கள்!*

*ஆனால் நாமோ விசுவாசித்து நடக்கின்றோம்! நம்முடைய சத்துருக்கள் சமுத்திரத்தில் மூழ்குவதை நாம் "காண்பதற்கு முன்பாகவே"* (Before We see), *அவர்கள் நம்முன் இன்னமும் இருக்கும்போதே, தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க முடியும். தேவன் தனக்குரிய சரியான நேரத்தில், அவருக்கே உரிய பாணியில், அவர்களோடு இடைபடுவார் என்று விசுவாசிக்கிறோம். எனவேதான் புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ள நாம், தேவனை எல்லா நேரத்திலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் துதிக்க முடிகின்றது.*

*"நாம் தேவனில் நம்பிக்கை (விசுவாசம்) வைத்திருப்பதால்" சபையாகிய நம் நடுவில் இயேசுவே, பிதாவாகிய தேவனைத் துதித்துப் பாட வருகிறார் என எபிரெயர் 2:12,13-ல் வாசிக்கிறோம். நம்பிக்கையும், விசுவாசமும், துதியின் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களுக்கு ஒப்பாகும். இவ்வாறு துதியும், ஸ்தோத்திரமும் இல்லாத விசுவாசம் போலியானதும், செத்ததுமாகும். இயேசுவின் "இளைய சகோதரர்களாகிய" நாம் (இவ்வாறு தான் இயேசு நம்மை எபி. 2:11,12-ல் அழைக்கிறார்) நம்முடைய மூத்த சகோதரனின் மாதிரியைப் பின்பற்றி, நம் பிதாவை, தனி ஜீவியத்திலும், "சபையின் நடுவிலும்" துதிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

**2. முறுமுறுப்பற்ற துதியே, தேவன் வீற்றிருக்கும் சிங்காசனத்தைப் படைக்கின்றது:**

*நம் தேவன் உன்னதத்தின் மகாராஜா! ஆனால் அவர் வீற்றிருக்கும் சிங்காசனம், வெள்ளையினாலோ பொன்னினாலோ செய்யப்பட்டது அல்ல!! அப்படிப்பட்ட சிங்காசனம் அவருக்கு மிகவும் அற்பமாய்*

இருக்கும்!! சங்கீதக்காரன் சங்.22:3-ல் "தேவரீர், நீரோ உம்முடைய ஜனத்தின் துதியின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறீர்" என்று வியந்துரைக் கின்றார். ஆம், துதியே சிங்காசனமாய் அமைக்கப்பட்டு, அதில் நம் தேவன் ராஜாவாய் வீற்றிருக்கிறார்! எனவேதான் **பரலோகம், ஓர் ஓயாத் துதி நிறைந்த ஸ்தலமாக உள்ளது.** அங்கே தேவதூதர்கள் தொடர்ச்சியாகத் தேவனைத் துதித்துக்கொண்டு இருக்கின்றார்கள். பரலோகத்தில், இத்துதியின் சிங்காசனத்திலேயே தேவன் வீற்றிருக்கிறார். பரிசுத்தாவி யானவர் நம் இருதயத்திற்குள் வரும்போது, பரலோகத்தையே அங்கு கொண்டுவந்து விடுகிறார். "இப்போது" நாமும்கூட, தேவாதி தேவன் வீற்றிருக்கும்படியான துதியின் சிங்காசனத்தை நம் இருதயத்திலும், வீட்டிலும், சபையிலும், படைக்கமுடியும்!!

எனவேதான், நம்முடைய முறுமுறுப்பிலும் குறைகூறுதலிலுமிருந்து மிகுந்த பயத்தோடும், நடுக்கத்தோடும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுவது மிகவும் முக்கியமாயிருக்கிறது. இவ்வாறு பிதாவாகிய தேவனுக்கு சிங்காசனம் படைக்கும்படிக்கு, பரிசுத்தாவியானவர் நம் "இருதயத்திற்குள்" இப்போது கிரியை செய்து கொண்டிருக்கிறார் (பிலிப்பியர்.2:12-16). மேலும், நமக்கு வெளியேயும்..... நம்முடைய எல்லாச் சூழ்நிலைகளிலேயும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி கிரியை செய்து கொண்டிருக்கிறார். இந்த அற்புத சத்தியத்தைக் கூறும் ரோ.8:8-ம் வசனத்தில் உறுதியான விசுவாசம் நமக்கு இருக்குமென்றால், முறுமுறுப் பதற்கும், குறைகூறுவதற்கும் நம் ஜீவியத்தில் ஒன்றுமே இருக்காது! இதற்கு மாறாக, நாம் நம்முடைய வீட்டிலும், அலுவலகத்திலும் முறுமுறுத்துக் குறை கூறிக்கொண்டு இருப்போமென்றால் தேவனை நாம் சபையில் சிறப்பாய் துதித்திட முடியவே முடியாது.

**3. சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கையிலேயே துதியின் கெம்பீரம் உள்ளது:**

உண்மைத் துதியின் பிறப்பிடம் சிலுவையில் அறையப்பட்ட ஜீவியமே! வேதாகமத்தில், தேவன் தன் ஜனத்தின் துதியில் வந்து அமருகின்றார் என்ற ஒரே வசனம், **இயேசுவின் சிலுவை மரணத்தை** விவரிக்கும் ஒரு சங்கீதத்தின் நடுவில் இருப்பது நம்மை வியப்புறச் செய்கிறது (சங்கீதம் 22:3). இந்தச் சங்கீதம் இயேசு சிலுவையில் அடையும் வேதனையின் குரலில் ஆரம்பித்து, அவரது கைகளும் கால்களும் உருவக் குத்தப்பட்டதையும் குறிப்பிடுகிறது(வசனம் 16). சிலுவையின் பாடுகளை விவரிக்கும் இதே சங்கீதத்தின் நடுவிலேயே, இயேசு நம்மை அவரின் இளைய சகோதரர்களாகக் குறிப்பிட்டு, அவரோடு நாமும் சேர்ந்து பிதாவுக்குத் துதியின் சிங்காசனத்தை அமைக்க அழைக்கின்றார்! (வசனம்22,23). ஆம், நாமும் அவரோடுகூட அதே சிலுவையில் இப்போது அறையப்பட்டிருக்கின்றோம். இந்தச் சிலுவையில், நாம் உலகத்திற்காகவும், மாம்ச இச்சைகளுக்காகவும், அவரோடு அறையப் பட்டிருக்கும் அதேவேளையில், பிதாவுக்குத் துதியின் கீதமும் பாடு கின்றோம். இன்று, இந்தச் "சிலுவையின் தாற்பரியம்" நம் ஜீவியத்தை

மையமாகக் கொள்ளாததால், அநேக ஆவிக்குரிய பெந்தேகொஸ்தே வட்டாரங்களில் "**உண்மையற்ற**" **துதியும் ஆராதனையும்** நிலை கொண்டு விட்டது. இந்த வெறுமையான உண்மையற்ற துதி ஆராதனையைக் கண்ட சிலர், புதிய உடன்படிக்கை ஆராதனையில், துதிக்கும் - ஆராதனைக்கும் பங்கில்லை என்று நேர்மாறாக தீர்மானிக்கின்றனர். ஆனால், பரிதாபம்! இது குன்றின் மறுமுனைக்குச் சென்று வீழ்வதேயாகும்!!

கிறிஸ்துவோடு அறையப்படும் இதே சிலுவையிலிருந்துதான், நாம் பிதாவுக்குத் துதியின் சிங்காசனத்தைப் படைக்கின்றோம். சங்கீதம் 118, சிலுவையையும் கிறிஸ்துவையும் பற்றிய இன்னொரு சங்கீதம் (வசனம் 11:14,22). நம்மை நாமே பலிபீடத்தில் வீழ்த்தி, சிலுவையில் நம்மை கயிறுகளால் கட்டி அர்ப்பணிப்பதை இவ்வசனம் குறிப்பிடுகின்றது (வசனம் 27). இவ்வாறு ஒப்புக்கொடுத்திருக்கும் அதே வேளையிலேயே, "நாம் தேவனைத் துதித்து" (வசனம். 28,29) பெரு முழக்கமாய், "இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே நாம் களிகூர்ந்து மகிழுவோம்!!" என்று கெம்பீரிக்கிறோம்!! (வசனம் 24).

பாரமும், துயரமும் நிறைந்த ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக, "ஆனந்த தைலத்தையும், துதியின் உடையையும்" தருவதற்காகவே இயேசு நம்முடைய **சிரசாக** அபிஷேகிக்கப்பட்டார் (ஏசாயா 61: 1-3). நீங்கள் துயரத்தில் **ஒடுங்கின ஆவியோடு** ஜீவிப்பீர்களென்றால், அது சாத்தானின் கிரியை என்பதற்குச் சந்தேகமேயில்லை. இந்த ஆவியிலிருந்து உங்களை நிரந்தரமாக விடுதலையாக்கவும், உங்களைத் துதியின் உடையால் நேர்த்தியாய் உடுத்தவுமே இயேசு வந்தார். நாம் அதைரியமடைந்தோ, துயருற்றோ மனமடிந்தோ இருப்பது தேவனுடைய சித்தமேயில்லை. ஏனெனில் இயேசு ஒருபோதும், அதைரியமடைந்தோ; துயருற்றோ; மனமடிந்தோ; ஒருபோதும் இருக்கவே இல்லை. இப்போது நாமும் "அவர் நடந்தபடியே நடக்க" அழைக்கப்பட்டிருக்கிறோம் (1யோ.2:6). ஆனால் இந்த பாக்கியமான வாழ்க்கையைப் பெற நாம் இயேசுவைப் போல "அனுதினமும்" சிலுவையை எடுத்தால் ஒழிய, வேறு சாத்தியமே இல்லை!!

### 4. தூய்மை நிறைந்த துதி சத்துருவை தோற்கடிக்கும் வலிமை நிறைந்தது!

சங்கீதம் 8:2 -ல் சத்துருக்களை முறியடிக்கத் தேவன் **பாலகர்** வாயினால் பெலன் உண்டு பண்ணினார் என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தையே, குழந்தைகளின் பெருத்த ஆரவார துதியைக்கேட்டு பிரதான ஆசாரியர்கள் கோபம் அடைந்தபோது, இயேசு குறிப்பிட்டார் (மத்தேயு. 21:15,16). இன்றுள்ள அநேகரைப் போலவே அன்றிருந்த பிரதான ஆசாரியர்கள் தேவனுடைய வீட்டில் ஆரவாரிக்கவோ, சத்தத்தை உயர்த்தி துதித்து ஆராதிக்கவோ கூடாதென்று எண்ணினார்கள். ஜனங்கள் எப்போதும் "நீண்ட முகமாகவும்", தேவ சமூகத்தில் "அமைதியாகவும்" இருக்கவேண்டும் என்று எண்ணினார்கள்! "ஆனால் இயேசுவோ" துதியின் ஆரவாரத்தைக் கேட்டவுடன் பரவசமடைந்தார்!! ஏனெனில் இடி முழக்கம் போன்ற சத்தத்துடன் தேவதூதர்கள் பிதாவைத் துதிக்கும் தன்

*பரலோக வீட்டை இத்துதி, அவருக்கு நினைவுறுத்தியது!! சாத்தானும், அவனுடைய தூதர்களும் பரலோகத்தில் வாசமாயிருக்க முடியாததற்கு இதுவும் ஒரு காரணம். ஏனெனில், பிசாசுகள் உண்மையாகவே தேவ துதியின் ஆரவார முழக்கத்திற்கு முன்பாகவே நிற்கவே முடியாது! அது போலவே, பூமியில் இப்படிப்பட்ட துதி நிறைந்து காணப்படும் சபையிலும் அவனால் நிற்கவே முடியாது!! எனவேதான் அவன் இரண்டு முறைகளைக் கையாளுகிறான். ஒன்று, துதியில் உள்ள "உண்மையை"* (Sincerity) *எடுத்துப்போட முயலுகிறான்!! அல்லது, துதியின் பெருத்த ஆரவார முழக்கத்தை* (Shouts of Praise) *எடுத்துப்போட முயலுகின்றான்! நம்மைச் சுற்றியுள்ள பல தரப்பட்ட கிறிஸ்தவ ஸ்தாபனங்களை உற்று நோக்கினால் அநேகமாக எல்லா இடங்களிலும் சாத்தான் ஏதாவது இந்த இரண்டு முறைகளின் மூலமாக வெற்றியடைந்துருப்பதைக் காண முடியும்.*

*ஏன் சாத்தான், தேவனைத் துதிக்கும் உண்மையான துதியை வெறுக்கின்றான்? சங்கீதம் 8:2 -ம் வசனத்தை இயேசு குறிப்பிட்டு, அதில் சொல்லப்பட்ட "பெலன்"* (Strength), *உண்மையாகவே "துதி"* (Praise) *என்று தெளிவுபடுத்திவிட்டார் (மத்21:16). ஆம், சத்துருவை விரட்டியடிக்க துதியே வலிமை நிறைந்தது!*

*இருப்பினும், பரிசுத்தமற்ற ஜீவியத்திலிருந்து பிறக்கும் ஆரவார துதிக்கு எந்தவித வல்லமையும் இல்லவே இல்லை. யாத்திராகமம் 32-ல் இஸ்ரவேலர்கள் ஒரு பொன் கன்றுக்குட்டியை செய்து "யெகோவா" என்று (வசனம் 5) அழைத்ததாக வாசிக்கிறோம். மேலும், அவர்கள் நடனமாடித் தங்கள் "யெகோவா"விற்கு ஆரவாரித்து எழுப்பின பேரோசை மோசேயும், யோசுவாவும் பல மைல்களுக்கு அப்பாலிருந்தும் கேட்கும் படியாய் இருந்தது (வசனம்.17-19). ஆனால், இவர்களின் "ஆவிக்குரிய துதியின்"* (Charismatic praise!) *மத்தியில் சாத்தான்தான் வீற்றிருந்தான்! இன்றும், "இயேசுவின்" நாமத்தில் கூடி, நடனமாடி ஆரவாரிக்கும் அநேகரிடத்தில் காணப்படும் ஒழுக்க சீர்கேட்டைப் போலவே, அந்த இஸ்ரவேலர்களிடமும் காணப்பட்டது.*

*ஆம், நாம் ஏற்கனவே சொன்னதுபோல, சிலுவையில் அறையப் பட்ட தூய்மையான வாழ்க்கையிலிருந்து வரும் துதி மாத்திரமே வல்லமை நிறைந்ததாய் இருக்க முடியும்!!*

### 5. பரலோகத்தின் இடிமுழக்கமான ஆரவாரத் துதியை, பாரம்பரிய கிறிஸ்தவம் புறக்கணிக்கிறது!

*லூக்கா 19:37,38-ல் இயேசுவின் சீஷர்கள் மிகுந்த சத்தத்தோடே, தேவனுக்கு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது, பரிசேயர்களுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது! உடனே அவர்கள் இயேசுவிடம் சென்று சீஷர்களை அதட்டி அமைதியாய் இருக்கும்படி கூறினார். ஆனால், இயேசுவோ அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, "இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் (ஆரவார துதி செலுத்தும்) என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (வசனம்40). இதிலிருந்து, "ஆரவாரத்துதியைப்" பற்றிய இயேசுவின்*

அபிப்பிராயத்தையும், பரிசேயர்களின் அபிப்பிராயத்தையும் அறிகிறோம். உங்கள் சபையில் இது எப்படி இருக்கிறது? நீங்கள் பின்பற்றுவது, பரிசேயரையா அல்லது இயேசுவையா? நாம் மனுஷீக கனத்தை (குறிப்பாக, கிறிஸ்தவத் தலைவர்களின் கனத்தை) அதிகம் விரும்புகின்றபடியால் தேவனை சபையின் நடுவில் ஆரவாரித்துத் துதிக்க அஞ்சுகின்றோம். சில குழுக்கள், ஆரவாரத் துதியை தங்களின் மதப்பாரம்பரியம் உதாசினம் செய்து அங்கீகரிக்காமல் இருப்பதினிமித்தம், அந்த குரூப்பில் உள்ள ஒவ்வொருவரும் 'குருட்டுத்தனமாக அப்படியே தங்களின் பாரம் பரியத்தைப்' பின்பற்றுகிறார்கள். ஆனால், நாம் இயேசுவைப் பின் தொடர்பவர்களாய் இருப்போமென்றால், இவ்வித பாரம் பரியத்திற்கு எதிராக கடுமையான பலவந்தம் செய்பவர்களாய் இருக்க வேண்டும் (மத்தேயு.11:12).

இயேசு கோடானகோடி ஆண்டுகள் தொடர்ச்சியாகத்..... துதியும், ஆராதனையும் நிறைந்த தன் பிதாவின் சமூகத்தில் ஜீவித்தவர். எனவே அவர் பூமியில் வந்து, எப்போதும் வாடலான முகமும், எரிச்சலும் நிறைந்த மதஜனங்களோடு ஜீவித்தது, **பரலோக சூழ்நிலைக்கு** முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது. ஆகவேதான் அவர் எப்போதெல்லாம் துதிக்கும் சூழ்நிலையான பரலோகத்தை உடையவர்களைக் கண்டாரோ, அது அவரை மிகவும் பரவசம் கொள்ளச்செய்தது!

வெளிப்படுத்தின விசேஷத்தில், ஏழு என்ற இலக்கம் அநேக இடத்தில் காணப்படுவது போலவே பரலோகத்திலுள்ள "துதியின் ஏழு வசீகர காட்சியையும்" காண்கிறோம். அதற்குரிய வசனங்களை நீங்கள் பொறுமையாய் எடுத்துப்பார்ப்பீர்களென்றால், பரலோகத்தைப் பற்றிய உங்கள் முழு எண்ணமும் புரட்சியான மாறுதல் அடைந்து விடும். அந்த வசனங்களாவன: வெளி 4:8-11;5:8-14; 7:9-12; 11:15-18; 14:1-4;15:1-4; 19:1-6. நமது வருங்கால இல்லத்தின் ஒவ்வொரு காட்சியும், பலத்த இடிமுழக்கம் போன்ற ஆனந்தத் துதியின் ஆரவாரத்தால் நிறைந்திருக்கிறது (19:6). அங்கு அவர்கள், தேவனின் மாறாத ராஜ்யபாரத்தையும், அவரின் பரிசுத்தத்தையும், அவரின் நியாயத்தீர்ப்பு முதலானவைகளையும் குறித்தே புகழ்ந்து துதிக்கிறார்கள். ஒரு சிறு வார்த்தையாகிய முறுமுறுப்பும் அங்கு கேட்கப்படவே இல்லை! நீண்ட முகம் கொண்ட, மனம்மடிந்த தேவதூதன் ஒருவன் கூட இல்லவே இல்லை!!

நாம் இவ்விதமான பரலோக சூழ்நிலைக்கு இப்பூமியிலேயே பழக்கம் ஆகாவிடில், நாம் பரலோகத்தில் தேவனுடைய சமூகத்தில் பிரவேசிக்கும்போது, அங்குள்ள தேவஜனங்கள் ஓயாது பெரு முழக்கமாய் "அல்லேலூயா" "ஆமென்" சொல்லுவதைக்கேட்டு, ஒரு பெரிய கலாச்சார அதிர்ச்சிக்கு (a cultural - Shock) உள்ளாவோம். கவனியுங்கள்! பரலோகத்தின் "அல்லேலூயா" "ஆமென்" முழக்கங்கள் ஒன்றாகிலும் அர்த்தமற்றதாய் இல்லை. அவர்கள் சொன்னார்கள், "அல்லேலூயா, ஏனென்றால்....." (வெளி 19: 1,2,6 ) இவ்வாறாக, அது ஒரு

பரிசுத்த அலங்காரத்தில் காணப்பட்ட அர்த்த புஷ்டியுள்ள ஆராதனையாய் இருந்தது, ஆம், இதையே பரிசுத்தாவியானவர் நம் ஜீவியத்திலும், நம் சபைகளிலும் உருவாக்க வந்திறங்கினார்!

**6. ஆட்டுக்குட்டியானவர் எங்கு சென்றாலும் பின்பற்றிய 144,000 பேர் கற்றறிந்ததே சீயோனின் துதி நிறைந்த புதுப்பாட்டு!**

பரலோகில் இனியகீதம் பாடிய 144,000 பேர் அப்பாடல்களை "பூமியில் இருக்கும்போது" கற்றறிந்தே புதுப்பாட்டு பாடினார்கள் என்று நாம் வெளி.14:1-4 வசனங்களில் பார்க்கிறோம். பழைய பாடலோ 'இந்தப்பூமியில்' ஜனத்திற்கும், சூழ்நிலைக்கும் எதிராக இவர்கள் பாடிய "முறுமுறுப்பும் குறைகூறுதலும்" நிறைந்த பாட்டு! வெகு கொஞ்சம் பேர்களே, ஆட்டுக்குட்டியானவர் எங்கு சென்றாலும் அவரைப் பின்பற்றிய வர்கள் (4-ம் வசனம்). அதாவது, **தங்கள் சிலுவையை "அனுதினமும்" எடுத்துத்** தங்கள் சொந்த ஜீவனை வெறுக்கக் கற்றுக்கொண்டவர்கள் (லூக்கா14:26). எனவே இவர்கள் தேவனின் மாறாத ராஜ்யபார ஆளுகையில் விசுவாசம் வைத்து (ரோமர்.8:28), தங்கள் ஜீவியத்திலிருந்து குறைகூறுதலையும், முறுமுறுப் பையும் "முற்றிலுமாய்" புறம்பேகளைந்தெறிந்தவர்கள். ஆம்! இவர்களே எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யவும் (1தெசலோனிக்கேயர். 5:18), எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம் செய்யவும் (எபேசியர்.5:20), எல்லா மனுஷருக்காகவும் ஸ்தோத்திரம் செய்யவும் (1தீமோத்தேயு. 2:1) கற்றறிந்தவர்கள். பூமியில் இவர்கள் சந்தித்த எல்லா இடுக்கமான சோதனை நேரங்களிலும் **இயேசுவின் மரணத்தைத் தங்கள் சரீரங்களில் சுமந்து** கற்றறிந்ததே இந்தப் புதிய துதி நிறைந்த பாட்டும், ஆராதனையும்! எந்த சூழ்நிலையிலும், எல்லாவித ஜனத்தின் நடுவிலும் பாடினார்கள்! இப்படித்தான் அவர்கள் கடைசி நாளில், ஆட்டுக்குட்டியானவருடன் சீயோன் மலையில் தாங்கள் பூமியில் கற்றறிந்த பாடலைப் பாடி நின்றார்கள்.

நாம் நம் இருதயத்தில் மாத்திரம் தேவனைத் துதித்தல் போதாது! நம்முடைய **ஸ்தோத்திரபலியை**, அதாவது சிலுவையில் அறையப்பட்ட வாழ்விலிருந்து பிறக்கும் துதியை, நம் **"உதடுகளின்" மூலமாகவும்** படைக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் நாம் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்ட சிலவற்றில் 'உதடுகளின் கனியாகிய' ஸ்தோத்திர பலியும் ஒன்று! (எபிரெயர்.13:15). இருதயத்தின் நிறைவினாலேயே வாய் பேசும், என்று இயேசு சொன்னார் (மத்தேயு.12:34). எனவே துதியானது உதடுகளில் வழிந்தோடவில்லையென்றால், துதி நம் இருதயத்தையும் நிரப்பவில்லை என்றுதான் பொருள்! ஆம், "வாயின் அறிக்கையினாலேயே" விடுதலை (இரட்சிப்பு) உண்டாகும் என ரோமர் 10:10 கூறும் சத்தியத்திற்கு தீவிரமாய் கீழ்படிந்து விடுங்கள்!

**7. ஸ்தோத்திர பலியாகிய துதியே ஜெயத்தின் பாதையை வகுக்கின்றது.**

சங்கீதம். 50:23-ல் "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்

படுத்துகிறான். **அவன் எனக்கு வழியை உருவாக்கி** அவனுக்கு என் விடுதலையை (இரட்சிப்பை) காட்டும்படி செய்கிறான்" (Living- ஆங்கில வேதாகமம்).

துதி மாத்திரமே விசுவாசத்தின் ஒரே அறிகுறியாய் இருப்பதால், நாம் அவரைத் துதிக்க ஆரம்பிக்கும்போது, தேவன் நம்மைப் பல இக்கட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வல்லமையுள்ளராயிருக்கிறார். ஜெபம் மாத்திரம், நம்மைப் பல இக்கட்டுகளிலிருந்து விடுதலையாக்கப் போதுமானது அல்ல. எப்படியெனில், நம் ஜெபம் கேட்கப்பட்டது என்ற உறுதியை ஆவியானவர் நம் இருதயத்தில் தரும்வரை தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு ஜெபிக்கும்போது நமக்குள் விசுவாசம் பிறந்து, பதிலை நாம் காணவிட்டாலும் நாம் "பெற்றுக் கொண்டோம் என்று விசுவாசிக்கிறோம்" (மாற்கு 11:24). ஆனால் நம் இருதயத்தில் பிறந்த இந்த விசுவாசத்திற்கு ஆதாரம் என்ன? நாம் ஜெபிப்பதை நிறுத்திவிட்டு, தேவனைத் துதிக்க ஆரம்பிப்போம்! ஆம், துதிப்பது மாத்திரமே, நம் இருதயத்தில் நாம் பெற்றிருக்கிற விசுவாசத்திற்கு தெளிவான ஆதாரம்!! தேவன் தன் இரட்சண்யத்தை (விடுதலையை) நமக்கு வெளிப்படுத்தும்படியாக, நம் துதியின் மூலமாகவே நாம் தேவனுக்குப் பாதையை வகுத்துத் தருகின்றோம். இவ்வாறு துதி அளித்த ஜெயத்தின் சில மாதிரிகளைப் பாருங்கள்:

**a. யோசபாத்திற்கு துதி அளித்த ஜெயம்:**

2நாளாகமம் 20:2-ல் யோசபாத் திரளான சத்துருக்களால் சூழப்பட்டான். பிரச்சனைகள் சூழும்போது நாம் செய்வதுபோலவே அவனும் ஞானமுள்ள காரியத்தை செய்தான். அவன் உபாவசித்து, ஜெபித்துத் **தேவனுடைய முகத்தைத் தேடினான்.** அந்த ஜெபத்தின் விளக்கம் நமக்காக வசனம் 6 முதல் 12 வரை விவரிக்கப்பட்டுள்ளது. அதில் யோசபாத் ஜெபித்த ஏழு காரியங்களைப் பார்க்கிறோம்:

1) தேவனுடைய மாறாத ஆளுகையை (Sovereignity) துதித்தான் (வச. 6).

2)கடந்த நாட்களில் தேவன் செய்த நன்மைகளைக்கூறி, தனக்கு ஞாபகப்படுத்திக் கொண்டான் (வசனம்7).

3) தேவன் தந்த வாக்குதத்தங்களை, அவருக்கு நினைவுபடுத்தினான் (வச.9)

4)'நாங்கள் உம்முடைய சுதந்திரம்'எனஅவருக்கு நினைவுறுத்தினான்(வச.11).

5) அந்த சூழ்நிலையை மேற்கொள்ள 'எங்களுக்குப் பெலனில்லை' என்று தேவனிடம் அறிவித்தான்! (வச.12).

6) எங்களுக்கு 'ஞானம் இல்லை'யென்றும் அறிவித்தான்! (வச.12).

7)'தேவரீர், நாங்கள் உம்மையே சார்ந்திருக்கிறோம்'என அறிவித்தான் (வச.12).

நாம் ஜெபிப்பதற்கு **ஒரு நல்ல மாதிரியான ஜெபம்** இது. இந்த ஜெபத்திற்கு தேவன் உடனடியாக பதில் தந்து, தான் அந்த இக்கட்டான சூழ்நிலையோடு இடைப்படுவேன் என வாக்குரைத்தார். தேவனுடைய

வாக்குறுதியைக் கேட்ட யோசபாத் தேவனை விசுவாசித்து தன் சேனைக்கு முன்பாக, கர்த்தரை உரத்த குரலில் **பாடித் துதிக்கும் பாடகர் குழுவை** நியமித்தான். சத்துருக்களின் முகத்திற்கு முன்பாக கெம்பீரித்த இந்த ஸ்தோத்திரபலியாகிய துதியின் மூலமாக தேவன் தன் இரட்சண்யத்தை வெளிப்படுத்தும் பாதையை யோசபாத் வகுத்துத் தந்தான். தேவனும் அப்படியே செயல்பட்டு, சத்துருக்களைத் தரை மட்டமாய் அழித்துப் போட்டார்! (வசனம் 22).

**b. யோனாவிற்கு துதி அளித்த ஜெயம் :**

யோனாவின் புத்தகத்திலும் இன்னொரு மாதிரியைக் காணுகின்றோம். மீனின் வயிற்றில் யோனா மூன்று நாள் இரவும் பகலும் இருந்தான். இந்த மூன்று நாட்களிலும் அவன் ஜெபிக்கக்கூட செய்யவில்லை (யோனா.1:17). தொடர்ந்து அதிகாரம் 2:1-ல் "பின்பு" என்று ஆரம்பிக்கிறது. அதாவது "மூன்று நாள் இரவு, பகலுக்குப் பின்பு" யோனா ஜெபிக்க ஆரம்பித்தான். யோனா இந்த முதல் மூன்று நாளிலும், நாம் சுயமாய் நம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முயற்சிப்பதைப் போலவே, மீனின் வாய்ப்பகுதிக்கு வர, தவழ்ந்து முயற்சித்துக் கொண்டிருந்தான். எல்லா மனுஷீக உதவியும் தோல்வியடையும்போது மாத்திரமே, அநேக ஜனங்கள் தேவனைத் தேட ஆரம்பிக்கிறார்கள். அதேபோலவே யோனாவும், தன் சொந்த அருமையான முயற்சிகள் தோல்வியடைந்ததும், தேவனைத் தேடினான். இவ்வாறாகவே நாம் நம் தோல்வியின் இறுதிநிலையை அடையும்வரை தேவன் காத்திருக்கிறார். யோனா பின்பு ஜெபித்து, ஜெபித்துப் பார்த்தான்! ஆனால் அவன், தேவனுக்குத் **துதியின் பலியை செலுத்தி** "இரட்சிப்பு கர்த்தருடையது" (2:9) என்று கூறும்வரை ஒன்றும் நடக்கவில்லை! யோனா, தீராத அந்தப் பிரச்சனையின் நடுவிலிருந்து தேவனைத் துதிக்க ஆரம்பித்தபோது, தேவன் தனக்கு அளிக்கும் இரட்சண்யத்தின் (விடுதலையின்) பாதையை அவருக்கு வகுத்தான். 'உடனடியாக' தேவன் யோனாவைக் கரையில் கக்கும்படி மீனுக்குக் கட்டளையிட்டார்! (2: 10).

நாம் தேவனுக்குத் துதியின் பலியை செலுத்தும்வரை, எத்தனை நாட்கள்தான் நாம் அப்படியே மீனின் வயிற்றில் (குறிப்பிட்ட நம் பிரச்சனைகளில்) தங்கப்போகிறோம்?! தேவன் நம்மை விடுதலையாக்கும் பாதையை வகுப்பதாகிய எல்லாவற்றிலேயும், அவரைக் கனப்படுத்தித் துதி செலுத்தாதவரை, தேவன் நம்மை விடுதலை செய்யவே முடியாது (சங் 50:23).

**c. பவுலுக்கும், சீலாவுக்கும் துதி அளித்த ஜெயம் :**

கடைசியாக ஒரு மாதிரியை அப்போஸ்தலர் நடபடிகள் 16-ம் அதிகாரம் விவரிக்கிறது. பவுலும் சீலாவும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததின் நிமித்தம் சிறையில் அடைக்கப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். அந்த நள்ளிரவில் தூங்குவதற்குப் பதிலாக (முறுமுறுத்துக் குறை கூறுவதை விட தூங்குவது கூட எவ்வளவோ தேவலாம்) அவர்கள் ஜெபிக்கவும் தேவனைப் பாடலினால் "துதிக்கவும்" ஆரம்பித்தார்கள். அவர்களிடம்

*கொஞ்சமும் குறைசொல்லுதல் காணப்படவேயில்லை. மாறாக,* **தேவனு டைய பரிபூரண ஆளுகையில் விசுவாசம் வைத்துத் தேவனைத் துதித்தார்கள்.** *'உடனடியாக' தேவன் அவர்களுக்கு சிறைக்கதவைத் திறந்தார்! பவுலும், சீலாவும் தங்கள் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை செலுத்தி, தேவன் தங்களுக்காகக் கிரியை செய்யும் இரட்சண்ய வழியை வகுத்துக் கொடுத்ததால், விடுதலை அவர்களுக்குச் சாத்தியமானது!*

*எந்த மீனின் வாய்க்கும், எந்த சிறைக்கதவிற்கும் உரிய திறவுகோல் நம் அற்புதமான ஆண்டவருடைய கரத்தில் அன்றோ உள்ளது (வெளி. 3:7)! அவர் ஒரு கதவைத் திறக்கும்போது அதை ஒருவராலும் பூட்டவே முடியாது! அவர் திறக்காத பட்சத்தில் எல்லா மனுஷீக முயற்சியும் தோல்வியுறவே செய்யும். பொதுவாய், நம்முடைய விருப்பத்தின் படியும், திட்டத்தின்படியும் எல்லாம் சரியாய் நடக்கும்போது தேவனைத் துதிப்பது மிக எளிது. ஆனால் நம்முடைய எதிர்பார்ப்புக்கு முரணாகக் காரியங்கள் நடக்கும்* **இக்கட்டான நேரமே** *நாம் தேவனுக்குத் "துதியின் பலியை" படைக்கும் அருமையான தருணமாகும்! ஏனெனில் இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாம் தேவனைத் துதிக்கும் துதியானது* **ஓர் விலைக்கிரயம் நிறைந்ததாய்** *இருக்கிறது. இவ்வாறாகவே தேவன் நமக்கு ஜெயத்தை அளிக்கும்படி, அவருக்கு நாம் வழியை வகுத்துத்தருகிறோம்!*

### d. 'ஜெயம் அளிக்கும் துதி' நம் ஒவ்வொருவருக்கும் உள்ள சுதந்திரம் :

*சங்கீதம் 149, நாம் படுக்கையில் படுத்திருக்கும்போது (பொதுவாய் நாம் படுக்கையில்தான், படுத்துக்கொண்டு கவலை கொள்ளுகிறோம்) தேவனைத் துதிக்கும் கெம்பீரத்தினால் நிறைந்திருக்க நம்மை அழைக்கிறது! மேலும் இப்படிப்பட்ட கெம்பீரத்துதியினால், நாம் இருளின் அதிபதிகளைச் சங்கிலிகளால் கட்டவும், தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்ட அவர்களுடைய நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் பிரகடனம் செய்யவும் (சாத்தானை நம் கால்களின் கீழ் நசுக்கவும்! ரோமர் 16:20) முடியும்.* **இந்த சிலாக்கியம்** *அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் நியமிக்கப்பட்டதாகும்! (சங்கீதம் 149:9).*

*பூமியில் இன்னமும் எஞ்சியுள்ள நம் நாட்களில் எல்லா சூழ்நிலைகளுக்காகவும், எல்லா ஜனங்களுக்காகவும் துதி, ஸ்தோத்திரம் செலுத்திப்பாடும் "புதுப்பாட்டை" கற்றறிவோமாக! இதுவே நாம் தேவனைப் போற்றி கனப்படுத்துவதும், அதன் மூலமாக நம் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கும் உன்னத ஜெயமான வாழ்க்கையாகும்! ஆமென்.*



8

# குழந்தை மூலமாய் 'தாழ்மை' ஏற்றிடுவீர்!

*ஏசாயா 16- ம் அதிகாரத்தில் "இருளானது பூமியை மூடிக் கொள்ளும்..." என்ற தீர்க்கதரிசனத்தை வாசிக்கிறோம். ஆனால் இயேசு* "**நீங்கள்** *உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று சீஷர்களைப் பார்த்து கூறினார். ஆம், பூமியை மூடியிருக்கும் அந்தகார இருளின் மத்தியில்* **சீஷர்கள் அடங்கிய சபையானது, பிரகாசிக்கும் ஒளியாய்த்** *திகழ வேண்டும். ஒளிக்கு இருள் வேறுபட்டிருப்பதுபோலவே சபையின் நோக்கமானது உலகத்தின் நோக்கிற்கும் முற்றிலும் வேறுபட்டதாய் இருக்க வேண்டும். உலகம் பாவத்தில் மடிந்து வீழ்ந்து கொண்டிருக்கும் போது, சபையோ பரிசுத்தத்தில் மேலோங்கி வளர வேண்டும். பகை வளரும் இவ்வுலகில் சபையோ அன்பில் வளர வேண்டும். பெருமை உலகத்தைப் பீடித்திருக்கும் வேளையில் சபையானது தாழ்மையின் சின்னமாய்த் திகழ வேண்டும். லௌகீக மயக்கத்தால் உலகப் பொருட் களை பிரதானமாய்த் தேடும் உலகில் சபையானது ஆவிக்குரிய தேவனு டைய ராஜ்யத்தைத் தேடுவதில் முதன்மையாய் இருத்தல் வேண்டும்.*

*சிறு குழந்தைகளைப்பற்றி சபையின் நோக்கம் என்ன? இன்றைய உலகில் குழந்தைகளைக் குறித்த காரியம் கொடிய இருளாகவே இருக்கிறது. சிறு குழந்தையைப் பற்றி வேதாகமம் வெளிப்படுத்தும் மேன்மையான சத்தியம் யாது?*

**1. இயேசுவின் நாமத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டிய குழந்தைகளை இன்றைய உலகம் எதிர்க்கிறது!**

*இன்றைய உலகம் சிறு குழந்தைகளுக்கு முற்றிலும் எதிர்ப்பாகவே இருக்கிறது. கிட்டத்தட்ட உலகமெங்கும் இப்போது* "**ஒரு குழந்தை இருந்தால் போதும்**" *என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்! உலகத்தின் நோக்கு இவ்வாறு இருக்க சபையின் நோக்கோ* (Attitude of the Church) *முற்றிலும் வேறுபட்டதாய் இருக்கவேண்டும். இயேசு சொன்னார் "....... ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்" (மத்தேயு.18:5). இரண்டு கருத்துக்களை இவ்வசனத்தில் நாம் பார்க்கிறோம்.*

*ஒன்று, நாம் "சிறு குழந்தைகளை இயேசுவின் நாமத்தில் ஏற்றுக் கொள்ளவேண்டும்". இப்போது உங்களை அணுகும் கேள்வி இதுதான். நீங்கள் உங்கள் "எல்லாப்" பிள்ளைகளையும் இயேசுவின் நாமத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? அல்லது சில பிள்ளைகளை குறித்து மனமடிவாய் இருக்கிறீர்களா? அல்லது சில பிள்ளைகள் பிறவாமல் இருந்திருந்தால் நன்றாயிருக்குமே என்று எண்ணுகிறீர்களா? அப்படி யானால், இந்த உலகத்தில் காணப்படும் இருள் உங்கள் வீட்டிலும் பிரவேசித்து விட்டது!*

*ஆம், உங்கள் வீட்டில் உள்ள "ஒவ்வொரு" பிள்ளையையும் இயேசுவின் நாமத்தில் உளமுவந்து ஏற்றுக்கொள்ளுங்கள். இதுவரை அப்படி நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், அருமையான தகப்பனே! தாயே! நீங்கள் ஆண்டவர் முன்பாக இப்போதே முழங் காலிட்டு "தேவரீர்,* **என் ஒவ்வொரு பிள்ளைகளுக்காகவும் உமக்கு நன்றி!** *என் ஒவ்வொரு பிள்ளைகளையும் இயேசுவின் நாமத்தில் ஏற்றுக் கொள்கிறேன்" என்று ஜெபியுங்கள். ஒருவேளை உங்கள் பிள்ளைகளில் ஒன்று மற்றொன்றைவிட ஆரோக்கியம் குறைந்தாய் இருக்கலாம். அது ஒன்றும் உங்களுக்கு வேற்றுமைதரவே வேண்டாம். ஒருவேளை ஒரு பிள்ளை மற்றொன்றைவிட அறிவில் குறைந்தாய் இருக்கலாம். அதுவும் உங்களுக்கு எந்தவித வித்தியாசத்தையும் உருவாக்க வேண்டாம். நாம் அறிவுள்ள கெட்டிகாரப் பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றல்ல, "எல்லா" பிள்ளைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றே வேதம் இனிதாய் கூறுகின்றது.*

*இரண்டாவது, நாம் "சிறு குழந்தைகளை இயேசுவின் நாமத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, இயேசுவையே ஏற்றுகொள்கிறோம்". யோவான் 1:12-ம் வசனத்தின்படி நாம் எவ்வாறு இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிந்திருக்கிறோம். ஆனால் யோவான் 1:12ம் வசனத்தின்படி இயேசுவை ஏற்றுக்கொள்ளும் அநேக விசுவாசிகள், மத்தேயு 18:5-ன்படி இயேசுவை ஏற்றுக்கொள்ளவேயில்லை! எப்படி யெனில், இவர்கள் தங்கள் பிள்ளைகள் "ஒரே தொந்தரவு பிடித்ததுகள்" என்றே எண்ணுகிறார்கள். தேவன் பிள்ளைகளை, உங்களை ஆசீர்வதிப் பதற்கும் உங்கள் பரிசுத்தத்தில் உதவி செய்வதற்கும், உங்கள் தேசத்தில் தேவனுக்குச் சாட்சியான பரிசுத்த சந்ததியை உருவாக்குவதற்குமே கொடுத்திருக்கிறார். இவ்வாறாக உணர்ந்து தங்கள் குழந்தைகள் ஒவ்வொருவரையும் உளமாற ஏற்றுக்கொண்டவர்கள் வெகு சிலரே!*

**உ. குடும்பத்தில் முதலாவது ஜெயஜீவியம் செய்தவர்களே 'தேவனுடைய வீட்டில்' தகுதி உடையவர்கள்:**

*ஏசாயா ஓர் தீர்க்கதரிசி! அவர் மனைவியும் தீர்க்கதரிசியானவள்! இவர் சொல்லுவதைக் கவனியுங்கள், "இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்..... இஸ்ரவேலின் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" என்றார் (ஏசாயா.8:18). இப்படிச்*

*சொல்வதற்குப் பதிலாக, "நாங்கள் தீர்க்கதரிசிகள்! எனவே எங்களால் பிள்ளைகளோடு நேரத்தை வீணாக்கமுடியாது. ஊழியம் செய்ய அன்றி, வீட்டில் நேரம் செலவழிக்க எங்களால் முடியாது" என்று ஏசாயா சொல்லியிருப்பாரென்றால், இன்று உலகில் அநேகர் கண்சொருகிய குருடர்களாயிருப்பது போலவே அவரும் அதோகதி ஆகியிருப்பார்!*

*ஆனால், ஏசாயாவோ, "***நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்...** *இஸ்ரவேலின் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" என்றார். ஆம், பிரியமான சகோதர, சகோதரிகளே! இதுதான் தேவனுடைய சபையில் நம்முடைய மேன்மையான அழைப்பு. நம்முடைய இல்லமே, நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷத்திற்கு ஜீவனுள்ள சாட்சி! நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷம் நம் வீட்டில் கிரியை செய்யவில்லையென்றால், மற்றவர்களுக்கு எவ்வாறு பிரசங்கிக்க முடியும்? ஒரு சகோதரன் தன் ஜீவியத்தைக் குறித்து கூறுகையில், "எனக்கு என் வீட்டில் ஜெயம் இல்லை. ஆனால் நான் வெளியே பிரயாணமாய் சுற்றும்போது ஜெயஜீவியம் செய்கிறேன்! ஆகவே, நான் எப்போதும் வெளியே பிரயாணம் சென்று ஜெய வாழ்வைக்குறித்துப் பிரசங்கிக்க விரும்புகிறேன்!!" என்று சொன்னார். இந்த நிலை சரிதானா என்று அச்சகோதரன் ஒரு தேவமனிதரிடம் வினவினார். அதற்கு அந்த தேவமனிதன் இவ்வாறு பதில் கூறினார், " நீங்கள் செய்கிற விதமாகவே செய்யுங்கள். ஆனால் வெளியே நீங்கள் செல்லும்போது* **நேர்மையாய்** *பிரசங்கியுங்கள். அதாவது, 'எனக்கு என் வீட்டில் ஜெய ஜீவியம் இல்லை. ஆனால், வீட்டைவிட்டு வெளியே வரும் போதோ ஜெய ஜீவிய வாழ்வு வாழ்கின்றேன். என் வீட்டில் ஜெயஜீவியம் இல்லையென்றால், உங்கள் வீட்டிலும் அப்படித்தான் இருக்கும்! எனவே, நீங்கள் ஜெய ஜீவியம் செய்ய வேண்டுமென்றால் என்னைப்போலவே பல இடங்களுக்குப் பிரயாணம் செய்யும் பிரசங்கியாயராய் மாறுங்கள்' என்ற உண்மையைத் தான் சுவிசேஷமாக நீங்கள் பிரசங்கிக்க வேண்டும்" என்றார். ஆ, இது எத்தனை பரிதாப நிலை!!*

*நான் என் மனைவி, பிள்ளைகள் அடங்கிய* **குடும்பம் மிக மிக முக்கியம்**. *எனவேதான் நாம் பிள்ளைகளை இயேசுவின் நாமத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். உங்கள் குடும்பத்தை அலட்சியப்படுத்தி விட்டு, ஊழியமே மிக முக்கியம் என்று எண்ணாதீர்கள். இவ்வுலகில் எல்லாத் தொழிற்சாலைகளிலும் முதலாவது "பயிற்சி வேலை" என்று கொடுத்து விட்டுப் பின்புதான் "நிரந்தர வேலை" தருவார்கள். அது போல, தேவன் நம்மை முதலாவது நம் வீட்டிலேயே பயிற்சி அளிக்கிறார். "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" என்றே சத்தியம் கூறுகின்றது (1தீமோ.3:5). பரிசுத்தாவியானவரின் செய்தி இதுதான், "நீங்கள் தேவனுடைய வீட்டில் ஊழியம் செய்ய விரும்பினால், முதலாவது உங்கள் வீட்டில் அதிககவனம் செலுத்துங்கள்." ஆம், தேவசபையில் ஊழியம் செய்ய இதுவே தகுதி!*

*தேவன் ஆபிரகாமை அழைத்தபோது, "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்....*

பூமியிலுள்ள குடும்பங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்'' (ஆதியாகமம்.12:2-3) என்றார். **பூமியிலுள்ள குடும்பங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும்படி** அழைக்கப்பட்ட ஆபிராமைக்காட்டிலும் விசேஷ அழைப்பைப் பெற்றவர்கள் நம்மில் ஒருவரும் இல்லை. ஆனால், அதற்குரிய நிபந்தனையை ஆதியாகமம்.18:19-ல் வாசிக்கிறோம். "கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படி அவன் தன் பிள்ளை களுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும், 'நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள்' என்று கட்டளையிடுவான்.'' இந்த வசனத்தை எதிர்ப்பதமாய் சொல்வோமென்றால், "ஆபிரகாம் தன் பிள்ளைகளையும் வீட்டாரையும் குறித்துப் பொறுப்பு இல்லாமல் இருந்தால் தேவனாகிய ஆண்டவர் ஆபிராமை மற்ற குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாய் வைக்கவே முடியவே முடியாது!'' என்பது தான். காரியம் இப்படியாய் இருப்பதால், நாம் நம்முடைய குடும்பத்தைப் பற்றிய முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட தீவிரம் கொள்வோமாக!

**3.குடும்பப் பெண்கள், பிள்ளைகளைப் பராமரிப்பதே பிரதான ஊழியம்! பிரசங்கிப்பதற்கு கட்டளையிடப்படவேயில்லை!**

தன் சம்பாத்தியத்திற்கென தகப்பன் வெளியே போகும் போது, குடும்பத்தில் உள்ள ஒரு தாயின் பொறுப்பு மிக அதிகமாகிறது. இந்த இடத்தில் சபையில் உள்ள தாய்மார்கள் உலகத்திலுள்ள தாய்மார் களுக்கும் முற்றிலும் வேறுபட்டவர்களாய் இருக்க வேண்டும்.

இவ்வுலகில் இன்று அநேக தாய்மார்கள், தாங்கள் பணம், சம்பாதிப்பதற்காக, **பிள்ளைகளை அலட்சியம் செய்து விட்டு,** உத்தியோகம் பார்க்க வெளியே சென்றுவிடுகிறார்கள். சபையிலோ இந்த மனப்பான்மைக்கு முற்றிலும் மாறுபாடு காண வேண்டும். அன்பான தாய்மார்களே! உங்களின் நோக்கம் பணம் சம்பாதிப்பது அல்ல, மாறாக தேவபக்தியுள்ள பிள்ளைகளை உருவாக்குவதே!! இவ்வித ஓர் சிறந்த தாயாக தங்களின் ஊழியத்தை நிறைவேற்றும்படியே தேவன் அவர்களைக் குறித்து விரும்புகிறார். 1தீமோத்தேயு 2:12-ம் வசனத்தில், "உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயான வளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை'' என்று வாசிக்கிறோம். வசனம் தெளிவாய் இருக்கிறது. "ஸ்திரீகள் வெளியே சென்று உபதேசம் பண்ணக் கூடாது!! அப்படியிருந்தும், இன்று சில வேத வசனத்திற்குக் கீழ்படியாமல் வெளியே சென்று உபதேசம் செய்கிறார்கள். இவர்களை தேவன் ஆசீர்வதிக்க வில்லையா? நிச்சயம் ஆசீர்வதிக்கிறார்! எப்படி? தேவ வசனத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் எடுக்காமல், புராட்டஸ்டண்டு ஸ்தாபனங் களில் உள்ள ஜனங்களை ஆசீர்வதிப்பது போல! ஆம், தேவன் தன் வசனங்களுக்குக் கீழ்ப்படியாத அநேக ஜனங்களை ஆசீர்வதிக்கத்தான் செய்கின்றார். ஆனால், **அவர்களில் தேவன் பிரியமாயில்லை!** அவர்கள் தேவனின் மேன்மையான பங்கை நிச்சயம் பெறவே முடியாது!! கீழ்ப்படி யாமையில் ஜீவிக்கும் அவர்கள் நிச்சயம் "கிறிஸ்துவின் மணவாட்டி''

*ஸ்தானத்தை அடையவே முடியாது. எவ்வளவுதான் அவர்கள் தேவனைப் பற்றி உருக்கமாய் பிரசங்கித்தாலும் கிறிஸ்துவின் மணவாட்டி சுதந்திரத்தை ஒருக்காலும் பெறவே முடியாது!!*

*அப்படியென்றால், பெண்கள் வேறு என்ன செய்ய முடியும்? "…. பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" என கணீரென்று வேதம் ஒலிக்கின்றது (1 தீமோ. 2:15). ஆம்! இதுதான் அவர்களுடைய ஊழியம். வசனம் - 12 "ஸ்திரீகள் என்ன செய்ய முடியாது" என்றும் வசனம் - 15 "அவர்கள் என்ன செய்ய முடியும்" என்றும் தெளிவாய் கூறுகிறது. ஆனால் இன்று அநேகர் பிள்ளைகளைப் பராமரிப்பதை ஊழியமாய் ஏற்பதில்லை. எனவே, ஒரு பெண் பிரசங்கியைப்* (Woman preacher) *பற்றி ஒருக்காலும் மகிழ்ச்சி அடையாதீர்கள். அதற்கு மாறாக, ஒரு நல்ல குடும்பத் தாய்க்காக* (Woman of a mother) *மகிழ்ச்சி அடையுங்கள். இவ்வாறு தேவன் தங்களுக்கு நியமித்த ஊழியத்தோடு திருப்தி கொண்டு தங்களைக் கட்டுப்படுத்தின ஸ்திரீகளே, கடைசி நாளில் தங்களின் மேன்மையான பிரதிபலனைத் தங்கள் ஆண்டவரிடமிருந்து பெறுவார்கள்!*

**4. அற்புத அடையாள ஊழியம் செய்பவன் அல்ல. சிறுபிள்ளையைப் போல தன்னைத் தாழ்த்துகிறவனே பரலோகராஜ்ஜியத்தில் பெரியவன்!**

*ஒரு குழந்தையைப் பாருங்கள்! அது தனக்குத்தானே ஒன்றும் செய்துகொள்ள முடியாத நிர்க்கதியான நிலையில் உள்ளது. இங்குதான் நாம் தாழ்மைக்குரிய விளக்கத்தைப் பார்க்கிறோம். மத்தேயு 18:4-ல் இயேசு சொன்னார் "இந்த பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்". இயேசுவின் இவ்வார்த்தைகளை அப்படியே விசுவாசிக்கிறீர்களா? பூமியில் உள்ள நம் சபையிலேயே பரலோகராஜ்யம் கட்டப்படுகிறது. அப்படியெனில், சபையில் (பரலோக ராஜ்யத்தில்) பெரியவர்கள் யார்? துரதிருஷ்டமாய் இன்று உள்ள சபைகளில் யார் பெரியவர்கள் தெரியுமா? கெட்டிக்காரர்கள்!! வரம் பெற்றவர்கள்!! தங்களைப் பாஸ்டர் என்றும் அப்போஸ்தலர் என்றும் அழைத்துக்கொள்பவர்கள்!! நன்றாகப் பாடுபவர்களும், நன்றாகப் பிரசங்கிப்பவர்களும், அருமையாய் கூட்டங்கள் ஒழுங்கு செய்பவர்களும், ஆகிய இப்படிப்பட்டவர்கள் தான் இன்று சபையில் பெரியவர்கள்!! இவர்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்ற அவசியமே இல்லை..... ஆனால் இவர்கள்தான் பெரியவர்கள்! பரலோகராஜ்யத்தில் இப்படிப்பட்டவர்கள் பெரியவர்கள் என்று வேதாகமத்தில் எங்கேனும் எழுதியிருக்கிறதா? இல்லவே இல்லை. பின் எப்படி இவர்களெல்லாம் இன்றைய சபைகளில் (பரலோக ராஜ்யத்தில்) பெரியவர்கள் ஆனார்கள்? இதன் பதில் என்ன தெரியுமா? இப்படிப்பட்ட சபைகளில் தேவனுடைய ராஜ்யம் கட்டப்படவில்லை, அவ்வளவுதான்!!*

*உலகத்தின் ஆவி அப்படியே இன்றைய சபைகளில் காணப்*

படுவதால், பாஸ்டர், அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுபவர்கள் சபைகளில் பெரியவர்கள் ஆகிவிட்டனர்! அதற்கு மாறாக எந்த சபைகளில் "தேவனுடைய ராஜ்யம்" காணப்படுகிறதோ அச்சபைகளில் தங்களைத் தாங்களே **சிறு பிள்ளையைப் போல தாழ்த்துகிறவர்களே** பெரியவர்களாய் மதிக்கப்பட்டிருப்பார்கள். இன்று, வரங்களுக்கு அல்ல, தாழ்மைக்கே முக்கிய இடம் கொடுக்கிறவர்களும்..... அதிகம் தங்களைத் தாழ்த்துகிறவர்களுமே பெரியவர்களாயும் இருக்கிற சபையைப் பார்த்திருக்கிறீர்களா? பாடுவதற்கும், பிரசங்கிப்பதற்கும், வாத்தியக் கருவிகள் போடுவதற்கும் நாம் எதிராளி அல்ல. ஆனால் இப்படிப்பட்டவர்கள் தாழ்மை இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு பரலோக ராஜ்யத்தில் எந்த மதிப்பும் இல்லையே!! ஆனால் பரிதாபம், இவர்களுக்கோ இன்றைய கிறிஸ்தவ சபைகளில் நல்ல மதிப்பு இருக்கிறது!?

அதேபோல, சுகமாக்கும் ஊழியம்; அற்புத அடையாளங்களின் ஊழியம் உடையவர்கள் இன்றைய சபைகளில் பெரியவர்கள். இப்படிப் பட்டவர்கள் பரலோக ராஜ்யத்தில் பெரியவர்களாய் இருப்பார்கள் என்றும் வேதாகமத்தில் எழுதப்படவேயில்லை. அற்புத ஊழியம் செய்பவர்களே பெரியவர்கள் என்று எண்ணிய என் குருட்டுக் கண்களைத் தேவன் ஒருநாள் திறந்தார். "தேவனுடைய பார்வையில்" அற்புத ஊழியம் செய்பவர்கள் பெரியவர்கள் அல்ல! பின் எவ்வாறு இப்படிப்பட்டவர்கள் இன்றைய கிறிஸ்தவ உலகில் பெரியவர்கள் ஆனார்கள்? அதன் பதில் என்னவென்றால், இன்று ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் "மாம்சத்திற்குரியவர்களாய்" இருக்கிறார்களே அல்லாமல் **"ஆவிக்குரியவர்கள்" அல்லவே அல்ல.** நீங்கள் ஆவிக்குரியவர்களாய் இருப்பீர்க ளென்றால், நீங்களும் இயேசு சொன்னது போலவே சிறு பிள்ளையைப் போல தாழ்த்துகிறவர்களை மாத்திரமே பரலோக ராஜ்யத்தில் பெரியவர்களாய் ஏற்றுக்கொள்வீர்கள். இன்று நாம் இவ்வுலகில் கிறிஸ்துவின் சரீரமான சபையை (பரலோக ராஜ்யத்தைக்) கட்ட வேண்டுமென்றால், இவ்வாறு சிறு பிள்ளையைப் போல தாழ்த்து கிறவர்களை வைத்தே கட்ட வேண்டும்!!

### 5. 'பிறர் அபிப்ராயத்திலிருந்து விடுதலையாவதே' குழந்தைகள் கற்பிக்கும் தாழ்மையின் இரகசியம்!

சிறு பிள்ளைகளிடம் நாம் எவ்வாறு தாழ்மையைக் கற்றுக் கொள்ள முடியும்? ஒரு சிறு குழந்தையின் மனதில் (mind) எப்படிப்பட்ட சிந்தை சென்று கொண்டிருக்கும்? நாம் ஒரு கூட்டத்தில் மேடையில் உள்ள மைக்கிற்கு முன்பாக பிரசங்கிப்பதாக வைத்துக்கொள்வோம். இதைப்போலவே ஒரு சிறு குழந்தையும் இந்த மைக்கிற்கு முன்பாக வருகின்றது எனவும் வைத்துக்கொள்வோம். இப்போது இந்தப் பிள்ளை அடடா.... நான் இக்கூட்டத்தில் எனக்கு முன் அமர்ந்திருக்கும் ஜனங்களுக்கு என்னைப்பற்றி நல்ல எண்ணத்தை (good impression) உருவாக்க வேண்டுமே! என்று சிந்திக்குமா? என்னைப் பற்றி மற்றவர்கள்

என்ன பேசிக்கொள்வார்களோ? என்று "தானே" அதிசயித்துக் கொள்ளுமா? மைக்கிற்கு முன்பாக வந்துநிற்கும் அநேகருடைய சிந்தை இப்படிப்பட்டது தான். இது, "**அவர்களிடம் தாழ்மையில்லை**" என்பதையே காட்டுகிறது. இவர்கள் மனிதர்களுடைய பார்வைக்கு முன்பாகவே எப்போதும் நிற்பவர்கள்! இவர்களின் எல்லா வார்த்தைகளும் கிரியைகளும் மனிதர்களைப் பிரியப்படுத்தவே முயல்கின்றது. மேன்மையான கிரியைகளை அவர்கள் மேடையில் ஏறி நடத்தினாலும் அவையாவும் மனிதர்களைக் கவர்ச்சிப் படுத்தவே! அவர்கள் பேசி முடித்து திரும்பவும் தங்கள் ஆசனத்தில் அமர்ந்த பிறகும்கூட, "ஆஹா! நான் பேசிய சொற்பொழிவையும் என்னையும் பற்றி இப்போது மற்றவர்கள் என்ன எண்ணுவார்கள்!" என்றுதான் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்! இந்நிலையில் ஒரு சிறுபிள்ளை இருந்தால், அதன் எண்ணம் எவ்வாறு இருக்கும்? ஆம்! **மற்றவர்கள் தன்னைப்பற்றி என்ன சிந்திப்பார்கள்** என்ற சிறிதளவு கவலையும், அக்கறையும் அக்குழந்தைக்கு இருக்கவே இருக்காது! ஆ, இதுவன்றோ மற்றவர்களுடைய அபிப்பிராயத்திலிருந்து விடுபடும் பூரண விடுதலையை "தாழ்மை"யின் இரகசியம்.

அல்லது, தேவன் உங்களை எங்கேனும் உபயோகித்திருப்பா ரென்றால், உங்கள் எண்ணத்தில் என்ன சிந்தை ஓடிக் கொண்டிருக்கும்? இப்போது அதே சிந்தையை ஒரு சிறு குழந்தையின் சிந்தையோடு ஒப்பிட்டுப்பாருங்கள். இப்போது புரிந்துகொண்டீர்களா? ஆம்! நீங்கள் தாழ்மையை விட்டு எவ்வளவு ஆயிரம் மைல்களுக்கு அப்பால் விலகியிருக்கிறீர்கள்! இந்த சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ளும் எனக்கு எப்படி இவையெல்லாம் தெரியும்? எப்படியென்றால், உங்களுக்கு இருக்கும் மாம்சம் போலவே எனக்கும் இருப்பதால்தான்! என்னுடைய எண்ணங்களில் என்ன சிந்தை ஓடியது என்பதை நான் நன்கு அறிவேன்! ஆனால் இப்போது நான் சொல்லுகிறேன், "தேவன் என் மாம்சத்தில் குடியிருக்கும் மதியீனத்தை அறியும்படியாக என் கண்களைத் திறந்திருக்கிறார்". இப்போதோ நான் எனக்குள் தோன்றும் **பெருமையான சிந்தைகளைச் சோதித்து** என்னை நியாயம்தீர்க்கவே செலவிடுன்றேன். மீண்டுமாக நான் ஒரு குழந்தையாய் மாறும் உன்னத இரட்சிப்புக்காக பிரயாசப்படுகின்றேன். இயேசு அப்படித்தான் இருந்தார். அவர் ஜனங்கள் முன் நின்றபோது, ஒரு சிறு பிள்ளையைக் காட்டிலும் வேறு வித்தியாசமாய் நிற்கவேயில்லை. நாமும் இதே ஸ்தானத்திற்கு வந்து விட்டால், அந்த விடுதலையின் அனுபவம் எவ்வளவு பெரிதாய் இருக்கும்!




# பிதாவின் சித்தம் செய்வதே, கிறிஸ்துவின் சரீரத்தில் பிரதானம்!

*"நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்ற ஆச்சரியமான வசனத்தை இயேசு கூறினார் (யோவான் 14:12).*

*இன்று அநேகர் நித்தியஜீவன் பெறுவதற்கு இயேசுவை விசுவாசித்திருக்கின்றனர் (யோவான் 6:47). சிலர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுவதற்கு அவரை விசுவாசித்திருக்கின்றனர் (யோவான்.7:38). ஆனால் மூன்றாவதாக இங்கு யோவான் 14:12-ல் "அவரை விசுவாசிப்பவர்கள்" அடையக்கூடிய இரண்டு காரியத்தை இயேசு குறிப்பிடுகின்றார். 1) நாம் இயேசுசெய்த கிரியைகளையும் செய்ய முடியும்! 2)அவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்ய முடியும்!! என்ன விந்தை! இந்த சிலாக்கியம் ஏதோ பெரிய பிரசங்கிகளுக்கு அல்ல, அவரை விசுவாசிக்கிற 'ஒவ்வொருவருக்கும்' உரியது. இந்த வசனத்தை நாம் மிக சாதரணமாக எடுக்கக் கூடாது. எனவே, இயேசு செய்த கிரியைகள் என்ன என்றும், அதைவிட பெரிய கிரியைகள் என்ன என்றும் நாம் நன்கு அறிந்துகொள்வது மிக அவசியம்.*

**1. பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்ததே – இயேசு செய்த கிரியைகள்!**

*இயேசுவினுடைய கிரியைகள் என்றவுடன், அவர் மரித்தோரை உயிரோடு எழுப்பியது போன்ற அற்புதங்களைத்தான் நாம் எண்ணுகிறோம். மரித்து 4 நாட்கள் கல்லறையில் வைக்கப்பட்ட லாசருவை இயேசு உயிரோடு எழுப்பிய அற்புதத்தை எண்ணிப்பாருங்கள். சபை வரலாற்றில் இன்றுவரை, ஒருவர்கூட இப்படிப்பட்ட அற்புதத்தை செய்யவே இல்லை! இயேசுவோ செய்தார். ஆனால் இயேசு நான் செய்த "அற்புதங்களையும்" நீங்கள் செய்ய முடியும் என்று சொன்னார் என்றால், இன்றும் 4 நாட்கள் மரித்து அடக்கம் பண்ணப்பட்ட மனிதரை உயிரோடு கொண்டுவர முடியுமே! அப்படி ஏன் ஒருவர் கூட செய்யவில்லை? இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படியெனில் இயேசு செய்த கிரியைகள்தான் என்ன? அவர் தன் 33 ½ ஆண்டுகால ஜீவியத்தில் செய்த கிரியைகளை ஒரே வாக்கியத்தில் விளக்கிக் கூற முடியுமா? ஆம்,*

*"பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்ததே"* (Works of Obedience to Fathers will) *அவர் செய்த கிரியைகள்!*

*மரியாளின் கர்ப்பத்திலிருந்து வந்தது*

*பிதாவின்சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த கிரியை!*

*யோசேப்புக்கும் மரியாளுக்கும் அடங்கியிருந்தது*

*பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த கிரியை!*

*ஞானஸ்நானம் எடுத்தது*

*பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த கிரியை!*

*தண்ணீரை திராட்சரசமாய் மாற்றியது*

*பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த கிரியை!*

*மலைப்பிரசங்கம் செய்தது*

*பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த கிரியை!*

*வியாதியஸ்தரை சுகமாக்கியது*

*பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து கிரியை!*

*லாசருவை உயிரோடு எழுப்பியது*

*பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த கிரியை!*

*சிலுவையில் மரித்தது*

*பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த கிரியை!*

*எனவே, இயேசு இவ்வுலகில் ஜீவிக்கத் துவங்கிய நாட்களிலிருந்து கல்வாரி சிலுவை மரணம்வரை செய்த யாவும், பிதாவின் சித்தத்திற்குக் கீழ்படிந்த கிரியைகளே! ஆம், "பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்" என்றும் "என் பிதா சொன்னதையே அல்லாமல்,* **நான் சுயமாய் ஒன்றும் செய்வதில்லை"** *என்றும் இயேசு அடிக்கடி கூறினார் (யோவான். 14:31). இவ்வாறு இப்பூமியில்* **பிதாவின் சித்தம் செய்ததே** *இயேசு செய்த பலத்த கிரியையாகும்!*

*எனவே, நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும்போது,* **நித்தியஜீவனைப்** *பெறுகிறீர்கள்(யோவான்.6:47). இயேசுவை விசுவாசிக்கும்போது,* **பரிசுத்தாவியின் நிறைவைப்** *பெறுகிறீர்கள் (யோ.7:38). மூன்றாவதாக, நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும்போது,* **பிதாவின் சித்தத்திற்கு** *"பரிபூரணமாக"க் கீழ்ப்படியவும் செய்கிறீர்கள் (யோவான்.14:12). ஆ! இதுவன்றோ பூரண சுவிசேஷம்!! ஆனால் இன்றோ அநேகர், "தாங்கள் தேவனுடைய எல்லா கற்பனைகளுக்கும் கீழ்படிய முடியும்" என்று விசுவாசிப்பதில்லை. ஆதிமுதற்கொண்டு பிசாசு இப்படித்தான் ஜனங்களிடம், "எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிவது கடினம்! பாரமானது! அல்லது அவ்வளவு முக்கியம் இல்லை!" என்றெல்லாம் காதில் ஓதிக் கொண்டே இருக்கிறான். பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதெல்லாம் பழைய ஏற்பாட்டுக் காலம்!*

புதிய ஏற்பாட்டில் நாம் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை!? என்றுகூட எண்ணுகின்றனர். இதெல்லாம் சரியான ஏமாற்று வேலை! கிருபை யானது தேவனுடைய கற்பனைகளுக்குச் சிறந்த முறையில் கீழ்ப்படியவே உதவி செய்கிறது! பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களையும் (Law) புதிய ஏற்பாட்டுக் கிருபையையும் (Grace) கீழ்க்கண்டவாறு நாம் வித்தியாசப் படுத்தலாம். பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் நம்மை "ஓடு" என்று கட்டளையிடுகிறது, ஆனால் ஓடுவதற்கு "கால்களை"த் தரவில்லை. கிருபை சொல்லுவது என்ன? "நீ ஓட வேண்டாம் சும்மா உட்காரு" என்றா சொல்லுகிறது? இல்லவே இல்லை! மாறாக, "பறந்து செல்" என்றே அறைகூவுகின்றது! பறப்பதற்கு சிறகுகளையும் தருகின்றது!! இப்போது, எது மேன்மையானது சொல்லுங்கள்? கிருபையன்றோ! பழைய ஏற்பாடு விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்று சொல்வது "ஓடு" என்று சொல்லுவதற்கு சமம். புதிய ஏற்பாட்டுக் கிருபையோ, நீ விபச்சாரத்தை **இருதயத்திலும் கூட செய்யக்கூடாது** என்கிறது. அது நம்மை "பறக்கச் சொல்லுவதற்கு" சமம். ஆனால், பறப்பதற்குச் சிறகுகளைத் தருகிறது. இதுதான் தேவனுடைய கிருபையின் நற்செய்தி! ஒரு பறக்கும் பறவைக்கு சிறகுகள் (Wings) எவ்வளவு பாரமோ அவ்வளவுதான் தேவனுடைய கற்பனைகளும்!!

இயேசுவின் கிரியைகள் என்றவுடன் அற்புதங்கள் செய்வதை சிந்தியாதீர்கள். நாம் யாவருமே அற்புதங்கள் செய்வதற்கு மிகவும் விருப்பம் உள்ளவர்கள்தான்!!? ஆனால், அதுவல்ல.... இயேசு செய்தது போல நாமும் பிதாவின் சித்தம் செய்யக் கீழ்படியும் கிரியைக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

**உ. தேவனுடைய கற்பனைகள் பாரமானதல்ல! என்பதே உண்மை சீஷனின் சாட்சி**

யோவான் அப்போஸ்தலர் கூறிய, "அவருடைய கற்பனைகள் பாரமானவைகளல்ல" என்ற சாட்சியை நீங்களும் கூறமுடியுமா? அதாவது புதிய ஏற்பாட்டுப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து 'அதன்பின்' அவருடைய பிரமாணங்கள் பாரமானவையல்ல எனக்கூறும் சாட்சி!!

எல்லாச் சமயத்திலும் உண்மை பேசுவது எனக்குப்
பாரமானதல்ல!

என்னுடைய சத்துருக்களைச் சிநேகிப்பது
பாரமானதல்ல!

எனக்கு தீங்குசெய்த யாவரையும் மன்னிப்பது
பாரமானதல்ல!

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்வது
பாரமானதல்ல!

எந்த உலகக்காரியத்திலும் கவலையற்றிருப்பது
பாரமானதல்ல!

என்னை தாழ்த்தி யாவருக்கும் வேலைக்காரனாயிருப்பது
பாரமானதல்ல!

சபையில் தாழ்ந்த இடத்தைத் தெரிந்து கொள்வது
பாரமானதல்ல!

இவ்வாறு நாமும் சொல்லக்கூடுமென்றால், புதிய ஏற்பாட்டை நன்கு புரிந்துகொண்டவர்களாய் இருப்போம். யோவான் அப்போஸ்தலன் இந்த நிருபத்தை எழுதியபோது 95வயதாய் இருந்தார். 65 ஆண்டுகள் ஆவியில் நிறைந்து வேதவாக்கியங்களுக்கு கீழ்படிந்து ஜீவித்த உண்மைக் கிறிஸ்தவன்! இப்போது அவர் நம் மத்தியில் இருந்து சாட்சி சொல்ல வருவதாகக் கற்பனை செய்து பார்ப்போம். நரை முடியுடன் கூடிய நீண்ட தாடியுடன் அந்த 95 வயது வயோதிப யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார், "சகோதர சகோதரிகளே, நான் 65 ஆண்டுகளாக கிறிஸ்தவனாக ஜீவித்திருக்கிறேன். இப்போது நான் என் அனுபவசாட்சியை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன். இன்றுவரை தேவனுடைய பிரமாணங்கள் அல்லது கற்பனைகள் எனக்குப் பாரமானவைகளே அல்ல!" ஆ! இப்படிப்பட்ட சாட்சிகளைக் கேட்பது தான் எவ்வளவு பிரயோஜனமாயிருக்கிறது.

எங்கெல்லாம் ஜனங்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறார்களோ, அங்கெல்லாம் குழப்பம் என்பதே இல்லை. ஜனங்கள் இவ்வாறு சொல்வது வழக்கம், "உங்கள் அசெம்பிளி சிறியதாய் இருக்கும் போது குழப்பம் வராமல் இருக்கலாம். ஆனால் பெரிதானவுடன் நிச்சயம் குழப்பம் வரும்". இவ்வாறு யார் சொல்லுவார்கள்? முதலாவது பிசாசு? இரண்டாவது பிசாசு சொல்வதைக் கேட்பவர்கள்!! வேதம் அப்படிச் சொல்லவில்லையே! 1கொரி.14:33-ல் "தேவன் கலகத்திற்குத் தேவனாயிரமால், சமாதனத்திற்குத் தேவனாயிருக்கிறார்" என்றே கூறுகிறது.

நீங்கள் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவீர்களென்றால் என்ன நடக்கும்? **குழப்பம் அல்ல, சமாதானமே நிலவும்!** ஒரு உதாரணத்தைக் கவனியுங்கள். வானத்தில் உள்ள எல்லா நட்சத்திரங்களையும், கிரகங்களையும் பாருங்கள். உங்கள் சபையில் உள்ள விசுவாசிகளைவிட அவை மிக அதிகம்! ஆனால் அவைகளில் ஒன்று கூட மற்றொன்றோடு ஆகாயத்தில் மோதியதேயில்லை! ஆனால் எப்படி, கொஞ்சம் விசுவாசிகள் மட்டும் உள்ள உங்கள் அசெம்பளியில் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளுகிறார்கள்? அதன் காரணத்தை இப்போது அறிவிக்கட்டுமா? கேளுங்கள், வானத்தில் உள்ள எல்லா நட்சத்திரங்களும், கிரகங்களும் 100% தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றன. எனவேதான் ஆயிரக்கணக்கான வருடங்களாக, ஒன்று கூட மற்றொன்றோடு மோதவே இல்லை. இதைப்போலவே, உங்கள் அசெம்பளியிலும் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிபவர்கள் இருப்பார்களென்றால், ஆயிரம் வருடம் ஆனாலும் அங்கு எந்த வாக்குவாதமும் குழப்பமும் உண்டாகாது. பின் எங்கு குழப்பங்கள்? **எங்கெல்லாம் ஜனங்கள் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவில்லையோ அங்குதான் குழப்பங்கள்.** பூமியில் உள்ள எந்த ஊரிலாகிலும் கணவன் மனைவிக்குச் சண்டை இல்லாத வீடுகள் உள்ளதா? இன்னொரு தேசத்தோடு சண்டையிடாத தேசம் ஒன்று உள்ளதா? துரதிருஷ்ட

வசமாக, ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளாத கிறிஸ்தவ ஸ்தாபனங்கள்தான் உண்டா?! காரணம் என்ன? தேவனுடைய பிரமாணங்களுக்கு 100% கீழ்ப்படியமனதில்லை! அவ்வாறு கீழ்ப் படிந்தால் நிச்சயம் ஒருவருக்கொருவர் மோதல் வரவே வராது!!

**3. தேவனுடைய சித்தம் இல்லாத இலட்சியங்களும்.... அது, முழு நேர ஊழியம் செய்வதாயிருந்தாலும் கீழ்ப்படியாமையே!**

பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய் கீழ்ப்படிந்த இயேசுவின் வாழ்க்கையில் சமாதானம் நிலவியது. அவருக்கென யாதொரு இலட்சியத் தையும் அவர் தன் வாழ்வில் கொண்டிருக்கவில்லை. தேவனுக்குச் சித்தம் இல்லாத யாதேனும் இலட்சியங்கள் உங்கள் வாழ்க்கையில் இருந்தால் நிச்சயம் குழப்பம் வரும்.

இயேசுவின் சீஷனாய் வாழ்ந்திட விருப்பம்கொண்டவன், "தனக்குண்டான யாவற்றையும் வெறுத்துவிட வேண்டும்" என இயேசு கூறினார். அவ்வாறு வெறுத்துவிட வேண்டியவைகளில் எதிர்கால சுய - இலட்சியங்களும் ஒன்று! கல்லூரி மாணவர்களிடையே செய்த ஊழியத்தில், நல்ல விசுவாசிகளையும் பாழ்படுத்தும் ஒன்றைக் கண்டோம். அது தவறான திருமணம்! (Wrong Marriage). அவர்கள் முழு இருதயமான விசுவாசிகளை மணப்பதில்லை. அதன் விளைவு பயங்கர குழப்பங்கள் அவர்கள் வீட்டில் பிரவேசிக்கின்றது. அதற்கு காரணம் இவர்கள் மனந்திரும்புவதற்கு முன்பாக காதல் கொண்ட தங்கள் பழைய நண்பர்களை மறக்க முடியாததே! அதன் முடிவு, திருமணமான பின்பு இவர்கள் வாழ்வில் குழப்பம் நிரந்தர இடம் வகிக்கின்றது. ஆம், உங்கள் பழைய சிநேகித.... காதலராயிருந் தாலும் வெறுத்துவிட வேண்டும்! உங்களின் எல்லா சுயவிருப்ப நோக்கத்தையும் விட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால், நீங்கள் இயேசுவின் சீஷனாய் இருக்கவே முடியாது.

நீங்கள் இந்த உலகத்தில் உள்ள யாரோ ஒரு புகழ் பெற்ற நபரைப் போல மாற விரும்புகிறீர்கள். அந்த விருப்பத்தையும் வெறுத்துவிடுங்கள்! உங்களில் சிலர், "முழுநேர கிறிஸ்தவ ஊழியம்" செய்யவிருப்பம் உள்ளவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் இயேசுவின் சீஷனாய் இருக்க வேண்டுமென்றால், இந்த விருப்பத்தையும் வெறுத்துத்தான் ஆக வேண்டும்!! சிலர் இதைச் சரியாய்ப் புரிந்து கொள்வதில்லை. நீங்கள் சொல்லலாம், "முழுநேர ஊழியம் செல்லும் விருப்பம்" சிறந்த விருப்பம் அல்லவா? உண்மைதான், ஆனால் ஈசாக்கு சிறந்த மகனாய் இருந்தும் கூட அவனையும் கொடுத்துவிடுவதற்கு ஆபிரகாம் ஏன் கட்டளை யிடப்பட்டார்?! நீங்கள் முழுநேர ஊழியத்திற்குவர தேவன் விரும்பாத போது, நீங்கள் முழு நேர ஊழியராவீர்களென்றால், அது உங்கள் கீழ்ப்படியாமையே! இன்று இந்தியாவில் அநேகர் இப்படிப்பட்ட கீழ்ப் படியாமையில் ஜீவித்துக் கொண்டிருக்கின்றனர்! என்ன பரிதாபம்!! தேவன் அவர்களை அழைக்கவே இல்லை! ஒன்று, அவர்கள் தாய்

அவர்களை ஊழியப்பிரதிஷ்டை செய்திருப்பார்கள். அல்லது யாரேனும் தீர்க்கதரிசனம் சொல்லி இருப்பார்கள். அல்லது எந்த வேலையும் இல்லாது இருந்திருப்பார்கள். இப்படிப்பட்ட கீழ்ப்படியாமை "பெந்தெகொஸ்தே சபைகளிலும்" மிக அதிகமாய் நிறைந்து காணப்படுகின்றது. பின்பு இவர்கள் அதிகமான சரீர, பணப் பிரச்சனைக்குள் சிக்கி வீழ்கின்றனர். நாம் தேவன் கட்டளையிட்ட எல்லா கற்பனைகளுக்கும் கீழ்படிய வேண்டுமென்றால், நம் சுயவிருப்ப நோக்கங்களையும், சுய சித்தத்தையும் முற்றிலுமாய் விட வேண்டும். "தேவனே! இந்த உலகில் எனக்கென்று எந்த சுய - விருப்ப நோக்கங்களும் இலட்சியங்களும் இல்லை" என்று உங்களால் ஜெபிக்க முடியுமா? இதைப் பிரங்கிக்கும் நான் இதைச் செய்கிறேன், "தேவனே, இந்த உலகில் எனக்கென்று விருப்பமான ஏதும் வேண்டாம். புகழையோ, பணத்தையோ அல்லது மதிப்பையோ நான் விரும்பவில்லை. நான் முழுநேர ஊழியம் செய்யாமல் விட்டுவிட்டு ஏதேனும் வேலைக்குச் செல்லச் சொல்லுவீரென்றால், அதை நான் செய்வேன். எனக்கென்று விசேஷத் தெரிந்து கொள்ளுதல் (Choice) இல்லை. நீர் என் குரலை எடுத்துக் கொண்டு அதனிமித்தம் நான் பேச முடியாமல் போகுமென்றால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன். என்னுடைய சந்தோஷம் பிரசங்கிப்பதில் இல்லை. என்னுடைய சந்தோஷம் முழுவதும் உம்முடைய சித்தம் செய்வதிலேயே உள்ளது!" ஆம், இதுவே என் உள்ளம் நிறைந்த ஜெபம்!!

**4. பிதாவின் சித்தம் செய்யத் தன்சரீரத்தை 100% பரிசுத்தாவியானவருக்கு ஜீவபலியாய் படைப்பதே இயேசு செய்த கிரியைகள்!**

நமக்கு ஒரு சரீரத்தை தேவன் ஏன் கொடுத்திருக்கின்றார்? 55 ஆண்டுகளுக்கு முன்பு தேவன் எனக்கு **ஓர் சரீரத்தைக் கொடுத்தார்.** எதற்காக கொடுத்தார் என்று நான் பல ஆண்டுகள் அறியாதிருந்தேன். நான் என்னில் மகிழ்ந்திருக்கும்படி ஓர் சரீரம் கொடுத்தார் என்று எண்ணியிருந்தேன். பின் அநேக ஆண்டுகளாக, நான் தேவனுக்கு ஏதேனும் பணிபுரிவதற்காக ஓர் சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் எண்ணினேன். பின் எபிரெயர் 10-ம் அதிகாரத்தில், இயேசுவிற்கு எதற்காக ஒரு சரீரம் கொடுக்கப்பட்டதோ, அதே காரணத்திற்காகவே எனக்கும் ஒரு சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை தேவ வசனத்தின் வெளிச்சத்தில் அறிந்து கொண்டேன். எபிரெயர் 10:5-ல் "அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது, பலியையும் காணிக்கையையும் நீர் விரும்ப வில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" என்று வாசிக்கிறோம். **ஆம், தேவனுக்கு உங்கள் காணிக்கையில் விருப்பம் இல்லை!** எந்தப் பிரசங்கியாவது இவ்வாறு பிரசங்கிக்கக் கேட்டிருக்கிறீர்களா? உங்கள் பலியிலும் (தியாகத்திலும்) அவருக்கு விருப்பம் இல்லை. நீங்கள் தியாகம் செய்து (பலி) வேலையை விட்டுவிட்டு, காடுகளில் வசிக்கச் செல்லுகின்றீர்கள், பின் உங்கள் ஜெப விண்ணப்ப அறிக்கையும் (Prayer letter) அனுப்புகிறீர்கள்! தேவன் உங்களின் "இதை"யெல்லாம் விரும்பவேயில்லை. பின் வேறு என்ன?

“ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்” இயேசுவுக்குத் தேவன் ஒரு சரீரத்தை ஏன் கொடுத்தார்? வசனம் 7 அதற்குப் பதிலளிக்கிறது, “தேவனே உம்முடைய சித்தம்செய்ய, இதோ வருகிறேன்.” பார்த்தீர்களா, எதற்காக தேவன் ஒரு சரீரத்தை எனக்குக் கொடுத்தார்? மலைக்காடுகளில் தியாகம் செய்து ஜீவிக்க அல்ல, பிரசங்கிக்க அல்ல, இங்கும் அங்கும் ஓடி ஆடிப் பிரயாணம் செய்யவும் அல்ல! மாறாக, தேவனுடைய சித்தம் செய்யவே எனக்கு ஓர் சரீரம் கொடுத்தார். ஆம், “தேவசித்தத்திற்கு உட்பட்டு” என்னை தேவன் காட்டிற்கு செல்லும்படி சொன்னால் செல்லுவேன்! “தேவ சித்தத்திற்கு உட்பட்டு” என் ஜீவனை இரத்த சாட்சியாய் கொடுக்க வேண்டுமென்றால் அவ்வாறு கொடுப்பேன்!!

இன்று அநேகர் அதிகமான காணிக்கைகளைத் தேவனுக்குத் தருகின்றனர். “ஆனால்” நீங்கள் உங்கள் சரீரத்தை ஜீவபலியாய் ஒப்புக்கொடாத பட்சத்தில், நீங்கள் காணிக்கைப் பெட்டியில் போடும் எவ்வளவு பெரிய தொகைக்கும் பரலோகத்தில் ஒரு பலனும் இல்லவே இல்லை! நீங்கள் ஏராளமாய் காணிக்கை கொடுத்ததால் உங்கள் பாஸ்டர் ஒருவேளை உங்களை வீட்டில் சந்தித்து உங்களைப் புகழலாம்! பரலோகத்திலோ நிச்சயம் பலன் இல்லை!! ஏனெனில் **தேவன் தன் சித்தத்தைச் செய்து முடிக்க உங்கள் சரீரத்தையே விரும்புகிறார்.** உங்கள் கண்களின் இச்சையையும், நாவினால் முறுமுறுத்து சத்தமிடும் பாவத்தையும் நீங்கள் 100 ரூபாய் நோட்டை காணிக்கைப் பெட்டியில் போடுவதால் மறைத்துவிடவே முடியாது. உங்கள் 100ரூபாய் நோட்டுக்களைத் தேவன் குப்பைத் தொட்டியில் எறிந்துவிடுவார்! “முதலில்” உங்கள் சரீரத்தைக் கொடுங்கள். இதுதான் புதிய ஏற்பாட்டின் போதனை! பழைய ஏற்பாட்டில்தான் ஜனங்கள் 10% தசமபாகத்தை வாராவாராம் சரியாகக் கொண்டுவருகின்றார்களா என்று பார்ப்பார்கள். எல்லோருடைய சம்பளத்தையும் கணக்குப் பார்த்து, தசமபாகம் குறைவாய் இருந்தால் உடனே தசம பாகத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்து விடுவார்கள். ஆம், இன்றும் அநேக பழைய ஏற்பாட்டுச் சபைகள் நம்மிடையே இருக்கின்றன! புதிய ஏற்பாட்டின் சபையிலோ, பிதாவின் சித்தம் செய்திட உங்கள் சரீரத்தை அர்ப்பணியுங்கள் என்பதே பிரதான அழைப்பு!

ஒரு சகோதரன் தான் தேவனைச் சேவித்த விதம் இன்னமும் பெலன் உள்ளதாய் இல்லையே என்று அங்கலாய்த்தார். அந்தச் சகோதரன் ஓர் விசுவாசி. வல்லமையான சாட்சியும் சொல்லுவார். ஆனால் அவரோ பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படவில்லை. தான் ஆவியினால் நிரப்பப்பட அவர் விரும்பினார். ஒரு சமயம் ஒரு பிரசங்கி “உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்” என்று ரோமர் 12:1 வசனத்தைப் பிரசங்கித்ததைக் கேட்டார். மேலும் அந்தப் பிரசங்கி கூறினார், “பிதாவானவர் குமாரனையும், பரிசுத்தாவியானவரையும் அனுப்பி யிருக்கிறார். பிதாவுக்கு உங்கள் சரீரம் தேவையில்லை, ஏனெனில் அவர்

பரலோகத்தில் இருக்கிறார். குமாரனுக்கும் உங்கள் சரீரம் வேண்டாம். ஏனெனில், ஏற்கனவே அவருக்கு ஒரு சரீரம் கொடுக்கப்பட்டது. பின் யாருக்கு உங்கள் சரீரம் தேவை? பரிசுத்தாவியானவருக்கே உங்கள் சரீரத்தை ஜீவபலியாக அவருக்கு ஒப்புக்கொடுங்கள்" என்று பிரசங்கித்தார். மேலும் தொடர்ந்து பேசுகையில் "பழைய ஏற்பாட்டில் பலியானது எவ்வாறு படைக்கப்பட்டது? நாம் லேவியராகமத்தில் சர்வாங்க தகன பலியைப் பற்றி பார்க்கிறோம். காளையைக் கொண்டு வருபவன், அதை **முழுவதும் வெட்டி பலிபீடத்தில் வைப்பான்.** அவன் தனக்கென்று காளையின் தொடையையோ, வேறு உறுப்பையோ எடுத்துக் கொள்ளாமல் முழுவதையும் பலிபீடத்தில் வைப்பான். பின்பு அக்கினி யானது அந்தப் பலியை சுட்டெரிக்கும்! **இவ்வாறே, நாமும் நம் முழு சரீரத்தையும் படைக்க வேண்டும்**" என அப்பிரசங்கி வலியுறுத்திப் பிரசங்கித்தார்.

இந்தச் சகோதரன் இச்செய்தியைக் கேட்டார். அன்றிரவு தன் அறைக்குத் திரும்பினார். தன் சரீரத்தைத் தரையில் முகம் குப்புறப் படுத்து வீழ்த்தி, "தேவனே இப்போது இதுதான் என் பலிபீடம். பழைய ஏற்பாட்டில் பலி செலுத்தப்படும் காளையைப்போல என்னை நான் வீழ்த்தியிருக்கிறேன். என் தலை முதல் கால் வரை என்னையே உமக்குத் தருகின்றேன். இது நாள் வரை உம்மை நான் வேலைக்காரனாக பாவித்தேன். என் இஷ்டப்படி நான் சொல்லுகிற இடமெல்லாம் அங்கு வந்து என்னை ஆசீர்வதிக்கும்படி கூறினேன். இப்போது அதைக்குறித்து நான் துக்கமடைகின்றேன். 'இன்றிலிருந்து' நான் உம்முடைய வேலை யாளாய் இருக்க விரும்புகின்றேன்." இப்போது நீர் என்னை எங்கு போகச் சொல்லுகிறீரோ அங்கு நான் போவேன். இப்போது என்னை உம் சமூகத்தில் ஜீவபலியாய் வீழ்த்தியிருக்கிறேன். என் கண்கள் இனி உம்முடையவைகள். நீர் அதை குருடாக்க விரும்பினாலும் குருடாக்கலாம்! என் கரங்கள், என் சரீரம் யாவும் உம்முடையவைகள். நீர் என்னை நாகரீகமற்ற பின்தங்கிய ஒரு இடத்திற்கு அனுப்ப விரும்பினால், என் சரீரம் அங்கு செல்லும்!! என் சரீரத்தை என் சொந்த ஊரிலேயே வைத்திருக்க நீர் விரும்பினாலும், அது உம்முடைய இஷ்டம். என் சரீரத்தை வியாதிப் படுக்கையாக்கினாலும், அது உம் விருப்பம்!! தேவனே, என் முழு சரீரத்தையும் பூரணமாய் உம்மிடம் கையளித்து ஒப்புக் கொடுக்கின்றேன்" என்று ஜெபித்தார். என்ன நடந்தது தெரியுமா? அவர் பரிசுத்தா வியினால் நிரப்பப்பட்டார்! அவரது முழு ஜீவியத்திலும் அன்றிலிருந்து பூரணமாற்றம் ஏற்பட்டது! ஆனால் இந்நாட்களில், பரிசுத்தாவி யானவரின் நிறைவை ஜனங்கள் தேடும்போது இவ்விதமாய்த் தங்களை முழுவதும் ஒப்புக்கொடுப்பதில்லை. உங்கள் "நாக்கை" ஒப்புக் கொடுங்கள் என்று போதிக்கப்படுகின்றனர். இது சரியான ஏமாற்று வேலை! ஏதோ "போலியான அனுபவத்தைப்" பெறும்படியாகப் போதிக்கப்படுகின்றனர். ஆனால் இயேசு சொன்னதுபோல், உங்கள் இருதயத்திலிருந்து ஜீவநதி புரண்டோட வேண்டுமென்றால், உங்கள்

**முழு சரீரத்தையும்** ஒப்புக்கொடுக்க வேண்டும்!!

*நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள் என இயேசு கூறியதின் பொருள் இதுதான்! அவர் தன் சரீரத்தில் பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்படிந்தது போல நாமும் கீழ்ப்படிய முடியும்!*

### 5. பிதாவும் குமாரனும் ஒன்றாயிருந்ததுபோல. ஐக்கியமாய் கட்டப்படும் "கிறிஸ்துவின் சரீரமே" இயேசுவைப் பார்க்கிலும் செய்கின்ற பெரிய கிரியைகள்

*"மெய்யாகவே.... நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்றும் இயேசு கூறினார் (யோ. 14:12).*

*அநேக ஆண்டுகளாக, இயேசு செய்த கிரியைகளைப் பார்க்கிலும் நான் செய்யக்கூடிய பெரிய கிரியைகள் என்ன என்று அறியாமலேயே இருந்தேன். ஆனால் இப்போதோ அதைக்குறித்த வெளிச்சத்தை ஆவியானவர் இன்று அநேகருக்கு வெளிப்படுத்தி வருகிறார். பூமியில் இருந்தபோது, இயேசுவால் செய்யமுடியாத கிரியைகள் என்ன? அவரால் செய்யமுடியாத கிரியைகளும் இருந்ததா? ஆம், கவனியுங்கள்! இயேசுவால் இரண்டு சீஷர்களைக் கூட வாக்குவாதமும், சண்டையும், இல்லாமல் 'ஒன்றாய்' இருக்கச்செய்ய முடியவில்லை. எல்லா 11 சீஷர்களும் (ஒருவன் காட்டிக் கொடுத்தான்!) ஒருவரோடொருவர் சண்டைதான் போட்டனர். இன்றைக்கு இருக்கிற அநேக அசெம்பிளியின் நிலையும் அப்படித்தான் இருக்கிறது. பரிசுத்தாவியானவர் வருவதற்கு முன்பு, ஆரம்ப சீஷர்களிடம் காணப்பட்ட நிலைமை இது. இவர்களை ஒன்றாக்க இயேசுவிற்கு வல்லமை இல்லை என்று பொருள் அல்ல. பின் என்ன காரணம்? பரிசுத்தாவியானவர் இன்னமும் ஊற்றப்பட்டு, சீஷர்களுக்குள் வாசமாயிராததே அதன் காரணம்! இயேசு அப்படித்தான் சொன்னார், "நான் போய் பரிசுத்தாவியானவரை அனுப்புவேன்... பின்பு, நீங்கள் பெரிய கிரியைகளைச் செய்வீர்கள்." நீங்கள் அப்போது பெலன் கொண்டு* **"ஐக்கியமான" ஒரு சபையைக் கட்டுவீர்கள்!** *இது தான், இயேசுவைக் காட்டிலும் நாம் செய்கின்ற பெரிய கிரியை!*

*இப்படிப்பட்ட "ஒன்றாய்" இருக்கும் ஐக்கியத்தின் கிரியை உங்கள் அசெம்பளியில் கிரியை செய்து கொண்டிருக்கிறதா? "ஆமாம்" என்று சீக்கிரம் லேசாகச் சொல்லிவிடாதீர்கள். பரிதாபம் என்னவென்றால், இன்றைக்கும், அப்படிப்பட்ட "ஒன்றாய்" இயங்கும் சபையைக் காணுவது மிக அரிதாகவே இருக்கின்றது. மூப்பர்கள் (Elders) சண்டையிடாத சபை உண்டோ? பணத்திற்காக சண்டையிடாத சபை உள்ளதா? அல்லது தங்கள் பதவிக்காகச் சண்டையிடாமல் இருக்கிறார்களா? ஒரு பிரசங்கியை விடத் தான் நன்றாகப் பிரசங்கம் பண்ணமுடியும் என்று தங்களை வெளிப்படுத்தாமல் இருக்கிறார்களா? இல்லை! இது போன்ற அருவருப்புகள் இல்லாத ஒரு சபையைக் காண்பது மிகவும் அரிதாயிருக்கிறது. ஆனால் தேவனுடைய சித்தமோ, பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பது*

போன்ற “ஐக்கியத்தை” (Fellowship) நாம் கட்டவேண்டும் என்பதே!

யோவான் 17:21-ல் “பிதாவே..... நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்” என்று இயேசு ஜெபித்தார். இந்த ‘ஒன்றா யிருக்கும் ஐக்கியம்’ எங்கு ஏற்பட வேண்டும்? சிலர் இப்படிப்பட்ட ஐக்கியம் பரலோகத்தில்தான் ஏற்படும் என்று சொல்லுவார்கள்!? ஆனால், இயேசு இந்த வசனத்தில் குறிப்பிடும் வார்த்தையை கவனியுங்கள். “பிதாவே, நீர் என்னை அனுப்பினதை “உலகம்” விசுவாசிப்பதற்காக....” என்று ஜெபித்தார். எனவே இவ்வசனத்தின்படி இந்த ஐக்கியம் இவ்வுலகிலேயே நடைபெறுகின்ற ஒன்றாகும். **இந்த உலகிலேயே “ஒன்றாயிருக்கும்” விசுவாசிகளின் குழு** இருக்க வேண்டும். இதுதான் யோவான் 14:12-ல் சொல்லப்பட்ட “பெரிய கிரியை” ஆகும்!! ஆக, மொத்தத்தில் யோவான்.14:12-ல் இரண்டு காரியங்கள் விவரிக்கப் பட்டுள்ளன. (1)**நம் சரீரத்தில்** நிறைவேற வேண்டிய கீழ்ப்படிதலின் கிரியைகள் (2)**கிறிஸ்துவின் சரீரமான** சபையாக தேவன் நம்மைக் கொண்டு கட்ட விரும்பும் ஐக்கியம்!

இவ்வசனத்தில் இரண்டு சரீரங்கள் குறிப்பிடப்படுகின்றன. முதலாவது நம் சுய சித்தத்தை வெறுத்து தேவ சித்தத்தை நிறைவேற்றும் நம்முடைய சரீரம்! இரண்டாவது, இவ்வாறு “சுய சித்தத்திற்கு மரிக்கும்” இரண்டுபேர் ஒன்றுகூடி அதினிமித்தம் உருவாகும் கிறிஸ்துவின் ஒரே சரீரம் (One Body Of Christ)!! இப்படிப்பட்டவர்களே பாதாளத்தின் வாசல்களும் மேற்கொள்ளாத வல்லமையோடு விளங்குவார்கள். இதற்கு இரண்டு பேர் போதும். இரண்டு பேர் 3,4,10.... என்று பெருகுவார்கள். இப்படித்தான் கிறிஸ்துவின் சரீரம் (சபை) உருவாகிக் கட்டப்படுகிறது. இந்தக் கிறிஸ்துவின் சரீரத்தில் சண்டையிருப்ப தேயில்லை. உதாரணமாக நம் சரீரத்தில் இரண்டு கைகளை எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனை ஆண்டுகளானலும் இந்தச் சரீரத்தில் உள்ள கைகள் ஒன்றோடொன்று சண்டையிடுவதேயில்லை! உங்கள் ஒரு கால், இன்னொரு காலை ஒருபோதும் விரோதித்து ‘எத்துவதே’ இல்லை! இதை உங்களால் நம்பமுடிகிறது அல்லவா! இவ்விதமாய் ஒரே சரீரமாய் இயங்கும் விசுவாசிகளைக் கண்டிருக்கிறீர்களா? அதுவன்றோ இயேசுவைப் பார்க்கிலும் செய்கின்ற பெரிய கிரியைகள்!

### 6. கிறிஸ்துவின் சரீரமாய் கட்டப்படும் கிரியையின் இரகசியம் “சிலுவையே!”

இந்த மேன்மையான கிறிஸ்துவின் சரீரம் இன்று அநேக இடங்களில் உருவாகாததின் காரணம் என்ன? காரணம் என்ன வென்றால், ஜனங்கள் தங்கள் வாழ்க்கையில் “சிலுவையைச்” சரியாய் புரிந்துகொள்ளாததேயாகும். இவர்கள் இன்னமும் சுயத்திற்கு மரிக்கும் அனுபவத்திற்குள் பூரணமாய் கடந்து வரவில்லை. ஆம், இந்த இடுக்கமான பாதை வழியாகத்தான் கிறிஸ்துவின் சரீரம் உருவாக வேண்டும்!

இயேசு தன் சபைக்கு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்,

மேய்ப்பர், போதகர்களை கொடுத்திருக்கிறார் என்று வாசிக்கிறோம் (எபே 4:11-13). ஆனால், அதன் நோக்கத்தை (Purpose) வசனம் 12-ல் தெளிவாக வாசிக்கிறோம், "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு... **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது** பக்திவிருத்தி அடைவதற்கு" தேவன் இந்த ஐந்துவித ஊழியங்களை கொடுத்திருக்கிறார். எனவே, உங்கள் சபைகளில் மேற்கூறிய 5-வித ஊழியர்கள் இருக்கிறார்களா என்று எப்படி அறிந்து கொள்ளலாம்? மிக எளிது! உங்கள் இடத்தில் கிறிஸ்துவின் சரீரம் கட்டப்பட்டிருக்கிறதா, இல்லையா? இதுதான் பரிசோதனை. ஒரு இடத்தில் கொத்தனார், தச்சு ஆசாரி ஆகியோர் இருக்கின்றார்களா? என்று எப்படி அறியலாம்? கட்டிடத்தைப் பாருங்கள்! அது ஒழுங்காய் கட்டப்பட்டு வருமென்றால், அதுதான் அவர்கள் இருப்பதற்குச் சிறந்த நிரூபணம். கிறிஸ்துவின் சரீரமாய் கட்டப்பட்ட ஒரு அசெம்பிளியில், சண்டையோ, வாக்குவாதமோ கொஞ்சங்கூட இல்லாதிருக்குமென்றால், அங்கு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் இருக்கிறார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். இப்படி உள்ளவர்கள் ஒருபோதும் வெளியே சென்று தங்களை 'அப்போஸ்தலர்' என்று சொல்லிக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறு தங்களை அழைத்துச் சொல்லி கொள்வதெல்லாம் சுயமகிமை தேடுவதற்கே ஆகும்!

இதற்கு மாறாக, ஒரு அசெம்பிளியில் சண்டை, ஒருவருக்கொருவர் புறங்கூறுதல், பதவிப்போட்டி அங்குள்ள பாஸ்டர் அதிகப் பண ஆசையோடு இருப்பது போன்ற காரியங்களைப் பார்ப்பீர்களென்றால், அவர்கள் நிச்சயம் கிறிஸ்துவின் சரீரம் அல்லவே அல்ல! இவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தை எப்படி கட்டுவதென்று ஏன் அறிந்து கொள்ள வில்லை? ஏனெனில் இவர்கள் எபேசியர் 4-ம் அதிகாரத்திற்கு போவதற்கு முன் எபேசியர் 2-ம் அதிகாரத்தை கவனமாய் வாசிக்காததினால் தான். எபேசியர் 2 என்ன சொல்லுகிறது? இயேசு, "பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே **சரீரமாகத்** தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" (வசனம் 16). ஆம், சிலுவையினாலேயே கிறிஸ்துவின் சரீரம் ஒன்றாய் கட்டப்பட முடியும்!!

**7. ஜாதியின் அடிப்படையில், மொழியின் அடிப்படையில் கூடிவரும் சபை கிறிஸ்துவின் சரீரமான சபையே அல்ல!**

உங்கள் சபையில் 'நாடார்' ஜாதி ஜனங்கள் மாத்திரமே நிறைந்திருந்தால், அது கிறிஸ்துவின் சரீரமான சபையே அல்ல. உங்கள் சபையில் வேறு ஏதோ ஒரு தனி ஜாதி மாத்திரமே நிறைந்து காணப் பட்டால், அது கிறிஸ்துவின் சரீரமே அல்ல! உங்கள் சபையில் தமிழர்கள், மலையாளிகள், ஆங்கிலோ இந்தியர்கள் போன்றவர்கள் இருந்து, அவர்கள், ஒருவரையொருவர் நேசித்து அன்புகூர முடியவில்லையென்றால், அதுவும் கிறிஸ்துவின்சரீரமே அல்ல. அங்கு ஒரு அப்போஸ்தலரே இருந்தாலும்,

அவர் ஒரு பொய் அப்போஸ்தலர்தான்!

கிறிஸ்துவின்சரீரத்தில், எல்லாப் பிரிவினைக்கும் காரணமான பகையாகிய நடுச்சுவர், தகர்த்தெறியப்படும். இந்தியாவில் கிட்டத்தட்ட எல்லா ஸ்தாபனத்தினுடைய சபைகளிலும், மிகப்பெரிய பணக்காரனோ அல்லது கௌரவமான உத்தியோகஸ்தனோ இருந்தால், நிச்சயமாக அவர்கள்தான் “போர்டு” மெம்பராகியிருப்பார்கள். எப்படி ஆனார்கள்? பணம் (money)!! அதுவும் கிறிஸ்துவினுடைய சபையே அல்ல! அது பாபிலோன்! இயேசுகிறிஸ்துவினுடைய சபையில் அவர்கள் பணத்தைக் குறித்தோ, உத்தியோகத்தைக் குறித்தோ, அக்கறை கொள்ளமாட்டார்கள். பின் ஏன் இந்தப் பாஸ்டர்கள் இப்படிப்பட்டவர்களை மூப்பர்கள் (Elders) ஆக்க விரும்புகின்றார்கள்? ஏனெனில் அவர்களுடைய “பணத்தை” இவர்கள் விரும்புகின்றார்கள், அவ்வளவு தான்! இதெல்லாம் சரியான ஏமாற்று வேலை!!

**8. பணம், பதவி உடையவர்கள் இடறல் அடைந்தாலும் சத்தியத்தைச் சொல்லும் தேவ ஊழியர்களை வைத்தே, கிறிஸ்துவின் சரீரமான சபையைக் கட்டுகின்றார்!**

ஒருதடவை இயேசுவினிடத்தில், பணக்காரன் ஒருவன் வந்தான். இயேசு அவனிடத்தில், நீ இன்னமும் ஒன்றை செய்யாதிருக்கிறாய் என்றார். நீ முதலில் சென்று உன் எல்லாவற்றையும் விற்று, விட்டுவிட்டு, என்னைப் பின்பற்றிவா என்றார். “உன் பணத்தை அசெம்பிளிக்கு கொடு” என்று இயேசு சொல்லவில்லை. ஏழைகளுக்குக் கொடு என்றார்! அவர் அவனை, உன் எல்லாவற்றையும் விற்று ஜெப வீட்டிற்கு (Faith Home) கொடுத்துவிட்டு எங்களைச் சேர்ந்துகொள் என்றும் சொல்லவில்லை!! ஆம், ஏழைகளுக்கு உன் பணத்தை கொடு..... எனக்கு உன் பணம் தேவையில்லை. நீயோ என்னைப் பின்பற்று! ஆனால், வேதம் சொல்லுகிறது, அவன் துக்கத்தோடு திரும்பிச் சென்றான். உடனே இயேசு அவன் பின்னே ஓடி, “வா வா, இதைக் குறித்து மறுபடியும் பேசுவோம்..... முதலாவது நீ 10% கொடுப்பதில் இருந்து ஆரம்பிக்கலாம்” என்று பசப்பான வார்த்தைகளைக் கூறவேயில்லை. இயேசு தன் உத்தமத்தில் அவ்வளவு தரமுள்ள மனிதர்!

இப்படிப்பட்ட உத்தமத்தோடு எந்தப் பணக்காரனையும் சந்திக்கும் பாஸ்டர், தேவ ஊழியர்களைக் காண நம் கண்கள் ஏங்குகின்றன. இயேசுவைப் போலவே உயர்ந்த உத்தம தரத்தோடு, “உன் பணத்தைக் குறித்து எனக்கு அக்கறையில்லை. நானோ வானத்தையும் பூமியையும் உடைய சர்வவல்ல தேவனின் ஊழியக்காரன். உன்னுடைய நயா பைசா எனக்குத் தேவையில்லை”என்று நிமிர்ந்து பேசும் ஊழியர்கள் தேவை! ஆ, அப்படிப்பட்ட தேவ ஊழியர்களை தேவன் கண்டு கொண்டால் நிச்சயமாக இத்தேசத்தில் **தன் கிறிஸ்துவின் சரீரமான சபையைக் கட்டுவார்!!** எவ்வளவு பெரிய கமிஷனரோ, வியாபாரியோ, யாராயிருந்தாலும் அவர்கள் இடறுதல் அடைந்து திரும்பிப்போவதைக் குறித்து

அக்கறையில்லாமல் சத்தியத்தை மனதாரப் பேசும் ஊழியர்களே நம் நாட்டிற்கு இன்றைய அவசரத்தேவை!!

நாங்கள் கிறிஸ்துவின் சரீரமாய் கூடிவரும் ஸ்தலத்திற்கு, பணம் படைத்தவர்கள் தங்களுக்கு நல்ல மதிப்பும், பதவியும் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு வருவதுண்டு! நாங்களோ அவர்களை மற்றவர்களைப் போலவே சாதாரணமாய் நடத்துகின்றோம். "உடனே" அவர்கள் இடறல் அடைகின்றனர்! நாங்களும் அவர்களுக்கு "குட்-பை" சொல்லி அனுப்பி விடுகின்றோம். **இப்படிப்பட்ட இவர்களுக்கு மற்ற "ஸ்தாபனங்களில்" (Denomination) நல்ல இடம் உண்டு. இங்கோ, நாங்கள் கிறிஸ்துவின் சரீரமான சபையைக் கட்டுகின்றோம்.** இங்கு பணத்திற்கோ உயர் வேலைக்கோ மதிப்பே இல்லை! ஆனால், நீங்கள் தேவனுக்கு பயந்து ஜீவிக்கும் சகோதரரா, அப்படியானால் வாரும் சகோதரா! எங்களிடம் சேர்ந்து ஐக்கியம் கொள்ளுங்கள்!! நாம் இவ்வாறுதான் தேவனுடைய வழியில் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்ட முடியும்.

இயேசு, "உங்களில் இரண்டு பேர்.... பூமியில் ஒரு மனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதா அவர்களுக்குச் செவி கொடுப்பார்" என்றார் (மத். 18:19). 5000-ம் பேர் என்று சொல்லவில்லை. 2-பேர்! ஆனால், இவர்கள் "ஒரு மனதாய்" இருத்தல் வேண்டும்!! இன்று அநேகர், 10000-ம் பேர் ஓர் இடத்தில் முழு இரவு ஜெபத்திற்கு கூடி ஜெபித்தால் தேவன் கேட்பார் என்று எண்ணுகிறார்கள். வேதத்தில் அப்படி ஏதும் ஆதாரம் இல்லையே! இவையெல்லாம் அரசியல் கட்சிகளின் "ஐடியா." இயேசு என்ன சொன்னார்? **2-பேர்! ஒருமனம்!! (ஒரே ஸ்தாபனம் அல்ல!). இருவர் சிலுவையின் மூலமாக ஒன்றாகின்றனர்.** நீங்கள் உங்கள் சுயத்திற்கு மரிக்க ஆயத்தமாயிருக்கிறீர்கள்.... நானும் என் சுயத்திற்கு மரிக்க ஆயத்தமாயிருக்கின்றேன். இப்போது நாம் இருவரும் ஒன்றாகி விடலாம். "இவர்கள்" என்ன கேட்கிறார்களோ அதைப் பரலோகம் அங்கீகரிக்கும்! அசுத்த ஆவியைக் கட்டினால் அது கட்டப்படும்!! அவர்கள் கட்டவிழ்ப்பது கட்டவிழ்ந்துவிடும்!! இதற்கு அதிக எண்ணிக்கை நபர் தேவையில்லை. ஐக்கியமாய் இருக்கும் குறைந்தது இரண்டு பேர் போதும்! அதுதான் இயேசுகிறிஸ்துவின், பாதாளத்தின் வாசல்களும் மேற்கொள்ளாத சரீரமான சபை!! ஆமென்.




# ‘முத்துக்குவியல்’ உங்கள் வாழ்வில் நூறுபங்கு பலன் தரும்!

இதுகாறும் நீங்கள் “முத்துக்குவியலின்” சத்தியங்களை தேவ வசன ஆதாரத்தோடு வாசித்து, அறிந்து கொண்டீர்கள். இயேசு குறிப்பிட்ட உவமானத்திற்கு ஒப்பாய், இச்சத்தியங்கள் யாவும் “விதை விதைத்ததற்கு” ஒப்பானதே ஆகும். இதை வாசித்த அனைவருமே “ஒரே விதை”யைத்தான் பெற்று இருக்கின்றோம். ஆனால் இச்சத்தியங்களை அறிந்த ஒரு ஆண்டிற்கு பின்னாக இதன் “விளைபலன்” ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நிச்சயம் வித்தியாசமாகவே இருக்கும்! இங்குதான் இயேசு குறிப்பிட்ட மூன்று வித்தியாசமான கெட்ட நிலங்கள் பற்றியும் மூன்று வித்தியாசமான நல்ல நிலங்கள் பற்றியும் கொண்ட உண்மைகளை நடைமுறையில் நம் வாழ்வில் காணமுடிகிறது. இருப்பினும், இந்த உவமையில் இயேசு குறிப்பிடும் “எச்சரிக்கை சத்தத்திற்கு” செவி கொடுப்போமென்றால், நாம் யாவருமே ஆண்டவரின் விருப்பத்தின்படி நூறு பங்கு பலன் தருபவர்களாக மாறிவிட முடியும்!

**1. ஆகாயத்துப்பட்சிகளுக்கு ஒப்பான சாத்தானின் தூதர்கள் நீங்கள் பெற்ற ‘விசுவாச’ விதைகளைப் பட்சித்துப்போடாதிருக்க எச்சரிக்கையாயிருங்கள்!**

முதலாவதாகக் குறிப்பிடப்படும் விதை, வழியருகே விழுந்தது! (மாற்கு.4:4). ஆகாயத்துப் பறவைகள் வந்து அதை பட்சித்துப் போட்டது. இந்த ஆகாயத்துப் பறவைகள் சாத்தானும் அவனுடைய தூதர்களும் என்று 15-ம் வசனம் கூறுகிறது.

இயேசு, தன் சொந்த ஊரில் ஜனங்களின் அவிசுவாசத்தினிமித்தமே அநேக அற்புதங்கள் செய்யமுடியவில்லை என்று வாசிக்கிறோம். நீங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும் நாளில், “தேவன் என் மூலமாகப் பெரிய காரியங்களைச் செய்ய விரும்பியும் என் அவிசுவாசத்தினாலேயே அவர் ஒன்றும் செய்யவில்லை” என்ற உண்மை வெளிப்படும் போது, அதன் “இழப்பு” எவ்வளவு பெரியதாய் இருக்கும்! ஆகவே வேத வசனங்களை “**விசுவாசம் இல்லாமல்**” ஆராய்வது மிகவும் ஆபத்தான ஒன்று! இன்றும் அநேக பைபிள் ஸ்கூலில், வேத அறிவு போதிக்கப்படுகிறது. ஆனால் இருதயத்தில் விசுவாசம் தூண்டப்படுவதேயில்லை. “செத்த

அறிவு" உங்கள் ஆவிக்கு எந்த நன்மையும் கொண்டு வரவே முடியாது. அதுபோல, நீங்கள் வாசித்த இம்மேன்மையான முத்துக்குவியலின் சத்தியங்கள் உங்களுக்கு செத்த அறிவாய் (Dead Knowledge) இருக்கப் போகிறதா? அல்லது இவை அனைத்தும் உங்கள் வாழ்க்கையில் உண்மையாய் மாறும்படி "விசுவாசத்தை" சுதந்தரிக்கப் போகின்றீர்களா? இவ்வாறுதான், சாத்தான் விதையாகிய விசுவாசத்தைப் பட்சிக்கும்படி கிரியை செய்கிறான்!

தேவன் தன் வார்த்தையின் மூலம் சத்தியங்களை உங்களுக்கு வெளிப்படுத்தியிருப்பாரென்றால், **அதை நிறைவேற்றும் விசுவாசத்தை** சத்துரு எடுத்துப் போடாதபடி எச்சரிக்கையாயிருங்கள். "தேவரீர்! உம்முடைய வார்த்தை என் ஜீவியத்தில் நிச்சயம் நிறைவேறும் என்று விசுவாசிக்கின்றேன்" என்று அறிக்கைசெய்து, ஆகாயத்துப் பறவைகளிலிருந்து உங்களின் விசுவாசத்தை காத்துக்கொள்ளுங்கள். சாத்தானின் தூதர்களோ உங்கள் இருதயத்தில் விசுவாசத்தை பட்சித்து அவிசுவாசத்தை நிலைக் கொள்ளச் செய்வார்கள். நாம் கேட்ட சத்தியத்தை மறந்துவிடுவது இதன் பொருளல்ல. நாம் கேட்ட சத்தியங்கள் நம் வாழ்க்கையில் நிறைவேறமுடியும் என்ற விசுவாசத்தையே அவன் பட்சிக்க விரும்புகிறான். இந்த அபாயத்திலிருந்து உங்களை நீங்கள் காத்துக் கொள்ளுங்கள்!!

உதாரணமாய், "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என நீங்கள் கேட்ட சத்தியம் உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் நிறைவேறமுடியும். இந்த வசனம் தேவ கட்டளையா (Command)? அல்லது வெறும் ஆலோசனையா (Suggestion)? வேதாகமத்தில் எப்போதும் ஆலோசனைகள் என்று அல்ல, கட்டளைகளே இடம் பெற்றிருக்கிறது. எனவே, இப்போது, பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிற "அதே தரத்தின்படி" நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருக்கமுடியும் என்று விசுவாசிக்கிறீர்களா? இது உண்மையாகவே மிக மேன்மையான தரம்! இந்தப் பூமியில் இச்சத்தியங்களை விசுவாசிக்கிற "நாமும்" இதே தரத்தை அடைய முடியும்!!

"பாவமற்ற பூரணத்தை" (Sinless Perfection) பிரசங்கிக்கிறோம் என்று ஜனங்கள் எங்களைக் குற்றம் சாட்டுவதுண்டு. அதற்கு வேத அடிப்படையில் நாங்கள் தரும் பதில் இது தான்.

1. நாம் இன்னமும் வெளிச்சத்தில் அறியாத பாவங்களில் (Unconscious Sins) பூரணமாய் இருக்க முடியாது என்று நம்புகிறோம். புதிய ஏற்பாடு இதைப்பற்றி எழுதவில்லை. "ஆனால்"......

2. நம் மனசாட்சியில் அறிந்து பெற்றிருக்கிற (Conscious sins) வெளிச்சத்தின்படி நாம் பூரணராய் நிச்சயம் இருக்கமுடியும். "பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" (ரோமர் 6:14) என்ற வசனம் இந்த உண்மையைத்தான் விளக்குகிறது.

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது

போல, **நீங்களும் பூரண** சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என இயேசு கூறிய வசனத்தின் அர்த்தம் என்ன என்று நீங்கள் எப்போதாவது தியானித்திருக் கிறீர்களா? (மத்தேயு. 5:48). இயேசுவும் இங்கு "பூரணத்தைக்" குறித்தே பேசுகிறார்! எங்களை குற்றம் சுமத்தும் ஜனங்கள் முதலாவது இயேசுவையே குற்றம் சுமத்துகிறார்கள்! இயேசு, "உங்கள பிதா பூரண சற்குணராயிருக்கிறது போலவே, **நீங்களும்...**" என்று குறிப்பிடுகிறார். உங்கள் பதில் என்ன? "அதுமுடியாது" என்று கூறுவீர்களா? அப்படியானால் உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு அது முடியாமலேதான் இருக்கும்! இவ்வுலகத் தகப்பனுக்கு ஒரு கேள்வியை கேட்கிறேன். நீங்கள் தூக்கமுடியாத 1- டன் எடையை உங்கள் சிறிய மகன் தூக்கும்படிச் சொல்வீர்களா? ஒரு பொல்லாத தகப்பன் கூட அவ்வாறு சொல்லமாட்டான். இதற்கு இணையாக உங்களைச் சந்திக்கும் மற்றொரு கேள்வி இதுதான்: நம்மால் நிறைவேற்ற முடியாத ஒரு பிரமாணத்தை நம் பரம தகப்பன், அதை அறிந்தும், நம்மை செய்யச் சொல்லுவாரா? இங்குதான் ஆகாயத்துப் பறவையான சாத்தான் வந்து விதையை பட்சித்து அவிசுவாசத்தை நாட்டுகின்றான்! அவன், செய்தியை மறக்கச் சொல்ல மாட்டான், இல்லை! ஏற்கனவே செய்திகள் உங்கள் மனதிலும், புத்தகத்திலும் நன்றாகவே பதிந்துள்ளது. ஆனால் ஆகாயத்துப்பறவை, "உங்களால் இது முடியாது" என்றே இப்போதும் உங்கள் காதுகளில் ஓதுகிறது! இதற்கு நீங்கள் செவிகொடுக்கும் போது, உங்கள் "விதை" பட்சிக்கப்படுகிறது!!

மேலும், நீங்கள் இருக்கும் ஸ்தலத்தில், வாக்குவாதமும் சண்டையும் இல்லாத "கிறிஸ்துவின் சரீரமான சபையை" தேவன் கட்ட விரும்புகிறார் என்ற செய்தியை விசுவாசிக்கிறீர்களா? "இன்னொரு ஸ்தாபனம்" (Denomination) அல்ல! கிறிஸ்துவின் சரீரமான சபை!! ஸ்தாபனத்தை விட்டு விட்டு, "ஒன்றுகூடி இணையும்" கிறிஸ்துவின் சரீரமான சபை! **ஒருவரையொருவர் நேசித்து உங்கள் ஸ்தலத்தில் உயிருள்ள சாட்சியாய் நிற்கும் கிறிஸ்துவின் சரீரமான சபை!** ஒருவரையொருவர் நேசித்து உங்கள் ஸ்தலத்தில் உயிருள்ள சாட்சியாய் நிற்கும் கிறிஸ்துவின் உண்மை சரீரம்!! இவ்வேளையிலும் ஆகாயத்துப் பறவைகள் உங்களிடம் வந்து, "அது முடியாத காரியம்" என உங்கள் செவிகளில் வந்து ஓதும்! அவன் குரலுக்கு நீங்கள் செவிகொடுத்து விட்டால், "இப்போது" எல்லா விதைகளும் பட்சிக்கப்பட்டுவிடும்! இனி என்ன? உங்களிடம் மீதியாய் எஞ்சி இருப்பதெல்லாம் "செத்த அறிவின் குவியல்தான்!"

இரக்கத்தில் பூரணமாய் இருப்பதின் பொருள் என்ன? எனக்கு விரோதமாய் பாவம் செய்த 'ஒவ்வொருவரையும்' 100% பூரணமாய் நான் மன்னிப்பதே ஆகும். இது சாத்தியமா? ஆம்! இப்பூமியில் ஒருவர் மீதும் எனக்குச் சிறிதுகூட கசப்பு இல்லை என்று அவர்களைப் பூரணமாய் மன்னிப்பது சாத்தியமே!! தேவ கிருபையின் உதவிக்காய் நீங்கள் கெஞ்சி நிற்கும்போது, நீங்கள் நிச்சயம் ஒவ்வொரு நாளும் இப்படிப்பட்ட இருதயம் உள்ளவர்களாய் ஜீவிப்பது சாத்தியமே!! "நான் அவர்கள்

அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" என புதிய ஏற்பாட்டின் மன்னிக்கும் தரத்தை நாம் வாசிக்கிறோம் (எபி.8:12). எனவே ஆண்டவர் உங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து இயேசுவின் இரத்தத்தினால் கழுவிய பின்பு, உங்களைப் பார்க்கும்போது, "கடந்த காலத்தில் ஒரு பாவமும் செய்யாதவர்கள்" போலவே உங்களைப் பார்ப்பார். இது எவ்வளவு பெரிய இரட்சிப்பின் நற்செய்தி!

ஆனால், வேதத்தை நாம் கவனித்துப்படிக்கும்போது, இதற்கு ஒரு நிபந்தனையை கர்த்தருடைய ஜெபத்தில் இயேசு நமக்குப் போதித்தார். அது என்ன? "எங்கள் கடனாளிகளுக்கு **நாங்கள் மன்னிக்கிறது போல** எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12). அதாவது, ஒரு சகோதரன் எனக்கு விரோதமாக ஒரு தீங்குசெய்கின்றார். இப்போது நான் அவரை மன்னிக்கிறேன். பின் ஆண்டவரிடம், "ஆண்டவரே, நான் இந்த சகோதரனுக்கு மன்னித்த **அதே விதமாகவே** எனக்கு மன்னியும்" என்று கேட்டு ஜெபிக்கிறேன். சரி! நான் அந்தச் சகோதரனை எவ்வாறு மன்னித்தேன்? "சகோதரனே, உன்னை நான் மன்னிக்கிறேன்!" என்று சொன்னேன். ஆனால், நான் அவரை மீண்டும் பார்க்கும்போது, அந்த சகோதரன் எனக்குச் செய்த தவற்றை மனதிற் கொண்டுவந்து நினைக்கிறேன். அவருக்கு நான் கைகொடுத்துக் குலுக்குகிறேன். அவருக்கும் எனக்கும் இருதயத்தில் ஒரு இடைவெளியை வைத்துக் கொள்கிறேன். "இப்போது" நான் கர்த்தரிடம் ஜெபிப்பது என்ன? "பரமண்டலங்களிலிருக்கிற பிதாவே! நான் அந்த சகோதரனின் குற்றத்தை எவ்வாறு மன்னித்தேனோ, 'அதே போலவே' என் குற்றத்தை எனக்கு மன்னியும்" என்றே ஜெபிக்கிறேன். நீங்கள் என்ன ஜெபித்தீர்களென்று புரிகிறதல்லவா? ஆம் "ஆண்டவரே! என்னை மன்னியும், ஆனால் நீர் என்னைப் பார்க்கும்போதெல்லாம் உமக்கு இன்ன துரோகம் செய்தவன் என்று என்னை நீர் நினைத்துக்கொள்ளும்! என் கரத்தை குலுக்கி, உம் இருதயத்திலோ உமக்கும் எனக்கும் ஓர் இடை வெளியை வைத்துக்கொள்ளும்!!" இப்படித்தானே உங்கள் ஜெபத்தின் பொருள் இருக்கும்?

ஏனெனில், நீங்கள் எவ்வாறு மன்னித்தீர்களோ அப்படியே (Exactly) கர்த்தரும் மன்னிப்பார். 99% மன்னித்து அதை மறந்து விடுகிறீர்கள். ஆனால் அந்த 1%த்தை மன்னித்து மறக்க உங்களால் முடியவில்லை. எனவே பரமபிதாவும் உங்களுக்கு அப்படியே செய்வார்! இதுதான், இன்று அநேக கிறிஸ்தவர்களுடைய ஜீவியத்தில் சந்தோஷமில்லாததற்குக் காரணம். அவர்கள் 99% இரக்கம் உள்ளவர்களாய் இருக்கின்றனர் ஆனால் இயேசுவோ "பூரண (100%) சற்குணராயிருங்கள் அல்லது 100% மன்னித்து பரம பிதாவைப் போலவே இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என்று சொல்லுகிறார். இனிவரும் நாட்களிலாவது தேவன் தன் வார்த்தைகளில் அருளும் மேன்மையான "விசுவாசத்தைக்" காத்துக்கொள்வேன் என்றும், அதை ஆகாயத்துப் பறவைகள் பட்சியாத வண்ணம் ஜாக்கிரதையாய்

*பலன்தர பாதுகாப்பேன் என்றும் தீர்மானம் செய்யுங்கள்!!*

**உ. அந்தரங்க சிந்தை வாழ்வில் அக்கறையற்று, வெளித்தோற்ற ஜீவியத்தில் திருப்தி யானவர்கள், பாறை நிலத்தில் விழுந்த வேர்விடா விதைக்கு ஒப்பானவர்கள்!**

*"சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது" (மாற்கு.4:5). ஆழமான மண்ணில்லாததினாலேயே அவ்விதை "சீக்கிரத்தில்" முளைத்தது. ஒரு விதை சாதாரணமாகச் சீக்கிரம் முளைப்பதில்லை. அதற்கு வேர் உண்டாகி, பூமியின் ஆழம் செல்வதற்கு சில நாட்கள் செல்லும். ஆனால் இந்த விதை சீக்கிரம் முளைத்து வெளியே வந்தற்குக் காரணம், ஆழமாய் கீழே செல்லும்படி "வேர் கொள்ளாதபடியினாலே" (வசனம்.17) என இயேசு குறிப்பிட்டார். வசனத்தைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டவுடன் ஏற்படும் அடுத்த "அபாயம்" இது! வெளியே முளைத்து வரும் பகுதியானது, மற்றவர்கள் காணுகின்ற வெளிப்படையான ஜீவியம். ஆழமாய் செல்லும்* **வேர்பகுதியே, மற்றவர்கள் காணமுடியாத மறைவான ஜீவியம்!**

*ஒரு செடிக்கு, மண்ணிற்குக் கீழ் ஒரு வாழ்க்கையும்; மண்ணிற்கு மேல் ஒரு வாழ்க்கையும் இருப்பது போலவே நம்முடைய வாழ்க்கையிலும் இரு பகுதிகள் அடங்கியுள்ளன. மற்றவர்கள் காணமுடியாத.... ஏன்? சொந்த மனைவியும் காணமுடியாத அளவிற்கு நம் ஒவ்வொருவருக்கும் ஓர் அந்தரங்க மறைவான ஜீவியம் உள்ளது! இங்கு சொல்லப்பட்டவர்கள் வசனத்தை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு உடனே முளைத்தார்கள். வசனத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டதில் தவறில்லை. ஆனால், இவர்கள் ஜீவியத்திலோ, "*__வேர்__*" இல்லாமல் இருந்தது. மற்றவர்கள் பார்வைக்கு வெளிப்படுத்தும் "வெற்றி வாழ்க்கையிலேயே" இவர்கள் அதிக கவனம் செலுத்தினார்கள். "வெளிப்படையாகத்" தங்கள் நாவைக் கட்டுப்படுத்தி, அல்லது வேறு வெளியரங்கமான கிரியை மூலம் "வெற்றி வாழ்க்கையைக்" காட்ட விரும்பினார்களே ஒழிய, இவர்களிடத்தில் வேர் இல்லை. இவர்கள் தங்களின் அந்தரங்க சிந்தை வாழ்வைக் குறித்து அக்கறையற்றிருந்தார்கள்! தேவனுடைய வசனம் "ஆழமாய்" இவர்களுடைய இருதயத்தில் செல்லவே இல்லை!!*

*"முதலில்" நீங்கள் உங்கள் 'அந்தரங்க' ஜீவியத்தில்* (Hidden Life) *கவனம் செலுத்துங்கள். பிரசங்கிப்பது, கைப்பிரதி தருவது.... போன்ற வெளிப்படையான கிரியையை முதலில் செய்யாதிருங்கள். மாறாக, ஆழமாய் வேர் விடுவதில் அக்கறை கொள்ளுங்கள். ஏனெனில் இன்று "15 வருடங்களாய் ஊழியம் செய்கிறோம்!" எனக்கூறும் அநேகர், இன்னமும் 'அசுத்த சிந்தைகளிலிருந்து' வெற்றி பெறாமலேயே இருக்கிறார்கள்! ஆம்,* **முதலாவது உங்கள் "சிந்தை வாழ்க்கை" தூய்மை** *ஆக வேண்டும். தங்கள் சிந்தை வாழ்வில் பரிசுத்தமாய் ஜீவிக்கும் வாலிபர்களை இந்நாட்களில் காண்பது மிக அரிது! ஏன், தங்கள் சிந்தையில் தூய்மையாய் இருக்கும் வயோதிபரைக் காண்பதும் அரிது! ஆம், பரிசுத்தமான சிந்தை வாழ்க்கை!! இதிலேயே தொடர்ந்து அக்கறை கொள்ளுங்கள். ஆ! இப்போது தேவ*

னுடைய வார்த்தைகள் ஆழமாய் உங்கள் இருதயத்தில் வேர் விட ஆரம்பிக்கின்றது. பின் "கொஞ்ச காலம் கழித்து" இயற்கையாகவே, செடியானது மற்றவர்கள் காணும்படி வெளியேவர ஆரம்பித்துவிடும். இப்போது செடி மேலே ஓங்கி வளர்வது போலவே, வேரும் ஆழமாய் கீழ்நோக்கி வளர்கிறது. 2 இரா 19:30-ல் "யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள், மறுபடியும் **கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள்**" என்று வாசிக்கிறோம்.

ஆம்! இது தான் தேவனுடைய ஒழுங்கு. முதலாவது, கீழேவேர், இரண்டாவது மேலேகனி! இன்றைய பிரசங்கிகள் இந்த ஒழுங்கைத் தலைகீழாய் மாற்றிவிடுகிறார்கள்.அவர்கள் முதலில் சொல்வதெல்லாம், "வேதம் வாசியுங்கள், கூட்டங்களுக்கு ஒழுங்காய் வாருங்கள், மற்றவர்களுக்கு சாட்சி சொல்லுங்கள். ஆண்டவருக்கு **எதையாவது** செய்யுங்கள் (அல்லது) கனிகொடுங்கள், கனி கொடுங்கள்....." என்பார்கள். **வேரைப்பற்றி என்ன?** அதைக் குறித்து "ஒருபோதும்" சொல்லுவதே இல்லை. ஒருவர்கூட, "சகோதரனே, உன் சிந்தை வாழ்வைக்குறித்து ஜாக்கிரதையாய் இரு!" என்று சொல்லுவதே கிடையாது. அவர்கள் சிந்தையில் "குப்பைத் தொட்டி" தான் நிலை கொண்டிருக்கும்! ஆனால், வெளியிலே மற்ற எல்லா நல்ல கிரியைகளையும் செய்கிறார்கள்!! நாம் முதலில் வேர் விடாமல், "வெளிப்படையான" கனிகளில் அக்கறை கொள்வோமென்றால், அது "தழைகீழாய்" நடக்கும் அனுபவத்திற்கே ஒப்பானது. ஆனால், "தலைகீழாய்" நடவுங்கள் என்றுதான் இன்று அநேகப் பிரசங்கிகள் சொல்லுகின்றார்கள். தேவன் நம்மை ஒருபோதும் அவ்வாறு சொல்லுவதே இல்லை. முதலாவது வேர்! இரண்டாவது கனி!! "தேவரீர், உம் வார்த்தைக்கு எவ்வளவு அதிகமாய் என் அந்தரங்க ஜீவியத்தில் கீழ்ப்படிய முடியும்!" என்று ஏங்கி நிற்பவர்களே, ஆழமாய் வேர்விடத் துவங்குவார்கள்.

புத்தியுள்ள, புத்தியில்லாத மனுஷர்களைப் பற்றிய 2- உவமைகளை இயேசு குறிப்பிட்டார். ஒன்று, புத்தியுள்ளவன் **கற்பாறையின் மேலும்;** புத்தியில்லாதவன் **மணலின் மேலும்** கட்டியவீடு. இரண்டாவது, புத்தியுள்ள கன்னிகை, புத்தியில்லாத கன்னிகையைப் பற்றிய உவமை. இந்த இரண்டு உவமைகளிலும் வரும் செய்தி ஒன்றுதான். புத்தியுள்ளவன் கட்டிய வீடும், புத்தியில்லாதவன் கட்டிய வீடும் வெளியே பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகவே இருந்தது. பின் வேறு எங்கு வித்தியாசம்? ஒருவரும் காணமுடியாத அஸ்திபாரத்தின் அடியில்தான் வித்தியாசம்! இது, ஒரு அசெம்பிளியிலுள்ள இரு ரக விசுவாசிகளுக்கு ஒப்பாயிருக்கிறது. இருவரும் 'எல்லா' கூட்டங்களுக்கும் வருகின்றனர். இருவரும் ஒரே சத்தமாய் "அல்லேலூயா" சொல்கின்றனர். இருவருமே நன்றாகக் கை தட்டுகின்றனர். ஆனால், அவர்களின் **அந்தரங்க அஸ்திபாரத்தில்** முற்றிலும் வேறுபாடு காணப்படுகிறது! இதில் காரியம் என்னவென்றால், நாம் ஒரு வீட்டைப் பார்க்கும்போது அந்த வீட்டின் அஸ்திபாரத்தை காணமுடியாத தேயாகும்! இப்படித்தான் விசுவாசிகளுடைய வாழ்க்கையும், அவர்களில்

*தனிப்பட்ட வாழ்க்கையில்* (Private life) *என்ன நடக்கிறது என்பது ஒருவருக்கும் தெரியவே தெரியாது. "இங்குதான்" புத்தியுள்ளவனுக்கும், புத்தியில்லாதவனுக்கும் உள்ள வித்தியாசம் பளிச்சிடுகின்றது. பாடுகளும், சோதனைகளும் வரும்போது இந்த வித்தியாசம் வெளிப்பட ஆரம்பிக்கும். ஒருவன், இச்சூழ்நிலைகளில் "சமாதானமான இளைப்பாறுதலில்" இருப்பான். இன்னொருவன், தன் பொறுமையை இழந்து, அதனிமித்தம் அவன் வீடு இடிந்து அழிந்துபோகும்! இதைப் போலவேதான் புத்தியுள்ள புத்தியில்லாத கன்னிகைகள் இருந்தனர். இந்த 10 பேருமே கன்னிகைகள் தான்* (Virigins). *எல்லோருமே அருமையான "பெந்தெகொஸ்தே" வெள்ளை உடுப்பு உடுத்தியிருந்தனர். எல்லோருமே தீவட்டிகள் வைத்திருந்தனர்.* **"வெளியே" கொஞ்சம்கூட வித்தியாசம் இல்லை. ஆனால், இவர்களில் 5 பேர் மாத்திரமே தங்கள் பாத்திரங்களில் எண்ணை கொண்டு சென்றார்கள்.** *இந்த எண்ணை பாத்திரத்தை இவர்கள் 'தங்கள் உடுப்பிற்குள்' வைத்திருந்தபடியால், மற்றவர்கள் அதைப் பார்க்கவில்லை. மணவாளன் வந்தபோது இந்த வித்தியாசம் வெளியரங்கமானது என இயேசு குறிப்பிட்டார்!*

*மேலே கூறிய உவமானத்தில் அடங்கியிருக்கும் செய்தி என்ன? கவனியுங்கள்! நீங்கள் "புத்தியுள்ளவர்களோடு" சேர்ந்திருக்க வேண்டுமென்றால், "உங்கள் அந்தரங்க வாழ்க்கையில் அதிக கவனம் செலுத்துங்கள்." அவ்வாறு அந்தரங்க வாழ்க்கையில் அக்கறை கொள்ளாவிட்டால் நீங்களும் ஒருநாள் புத்தியில்லாதவர்களாகவே காணப்படுவீர்கள்!*

**3. வசனத்தை ஏற்றுக்கொண்டு, பின் உலகக்கவலைகளாலும் ஐசுவரிய மயக்கத்தினாலும்... நெருக்கப்பட்டு, பலனற்றுப் போகாதீர்கள்!**

*மூன்றாவது வகையினர், வசனத்தை ஏற்றுக்கொண்டு வேர்விட்டு நன்றாக வளர்ந்தனர். ஆகாயத்துப் பறவைகள் தங்கள் விதையைப் பட்சித்து போடாதபடி இவர்கள் காத்துக் கொண்டார்கள். ஆனால்* **முட்செடிகளும்** *அதோடு கூட வளர்ந்து அந்த விதையை நெருக்கிப் போட்டது (மாற்கு 4:7). இந்த முட்கள் யாவை? "உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும்.... இச்சைகளுமே" அந்த முட்கள் என இயேசு கூறினார்(வசனம்18).*

*உங்கள் கவலைகள் தேவனுடைய வசனத்தை நெருக்க அனுமதியாதீர்கள். "கிறிஸ்துவுடன் கிட்டிச்சேர்க்கும் ஆழமான சத்தியங்கள் தான்! ஆனால்.... நான் இந்த ஐக்கியத்தில் சேர்ந்தால், யார் என் மகளை மணப்பார்கள்? எனக்கு கௌரவமான அடக்க ஆராதனையும் நடக்காதே? எனவே நான் இந்த ஐக்கியத்தார் நடத்தும் கூட்டங்களுக்குச் செல்லுவேன். ஆனால், என் அங்கத்தினர் பெயரையோ என் மதிப்பிற்குரிய புராட்டஸ்டண்டு அல்லது லுத்தரன் சபையிலேயே வைத்துக்கொள்வேன்" என்றெல்லாம் எண்ணுகிறீர்களா? இவையாவும் உலகக் கவலைகள். என் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்ய இந்த ஐக்கியத்தில் உள்ள மூப்பருக்கு திருமண லைசென்ஸ் இல்லாவிட்டால், திருமண ரிஜிஸ்ட்ரார் மூலமாக*

திருமணத்தை முடிக்கலாமே! பாருங்கள், எல்லாவற்றிற்கும் இப்படி வழிகள் உண்டு. ஆனால், இவர்கள் உடனே சொல்லுவார்கள், "ஆ! அது கனம் பொருந்தியதாய் இருக்காதே!" ஓ! அப்படிச்சொல்லுங்கள்!! இப்போது புரிகிறது, நீங்கள் **மனுஷீக கனத்தை** விரும்புகிறீர்கள்!! இவ்வாறு சத்தியத்தின்படி வாழ தீர்மானிப்பதற்குப் பதிலாய், மனுஷர் கனத்தைத் தேடும் நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது.

அடுத்தது ஐசுவரியத்தின் மயக்கம்! இயேசு ஐசுவரியத்தைக் குறித்து இரண்டு காரியங்களைச் சொன்னார். ஒன்று, அது அழுக்கானது! இரண்டாவது,வஞ்சிக்கக்கூடியது!! எனவே இந்த உலகப்பொருட்களைக் கையாளும்போதெல்லாம் எப்போதும் அபாய உணர்வோடுதான் கையாள வேண்டும். உதாரணமாக, ஒரு டாக்டர் தொத்து நோய் கிருமி நிறைந்த ஓர் ஆப்ரேஷன் செய்துவிட்டு அவர் சாப்பிடச் செல்லும்போது என்ன செய்வார்? தன் கையை நன்றாகச் சுத்தம் செய்வார் அல்லவா! இந்த நிகழ்ச்சியை நாம் பணத்தைக் கையாளும்போதெல்லாம் நினைவு கூர வேண்டும். **ஆம்! நீங்கள் கையாளும் பணத்தில் "கிருமி" உள்ளது** சகோதரனே! ஜாக்கிரதை!! நாம் பணத்தை உபயோகிக்க வேண்டியது அவசியம்தான். "ஆனால்" ஒரு டாக்டர் T.B. நோயாளியை சோதிக்கும் போது அதன் கிருமிகள் தன்னிடம் தாக்காதபடி ஜாக்கிரதையாய் இருப்பதுபோலவே நாமும் பணத்தை உபயோகிக்கவேண்டும். ஆனால் எத்தனை விசுவாசிகள் இந்த ஜாக்கிரதையோடு பணத்தை கையாளு கிறார்கள்? ஒரு T.B. நோயாளியை டாக்டர் கண்டதும் அவரை அப்படியே அணைத்துக்கொள்ளமாட்டார்! ஆனால் பரிதாபம்! இன்றைய எண்ணற்ற விசுவாசிகளோ பணத்தை கண்டதும் கட்டித் தழுவிக்கொள்கிறார்கள்?! ஆம், பணத்தை உபயோகிக்க வேண்டும்! ஆனால் ஒருபோதும் அதோடு இணைப்பு (Attachment) இருக்கவே கூடாது!!

ஐசுவரியம் அழுக்கானது மாத்திரமல்ல, அது வஞ்சிக்கக் கூடியதுமாகும். அதாவது, அது உங்களை முட்டாள் ஆக்கிவிடும்! அது உங்களை, நீங்கள் ஆவிக்குரியவர்கள் போலவும், பணத்தினால் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் போலவும் எண்ணச் செய்யும். இது ஒரு அப்பட்டபொய்! உலகிலுள்ள ஐசுவரிய வான்களை எடுத்துப்பாருங்கள். அவர்களெல்லாம் என்ன ஆவிக்குரிய வர்களா? தேவன் ஏழையையே ஆவிக்குரிய ஐசுவரியவானாயிருக்கும்படி தெரிந்துகொண்டார் (யாக். 2:5). இயேசு ஐசுவரியவானாய் இருக்கவில்லை. பவுலும் ஐசுவரியவானாய் இருக்கவில்லை. இது ஆச்சரியம் இல்லையா? இவர்கள் அனைவருக்குமே சுகமாக்கும் ஊழியம் இருந்தது. ஜனங்கள் தங்களுக்கு உள்ளவைகளையெல்லாம் அவர்கள் பாதபடியில் வைத்தனர். "ஆனால்" அவற்றை இவர்கள் தொடக்கூட இல்லை! இப்படித்தான் அவர்கள் தங்களைக் காத்துக் கொண்டார்கள். இன்றைக்கு பவுலும் பேதுருவும் போன்ற உத்தமகுணம் படைத்த அப்போஸ்தலர்களே நமக்குத் தேவை!

சரி, பணத்தை ஏன் ஆண்டவர் உங்கள் கைகளில் கொடுத்திருக் கிறார் தெரியுமா? கேளுங்கள்! அவர் உங்களை பரீட்சை செய்வதற்கே! (To test you). இன்று அநேகர், "தேவன் என்னை அதிகம் ஆசீர்வதித்த படியால், எனக்குப் பணத்தைக் கொடுத்திருக்கிறார்" என எண்ணுகின்றனர். இல்லவே இல்லை! அவர் உங்களுக்குப் பணத்தை சோதிப்பதற்காகவே கொடுத்திருக்கிறார். எதற்காக? "அநீதியான உலகப்பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?"(லூக்கா 16:11) என இயேசு கூறிய சத்தியத்தின்படி, நீங்கள் மெய்யான ஆவிக்குரிய ஐசுவரியத்திற்குத் தகுதி உள்ளவர்கள்தானா என்று தீர்மானிக்கவே உங்களுக்குப் பணம் தரப்பட்டிருக்கிறது.

உங்கள் பணத்தில் நீங்கள் உண்மையில்லாமல் இருப்பீர் களென்றால் நீங்கள் "ஒருபோதும்" ஆவிக்குரிய ஐசுவரியத்தைப் பெறவே முடியாது! தேவனுடைய வார்த்தையில் உங்களுக்கு "வெளிப்பாடு" கிடைக்கவே கிடைக்காது. ஒருவனுக்கு பரிசுத்தாவியானவர் தேவனுடைய வார்த்தைகளைத் "திறந்து" வெளிப்படுத்தினால் ஒழிய அவன் சத்தியங் களைப் புரிந்துகொள்ளவே முடியாது. இந்த மேன்மை ஐசுவரியம், **நீங்கள் பணத்தில் எவ்வளவு உண்மையாயிருக்கிறீர்கள்?** என்பதைப் பொறுத்தே இருக்கிறது. ஆனால் விசுவாசிகள் பணத்தில் உண்மையற்று இருப்பதால், "இந்த வஞ்சகத் தந்திரமே" அவர்கள் விதையை நெருக்கிப் போடுகின்றது. இங்குதான் நாம் ஒவ்வொருவரும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும். இன்று அநேகர் நரகத்திலிருந்து இரட்சிப்பு அல்லது விடுதலையை அடைந்திருக்கிறார்கள். ஆனால், "பணத்திலிருந்து" விடுதலை பெறவே இல்லை! கவலையீனமாகப் பணத்தைச் செலவு செய்வ திலிருந்து நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் உண்மையாய் இருக்கவேண்டும் என்பதின் பொருள் என்ன? நூறு ரூபாய் வந்தவுடன், 10 பைசாவுக்கு இதையும், 20 பைசாவுக்கு இன்னதையும் வாங்கினேன் என்று ஒரு அக்கவுண்ட் எழுதுகிறீர்கள். இப்படி நீங்கள் உங்கள் பணத்தில் கவனமாய் இருக்கிறீர்களா? அல்லது கவலையீனமாகச் செலவு செய்கிறீர்களா? ஆம்! நீங்கள் பணத்தைச் செலவு செய்கின்ற அல்லது உபயோகிக்கின்ற "முறையை வைத்தே" நீங்கள் எவ்வளவு ஆவிக்குரிய ஐசுவரியத்திற்கு தகுதி உடையவர்கள் என்பதே தீர்மானிக்கப்படுகின்றது. தேவன் உங்கள் இருதயத்தில் விதைத்த விதையை, ஐசுவரியத்தின் மயக்கம், உலகக்கவலைகள், இச்சைகள் நெருக்கிப்போடாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்!!

**4.வசனத்தைக் கேட்டதும் 'உடனே' 'முழு இருதயத்தோடு' வைராக்கியமாய் கீழ்ப்படிபவர்களே நல்ல நிலத்தில் 100 பங்கு பலன் தருவார்கள்!**

மூன்று வித நல்ல நிலத்தைப்பற்றி இயேசு கூறியதை நாம் காண் கிறோம். மூன்று கெட்ட நிலத்தைப் போலவே, மூன்று நல்ல நிலங்கள்!

“வசனத்தைக்கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள். இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்” (மாற்கு 4:20). இவர்கள் வசனத்தைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டவர்கள்! ஆனால், முதல் ரக நல்ல நிலம் 30 பங்கையும், இரண்டாவது ரக நல்ல நிலம் 60 பங்கையும், மூன்றாவது ரக நல்ல நிலம் 100 பங்கையும் பலனாகத் தந்தது. ஏன் எல்லாமே 100 பங்கு பலன் தரவில்லை? இந்த வித்தியாசம், நீங்கள் வசனத்திற்கு எவ்வளவு சீக்கிரம், எவ்வளவு முழு இருதயத்தோடு, எவ்வளவு வைராக்கியமாய்க் **கீழ்ப்படிகிறீர்கள்** என்ற அடிப்படையிலேயே இருக்கிறது. காரியம் இவ்வாறிருக்க, நீங்கள் ஏதோ வேதத்தை அதிக நேரம் வாசிப்பதால் நல்ல நிலமாய் மாறிவிடலாம் என்று எண்ணி விடாதீர்கள்!

கீழ்ப்படியும் நல்ல நிலத்திற்கு உதாரணமாக, அடிப்படை சத்தியமான “தண்ணீர் ஞானஸ்தானத்தைக்” குறித்துக் கேள்விப்படுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒருவர் பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரியைப் போல 24 மணி நேரத்தில் ஞானஸ்நானம் எடுக்கிறார். இன்னொருவர் 24 வருடங்கள் தன் தலையைச் சொறிந்து கொண்டு ‘ஞானஸ்நானம் எடுத்தால் பிஷப் என்ன சொல்லுவாரோ’ என்று தயங்கி, கடைசியில் ஞானஸ் நானத்தை எடுத்துவிடுகின்றார். இருவரும் வசனத்திற்கு கீழ்படிந்தார்கள், “ஆனால்” முதல் சகோதரனும், இரண்டாவது சகோதரனும் ஒரே பலனைத் தருவார்கள் என்று எண்ணிகிறீர்களா? இல்லவே இல்லை. ஒருவர் 100 பங்கும் மற்றொருவர் மிகக் குறைவான பங்குமே பலன் தருவார்கள்.

நீங்கள் இன்னொருவர் பணத்தைத் திருடியோ அல்லது ஏமாற்றியோ இருந்தால், “உடனே அதைத் திருப்பிக் கொடுத்து ஒப்புரவு ஆகுங்கள்” என்ற சத்தியத்தை நீங்கள் கேட்கிறீர்கள். **ஒருவர் சகேயுவைப் போல, உடனடியாகக் கீழ்ப்படிகிறார்.** தான் டிக்கட் இல்லாமல் இரயிலில் பயணம் செய்ததற்கு, ஸ்டேஷன் சென்று அந்தப் பணத்திற்குரிய டிக்கட்டை வாங்கி கிழித்துப் போட்டுவிடுகிறார். இன்னொருவரோ இதைக்குறித்து உட்கார்ந்து யோசித்துக்கொண்டே இருக்கிறார். இருவருக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்! அருமையான சகோதரனே சகோதரியே, நீங்கள் வேதத்தில் ஒரு வசனத்தை அறிவீர்களென்றால், சும்மா உட்கார்ந்து யோசித்துக் கொண்டே இருக்காதீர்கள், **‘முழு’ இருதயத்தோடு “உடனே” கீழ்ப்படியுங்கள்.** தேவன் உங்களோடு பேசி, “இன்னொருவர் பிழையை மன்னியுங்கள்” என்றால், உடனே அதைச்செய்யுங்கள்! இன்னொருவருக்கு மன்னிப்புக் கடிதம் எழுதச் சொன்னால் 24 மணி நேரத்தில் உடனே எழுதுங்கள். ஆம், இப்போது நீங்கள் 100 பங்கு பலன் தரும் தரத்தை அடைகின்றீர்கள்!!

உண்மையாய் நடந்த ஒரு சம்பவத்தைக் கேளுங்கள். ஒரு சகோதரன், கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் ஒரு கூட்டத்திற்குச் சென்றார். அங்கு மத்தேயு 5:23,24-ம் வசத்தின்படி தேவசெய்தி கொடுக்கப்பட்டது. அதன்படி “நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்து வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில்,

*அங்கே தானே பலி பீடத்தினிடத்தின்முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து" என்று செய்தி பிரசங்கிக்கப்பட்டது. மனுஷீக சிந்தையின்படி, "சரி! முதலில் நான் என் பலியை செலுத்திவிட்டுப் பின்பு நான் அந்தச் சகோதரனிடம் சென்று ஒப்புரவு ஆகுவேன்" என்று இருதயத்திற்குள் தீர்மானம் செய்யலாம். ஆனால் வேதம் சொல்லுவதைக் கவனமாய் படியுங்கள். "முன்பு (முதலாவது) உன் சகோதரனோடே ஒப்புரவாகி...." என்றே அழுத்தமாய்க் கூறுகிறது. இந்த சகோதரன் என்ன செய்தார் தெரியுமா? அவர் தேவனிடம் "தேவரீர், நான் உமது பந்தியில் பங்குபெற விரும்புகிறேன். ஆனால், நான் ஒப்புரவாக வேண்டிய சகோதரனின் வீடோ தூரத்தில் உள்ளது. தூரமாய் இருக்கும் அந்த சகோதரனின் வீடு சென்று திரும்புவதற்குள் பந்தி முடிந்துவிடுமே" என்று உள்ளத்தில் பேசினார்.*

*ஆனால் ஆண்டவர் திரும்பவும் அழுத்தமாக, "***முதலாவது*** நீ உன் சகோதரனிடத்தில் ஒப்புரவாகு" என்றே கூறினார். 'உடனே' அச்சகோதரன் எழுந்து, வெகுதூரம் நடந்தே அந்த மற்றொரு சகோதரன் வீட்டை அடைந்தார். அவரிடம், "சகோதரா, நான் உங்களுக்குச் செய்த தீங்கை எனக்கு மன்னியுங்கள்" என்று கூறி அவரோடு ஒப்புரவாகும் காரியத்தைச் செய்து முடித்தார். பின் அவர் வேகமாக திரும்பி வந்தார். அவர் அந்த ஜெப அறைக்கு நுழையவும், அங்குள்ள பிரசங்கம் செய்த சகோதரன் அப்போதுதான் செய்தியை முடிக்கவும் சரியாக இருந்தது! அந்த சகோதரன் மிகுந்த மகிழ்ச்சியோடு கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றார்! பாருங்கள்! தேவன் எவ்வளவு அதிகமாய்த் தாமதிக்கச் செய்திருக்கிறார். ஆம், நீங்கள் கர்த்தரை இவ்விதமாகக் கனப்படுத்தினால் அவர் உங்களை நிச்சயம் கனப் படுத்துவார்! இப்படிப்பட்ட மக்கள் நிச்சயமாக, நிச்சயமாகவே,*

*100 பங்கு பலனைத் தந்தே தீருவார்கள்!! ஆமென்.*




# வெற்றி வாழ்க்கை! கேள்வி - பதில்கள்

*நீங்கள் கேட்ட உங்கள் கேள்விகளுக்கு இங்கே அளிக்கப்பட்ட பதில்கள் திருப்தி இல்லையென்றால், சரியான பதிலுக்கு நீங்கள் தேவனிடம் சென்று கேட்பதே உத்தமம். அதற்கு ஆதாரமாக "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறை உள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்கோபு.1:5) என்ற வாக்குத்தத்தத்தை நீங்கள் பற்றிக் கொள்ளுங்கள். மேலும் இது போன்ற கேள்வி கேட்கும்போது நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு மிக முக்கியமான வசனம்,* "**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ.... நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்**" *(உபாகமம்.29:29). எனவே "காயீனின் மனைவி யார்?" என யாராவது கேட்டால், மறைக்கப்பட்ட இவ்விஷயத்தில் எங்கள் நேர்மையான பதில், "எங்களுக்குத் தெரியாது!" என்பதுதான். அல்லது இன்னொருவர், "வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன?" என்று கேட்டால், அதற்கும் "எங்களுக்குத் தெரியாது!" என்பதே பதில் "ஆனால்" நாம் பரிசுத்த ஜீவியம் செய்வது எப்படி? ஆ! அது நமக்கு சத்திய வேதத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது!எனவே, 1)நமக்கு வெளிப்படுத்தப்பட்ட, 2)ஜீவியத்திற்குப் பிரயோஜனமான காரியங்களையே உங்கள் கேள்விகளுக்கு இங்கே பதிலாகத் தந்துள்ளோம்.*

**கேள்வி-1 : மிகவும் ஏழையான இந்திய ஜனங்களுக்கு நாம் எவ்வாறு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கமுடியும்? ஏன் தேவன் ஏழையாய் ஜனங்களைப் படைத்தார்?**

*நம் தேசத்தில் காணப்படும் ஏழ்மைப் பிரச்சனைகளுக்கு முழு விடையையும் நம்மால் அளிக்கமுடியாது. இந்தியாவில் காணப்படும் ஏழ்மையைப் போக்குவது என்பது, சமுத்திரத்தையே காலிசெய்வதற்கு ஒப்பாகும். நம் ஜீவியகால முயற்சியில் இந்த ஏழ்மை ஒழிப்பில் ஒரு சிறுபகுதியை வேண்டுமென்றால் நிறைவேற்றலாம். ஆனால் அவ்வித சேவைக்குகூட 'பிரத்தியேகமான அழைப்புத்'* (Specific Calling) *தேவை என்றே நம்புகிறேன். கிறிஸ்துவின் சரீரமான சபையில் ஒவ்வொரு*

வித்தியாசமான மக்கள் குழுவிற்கு ஊழியம் செய்வதற்கு, தேவன் வெவ்வேறு மக்களை அழைத்திருக்கிறார். குறிப்பிட்ட ஸ்தல மக்களுக்கு ஊழியம் செய்வதற்குத் தேவன் குறிப்பிட்ட வாழ்க்கைப் பின்னணியில் நமக்குப் பயிற்சி அளிக்கிறார்.

உதாரணமாக, பவுல் அப்போஸ்தலன், சிறு பிராயத்திலிருந்தே தர்சுப்பட்டணத்தில் பயிற்சி அளிக்கப்பட்டவர். எனவேதான், அவர் புறஜாதிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க தகுதி உடையவராய் இருந்தார். அதுபோலவே, பேதுரு, புறஜாதிகளைவிட யூதர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அதிகத் தகுதி உடையவராய் இருந்தார். பவுல் எழுதின நிருபங்களுக்குப் ஒப்பாகவே பேதுருவால் எழுத முடியாது. ஏனெனில் பேதுரு ஓர் சாதாரண செம்படவர். அவ்வளவு கல்வி கற்றவர் அல்ல. இருப்பினும் இருவருக்கும் அவரவர்களுக்குரிய பொறுப்புள்ள ஊழியங்கள் இருந்தது. எனவே “சிலர்” படித்தவர்கள் மத்தியிலும் “சிலர்” கிராமமக்கள் மத்தியிலும் பேசுவதற்கத் தகுதி உடையவர்களாய் இருக்கின்றனர். இவ்வாறு சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளிலேயும் சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்ற தேவன் தனக்கென்று சாட்சிகளை வைத்திருக்கின்றார். எனவே ஏழை ஜனங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பது என்பது “குறிப்பிட்ட அழைப்பைப்” பொறுத்தது. தேவன் எனக்கு அந்த அழைப்பைத் தரவில்லை. ஆனால், “சிலரை” தேவன் இப்பகுதியில் ஊழியம் செய்வதற்கு அழைத்திருக்கிறார் என்பதை நன்கு அறிவேன்.தேவன் அவர்களுக்கு அவ்வூழியத்தை நிறைவேற்ற கிருபையையும், ஞானத்தையும் நிச்சயம் தருவார்!

**கேள்வி-2:** 2 கொரிந்தியர் 12:7-ல் பவுல் குறிப்பிடும் “மாம்சத்தில் ஓர் முள்” எதைக் குறிப்பிடுகிறது?

இதைப்பற்றி வேதம் ஒன்றும் பதில் கூறவில்லை. எனவே நம் மாம்சத்தில் வரக்கூடிய “எல்லா” முட்களுக்கும் இது பொருந்தக்கூடும். **ஆனால் இதில், “பாவம்” உள்ளடங்காது** என்பது நிச்சயம். பவுல் இங்கு பாவத்தைக் குறித்து எழுதவேயில்லை. அந்த முள் பாவமாயிருக்குமென்றால் தேவன் அதைப் பவுலின் வாழ்க்கையில் “நிலை கொண்டிருக்க” (to remain) அனுமதித்திருக்கவே மாட்டார். எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை விடுதலையாக்கவே இயேசு வந்தார். எனவே நம் ஜீவியத்தில் ஒரு பாவம்கூட “தங்கியிருக்க” அவர் அனுமதிக்கவே மாட்டார். இந்த வசனத்தை கவனித்துப் பார்த்தால், இந்த முள்ளைக் குறித்து ஒரு விளக்கம் தரப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இந்த முள், சாத்தானிடமிருந்தே வந்ததாகும்! சாத்தானுக்கு “அநேக” தூதர்கள் உண்டு.“வியாதி” சாத்தானிடமிருந்து வருகின்றது என்பதற்கு சந்தேகமேயில்லை. ஏனெனில், “**நன்மையான எந்த ஈவும்** பூரணமான எந்த வரமும்... பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகின்றது” (யாக்.1:17). வியாதி, நன்மையானதும் அல்ல பூரணமானதும் அல்ல. அது, நிச்சயம் சாத்தானிடத்திலிருந்தே வருகின்றது.

அல்லது, உங்களுக்கு எப்பொழுதும் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஒருவர், சாத்தானின் தூதனாயிருக்கக்கூடும். தேவன் அப்படிப்பட்ட மனிதரை உங்களை தொந்தரவு செய்வதிலிருந்து நீக்காததுபோல இருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், இதற்குப் பரிகாரம் தான் என்ன? ஆம்! வசனம் 9 அதற்குப் பதில் அளிக்கிறது, "என் கிருபை உனக்குப் போதும்!" எனவே, அந்த மனிதர் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் போதெல்லாம், நீங்கள் அறைக்குச் சென்று அங்கு தொங்கிக் கொண்டிருக்கும் "**என் கிருபை உனக்குப் போதும்**" என்ற வசனத்தை வாசியுங்கள். ஆம்! உங்கள் மாம்சத்தில் இருக்கிற எல்லா முட்களுக்கும் "அதுபோதும்".

சரி, ஏன் தேவன் தன்னுடைய ஊழியக்காரனை எப்போதும் துன்புறுத்திக் கொண்டிருக்கிற சாத்தானின் தூதனை நீக்காமல், அனுமதித்துக்கொண்டிருந்தார்? அதன் காரணத்தை 7-ம் வசனத்தில் வாசிக்கிறோம் "**.... நான் என்னை உயர்த்தாதபடிக்கு**" என பவுல் கூறினார். வியாதி மிகவும் மோசமான ஒன்றுதான், ஆனால் "என்னை நானே உயர்த்துவது" என்பது வியாதியைவிட பலகோடி மடங்கு மிகவும் மோசமானது! எனவே வியாதியின்மூலம் தேவன் ஒருவரை தாழ்மைப் படுத்த முடியுமென்றால், அதை அவர் நிச்சயம் செய்வார். இவ்வாறு நம்மை அவர் தாழ்மைப்படுத்துவதின் நோக்கம் என்ன? ஆம்! அவர் தாழ்மை உள்ளவர்களுக்கு "மாத்திரமே" (Only to the humble) தன்னுடைய கிருபையை அளிக்க முடியும். தேவனும் நமக்குத் தம்முடைய கிருபையைக் கொடுப்பதின் முக்கிய நோக்கம், நாம் பாவத்தை மேற்கொள்ளவும் திவ்விய சுபாவத்தில் பங்கு பெறுவதற்குமே ஆகும்! எனவேதான் பவுல் ஜெபித்த போதும் கூட தேவன் நம்மை இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் காணும் போது, இம்'முட்களை' எவ்வாறு மேற்கொள்வதென்று தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். ஆம், அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்மை நாமே தாழ்த்தவும் முறுமுறுப்பில்லாமல் தேவனை ஸ்தோத்தரித்து அவரை மகிமைப்படுத்தவும் கற்றுக் கொள்வோமாக!

**கேள்வி - 3 : பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை ஆவதற்கு நான் கண்ணீரோடு பல வருடங்கள் ஜெபித்தும்கூட, நான் அவ்விடுதலையைப் பெற்றுக்கொள்ளவில்லையே?**

இங்கு நாம் ஆண்டவருடைய வசனத்தையே விசுவாசிக்க வேண்டும் "எந்த மனிதனும் பொய்யன், தேவன் ஒருவரே உண்மை யுள்ளவர்" என வேதம் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். நாம் பாவத்தின் மேல் ஜெயஜீவியம் செய்வதற்கோ அல்லது பரிசுத்தாவியினால் நிரப்பப்படுவதற்கோ, யோவான் 7:37,38-ம் வசனத்தின்படி **இரண்டு "நிபந்தனைகள்" உண்டு. 1. தாகம் 2. விசுவாசம்.**

நீங்கள் உண்மையாகவே பரிசுத்தாவியின் நிறைவுக்காகத் தாகமாயிருந்தும், விசுவாசம் இல்லையென்றால், நீங்கள் பெற்றுக் கொள்ளமாட்டீர்கள். அல்லது, உங்களுக்கு விசுவாசம் இருந்தும், தாகம்

இல்லையென்றாலும் பெறமுடியாது. இதைத்தான் இயேசு மத்தேயு 5:6ல் "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்" என்றார். ஒருவேளை, நீங்கள் நீதிக்காக நான் பசிதாகம் அடைந்தும் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொல்வீர் களென்றால், இயேசு பொய்சொல்லியிருக்கிறார் என்றா பொருள்?! இல்லவே இல்லை! மாறாக அதன் காரணம் என்னவென்றால், நீங்கள் "போதுமான அளவு விசுவாசம்" கொள்ளவில்லை என்றுதான் பொருள்!

அல்லது, வேறொரு காரணமும் இருக்கக்கூடும். அதாவது, நீங்கள் சத்தியத்தை அறிந்துகொள்ளாததும் ஆகும். யோவான் 8:32-ல் "சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று இயேசு கூறினார். இன்று அநேக உண்மையான இந்துமக்கள் "பாவ மன்னிப்பைத்" தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ சுவிசேஷத்தை ஒருபோதும் கேட்டிருக்கமாட்டார்கள். ஒருநாள், அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்கும்போதோ, உடனே இரட்சிக்கப் பட்டுவிடுவார்கள். இதைப்போலவே, இந்தியாவின் அநேக பகுதிகளில், உண்மையான அநேக கிறிஸ்தவர்கள் பாவத்தின் மேல் பரிபூரண வெற்றியுள்ள வாழ்க்கைக்காக அலைந்து தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகின்றேன். இவர்கள் ஒருநாள், எப்படி பாவம் மேற்கொள்ளாத ஜெயஜீவியம் செய்ய முடியும் என்ற சத்தியத்தை கேட்கும்போதும், எப்படி சோதனை நேரத்தில் ஏற்ற சமயத்தில் சகாயம் பெறும் கிருபையை அடைய கிருபாசனத்தண்டை செல்ல முடியும் என்ற செய்தியைக் கேட்கும் போதும், அவர்கள் உண்மையாகவே தங்கள் ஜீவியத்தில் "விடுதலையை" அடைகிறார்கள்.

இவ்விடுதலையின் சத்தியத்தை நடைமுறையான ஓர் உதாரணத் தைக்கூறி உங்களுக்கு விளக்குகின்றேன். உங்கள் வாழ்க்கையில் குறிப்பிட்ட சில பகுதிகளில் அதிகம் சோதிக்கப்பட்டுத் தோல்வி அடைகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இது அநேகமாக, பாலிய இச்சை, கோபம், யார்மீதேனும் இருக்கும் கசப்பு அல்லது கவலை... போன்ற சில பகுதிகளே இன்று அநேகர் அடிக்கடி தோல்வி அடையும் பகுதி. இப்பகுதிகளில் (அல்லது வேறு ஏதேனும் சில பகுதிகளில்) அடுத்த தடவை சோதிக்கப்படும்போது, சோதனையை உதறித்தள்ளி, "தேவனே! நான் இந்த அசுத்தத்தை விரும்பவில்லை. நான் பரிசுத்தத்திலும் அன்பிலும் விசுவாசத்திலுமே ஜீவிக்க விரும்புகின்றேன்" என்று கூறுங்கள். நீங்கள் அந்த சோதனையை இவ்வாறு உதறிவிட்ட போதும் கூட மறுபடியும் அடுத்த சில நிமிடங்களில் அந்த சோதனை உங்களை அணுகும். மறுபடியும் மேற்கூறியவாறு அதை உதறித் தள்ளுங்கள். மறுபடியும் வரும். மறுபடியும் உதறித் தள்ளுங்கள். இப்போது நீங்கள் மிகவும் பெலனற்று..... அடுத்து எந்த நிமிடத்திலும் அந்தப் பாவத்தில் விழுந்துவிடக்கூடும் என்ற நிலைக்கு வந்து விடுகிறீர்கள். அப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? எபிரெயர்.4:16-ல் சொல்லப்பட்டது

போல இப்போது ஜெயியுங்கள். ஆம், "**கிருபாசனத்தண்டைக்குச் செல்லுங்கள்.**" "தேவனே! நான் இக்கெட்ட சிந்தைக்கு அல்லது பாவத்திற்கு என்னை ஒப்புக்கொடுக்க விரும்பவேயில்லை. ஆகிலும், நான் விழுந்து விடுவேனா என்று உணருகின்றேன்" என ஆண்டவரிடம் கூறுங்கள். ஆழ்கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் பேதுரு எவ்வாறு உதவிக்காக தேவனிடம் முறையிட்டானோ அதே போல, "ஆண்டவரே எனக்கு உதவும்!" என்று உள்ளத்தில் பலத்த கதறலோடு முறையிட்டுக் கேளுங்கள். இப்போது, ஆண்டவர் என்ன செய்வார்? ஆம்! **ஏற்ற சமயத்தில் சகாயம் பெறும் கிருபையை நீங்கள் நிச்சயம் அடைவீர்கள்!** இது என் சொந்த அனுபவத்தில் நான் நடைமுறையாக அனுபவிக்கும் ஜீவியத்தையே உங்களுக்குக் கூறுகின்றேன். இதே நடைமுறையை நீங்களும் உங்கள் வாழ்க்கையில் கைக்கொள்ளலாம். நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருந்து சோதனை நேரத்தில் உதவிக்காக குரல் கொடுப்பீர்களென்றால், நிச்சயம் நீங்கள் "ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை" அடைவீர்கள்! ஆம், பாவத்தை நிச்சயம் ஜெயிப்பீர்கள்!

**கேள்வி-4 : இரட்சிக்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்தாவியின் அபிஷேகமும் பெற்ற ஒருவர் 'விபச்சாரம்' செய்தால், அவர் தேவனால் மன்னிக்கப்படுவாரா? அல்லது அப்படிப்பட்ட பின்மாற்றக்காரருக்கு இரட்சிப்பே இல்லையா?**

அவருக்கு "மன்னிப்பு" உண்டு "இரட்சிப்பும்" உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர் தன்னைத்தானே தாழ்த்தி தன் பாவத்திலிருந்து ஆழமாய் மனந்திரும்ப வேண்டும். விபாச்சாரத்தில் வீழ்ச்சியடைந்த நபர், ஓர் தலைவனாகவோ அல்லது மேய்ப்பனாகவோ அல்லது போதகனாகவோ இருந்தால், அவர் அந்த ஊழியத்தை விட்டு விட்டு, ஒரு உலக வேலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறேன். ஏனெனில் இதற்குப் பிறகு ஜனங்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை இருக்காது. எனவே, நீங்கள் உங்கள் பாவத்திற்காக மனந்திரும்பிய பின்பு, உங்களைத் தாழ்த்தி உங்கள் அசெம்பிளியில் ஓர் சாதாரண விசுவாசியாக அமர்ந்திருங்கள். **ஆனால் இன்று அநேகர் பாவமன்னிப்பை மிக "லேசாக" எடுத்துக்கொண்டு,** "ஓ! என் பாவத்தை நான் அறிக்கை செய்துவிட்டேன். இப்போதோ நான் என் பழைய ஸ்தானத்திற்கு வருவேன்" என்று முயற்சிக்கிறார்கள்.

பாருங்கள்! தேவன் நம்மை மன்னித்தாலும் கூட, நாம் எதை விதைத்தோமோ அதை நாம் வாழ்க்கையில் அறுத்துதான் ஆக வேண்டும். தேவன் தாவீதினுடைய விபச்சார பாவத்தை மன்னித்தார். அதற்காக அவனை ஆட்சி பீடத்திலிருந்து இறக்கவில்லை. அதேபோல தாவீது அநேக மனைவிகளை வைத்திருந்தான் அப்படியிருந்தும் தாவீது சிங்காசனத்தில் இருக்க தேவன் அனுமதித்தார். ஏனெனில் அவன் பழைய ஏற்பாட்டின் நாட்களில் ஜீவித்துக் கொண்டிருந்தான். பரிசுத்தாவியானவர் இன்னமும் இருதயத்தில் வாசம்பண்ண ஊற்றப்படவும் இல்லை. 'ஆனால்' இதை புதிய ஏற்பாட்டின் நாட்களில் எதிர்பார்க்கவே

முடியாது! தேவன், தாவீதின் பாவத்தை மன்னித்த போதும்கூட, பாவத்தின் விளைவை அவன் தன் குடும்பத்தில் அறுக்கும்படிச் செய்தார். அவன் சொந்தமகன், அவன் மகளோடு விபச்சாரம் செய்தான்! அவன் மகன் தாவீதின் மனைவியோடு விபச்சாரம் செய்தான்! அவன் பிள்ளை ஒன்று இறந்துபோனது! எனவே நாம் பாவத்தை மிக லேசாக எண்ணாதபடிக்குத் தேவன், நம் வாழ்க்கையில் **அதன் 'அறுவடையை' அனுமதித்திருக்கிறார்.** இந்த உண்மையை நாம் மாறவாதிருக்கக்கடவோம்.

ஆகவே இப்படிப்பட்ட வெளிப்படையான பாவங்களில் வாழ்ந்து மனந்திரும்பிய உங்களுக்கு நிச்சயம் மன்னிப்பு உண்டு. "ஆனால்" அதற்கு ஒரு 'அறுவடையும்' உண்டு. எனவே அவ்வாறு நீங்கள் பலனை அறுக்கும் போது, உங்களை நீங்கள் தாழ்த்துங்கள். "தேவனே! நீர் சரியாகவே செய்திருக்கிறீர், இது எனக்கு வேண்டும்தான்!" என்று கூறுங்கள்.

**கேள்வி-5: நான் பல ஆண்டுகள் ஜெபித்தபின்பும் கூட என் வாழ்க்கையில் தேவ சித்தத்தை அறிய முடியவில்லையே ஏன்?**

தேவ சித்தம் என்றவுடன், இன்று அநேகர் வேதத்தில் எழுதப் படாதவைகளையெல்லாம் சிந்திக்க ஆரம்பிக்கிறார்கள். அதாவது, நான் எந்த வீட்டில் வசிக்க வேண்டும்? இந்த வாடகை வீடா அல்லது வேறொரு வாடகை வீடா? நான் போகும் இடத்திற்கு 8 மணி பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமா? அல்லது 9 மணி பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமா?..... இவையெல்லாம் வேதத்தில் எழுதப்படவேயில்லை "ஆனால்" **தேவசித்தத்தைப்பற்றி எழுதப்பட்ட அநேக காரியங்கள் வேதத்தில் உண்டு.** இவ்வாறு முதலில் நீங்கள் அறிந்திருக்கும் தேவ சித்தத்திலிருந்து ஆரம்பியுங்கள். உதாரணமாய், மீன்இறைச்சி சாப்பிடும் சிலர், மீனுடைய எலும்பையேக் கடித்துச் சுவைப்பார்கள். உங்களாலோ எலும்பைக் கடித்து சுவைக்க முடியாது. நீங்கள் என்ன செய்யலாம்? எலும்பை விட்டுவிட்டு அதன் சதைப்பகுதியை சாப்பிடுங்கள்! எனவே சில பகுதிகளில் உங்களால் தேவ சித்தம் அறிய முடியவில்லையென்றால் அறிந்த பகுதிகளில் தேவசித்தத்தை நிறைவேற்றுங்கள். உதாரணமாக, "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்." "உங்களை நிந்திக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்" "ஒருபோதும் பொய் சொல்லாதீர்கள்" "எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்," இப்பிரமாணங்கள் யாவும் மிகத் தெளிவாகவே இருக்கிறது. **இப்படிப்பட்ட அறிந்த தேவ சித்தத்தை** உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்து முடிப்பீர்களென்றால், நீங்கள் அறியாத பகுதிகளில் தேவன் "வெளிச்சம்" கொடுப்பார்!

ஆனால், நீங்கள் சொல்லலாம், சில காரியங்களுக்கு நான் இப்போதே முடிவு எடுக்க வேண்டுமே? ஆ! சகோதரனே, கடந்த ஆண்டுகளில் உங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் அக்கறை அற்று இருந்திருக்கும் போது, "இப்போது" உடனே உங்களால் சில முக்கியமான காரியங்களுக்குத் தேவ சித்தம் அறியவே முடியாது!! நீங்கள் எதை விதைத்தீர்களோ அதைத்தான் அறுப்பீர்கள். கடந்த 10 ஆண்டுகள் சுமாராக உங்கள்

கிறிஸ்தவ ஜீவியத்தில் அக்கறையற்று ஜீவித்தீர்கள். இன்னொருவரோ தன் 10 ஆண்டு கிறிஸ்தவ ஜீவியத்தில் உண்மையுள்ளவராய் இருந்தார். இப்போது தேவசித்தம் அறியும் நேரம் வரும்போது, உங்களைவிட இவரே எளிதாக தேவசித்தத்தை அறிந்து கொள்வார். இது இயற்கை தானே? ஏனெனில் இவர் ஆண்டவருடைய, சத்தத்தைக் கேட்டுப் "பழகியவர்". உதாரணமாக, உங்கள் தகப்பனார் ஒரு சுவற்றிற்கு சற்று அப்பால் பேசிக்கொண்டு வரும்போதே அவருடைய சத்தத்தை, அறிந்து கொள்வீர்கள். ஏனென்றால், அவருடைய சத்தத்தை நீங்கள் அடிக்கடி கேட்டபடியால் அறிந்து கொள்ளமுடியும். இதைப்போலவே, **நீங்கள் வேதம் வாசிக்கும் போது தொடர்ச்சியாக தேவ சத்தத்தைக் கவனமாய்க் கேட்டிருப்பீர்களென்றால்,** "உங்கள் இருதயத்தில்" அவர் பேசும்போது அவர் சத்தத்தை எளிதாக அறிந்து கொள்வீர்கள். ஆனால் ஒருவருடைய சத்தத்தை, சில மாதங்கள் அல்லது சில வருடங்கள் கழித்து கேட்பீர்களென்றால், அச்சத்தத்தை சரியாக நீங்கள் அறிந்து கொள்ளவே முடியாது. இப்படித்தான் இன்று அநேகரால் தேவசித்தம் அறிந்து கொள்ள முடிவது இல்லை. இவர்கள் தேவனுடைய வார்த் தையை ஒழுங்காகக் கவனித்துக் கேட்டு, "தங்கள் கவனித்துக் கேட்கும் திறனை" முறையாய் வளர்த்துக் கொள்ளாதவர்கள்!

**கேள்வி-6:** **என்னுடைய இரகசிய பாவங்களை பொதுவான இடங்களில் அறிக்கை செய்யலாமா?**

தேவையில்லை! இரகசியமாய் செய்யப்பட்டது, இரகசியமாகவே அறிக்கை செய்யப்பட வேண்டும். உங்கள் 'சிந்தையில்' பாவம் செய்திருப்பீர்களென்றால், அதை தேவன் மாத்திரமே பார்த்தார். எனவே தேவனிடம் மாத்திரமே அறிக்கை செய்தால் போதும். ஆனால் உங்கள் வாயினால் யாரையேனும் புண்படுத்தி பேசியிருப்பீர்களென்றால், நீங்கள் அதை தேவனிடத்திலும், அந்த சகோதரிடத்திலும் சென்று அறிக்கை செய்ய வேண்டும். ஒருவேளை 5 பேர் உங்களால் புண்படுத்தப்பட்டிருந்தால், அந்த 5 பேரிடமும் சென்று அறிக்கை செய்ய வேண்டும். ஆம், சகேயுவைப் போல! அவன் அநேக ஜனங்களை ஏமாற்றியிருந்தான். அவன் தன் பாவத்தை ஆண்டவராகிய இயேசுவிடம் அறிக்கை செய்தாலும்கூட, தான் ஏமாற்றின ஜனங்களிடம் சென்று, பணத்தைத் திருப்பிக்கொடுத்தான். எனவே, யாருக்கு முன்பாக எல்லாம் பாவம் செய்யப்பட்டதோ, அவர்களுக்கு முன்பாக எல்லாம், அந்தப் பாவம் அறிக்கை செய்யப்பட வேண்டும்.

**கேள்வி-7:** **நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்பொழுது, அப்பிரசங்கம் இன்னொரு சகோதரனுக்கு "இடறல்" பண்ணாதபடி கவனிப்பது அவசியம் அல்லவா?**

நம் பட்சத்தில், பிறர் வீணாக இடறலடையாதிருக்க பார்த்துக் கொள்வது நல்லதுதான். ஆனால், சில சமயங்களில் இதைக்குறித்து நாம் ஒன்றும் செய்யமுடியாது. நாம் சத்தியத்தைப் பிரசங்கிக்கும்போது, சத்தியம் சிலரை இடறப்பண்ணத்தான் செய்யும். 2 கொரிந்தியர் 2: 15-ல் "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்

ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்" என வாசிக்கிறோம். கிறிஸ்துவின் நற்கந்தம், எல்லோருக்கும் ஆசீர்வாதத்தையே கொண்டு வரும் என்று நாம் எண்ணலாம். ஆனால், இந்த நற்கந்தமோ, வசனம்16-ன்படி, "கெட்டுப்போகிற குருப்பிற்கு மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிற குருப்பிற்கு ஜீவவாசனையாகவும்" இருக்கிறது என கூறுவதைக் கவனித்தீர்களா?

இயேசு பிரசங்கித்தபோதும் அநேகர் இடறல் அடைந்தார்கள் என வாசிக்கிறோம். யோவான் 6-ம் அதிகாரத்தில், இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டு, இது கடினமான உபதேசம் என்று திரளான ஜனங்கள் இடறல் அடைந்து, திரும்பிச் சென்றார்கள். 11சீஷர்கள் மாத்திரமே மீந்திருந்தனர். எனவே, உங்கள் பிரசங்கம் கூட அநேகரை இடறப்பண்ணித் திரும்பிப் போகப்பண்ணுமென்றால், நீங்கள் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறீர்கள் என்பதை தெளிவாய் அறிந்து கொள்ளலாம். தேவன், ஜனங்களை கூட்டிச்சேர்ப்பவர்களுக்கு பிரதிபலன் அளிப்பதுபோல ஜனங்களை இடறித்திரும்பச் செய்பவர்களுக்கும் பாரபட்சமின்றி பிரதி பலனை அளிப்பார்!! ஆம், **நீங்கள் சத்தியத்தை உண்மையாய்ப் பிரசங்கிக்கும்போது, சிலர் இடறிப்போகத்தான் செய்வார்கள்.** அவர்கள் அப்படி இடறிப்போனால் போகட்டும், விட்டுவிடுங்கள்!

நீங்கள், ஒருவரும் மனம் புண்படாதபடி, பாலிஷாகப் பேசும் பிரசங்கியாராய் மாறுவீர்களென்றால், நீங்கள் தேவனுடைய தீர்க்கதரிசி அல்லவே அல்ல. மாறாக, நீங்கள் ஒரு "அரசியல்வாதி" (politician) என்பது தான் பொருந்தும்! பிரசங்கியே, நீர் தவறான அலுவலகத்துக்கு வந்துவிட்டீர்!?

**கேள்வி-8 : பெந்தேகொஸ்தே சபையில் ஞானஸ்நானம் எடுத்த ஒருவர், திருமணத்திற்காக சடங்காச்சார சபைக்குச்சென்றார். அப்படிப்பட்ட ஒருவரை, கர்த்தருடைய பந்தியில் பங்குபெற அனுமதிக்கலாமா?**

கர்த்தருடைய பந்தி என்று வரும்பொழுது, தேவனுடைய வசனம் என்ன சொல்லுகிறதோ அதையே நாமும் சொல்ல வேண்டும். பந்தியில் பங்குபெறும் "எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறியக் கடவன்" என்றே 1 கொரிந்தியர் 11-ம் அதிகாரம் கூறுகிறது.

நீங்கள் குறிப்பிட்ட அந்த சகோதரன் தன்னுடைய தோல்வியைக் ஒப்புக்கொண்டு மனந்திரும்பியிருப்பதாகச் சொல்லுவாரென்றால், நாம் அதை நம்பித்தான் ஆகவேண்டும். அந்த மனிதனின் "இருதயத்தில்" என்ன நடக்கிறது என்பதை நாம் அறியமுடியாது. ஒருவேளை, அவர் நம்மிடம் பொய்கூட சொல்லியிருக்கக்கூடும். "ஆனால்" அதை நாம் தேவனிடத்தில் விட்டுவிட வேண்டும்! 1கொரிந்தியர் 11-ம் அதிகாரத்தின் எச்சரிக்கை உள்ளது. "அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன்.... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதனிமித்தம்... அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களும்... அநேகர் நித்தரையும் அடைந்திருக்கிறார்கள்."

நீங்கள் கூறியது போன்ற விஷயமல்லாமல் வேறு "வெளிப் படையான பாவம்" செய்தவர்களாயிருந்தால், அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதிலிருந்து தடை செய்ய வேண்டும்! ஆனால், உள்ளான அந்தரங்கத்தில் பாவம் செய்வார்களென்றால், அவர்களின் அந்தரங்கம் நமக்குத் தெரியாது. அதை நாம் தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கே விட்டுவிட வேண்டும். அப்படிப்பட்ட ஒருவர், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதைத் தடை செய்யவே முடியாது. ஆனால் அந்த சகோதரனைத் தேவனே தன் கால அட்டவணைப்படி நியாயந்தீர்ப்பார்!!

**கேள்வி-9 : முழுநேர தேவ ஊழியருக்கும், விசுவாசிக்கும் இடையே வெளிப்படையான வித்தியாசம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்களே, எப்படி இந்த வித்தியாசத்தைக் காட்டமுடியும்?**

ஆம்! தேவ வசனத்தைப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டவர்களின் ஜீவியதரம், அப்படிப்பட்ட ஊழியத்திற்கு அழைக்கப்படாதவர்களைக் காட்டிலும் உயர்ந்ததாய் இருக்க வேண்டும் என்றே நான் நம்புகிறேன். ஏனெனில் அவர்கள் "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்லத்தகுதி உடையவர்களாய் இருத்தல் வேண்டும். அவர்கள் எல்லா காரியங்களிலேயும் முன் மாதிரியாய் இருத்தல் வேண்டும். பவுல் கூறும்போது நான் அநேக காரியங்களை உங்களுக்கு "மாதிரியாய்" இருக்கும்படிச் செய்தேன் என்று குறிப்பிட்டார். அப்போஸ்தலர் 20:18,19-ல் "நான் ஆசியா நாட்டில் வந்த முதல் நாள் தொடங்கி..... வெகு மனத்தாழ்மையோடு... கர்த்தரை சேவித்தேன்"என்று பவுல் கூறினார். **கர்த்தரை மனத்தாழ்மையோடு சேவிப்பது,** ஒரு கர்த்தருடைய ஊழியக்காரனிடத்தில் காணப்பட வேண்டிய மிகப்பெரிய முன்மாதிரி!

தொடர்ந்து 33-ம் வசனத்தில் 'நான் ஒருவனுடைய வெள்ளியை யாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் இச்சிக்கவில்லை' என்று குறிப்பிடுகின்றார். ஆ! பணம், பொருள் ஆகியவற்றில் ஓர் ஊழியக்காரன் இப்படியல்லவா மாதிரியாய் இருக்கவேண்டும். **பவுல் யாரிடமிருந்தும் ஒன்றையும் இச்சிக்கவேயில்லை!** அவன் பணக்கார வீடுகளைத் தேடி தனக்கு ஏதேனும் "காணிக்கை" கிடைக்கும் என்ற நோக்கத்தோடு "விசிட்" செய்யவே இல்லை. அங்குமிங்கும் சென்று தன் பிள்ளை களுக்குத் துணிகளோ, அல்லது பிள்ளைகள் படிப்பதற்கு பீஸ் பணமோ தேவையென்று பேச்சுவாக்கில் நைஸாக "குறிப்பு" (Hint) கொடுக்கவேயில்லை. அல்லது, தேவையை விளம்பரப்படுத்தும் ஜெப அறிக்கைகளும் அவரிடத்தில் இல்லை. இவையாவும் ஒரு தேவ ஊழியனுக்கு அபகீர்த்தி உண்டுபண்ணுபவையாகும்! இவையாவும் பாபிலோனிய ஊழியர் களுக்கு வேண்டியதுதான்! அவர்கள் 'அதைச் செய்யட்டும்'!! நாமோ 'இவை எல்லாவற்றிலிருந்தும் விடுதலையான எருசலேமைக்' கட்டிக் கொண்டிருக்கிறோம். பிறருடைய பணத்தைப் பெறுவதற்கான

'வழியை' தந்திரமாய் உண்டு பண்ணுகிறவர்களாய் இருக்கவே கூடாது. ஜனங்கள் காணும்படி கிழிந்த சட்டையும் போடக்கூடாது! இவையெல்லாவற்றிலும் மிகுந்த ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஏனெனில் நாம் வானத்திற்கும் பூமிக்கும் அதிபதியான தேவனை சேவிப்பவர்கள்! மெய்யான தேவனுடைய ஊழியனின் தரத்தில் ஜீவிக்க உங்களுக்கு விசுவாசம் இல்லையென்றால், நீங்கள் ஒரு வேலையைத் தேடி, வேலை செய்து கொண்டே ஊழியம் செய்யும்படி நான் உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றேன். இந்தியாவில் இப்படி எல்லோருமே செய்துவிடுவார்களென்றால், கிறிஸ்தவம் நம் தேசத்தில் இழந்துபோன நல்ல சாட்சியை மீண்டும் பெற்றுவிடும்!

உலக அலுவலக வேலையில் (Secular job) நிம்மதியாக உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒருவர், ஒரு முழுநேர ஊழியரைப் பற்றி எளிதாகக் குறைகூறிப் பேசலாம். ஒருவேளை, நீங்கள் அவர்கள் நிலையில் இருப்பீர் களென்றால் அவர்களைக்காட்டிலும் மிக மோசமாய் நடந்திருப்பீர்கள். எனவே இந்தக் கேள்வியைக் கேட்டவர் முழுநேர ஊழியராக இல்லாதிருந்தால், சகோதரனே, உங்களுக்கு முழுநேர ஊழியர் கடந்துவரும் பிரச்சனைகள் தெரியாது. எனவே நீங்கள் அவர்களை நிதானித்து நியாயம்தீர்க்கவும் முடியாது. **ஆனால், நீங்கள் முழுநேர ஊழியராய் இருந்தால், உங்கள் வாழ்க்கைத்தரம் மிக உயர்ந்ததாய் இருக்கவேண்டும்** என்பது அதிக நிச்சயம்! இனிமேல் நீங்கள் பிரசங்கிக்க வேறு இடங்களுக்குப் போகும் போதெல்லாம், தேவநாம மகிமைக்காகப் போகின்றீர்களே அல்லாமல் ஏதேனும் "காணிக்கை" வாங்கச் செல்ல வில்லை என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். ஆம், பிதாவின் முகத்திற்கு நேராய் மாத்திரமே ஜீவியுங்கள். கூட்டம் நடத்துபவர்கள் உங்கள் பிராயணச் செலவைத் தரவேண்டும் என்றுகூட எதிர்பார்க்கக் கூடாது. இங்குதான் தேவனுடைய ஊழியர், மனுஷனுடைய ஊழியர் என்று இரு பகுதியினர் பிரிக்கப்படுகிறார்கள். நீங்கள் மனிதரை சேவிப்பவர்களாய் இருப்பீர் களென்றால், அவர்களிடமிருந்து "காணிக்கை"யை எதிர்பார்ப்பீர்கள். தேவனை சேவிப்பவர்களென்றால், உங்கள் பிரதிபலனை "தேவனிடத்தில் இருந்து மாத்திரமே" (God alone) எதிர்பார்ப்பீர்கள். எனவே, யாரேனும் உங்களுக்கு ஒன்றைத் தரவில்லை அல்லது உங்களுக்குச் சரியான தங்கும் வசதி செய்துதரவில்லை என்ற குறைசொல் உங்களிடம் இருக்கவே கூடாது. நீங்கள் இவ்வாறு இருப்பீர்களென்றால் தேவன் அநேக காரியங்களை உங்களுக்காக நிச்சயம் செய்வார்!!

### கேள்வி-10 : எல்லாவற்றிலேயும் எப்படி ஸ்தோத்திரம் செய்வது?....

நடந்த ஒரு நிகழ்ச்சியை இதற்கு உதாரணமாய் கூறுகின்றேன். நான் ஒரு கூட்டத்திற்கு பேசும்படி அழைக்கப்பட்டிருந்தேன். கூட்டம் முடிந்ததும் திரும்புவதற்கு "பெர்த் டிக்கட்" (Berth Ticket) ரிசர்வ் செய்ய, முன்னமே அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் இதை

அவர்கள் மறந்துவிட்டுப் பின் தாமதமாய் சென்றபடியால் உட்காருவதற்கு "சீட் டிக்கட்" (Seat) மாத்திரமே கிடைத்தது. நான் அந்த டிக்கட்டுடன் ரயில் வண்டியில் அமர்ந்தேன். உடனே, பிசாசு என்னிடம் வந்து "பார்! எவ்வளவு யோசனையில்லாத ஜனங்கள் இவர்கள், நீ ரிசர்வ் செய்ய பல நாட்களுக்கு முன் எழுதியிருந்தும், நிர்விசாரமாய் இருந்திருக்கிறார்களே" எனக்கூறினான். இப்படிப்பட்ட சிந்தையைப் பிசாசு கொடுத்தால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ஆம்! நாம் அதற்கு செவிசாய்க்கவே கூடாது. தேவன் தான் அவர்களை மறக்க அனுமதித்தார் என்று நான் விசுவாசித்தேன். எனவே யாரையும் குறைகூறுவதற்குப் பதிலாய் "பெர்த் டிக்கட்" எடுக்க மறந்த சகோதர சகோதரிகளுக்காக நான் தேவனுக்கு நன்றி கூறித் துதிக்க ஆரம்பித்தேன். 'இரவு முழுவதும் நான் இப்படியே உட்கார்ந்திருக்கப் போவதற்காக உமக்கு நன்றி' என்று கூறி அமர்ந்திருந்தேன். எனக்கு அடுத்த சீட்டில் ஒரு ரோமன் கத்தோலிக்க மூதாட்டி சிஸ்டர் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் சொன்னார்கள். "சகோதரனே, நான் மேலே உள்ள என் "பெர்த்" சீட்டிற்கு என்னால் ஏற முடியாது. எனவே நீங்கள் விரும்பினால் அதை உபயோகிக்கலாம்" என்றார். நானும் அதற்கு சம்மதித்தேன். பாருங்கள்! நான் குறைகூறி முறுமுறுப்பதியிலிருந்து என்னை இரட்சிக்கவே தேவன் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். அந்த அவருடைய விருப்பம் நிறைவேறியவுடன் என்னுடைய 'பெர்த்' அல்லது வேறு காரியங்களை அவரே பொறுப்பெடுத்துக் கொண்டார்.

இன்னொரு தடவை, நான் "ரிசர்வேஷன்" இல்லாத பெட்டியில் (Unreserved-Compartment) பயணம் செய்தேன். அங்கு என் சரீரம் பாதி உட்காரும் அளவிற்குத்தான் இடம் கிடைத்தது. நான் ஆண்டவரிடம், 'தேவனே நான் இப்படியே 8 மணி நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும்! சரி, நான் அப்படியே 8 மணி நேரம் உம்மைத் துதித்து அமர்ந்திருக்கப் போகிறேன்' என்று கூறினேன். இவ்வாறு நான் அமர்ந்திருக்கவேண்டிய நிலைக்கு காரணம் என்னவென்றால், எனக்கு அடுத்த சீட்டில் அமர்ந் திருந்த ஒருவர் தன் கால்களை விசாலமாய் மடக்கி உட்கார்ந்திருந்தார். நான் அவரிடம் 4 அல்லது 5 அங்குலம் மாத்திரம் இடம் தருமாறு வேண்டிக்கேட்டும் மறுத்துவிட்டார். எனவே நான் இப்போது என்ன செய்யவேண்டும்? **நன்றிமாத்திரமே சொல்லப்போகிறேன்!** (Only give thanks). நான் சொன்னேன், 'தேவரீர் என்னிடம் எந்த குறை சொல்லும் இல்லை. ஆனாலும், நான் அந்த 4 அல்லது 5 அங்குலம் இடம்பெற விரும்பினால், நீர் இந்த மனிதனை "பாத்ரூமிற்கு" சில நிமிடங்களில் அனுப்ப உம்மால் முடியும். அப்போது, நான் எனக்குப் போதுமான 5 அங்குல இடத்தைப் பெற்றுக்கொள்வேன்' என்று ஜெபித்தேன். இந்தச் செயல் தேவனுக்கு கடினமானது என்று எண்ணுகின்றீர்களா? இல்லை! பத்து நிமிடத்திற்குள் அந்த மனிதர் பாத்ரூமிற்குச் சென்றார்! நானும் என்னுடைய 5 அங்குல இடத்தைப் பெற்றுக் கொண்டேன்!! ஆம், **நாம் முதலாவது சிறுசிறு காரியங்களிலும் அவரைத் துதித்து நன்றி சொல்லவே** தேவன்

*விரும்புகின்றார். நீங்கள் உங்கள் பகுதியை நிறைவேற்றும்போது, தேவன் உங்களுக்குரிய காரியங்களைத் தானே பொறுப்பெடுத்துக் கொள்வார். நீங்கள் அவரை கனப்படுத்தினால், அவர் நிச்சயம் உங்களை கனப் படுத்துவார்!!*

***கேள்வி-11 :*** **நான் என் பாவங்களையெல்லாம் தேவனிடம் அறிக்கை செய்து, இரட்சிப்பின் நிச்சயத்தையும் பெற்றுக் கொண்டேன். என்னுடைய பாவங்கள் எல்லாம் நியாயத்தீர்ப்பின் நாளில் வெளிப்படுத்தப்படுமா?**

*"நான் உங்கள் பாவங்களை நினையாமலும் இருப்பேன்", என்று தான் தேவன் சொல்லுகிறார். எனவே, நீங்கள் அறிக்கை செய்து, விட்டு விட்டப் பாவங்கள் ஒருபோதும் நியாயத்தீர்ப்பின் நாளில் வெளிப் படுத்தப்படாது. ஏனெனில் அவையாவும் கிறிஸ்துவின் இரத்தத்தால் முற்றிலும் கழுவப்பட்டு விட்டது. இருப்பினும் "ஒருவேளை என் பாவங்கள் நியாயத்தீர்ப்பின் நாளில் வெளிப்படுத்தப்படுமென்றால், என்னுடைய நிலை எப்படியிருக்கும்?" என்ற கேள்வியை எனக்கு நானே கேட்டிருக்கிறேன். அப்போது நான், எங்கேயினும் ஓடி என்னை ஒளித்துக் கொள்வேனோ? இல்லை! நான் அங்கேயே நின்று, "தேவரீர்* **இவ்வளவு மோசமான பாவியாகிய நான் உம்முடைய கிருபையினால்** *இரட்சிக்கப் பட்டிருக்கிறேன் என்று இந்த உலகம் அறிந்து கொள்ளட்டும். நீர் நீதிமானை அல்ல, என் போன்ற பாவியை மீட்கவே வந்தீர்" என்று கூறுவேன். எனவே, உங்கள் பாவங்கள் அந்நாளில் வெளிப்படுத்த படாது என்பது நிச்சயம் என்றாலும், அதைக் குறித்து நீங்கள் பயந்து கொண்டிருப்பீர்களென்றால், உங்கள் ஜீவியத்தில்தான் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அர்த்தம்.....!!*

***கேள்வி-12:*** **நாம் ஒய்வுநாளை (Sabbath day) கட்டளைகளில் ஒன்றாகக் கடைப்பிடிக்க வேண்டுமல்லவா?**

*யாத்திராகமம் 31:12-17-ல் "நீங்கள் என் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும்.... அது என்றென்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும் (SIGN)" என்று கர்த்தர் சொன்னார். எனவே மற்ற எல்லா பத்துக்கட்டளைகளிலும், இந்த ஒரு குறிப்பிட்ட கட்டளை "தேவனுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே ஒரு* **அடையாளமாயிருந்தது**". *இந்த இஸ்ரவேலர்கள் ஓய்வுநாளை ஆசரியாத படியால் அவர்களை தேவன் பாபிலோனுக்குச் சிறையாகும்படி ஒப்புக் கொடுத்தார் (எசே20:12-20). அச்சமயம் எசேக்கியேல் தீர்க்கதரிசியை தேவன் பாபிலோனுக்கு அனுப்பி "ஓய்வுநாள் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும்" உள்ள அடையாளம் என்று சொல்லச் சொன்னார். ஆனால் "நாமோ" இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் அல்லவே!*

*மேலும் கொலோசெயர் 2:16,17-ல் ".... ஓய்வுநாட்களையும் குறித்து, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" ஏனெனில், "அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின்*

பொருள் கிறிஸ்துவைப் பற்றினது'', என்ற விளக்கத்தை வாசிக்கிறோம். எனவே ஓய்வுநாள் ஆசரிப்பு, ஓர் நிழலாகவும், கிறிஸ்துவே அதன் பொருளாகவும் இருக்கின்றார். அந்தக் கிறிஸ்துவைப்பற்றின பொருள் யாது? **அவர் அளிக்கும் ''உள்ளான ஓய்ந்திருத்தலே (இளைப்பாறுதலே)''** ஆகும். எனவே புதிய ஏற்பாட்டில் இப்போது நான், ''அனுதினமும்'' கிறிஸ்துவுக்குள் இளைப்பாறுதலைப் (Sabbath) பெற்று ஜீவிக்கின்றேன். ஆம், பழைய ஏற்பாட்டின்படி வெளிப்படையான எருதுகளையும் காளைகளையும் பலியிடுவதை நான் விட்டுவிட்டது போலவே, ''வெளிப்படையான'' ஓய்வுநாள் ஆசரிப்பையும் விட்டுவிட்டேன்!

**கேள்வி-13 : நகை ஆபரணங்களை அணியும் பெண்கள், ''தேவன் இருதயத்தைத்தான் பார்க்கிறார். வெளியரங்கமான தோற்றத்தைப் பார்ப்பதில்லை'' என்று கூறித் தங்களை நியாயப்படுத்திக் கொள்கிறார்களே? அவர்கள் 1 பேதுரு 3:3-ம் வசனத்தை ஏற்றுக்கொள்வதும் இல்லையே, இதற்கு பதில் என்ன?**

1 பேதுரு 3:3 மிகவும் தெளிவாய் இருக்கின்றது. ஸ்தீரியானவளுக்கு புறம்பான அலங்கரிப்பு ''இருக்கவே கூடாது'' அதாவது, LET IT NOT BE என தெளிவாய் கூறப்பட்டுள்ளது. அலங்கரிப்பில் மூன்று பகுதி இங்கு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 1. மயிரைப்பின்னுதல் 2. பொன் ஆபரணங்களை அணிதல் 3. விலை உயர்ந்த வஸ்திரங்களை உடுத்துதல். 1தீமோத்தேயு 2:9-ம் இதையே கூறுகின்றது. ஆகவே ஆண்டவருக்குப் பிரியமாய் வாழவிரும்பும் ஓர் ஸ்திரீ இந்த மூன்று பகுதிகளில் மிகுந்த ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

1. உங்கள் முடியை சீவும் விதம், ஒரு ஒய்யார ''அலங்கரிப்பை'' போல் இராமல் இருக்க எச்சரிக்கையாய் இருங்கள். முதாலவது இதுபோன்ற முடி அலங்கரிப்பு பயங்கரமாக நேரத்தை வீணாக்கும்.

2. ஆபரணங்களை அணியாதீர்கள். அது தேவனை குறைசொல்லி முறுமுறுப்பதற்கு ஒப்பாகும். ''தேவனே நீர் என் முகத்தைப் படைத்த விதத்தைக் குறித்து நான் சந்தோஷமாயில்லை. எனவேதான் சில தங்க ஆபரணங்களை அணிந்து என்னை நான் அழகுபடுத்துகின்றேன்'' என்று குறைகூறி சொல்வதற்கு ஒப்பாகும்.

3. உங்கள் பணத்தை விலைஉயர்ந்த வஸ்திரங்கள் வாங்குவதில், அல்லது ''அதிகமான'' சேலைகள் வாங்குவதில் வீணாக்காதீர்கள். இவையெல்லாம் மாயைகள்!

இவ்வாறு இந்த மூன்று காரியங்களும் மிகத் தெளிவாகவேயிருக்கிறது. தேவன் இருதயத்தையே பார்க்கிறார் என்று சொல்லும் பெண்களோடு, நானும் அதை ஒத்துக் கொள்கிறேன். உங்கள் கூற்றின்படி உங்களுக்குள் இந்த கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். **ஆபரணங்களை அணியும் என் இருதயத்தில் உண்மையாய் இருக்கும் விருப்பம் என்ன?** நான் ஏன் ஆபரணங்களை அணிகின்றேன்? ஏன் மற்ற புறம்பான அலங்கரிப்பை செய்கின்றேன்? நான் ஏன் வேதம் 'சொல்லுகிறபடியே' (Exactly) கீழ்ப்படிய முடியாது?

இன்று அநேக ஜனங்கள் தேவ வசனத்திற்கு எவ்வளவு குறைந்தபட்சம் முடியுமோ அவ்வளவு குறைவாய் கீழ்ப்படிந்தால் போதும் என திருப்திகொண்டிருப்பது நம்மை ஆச்சரியத்தி லாழ்த்துகிறது. உதாரணமாக, நான் சில சகோதரிகள் செய்கின்ற காரியத்தைச் சொல்ல விரும்புகிறேன். வேதத்தில் ஸ்தீரிகள் தங்கள் "தலையை" முக்காடிட்டு மூடவேண்டும் என்று கட்டளையிடுகிறது. ஆனால், சில சகோதரிகள் இந்த வசனத்திற்கு கீழ்ப்படிகிற விதம் எப்படியென்றால், அவர்கள் முக்காடிட்டு மூடினாலும், முழுவதும் மூடாமல், "கொண்டையை" மாத்திரம் மூடுவார்கள்!! இது என்ன? ஸ்டைல்!! நான் யாரையுமே நியாயந்தீர்க்கவரவில்லை. தற்செயலாய் உங்கள் சேலை நழுவியிருக்குமென்றால் பரவாயில்லை. ஆனால், முழு தலையையும் மூடினால் அசிங்கமாக இருக்கும் என்று அவ்வாறு ஸ்டைலாக மூடினால், சகோதரியே தேவன் உங்கள் இருதயத்தைப் பார்க்கிறார் என்பதை மறந்துபோகாதீர்கள்!

மாயையின்மேல் உள்ள அன்பு, குறிப்பாக பெண்களுக்குள் எவ்வளவாய் குடிகொண்டு அவர்களை ஆட்டிப்படைக்கிறது பாருங்கள்! மயிர், ஆபரணம், விலை உயர்ந்த ஆடைகள் ஆகிய இந்த மூன்று பகுதிகளின் அலங்கரிப்புகளில் சகோதரிகள் தங்கள் இருதயத்தை நன்கு சோதித்தறிய வேண்டும். **நான் இப்புறம்பான அலங்கரிப்பைச் செய்வதின் நோக்கம் (Motive) என்ன?** என்று அவர்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்கவேண்டும். அதற்கு பதிலை தேவனிடம் கூறுங்கள், போதும்!! என்னைப் பொறுத்தவரையில் வேதத்தை சார்ந்துகொண்டு, ஸ்திரீகள் 'எந்த' ஆபரணமும் அணியக்கூடாது என பிரசங்கிப்பதில் உறுதியாய் இருக்கிறேன்.

**கேள்வி-14 : மற்றவர்கள் ஜெபிக்கும்போது நாம் 'ஆமென் அல்லேலூயா' என்று சொல்லலாமா?**

தாராளமாய்ச் சொல்லலாம்! ஆனால் அவ்வாறு சொல்வதினால், மற்றவர்களுடைய புகழ்ச்சியைப் பெறுவதற்கான நோக்கம் கொஞ்சமும் இருக்கக்கூடாது.

**கேள்வி-15: பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றதற்கு அந்நிய பாஷை பேசுவதுதான் அடையாளமா?**

அப்போஸ்தலர் 1:8 "பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் (Power) அடைவீர்கள்" என்றே கூறுகிறது. எனவே பரிசுத்தாவியைப் பெறும்போது **முதலாவது "வல்லமை"யைப் பெறுகின்றோம்** என்று தான் நான் விசுவாசிக்கிறேன். ஆம்! அதுதான் முக்கியம்! மேலறையில் 10 நாட்கள் காத்திருந்து ஜெபித்துக் கொண்டிருந்த சீஷர்களிடம் சென்று எதற்காக இவ்வாறு காத்திருக்கிறீர்கள்? என்று கேட்பீர்களென்றால், "பரிசுத்தாவியின் அபிஷேகம்" பெறுவதற்காக என்று சொல்லியிருப்பார்கள். மேலும் அவர்களிடம் பரிசுத்தாவியைப் பெறுவதை எப்படி அறிவீர்கள்? என்று கேட்டால், அவர்கள் என்ன பதில் கூறியிருப்பார்கள்? சில நாட்களுக்கு

*முன்பு இயேசு சொன்ன "...நீங்கள் பெலன் அல்லது வல்லமை அடைவீர்கள்" என்ற பதிலைத்தான் சொல்லி இருப்பார்கள். எனவே நாம் பெறும்* **"வல்லமையே" பிரதானம்** *என்பதை மறவாதீர்கள்.*

*ஆனால் அப்போஸ்தலர் 2:4-ல் அவர்கள் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டபோது, அந்நியபாஷையும் பேசினார்கள் என்று எழுதப் பட்டிருக்கிறது. இவ்வாறு தேவன் "முதலாவது" செயல்படுத்தியதை எந்தத் தவறும் செய்யாமல், சரியாகவே செய்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன். மனிதன் ஒன்றை உருவாக்கிப்பின் திருத்தம் செய்வதுபோல தேவன் செய்வதேயில்லை. மோட்டார் சைக்கிளை மனிதன் உருவாக்கினால் அதற்கு ஒரு மாற்றத்தை* (Modification) *அடுத்த வருடம் செய்வான்* Mark-*2,3,4,5-என்று மாடலை மாற்றுவான். ஆனால், தேவன் "முதலாவது" ஒன்றைச் செய்வாரென்றால், மிகச்சரியாகவே செய்வார். எனவே, தேவனுடைய பரிபூரண சித்தத்தில்,* **பரிசுத்தாவியைப் பெறுகின்ற ஒவ்வொருவரும் முடிவில் அந்நிய பாஷையைப் பேசுவார்கள்** *என்பதை வேதத்தின்படி அப்படியே நானும் விசுவாசிக்கிறேன். அப்போஸ்தலர்.2:4 அப்படித்தானே இருக்கிறது. "ஆனால்" பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றதற்கு அந்நியபாஷைதான் அடையாளம் என்பதை வேதம் போதிக்கவில்லை.* **அடையாளம் "வல்லமை" தான்!** *நாம் இந்த இரண்டையும் சரியான இடத்தில் நிறுத்த வேண்டும். வல்லமை தான்* (Power) *அந்நியபாஷையைவிட* (Tongues) *மிகவும் முக்கியம் என்ற உண்மையை நாம் யாவரும் விளங்கிக் கொண்டால், நம் ஜீவியதரம் வலிய சாட்சி உடையதாய் இருக்கும்!*

***கேள்வி-16:*** **சுவிசேஷ ஊழியத்தைக் (Evangelism) குறித்து உங்கள் போதனை என்ன?**

*இரண்டு கட்டளைகளில்* (Two Commissions) *இதை விசுவாசிக்கிறோம்.*

*1. மாற்கு 16:15, "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்".*

*2. மத்தேயு 2:19, "நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்".*

*இந்த இரண்டு கட்டளைகளையும் ஒன்றாய் இணைத்தால் 'சத்தியம்' தெளிவாகும். நீங்கள் போய்,* **சுவிசேஷத்தை மாத்திரம் பிரசங்கித்து, சீஷர் ஆக்கவில்லையென்றால்,** *நீங்கள் கட்டளையை முழுமையாய் நிறைவேற்றவில்லை.*

*சிலர் சுவிசேஷத்தை மாத்திரம் பிரசங்கிப்பதில் அக்கறை செலுத்துகிறார்கள். இந்தியாவில் "அநேகர்" இதைச் செய்கிறார்கள். ஆனால் மத்தேயு 28:19-ல் சொல்லப்பட்ட 'சீஷராக்குங்கள்' கட்டளையை நிறைவேற்ற வெகு சிலரே இருக்கிறபடியால், இப்பகுதி மிகவும் தேவை நிறைந்ததாய் காணப்படுகின்றது. ஆகவே சுவிசேஷக் கட்டளை இரு பக்கத்தை உடையதாய் இருக்கிறது. ஒரு பெரிய மரஉருளையின் ஒரு பக்கத்தில் 25 பேரும், அடுத்த பக்கத்தில் ஒருவர் மாத்திரம் தூக்கிக்*

கொண்டிருந்தால், நீங்கள் யாருக்கு உதவி செய்ய முன்வருவீர்கள்? ஒருவர் மாத்திரம் நிற்கும் பக்கம் அல்லவா? ஆம்! அதைத்தான் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அநேகர் இன்று, 'பாவமன்னிப்பைக்' குறித்துப் பிரசங்கம் செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு எதிராளி அல்ல. அவர்கள் மர உருளையின் ஒரு பக்கத்தைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும். ஆனால், ஆள் குறைவாய்.... பளு அதிகமாய்... இருக்கும் பகுதிக்குச்சென்று நாங்கள் உதவ விரும்புகின்றோம். இவ்வாறு சுவிசேஷத்தின் 'சமநிலையை' (Balance) காக்கவே நாங்கள் விரும்புகின்றோம்.

**கேள்வி 17: தெய்வீக சுகத்தைக் குறித்தும், மருந்தைக் குறித்தும் உள்ள உங்கள் அபிப்பிராயம் என்ன? தேவன் உங்கள் கண்பார்வையை சுகமாக்க முடியும் என்று உங்களால் விசுவாசிக்க முடியாதா? ஏன் கண்ணாடி அணிந்திருக்கிறீர்கள்?**

ஆம்! தேவனால் என் கண்ணை சுகமாக்கமுடியும் என்று விசுவாசிக்கிறேன். என் வழுக்கை தலைக்கு தேவன் முடியைத் தரமுடியும் என்றும் நான் விசுவாசிக்கிறேன். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? மேலும், வரப்போகிற தேவனுடைய இராஜ்ஜியத்தில் இப்போது இருக்கிற என்னுடைய நரை முடிகளும் இருக்காது என்றும் நான் விசுவாசிக்கிறேன். ஆம்! நாம் நித்தியத்திற்குள் பிரவேசிக்கும் போது, பூரணமான 'சரீர மீட்பு' உண்டு.

புதிய ஏற்பாட்டில் ஒரு இடத்தில் கூட 'மருந்து எடுக்காதிருப்பாயாக' என்று எழுதப்படவில்லை. அப்படி இருந்திருக்குமென்றால், அதை நான் பிரசங்கித்திருப்பேன். பவுல் தீமோத்தேயுவின் வயிற்றுக் கோளாறுக்கு சிறிது திராட்சரசத்தைக் குடிக்கும்படி கூறி எழுதினார். நீங்கள் நானுமாக இருந்திருப்போமென்றால், தீமோத்தேயுவை ஜெபிக்கச் சொல்லியிருப்போம்! ஆனால் பவுலோ, நான் போதுமான அளவு உனக்காக ஜெபித்துவிட்டேன். ஆனால் இன்னமும் உனக்கு அந்த வயிற்றுக் கோளாறு இருக்கத்தான் செய்கின்றது! எனவே இப்போது, நீ சிறிது திராட்சரசம் குடிக்கும்படி உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் என்றார்!!

**மருந்தெடுப்பதென்பது விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது.** சிலருக்கு அதிகம் விசுவாசம் இருக்கும். சிலருக்கு அதிகம் விசுவாசமிருக்காது. எனவே இது போன்ற விஷயத்தில் நாம் அவரவருடைய விசுவாசத்தின் அளவுப்படி ஜீவிக்க அனுமதிக்க வேண்டும். வேதத்தில் தெளிவாய் எழுதப்பட்ட காரியங்களைக் குறித்து நாம் இங்கு குறிப்பிடவில்லை. உதாரணமாய், 'பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது' என்ற வசனம்! 'இங்கு' எல்லோருக்கும் விசுவாசம் நிச்சயம் வேண்டும்!! 'உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்!' இவ்வசனத்திலும் எல்லோருக்கும் விசுவாசம் நிச்சயம் இருக்க வேண்டும்!! ஆனால் அநேக காரியங்கள் வேதத்தில் திட்டமாய் எழுதப்படாமல் இருக்கிறது. சிலர் அதிகமான பிள்ளைப் பெறுவதற்கு விசுவாசம் உண்டு. பெங்களூரில் ஒருவருக்கு 26-பிள்ளைகள் உண்டு. உங்களுக்கு அந்த விசுவாசம் உண்டா? வேதம் அதைக் குறித்து என்ன

சொல்லுகிறது? ஆம்! உங்களுக்கு விசுவாசம் இருந்தால் அது நல்லது தான். ஆனால் அதற்கு உங்களிடம் விசுவாசம் இல்லையென்றால், சகோதரனே, அதற்காக நீங்கள் முயற்சிக்க வேண்டாம். இதைப் போலதான் மருந்தும், மருந்து இல்லாமலேயே நீங்கள் சுகமாக முடியும் என்று விசுவாசித்தால், அது நல்லதுதான். அந்த விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள். ஆனால் அந்த விசுவாசம் இல்லாத இன்னொருவரைப் 'பலவந்தம்' செய்யாதீர்கள். அது, ஒருவரை 26- பிள்ளைகளைப் பெறுவதற்கு பலவந்தம் செய்வதற்கு ஒப்பாகும்!! இதைப்போன்ற அநேக காரியங்களில், நம் எல்லோருக்கும் ஒரே விதமான அளவு விசுவாசம் இருப்பதில்லை. ஒன்றில் விசுவாசம் இருக்கும் ஒருவருக்கு, இன்னொன்றில் இருப்பதில்லை. மருந்தில்லாமல் சுகமாக விசுவாசம் உள்ள அநேகர், இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெறுவதற்கு விசுவாசம் இல்லாதிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். 16 அல்லது 18 பிள்ளைகளைப் பெற்றிருக்கிற குடும்பங்களைப் பார்த்திருக் கிறேன். ஆனால் அவர்களுக்குப் மருந்தில்லாமல் சுகமாக்கக்கூடிய விசுவாசம் இருப்பதில்லை. ஒரு பகுதியில் மிக உறுதியாகவும் இன்னொரு பகுதியிலோ பெலவீனமாயும் இருக்கின்றனர்.

இவ்வாறாக, ஒருவர் எல்லாவற்றிலும் உறுதியாய் இருக்கத் தேவன் அனுமதிப்பதில்லை என்ற உண்மையை நாம் அறிந்திருக்கின்றோம். இல்லாவிட்டால் அவை நம்மைப் பெருமைகொள்ளச் செய்துவிடும். இதனிமித்தமே தேவன் நம்மைச் சில பகுதிகளில் பெலவீனமாய் வைத்துள்ளார். உங்களை நீங்களே தாழ்த்துவீர்களென்றால், சில பகுதிகளில் நீங்கள் உறுதியாயும், சில பகுதிகளில் பெலவீனராயும் இருப்பதை நீங்களே கண்டுகொள்வீர்கள். ஒரு வீட்டில் ஒரு பிள்ளை, கணக்கிலும், ஒரு பிள்ளை விஞ்ஞானத்திலும், ஒரு பிள்ளை ஆங்கிலத்திலும் கெட்டிகாரர்களாய் இருப்பதைப்போல!! சற்று பொறுமையாய் ரோமர். 14 - ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். இவை எல்லாவற்றிற்கும் உரிய விடை அதில் தெளிவாக உள்ளது.

ஆனால், 'நான்' தெய்வீக சுகத்தை (Divine Healing) விசுவாசிக் கிறேனா? ஆம்! விசுவாசிக்கிறேன்! ஜெபித்தவுடன் 'உடனடியாக' அநேகர் சுகமாயிருக்கிறதை நாங்கள் கண்டிருக்கிறோம். அநேக தடவைகளில் என் சொந்த வாழ்க்கையிலும் இதை அனுபவித்திருக் கிறேன். ஃபுளு அல்லது விஷக்காய்ச்சல் போன்று வரும்போது, இயேசுவின் நாமத்தில் வியாதிக் கிருமிகளைக் கடிந்து, "நான் இப்போது என் ஆண்டவருக்கு ஊழியம் செய்யக் கூட்டத்திற்குச் செல்லவேண்டும்! வியாதிக்கிருமிகளே, இயேசுவின் நாமத்தில் அகன்று போங்கள்" என்றவுடன் உடனே சுகம் பெற்றிருக்கிறேன்.

எனவே, தெய்வீக சுகத்தை நான் விசுவாசிக்கிறேன். 'ஆனால்' தேவனுடைய பணிகளுக்கு இடையூறு இல்லாத 'என்னுடைய கண்ணாடிகள்' போன்றவைகளில் இவற்றைத் தேவன் அகற்ற

*வேண்டும் என்று ஒருபோதும் ஜெபித்ததே இல்லை. ஒருவேளை, நான் சிறையில் அடைக்கப்பட்டு, என் கண்ணாடிகள் பறிக்கப்படுமென்றால், நான் என் வேதாகமத்தை வாசிக்க முடியாது. ஆ! இப்போது நான், "தேவரீர் என் கண்ணாடியை நான் இழந்து போனேன். உம்முடைய வேதத்தை வாசிக்க எனக்கு உதவும்" என்று ஜெபிப்பேன். ஆனால் இன்று வரை என் கண்ணாடிகள் தேவனுடைய பணிக்குத் தடையாய் இருக்கவே இல்லை. என் வழுக்கைத் தலைக்கு நான் முடியைக் கேட்பது எவ்வளவு அறிவீனமோ அதற்கு ஒப்பானதுதான் இந்தக் கண்ணாடி விஷயமும்!!*

***கேள்வி-18:*** **இயேசுகிறிஸ்துவின் போதகங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டை மாத்திரம் வாசித்தால் போதுமா?**

*1 தீமோத்தேயு 3:16 "வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று கூறுகின்றது. இருப்பினும் புதிய ஏற்பாட்டை நாம் அதிகம் வாசிக்க வேண்டும் என்றே நான் விசுவாசிக்கிறேன். ஏனெனில் புதிய ஏற்பாட்டில்தான், "கிறிஸ்துவுக்குள்ளான பூரண வெளிப்பாடும்" அடங்கியுள்ளது. ஆனால், பழைய ஏற்பாடும், 1கொரி 10:11-ன்படி "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாகவும்.... நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படியும் எழுதப்பட்டிருக்கிறது." எனவே நாம் பழைய ஏற்பாடும் வாசிக்க வேண்டும்.*

***கேள்வி-19:*** **திரித்துவதற்கு (Trinity) விரோதமான பிரசங்கங்களைப் பற்றி அபிப்பிராயம் என்ன?**

*வில்லியம் பிரன்ஹாமைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். உங்கள் எல்லோருக்கும் பாலசீர்லாறியைப் பற்றியும் தெரியும். இவர்தான் இந்தப் போதகத்தை இந்தியாவுக்குக் கொண்டு வந்தவர். இவர்கள் பெயரைக் குறிப்பிடுவதில் நான் வெட்கம் அடையவில்லை. நான் இங்கு மிகத் தெளிவாய் "இவர்கள் வேத வசனத்திற்கு புறம்பாய்ப் பிரசங்கிப்பவர்கள்" என்று சொல்ல முடியும்! அவை பொய்யும், கள்ள உபதேசமும் ஆகும். இன்னமும் அதிகமாய் 1யோவான் 2:22-ம் வசனத்தை வைத்துக்கூற விரும்புகின்றேன், "பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து!!"*

*இயேசு பிதாவைப்பற்றி நன்கு அறிந்தவர். அவர்தான், "பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள்" என்றார். இக்கட்டளையை நாம் எந்த தர்க்கமும் இல்லாமல் அப்படியே ஏற்றுக்கொள்கிறோம், இதை இவர்கள் ஏற்றுக்கொள்வது இல்லை. வழிதப்பிப் போகிறவர்கள், அப்படியே வழிதப்பிப்போகட்டும்! ஏனெனில், இவர்கள் சத்தியத்தின்மேல் அன்பில்லாதவர்கள்!! கடைசி நாட்கள், வஞ்சகத்தின் நாட்கள். நாம் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். பிசாசு வேதாகமத்தைக் கையில் வைத்துப் போதித்தே வஞ்சிக்கிறான்..... அற்புதங்களும், சுகமும் ஆக்குவான்?! இவ்வித அற்புத அடையாளங்களைக் கண்டு வழிதவறிப்போகாதபடி, எச்சரிக்கையாயிருங்கள்.*

**கேள்வி-20:** **நாம் அந்நியபாஷை பேசும்போது சுயஉணர்வோடு இருப்போமா? நாம் விரும்புகிற நேரத்தில் அந்நிய பாஷை பேசுகிறதை நிறுத்த முடியுமா?**

*நீங்கள் விரும்பும் நேரத்தில் பேசத் தொடங்கவும். விரும்பும் நேரத்தில் நிறுத்தவும் முடியும். ஏனெனில் ஆவியானவருடைய வரங்களில் ஒன்றுதான் "சுயஅடக்கம்" (Self Control). உதாரணமாய், நான் போதிக்கும் வரத்தை (Teaching gift) உடையவனாயிருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்போது நான் போதித்துப் பிரசங்கிக்கத் தொடங்கி.... இது பரிசுத்தாவியின் வரமானபடியால் என்னால் நிறுத்த முடியாது என்று பிரசங்கித்துக் கொண்டே இருப்பேனென்றால், இங்கு யாரும் இன்று சாப்பிடப் போக முடியாது! ஆம், நான் எப்பொழுது ஆரம்பிக்க வேண்டும் என்று அறிந்திருப்பது போலவே, எப்போது முடிக்கவேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறேன். இதைப் போலதான் எல்லா வரங்களுக்கும் பொருந்தும். நாம் உபயோகிப்பதற்கே தேவன் வரங்களை அளித்திருக்கிறார். மனிதன் ஒரு ஈவைக் (gift) கொடுத்தானென்றால், அதற்குப் பின்னாகப் பெரிய கயிற்றை கட்டிவைத்திருந்து உங்களை தன் இஷ்டப்படி ஆளுகை (control) செய்துவிடுவான். தேவன் கொடுக்கும் வரத்திற்குப் பின்னாலோ, எந்த இழுப்புக் கயிறும் இல்லை. நீங்கள் தாராளமாய்..... சுயாதீனமாய் உபயோகிக்கலாம்! அவைகளை நம் பக்திவிருத்திக்கென்றே தேவன் தந்துள்ளார்!*

**கேள்வி-21:** **பரிசுத்தாவியைப் பெறுவதற்கு முன்பாக நாம் பரிசுத்தம் ஆகவேண்டுமா?**

*இல்லை! ஆனால், நீங்கள் அறிந்திருக்கிற பாவங்களை மனந்திரும்பி அறிக்கை செய்து விட்டுவிட்டு, விசுவாசத்தில் கேளுங்கள். பரிசுத்தாவியைப் பெற்ற பின்புதான் நாம் பரிசுத்தம் அடைகிறோம்.*

**கேள்வி-22:** **பரிசுத்த வாழ்க்கை நடத்த விரும்பும் ஒருவனுடைய சிந்தை எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும்?**

*அச்சிந்தைகளில் ஒன்று, "நான் என் சுயத்திற்கு மரித்து இயேசுவைப் பின்பற்ற வேண்டும்" என்பதாய் இருக்கவேண்டும்.*

**கேள்வி-23:** **நான் கேட்ட செய்திகளின்படி, என்னால் ஜீவிக்க முடியுமா? என்று, நான் பயந்திருக்கிறேன்.**

*பயத்திற்கு ஒரு துளியும் இடந்தராதீர்கள்! நீங்கள் தேவனுடைய வசனத்தை விசுவாசிக்க வேண்டும்!! ஒரு வேளை, நீங்கள் முதன் முறையாக இச்செய்தியைக் கேட்பதால், பயந்திருக்கலாம். நீங்கள் உண்மையை நேர்மையாய் ஒத்துக்கொண்டது நல்லதுதான். ஆனால் பயம், விசுவாசத்திற்கு எதிரி! ஜெயஜீவியத்தைப் (Life of victory) பற்றி "நான்" பிரசங்கித்தபடியால் விசுவாசிக்க வேண்டாம். நீங்கள் உங்கள் வீடு சென்று வேதத்தைப் படியுங்கள். இவையெல்லாம் உண்மைதானா? என்று கண்டு உணருங்கள். அவ்வாறு இச்சத்தியங்களை வேதத்தில் நீங்கள் பார்க்கும்போது,* **நீங்கள் விசுவாசம் அடைவீர்கள்.** *இந்த விசுவாசம் ஒன்றே உங்களுக்கு ஜெயஜீவியத்தைத் தரமுடியும்.*

**கேள்வி-24:** **சிலர், மத்தேயு.19:29-ம் வசனத்தின்படி முழுநேர ஊழியர்கள் தங்கள் மனைவியையும் விட்டுவிட வேண்டும் என்று பிரசங்கிக் கிறார்களே; உங்கள் பதில் என்ன?**

இயேசு மனைவியை "வெறுக்க" (Hate) வேண்டும் என்று சொன்னது உண்மைதான். அதே சமயம், கிறிஸ்து சபையை அன்புகூர்ந்தது போலவே புருஷனும் மனைவியை அன்புகூர வேண்டும் எனவும் வேதம் கூறுகிறதே! இவ்வாறு மனைவியை அன்புகூருகிறவர்களே, எவ்வாறு இயேசுவை முழு இருதயமாய் பின்பற்றுவதற்கு மனைவியை வெறுக்க வேண்டும் என்ற சமநிலையை நன்கு அறிவார்கள். இருப்பினும் ஒருபோதும் **மனைவியை "கைவிட்டுவிட"** (Forsake) வேண்டும் என்று சொல்லவே இல்லை!! 1கொரிந்தியர் 9-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் தாங்கள் பிரசங்கிக்கச் சென்ற இடங்களுக்குத் தங்கள் மனைவிகளையும் அழைத்துச் சென்றார்கள் என்று வாசிக்கிறோம். இந்த அப்போஸ்தலர் களே நமக்கு நல்ல மாதிரிகள். அவர்களுக்கு மனைவியர் இருந்தனர்.

**கேள்வி-25:** **விசுவாசத்திலுள்ள ஒரு பெண், அவிசுவாசியான ஒருவரை, அவர் திருந்த வேண்டும் என்பதற்காக திருமணம் செய்யலாமா? 1 பேதுரு 3:2-ல் போதனையின்றி, மனைவிகளின் நல்நடக்கையினாலே புருஷர்கள் ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்றும் எழுதியிருக்கிறதே? இப்படிப்பட்ட திருமணத்தை என் பெற்றோர்கள் ஒழுங்கு செய்தால், நான் என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் உங்கள் தகப்பனையும், தாயையும் வெறுக்க வேண்டும். அவ்வளவுதான்! அவிசுவாசியான ஒருவரை திருமணம் செய்ய **"முடியாது" என்று சொல்லுங்கள்.** நான் இயேசுவினுடைய சீஷன், எனவே முடியாது என்று உறுதியாய்க் கூறுங்கள். இந்த உலகத்தில் "தேவனுடைய பிள்ளைகள்" "பிசாசின் பிள்ளைகள்" ஆகிய இருவகுப்பினர் மாத்திரமே உள்ளனர் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. அவிசுவாசியான ஒருவரை, அதாவது பிசாசின் பிள்ளையை மணப்பீர்களென்றால், உங்களுக்கு மாமனாராய் (Father-in-law) வரப்போவது யார்? பிசாசு! உங்கள் மாமனாரை உங்களால் தடைசெய்ய முடியாதே! அவர் நிச்சயம் வந்து உங்கள் வீட்டில் தங்கிவிடுவார், ஜாக்கிரதை!!

**கேள்வி-26:** **எல்லா பெந்தெகொஸ்தே சபைகளிலும் வியாக்கியானம் செய்யாமல் அந்நியபாஷை பேசுகிறார்களே இது சரியா?**

தவறுதான்! கூடிவரும் இடங்களில் பேசப்படும் அந்நிய பாஷை, வியாக்கியானம் இல்லாமல் இருக்கக்கூடாது. இதை இன்றைய சபை நடத்துபவர்களும் 'பாஸ்டர்களும்' சீரியஸாக எடுக்க வேண்டும். புராட்டஸ்டண்டு பாரம்பரியங்களைப் போலவே, இது ஒரு பெந்தெ கொஸ்தே பாரம்பரியம். இப்பாரம்பரியங்களையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு, நாம் வேதவசனத்திற்கு நேராய் திரும்ப வேண்டும். இதை இன்றுவரை உங்கள் அசெளம்பிளியில் செய்து கொண்டிருப்பீர் களென்றால், உங்களை நீங்கள் தாழ்த்தி, சரிசெய்து கொள்ளுங்கள். கூடிவரும் இடங்களில் பேசப்படும் அந்நியபாஷை, வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்.

**கேள்வி-27:** **நாம் ஜெபிக்கும்போது, அந்த ஜெபம் மற்றவர்களுடைய பார்வைக்கு முன்பாகவும் அவர்கள் கவனத்தைத் திருப்புவதாகவும் இருக்கக்கூடாது என்று கூறினீர்களே, இப்போது நான் பொது இடங்களில் ஜெபிப்பதற்கு மிகவும் பயப்படுகின்றேன்?**

*நீங்கள் சொல்லுவது, ஒரு குழந்தை நடக்க முயற்சித்துக் கீழே விழுந்தபடியால், நான் நடக்கவே பயப்படுகிறேன் என்று சொல்வதற்கு ஒப்பாகும். அப்படியென்றால் நீங்கள் ஒருபோதும் நடக்கக் கற்றுக் கொள்ளமாட்டீர்கள். ஒரு குழந்தை நடக்க எவ்வாறு கற்றுக் கொள்கிறது? கீழே விழுந்து, பின் எழுந்து, கீழே விழுந்து, பின் எழுந்து, இவ்வாறு சுமார் 500 அல்லது 600 தடவை விழுந்து எழுந்து பின் நடக்கக் கற்றுக் கொள்ளுகிறது. எனவே நீங்கள் சுமார் 5 அல்லது 6 பொது இடங்களில் ஜெபித்து தோல்வியடைந்து ஜெபித்து தோல்வியடைந்து... பின் நிச்சயம் ஒருநாள் 'விடுதலை' ஆவீர்கள். ஆனால் நீங்கள் ஒரு போதும்* **பயப்படவே கூடாது. அப்படியில்லையென்றால், ஒருபோதும் விடுதலையும் அடையமாட்டீர்கள்.** *நாம் மனுஷீகப் புகழ்ச்சியைத் தேடாதபடி, ஒன்றைச் செய்துப் பின் நம்மை நாமே நியாயந்தீர்த்து... இப்படித்தான் நாம் கற்றுக்கொள்கிறோம்.*

**கேள்வி-28:** **தசமபாகம் யாரிடத்தில் கொடுக்கப்பட வேண்டும்? நீங்கள் எந்த ஓட்டலில் சாப்பிட்டீர்களோ அந்த ஓட்டலில்தான் உங்கள் பணத்தைத் தரவேண்டும் என்று பாஸ்டர்கள் சொல்லுகிறார்களே?**

*முதலாவது, நீங்கள் ஒரு ஓட்டலுக்கு உரியவர்களாய் இருக்கக் கூடாது! ஒரு வீட்டிற்கு (Home) உரியவர்களாய் இருங்கள்!! தேவன் ஓட்டலை அல்ல, ஒரு வீட்டையே கட்டிக் கொண்டு இருக்கிறார். ஆனால் இன்று அநேக சபைகள் ஓட்டலைப்போலவே இருப்பதும் உண்மைதான்! ஒருவருக்கொருவர் உதவி செய்வதில், சபையானது ஒரு வீட்டைபபோல் இருக்கவேண்டும். ஒரு வீட்டில் நாம் ஒரு சட்டம் வகுத்து ஜீவிப்பது இல்லை. ஓட்டலிலோ சட்டதிட்டம் நிச்சயம் உண்டு. நீங்கள் பணத்தைக் கொடுக்காமல் சென்றால், ஓட்டல்காரர்கள் உங்கள் கழுத்தைப்பிடித்து விடுவார்கள். இன்றைய "ஆவிக்குரிய" ஓட்டல்களும் இப்படித்தான் செயல்படுகின்றன.* **நீங்கள் தசமபாகத்தை கொடுக்காவிட்டால், 'ஓட்டல் மானேஜர்' உங்கள் வீட்டிற்கு வந்துவிடுவார். ஆனால் வீட்டில் அப்படியல்ல!** *அங்கு அன்புதான் பிரதானம். யாராவது ஒருவர் வீட்டில் உள்ள செலவைத் தரவேண்டுமென்று விரும்பினால் அதை அவர்கள் கொடுப்பார்கள். கொடுக்க விரும்பவில்லையென்றால், கொடுக்கமாட்டார்கள். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். நீங்கள் உற்சாகமாய்க் கொடுக்க முடியாவிட்டால், தேவனும், நீங்கள் ஒன்றும் கொடுக்க வேண்டாம் என்று தான் சொல்லுவார். இதுவே இன்று புதிய உடன்படிக்கையில் தேவனுடைய வழி!*

**கேள்வி-29:** **நான் பூனைத்தோலைப் போர்த்திய பன்றியைப் போல இருக்கிறேன். நான் என்ன செய்யவேண்டும்?**

*நீங்கள் உண்மையை ஒத்துக்கொண்டபடியால், உங்களுக்குப்*

*பெரிய நம்பிக்கையும் இருக்கிறது. இதை அப்படியே தேவனிடம் சென்று "தேவனே, நான் ஒரு மாய்மாலக்காரன்" என்று சொல்லுங்கள். பிரசங்கியாய் இருக்கிற நான் இதைப் பல வருடங்களுக்கு முன்பு தேவனிடம் சொன்னேன், "தேவனே! நான் ஒரு மாய்மாலக்காரன், ஜனங்களுக்கு என் சிந்தையில் இருப்பது தெரியாது. இருப்பினும் நானோ, நான் உள்ளேயிருப்பதுபோலவே வெளியேயும் ஒரேவிதமாய், உண்மையாய் இருக்க விரும்புகின்றேன்! " என்று கூறினேன். இவ்வாறு தேவனைத் தேடுங்கள். தேவன் எனக்கு உதவி செய்தார். அவர் நிச்சயம் உங்களுக்கும் உதவி செய்வார். அதைரியப்பட வேண்டாம்!*

***கேள்வி-30:* தேவனுடைய ஊழியத்திற்குப் பணம் கொடுக்கும் விஷயத்தில் 'இன்னார்' என் தசமபாகத்திலிருந்து பணம்பெற தகுதி உடையவர் என்று எப்படி அறிந்துகொள்ள முடியும்?**

*அவர்களுடைய 'கனிகளால்'* (by their fruits) *அவர்களைஅறிவீர்கள். ஒருவர் பொய் உபதேசம் செய்கிறார் என்று கண்டுகொண்டால், தொடர்ந்து அவருக்குப் பணம் கொடுக்கலாமா? நிச்சயம் இல்லை. ஆனால் சிலர், "நாம் நம் சத்துருவையும் மன்னித்து சிநேகிக்க வேண்டுமே!" என இந்த இடத்தில் சொல்லுவதுண்டு. ஆம்! சிநேகியுங்கள், ஆனால் உங்கள் பணத்தை அவர்களிடம் கொடுக்காதீர்கள்.* **தேவனுடைய பணத்தை, தேவனுடைய ஊழியத்திற்கே கொடுங்கள். பொய் உபதேசக்காரர்களுக்கு அல்லது கனியற்ற ஊழியர்களுக்கு பிசாசு உதவி செய்யட்டும்.** *நீங்களோ தேவ ஜனங்களுக்கு மட்டுமே உதவி செய்ய வேண்டும்.*

***கேள்வி-31:* சிலமாதங்கள் தசமபாகத்தை சேர்த்து வைத்துப்பின், பெரியகூட்டங்கள் நடத்துவதற்கு அந்தத்தொகையைக் கொடுக்கலாமா?**

*புதிய உடன்படிக்கையில் தசமபாகமல்ல, மனப்பூர்வமான காணிக்கையே உண்டு. மொத்தமாய் சேர்த்துக் கொடுக்க கர்த்தர் உங்களை அவ்வாறு நடத்தினால் அப்படிச் செய்யுங்கள். ஆனால் அதில் நீங்கள் மிகுந்த உண்மையுடையவர்களாய் இருக்கவேண்டும். ஏனெனில், அது பெரிய தொகையாய் மாறும்போது, உங்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வது கஷ்டம். 1 கொரிந்தியர்16,* **வாரத்திற்கு ஒருமுறை கொடுங்கள்** *என்று கூறுகிறது. அது மிகவும் எளிது. ஒரு வருஷத்தில் ஒரு பெரிய தொகையாக சேமிப்பீர்களென்றால், அதை நீங்கள் எந்த வழியிலாவது குறைத்துவிட முயற்சிக்கும் அபாயம் உண்டு!*